
சேரர்
வரலாறு
ழக வெளியீடு

கழக வெளியீடு: ௭௬௮

# சேரர் வரலாறு

ஆசிரியர்:
திருமந்திரமணி, துடிசைகிழார்,
அ. சிதம்பரனார் அவர்கள்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Dec., 1954.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

*Head Office*:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 1100.

# பதிப்புரை

சேரவேந்தர் ஒருமொழிவைத் துலகாண்ட உரவோ ராவர்; இவர்தம் வரலாறுகள் பன்னெடுங்காலமாக ஆய்ந்து ஆய்ந்து இஃதேனை முடிபுகாணற்கியலாத ஒன்றாக இருந்தது.

அச் சிக்கலையகற்றி முடிபுகண்ட அரிய ஆய்வுநூல் இச் 'சேரர் வரலாறு.' இதனைத் தம் கூர்த்த மதிமாண்பு கொண்டு **திருமந்திரமணி, துடிசைகிழார், திரு. அ. சிதம்பரனா** ரவர்கள் ஆக்கி உதவியுள்ளார்கள். அவர்கட்கு எம் உளங் கனி நன்றி.

இதன்கண் சேரர்தம் குடிமையை உதியன் குடும்பம், பொறையன் குடும்பம் என இருவகையாகப் பிரித்துக் கொண்டு உதியன் குடும்பத்துச் சேரமன்னர், **இமயவரம்பன் முதலாக மூன்றாம் சேரமான் பெருமாள் ஈறாக** முப்பத்து நால்வர் வரலாறும், பொறையன் குடும்பத்துச் சேரமன்னர், **அந்துவன் சேரல் இரும்பொறை முதலாகச் செங்கோற் பொறையன் ஈறாகப்** பதினெண்மர் வரலாறும் அவ்வவர்தம் காலவரையறையுடன் விளக்கப்பட்டுள்ளன. பின்இணைப்பாக நம் தமிழகத்தை ஆண்ட எல்லா மன்னர்களின் பெயர்களும் அவர் இருந்த தலைநகரங்களும் அவர் காலங்களும் குறிப்பிடப் பெற்றுள்ளன. எனவே, இஃதொரு அரிய பெரிய வரலாற்று நூலென்பது தெருதலை.

சேரர் வரலாறு விளக்கும் இச் சீரிய நூல் ஆய்புல அறிஞருக்கும், கலைச்செல்வருக்கும், தமிழக மாண்பை அறியவிரும்பும் தமிழ்வாணருக்கும் இன்றியமையாத நல் விருந்தான நூலாகும்.

இதனை அழகிய முறையில் பதித்துத் தமிழுலகு கூட்டுண்ண வெளியிட்டுள்ளோம். யாவரும் வாங்கிக்கற்று நற்பயன் எய்துமாறு வேண்டுகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


பக்கம்

தோற்றுவாய் க - உச

I. உதியன் குடும்பம் :

க. இமயவரம்பன் - வானவரம்பன் 1
உ. கேலன் - கேரளன் - சேரலன் 9
ங. சேரலன் - வானவன் 10
ச. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் 15
ரு. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் மாக்கோதை 19
சு. பல்லவர்ன் குன்றில் குழுமூர் உதியன் 23
எ. கேரளபுத்திரன் 25
அ. செல்லூர் ஆதன் எழினி 27
கூ. முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் 31
க0. சேரமான் பெருஞ்சேரலாதன் 33
கக. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் 36
கஉ. சேரமான் இளங்குட்டுவன் 41
கங. சேரலாதன் 43
கச. உதியன் சேரலாதன் 45
கரு. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 47
கசு. பல்யானைச் செல்கெழு குட்டுவன் 55
கஎ. சேரமான் குட்டுவன் கோதை 60
கஅ. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் 65
ககூ. செங்குட்டுவன் 70
உ0. இளங்கோ அடிகள் 81
உக. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 86
உஉ. குட்டுவன் சேரல் 91

| | | பக்கம் |
|---|---|---|
| உங. | சேரமான் கேரளன் | 93 |
| உச. | வாட்டாற்று எழினியாதன் | ,, |
| உரு. | முதலாம் குலசேகரப் பெருமாள் | 95 |
| உசு. | சேங்கால் என்ற வீரராகவப் பெருமாள் | 97 |
| உஎ. | இரண்டாம் குலசேகரப் பெருமாள் | 98 |
| உஅ. | பாஸ்கர இரவிவர்மன் | 99 |
| உகூ. | மூன்றும் குலசேகரப் பெருமாள் | 101 |
| ஙo. | முதலாம் சேரமான் பெருமாள் | 102 |
| ஙக. | தம்பிரான் தோழர் பெருமாள் | 113 |
| ஙஉ. | இரண்டாம் சேரமான் பெருமாள் | 114 |
| ஙங. | மார்த்தாண்டவர்மன் | 118 |
| ஙச. | மூன்றும் சேரமான் பெருமாள் | 121 |

II. பொறையன் குடும்பம்: 127

| | | |
|---|---|---|
| க. | அந்துவன் சேரல் இரும்பொறை I | 129 |
| உ. | பாலைபாடிய பெருங்கடுங்கோ | 130 |
| ங. | மருதம்பாடிய இளங்கடுங்கோ | 135 |
| ச. | கணைக்கால் இரும்பொறை | 138 |
| ரு. | சேரமான் கோக்கோதை மார்பன் | 146 |
| சு. | ஆட்டன் அத்தி | 150 |
| எ. | அந்துவன் சேரல் இரும்பொறை II | 163 |
| அ. | செல்வக் கடுங்கோ வாழியாதன் | 166 |
| கூ. | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | 170 |
| கo. | சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | 175 |
| கக. | இளஞ்சேரல் இரும்பொறை | 178 |
| கஉ. | யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | 183 |
| கங. | மாந்தரம் பொறையன் கடுங்கோ | 189 |

| | | பக்கம் |
|---|---|---|
| கச. | மாந்தரஞ் சேர அரசன் | 191 |
| கரு. | சேரமான் வஞ்சன் | 193 |
| கசு. | சேரலன் | 195 |
| கஎ. | மன்னன் சேரலன் பூழியான் | 197 |
| கஅ. | செங்கோற் பொறையன் | 199 |

பின் இணைப்பு : 201

| | | |
|---|---|---|
| க. | தமிழ்நாட்டை ஆண்ட அரச மரபினர் | ,, |
| உ. | அரசு குடிவழிகள் | 205 |
| 1. | சேரர் குடிவழி | ,, |
| 2. | சோழர் குடிவழி | 207 |
| 3. | பாண்டியர் குடிவழி | 218 |
| 4. | சிசுநாகர் குடிவழி | 223 |
| 5. | நந்தன் குடிவழி | 224 |
| 6. | மவுரியர் குடிவழி | ,, |
| 7. | கடம்பர் குடிவழி | 225 |
| 8. | சாதவாகனர் குடிவழி | 227 |
| 9. | சுங்கர் குடிவழி | ,, |
| 10. | சேதிக் குடிவழி | 228 |
| 11. | கண்ணுவர் குடிவழி | 229 |
| 12. | கொங்கு-மராட்டியர் குடிவழி | 230 |
| 13. | கொங்கு-கங்கர் குடிவழி | ,, |
| 14. | பல்லவர் குடிவழி | 231 |
| 15. | குப்தர் குடிவழி | 233 |
| 16. | வாகடகர் குடிவழி | 235 |
| 17. | சளுக்கியர் குடிவழி | 236 |
| 18. | காலசூரியர் குடிவழி | 238 |
| 19. | இராட்டிரகூடர் குடிவழி | 239 |
| 20. | உயுத்தர் குடிவழி | 240 |
| 21. | பரிகாரர் குடிவழி | ,, |
| 22. | கொங்கு - சோழர் குடிவழி | 241 |

| | | பக்கம் |
|---|---|---|
| 23. | ஒய்சளர் குடிவழி | 242 |
| 24. | காகதீயர் குடிவழி | 243 |
| 25. | கொங்குவல்லாளர் குடிவழி | ,, |
| 26. | காலசூரியர் - ஹேஹயர் குடிவழி | 244 |
| 27. | யாதவர் - தேவகிரி குடிவழி | ,, |
| 28. | கொங்கு அரிகரவம்சம் | 245 |
| 29. | விஜயநகர அரசர் குடிவழி | ,, |
| 30. | மைசூர் உடையார் குடிவழி | 246 |
| 31. | மதுரை நாயக்கர் குடிவழி | 248 |
| ௩. | இன்றியமையாக் குறிப்புக்கள் | 249 |
| ௪. | "பெருமாள்" அட்டவணை | 267 |
| ௫. | மேல்வாய் இலக்கம் | 269 |
| ௬. | சகங்கள் | 271 |
| ௭. | காலமுறைப்படி அரசமரபுகள் | 272 |
| ௮. | காலவரிசைப் பொருள் அட்டவணை | 274 |
| ௯. | எடுத்தாண்ட நூல்கள் | 297 |

# சேரர் வரலாறு

## தோற்றுவாய்

### 1. சேர நாட்டின் எல்லை

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதன்முன்னம் தமிழ் நாடானது,

> "வடாஅது, பனிபடு நெடுவரை வடக்கும்
> தெனாஅது, உருகெழு குமரியின் தெற்கும்,
> குணாஅது, கரைபொரு தொடுகடல் குணக்கும்,
> குடாஅது, தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்."

(காரிகிழார், புறம் : சு)

> "தென்குமரி, வட பெருங் கல்,
> குணகுட கடலா எல்லை."

(குறுங்கோழியூர், கிழார்புறம் : கள)

[பனி படு நெடு வரை, வட பெருங் கல்-இமயமலை. தொடு கடல்-வங்காளக் குடாக் கடல். தொன்று முதிர் பௌவம்-அராபிக் கடல்.]

என்ற தமிழ்நாட்டு ஆன்றோர்களின் வாக்குப்படி, வடக்கே இமயமலையையும், தெற்கே குமரியையும், கிழக்கும் மேற்கும் தொடு கடல், தொன்று முதிர் பௌவம் என்பவைகளையும் எல்லையாகக் கொண்டிருந்தது.

இமயமலை கடலினின்றும் வெளிக்கிளம்பி, மனிதர்கள் குடியிருக்கத் தகுந்த வசதிகளைத் தன்னிடத்துக் கொண்டபின், முதன் முதல் இமயம்வரையும் சென்று, நாட்டை வென்று, சேர நாட்டாரை இமயமலையில் குடியேற்றினவன் சேர, சோழ, பாண்டியர்களாகிய முடி மன்னர்கள் மூவரில் சேரனேயாவன். அதனால், அவனுக்கு "இமயவரம்பன்," என்ற பட்டம் கிடைத்தது. ஏனைய சோழ—பாண்டியர்களுக்கு அப் பட்டம் இல்லாமையே இதனை வலியுறுத்தும்.

அவ் விமய வரம்பனாகிய சேரனே பின்னால் இமய மலைக்கு வடபுறம் அமைந்துள்ள வானவர் நாடாகிய

திபேத் நாட்டையும் வென்று அடிப்படுத்தினவன் ஆகையால், "வானவரம்பன்," என்ற பட்டமும் கிடைத்தது.

சேர நாட்டாருடைய மரபு, இன்றைக்கும் "நீவார்," (நாயர் என்ற சொல்லின் திரிபு) என்ற பெயருடன் இமயமலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறது.[1]

சேரநாட்டார் எப்போதும் வெளிநாடுகளுக்குச் சென்று, சேரநாட்டு நாகரிகத்தைப் பரப்புவதில் ஏனைய சோழ, பாண்டியர்களைவிட முன்னணியில் நிற்பவர் ஆவர். தற்காலத்திலும் சேரநாட்டாரே எல்லா இடங்களிலும் எல்லா விதமான தொழில்களிலும் ஈடுபட்டு முன்னணியில் நிற்பது கண்கூடு. சேர நாட்டாருக்கு இயற்கையாகவே வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறும் மனத்திடம் இருந்ததால் இமயமலையிலும் முதன்முதல் குடியேறி யுள்ளார்கள். இமயமலை நாடுகளையும், வானவர் நாடாகிய திபேத்தையும் முதன்முதல் அடிப்படுத்தி ஆண்டவன் சேரன் ஆனதால், ஏனைய சோழ, பாண்டியர்கள் ஒவ்வொரு காலத்தில் இமயமலை நாடுகளை அடிப்படுத்தித் தங்களுடைய புலிக் கொடியையும், மீனக் கொடியையும் இமய மலையில் நாட்டியிருந்தபோதிலும், இமயவரம்பன், வான வரம்பன் என்ற பட்டங்களைப் பெற்றவன் சேரனேயாவன்.

பின் இருக்க இருக்க, 'சேர, சோழ, பாண்டியர் என்ற மூவரும் மாறிமாறித் தங்கள் தங்கள் நாடுகளுக்கு வடக்கேயுள்ள நாடுகளை இமயமலை வரைசென்று, ஆட்சி செலுத்தி யுள்ளார்கள். சேர, சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து தமிழ்க் குடிகள் பலர் வடக்கே சென்று சிந்து

---

1. *History of Kerala*: *page*, 463.

Dr. Buchanan Hamilton points, in his book, Called "Account of the Kingdom of Nepal" pages 29—42—51, to the similarity between the architecture of the *West Coast* and of *Nepal*, and both he and *Kirckpatrek* remark that this, coupled with the Strange notions as to Conjugal relations and other peculiarities prevailing among the *Nayars of the West-Coast* and the *Newars of Nepal, points to a Similarity of race.*

Vide also "Kirckpatriks' Nepal," page, 187.

நாடு, கங்கைநாடு, கசமார் நாடு முதலிய நாடுகளில் குடியேறினார்கள். நாடுகளைச் சீர்திருத்தி, ஊர்களை உண்டாக்கி, நிலங்களை வளப்படுத்தினார்கள். அத்தகைய தமிழ்க் குடிகளின் பெயர்களாவன :—"யதுக்கள், துருவாசகர்கள், துருகியர்கள், அணுக்கள், பூருக்கள், பரதர், விசுவாமித்திரர், பக்தர், பலாயனர், அலினர், சிவர், விஷனியர் முதலியவர்கள். சேர, சோழ, பாண்டியர்களுடைய ஆட்சி வடநாட்டில் தளர்ந்த சமயம் பார்த்து மேலே கூறப்பட்ட குடிகள் எல்லாம் சுயாட்சி பெற்று வாழ்ந்தார்கள். மொஹெஞ்சதரோ-அரப்பா நாகரிகங்கள் எல்லாம் மேலே கூறப்பட்ட குடிகளின் நாகரிகங்களே என்று பாதிரி ஹிராஸ் என்பவர் கூறுகிறார்.[1]

[2]ஆரியர்கள் கி. மு. 9000-ல் காகேசியா மலைப் பக்கங்களில் இருந்து கைபர், காபூல் கணவாய்கள் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தபோது, மேலே கண்ட தமிழ்க்குடிகள் எதிர்த்துப் போராடினார்கள். ஆரியர்களுடைய கூட்டம் ஏராளமாக வந்துகொண்டிருக்கவே, மேலே கூறப்பட்ட தமிழ்க் குடிகளில் பலர் ஆரியர்களுடன்

---

1. ஆரியர்களுடைய இருக்குவேதத்தில் கண்டது. மேலே கூறிய பெயர்கள் எல்லாம் ஆரியப் பெயர்கள். தமிழ்ப்பெயர்கள் ஆரிய மொழிக்கிணங்க மொழி பெயர்க்கப்பட்டவை.

2. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு :—பக்கம் 64. by திரு மந்திரமணி, துடிசைகிழார், அ. சிதம்பரனார் and also Proceedings of the Indian History Congress—1948. 10th Session page, 126. by B. R. Kulkarni, B.A.

"The period calculated from *Kirtikas* comes to 3000 B. C., and that of *Pushya* on the same grounds will have to be taken at least 4000 Years further back. So, we are in a position to say that the existence of the Vedic sacrificial culture of the Hindus (Aryans) can be definitely taken back to 7000 B. C. and more. By this single, simple and definite evidence, *Lok Tilak* said, "The oldest period in Aryan Civilisation may, therefore, be Called the Aditi or the Pre-Oriyon period, and we may roughly assign 6000—4000 B.C. as its limits.

But Pushya pushed this period further back to 9000—7000 B.C. Let us call it Pushya-Period of the vedic culture."

கலந்துகொண்டு ஏனைய தமிழர்களுக்குத் துன்பம் விளைத்தார்கள். இதனை அறிந்து மானமுள்ள தமிழர்கள் எல்லாம் விந்தியமலையைத் தாண்டித் தக்காணம் சென்றனர்.

ஆரியர்கள் பிர்மா வர்த்தம் (கசமார் நாடு), ஆரியா வர்த்தம் என்ற இடங்களைத் தாபித்துக்கொண்டு வதிந்து வந்தார்கள். இவ் விரண்டு நாடுகளுக்கும் இந்துஸ்தானம் என்று பின்னால் பாரசீகர்களால் பேர் கொடுக்கப்பட்டது. "இந்து," என்ற சொல் ஆரியம், பிராகிருதம், சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் முதலிய மொழிகளிற் சேர்ந்த தல்ல; பாரசீக மொழியைச் சேர்ந்தது. அதன் பொருளைப் பாரசீக மொழி அகராதியிற் காண்க.

ஆரியர்கள் வருவதற்கு சுமார் ஐந்நூறு ஆண்டுகள் முந்தியே, அரக்கர்கள் (Red Indians of America) தமிழ் நாடு புகுந்து, திரிபுரம், அரோபிலம், அரசைப் பெரும் பாழி முதலிய பல இடங்களில் அரசை நிலைநாட்டி ஆண்டு வந்தார்கள். இவ் வரக்கர்களை நாட்டைவிட்டுத் துரத்தத் தமிழர்கள் ஆரியர்களுடன் கலந்து பல வழிகளை வகுத்தார்கள். அப்போது பிரமா வர்த்தம்—ஆரியாவர்த்தம்—தக்காணம் முழுவதும் 56 நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, கோசலநாட்டு அயோத்தியில் ஒரு மத்திய அரசாங்கம் வகுக்கப்பட்டது. அந்த 56 நாடுகளில் சேரநாடும் ஒன்று.[1]


அரக்கர் மரபினரான சோமுகன், தக்கன், தக்கனுடைய பேரப் பிள்ளைகளான இரணியன், இரணியாக்கன், இரணியாக்கன் குமாரன் அந்தகாசுரன், இரணியன் குமாரன் பிரகலாதன், அனுகிலாதன், சங்கிலாதன், கிலாதன், விரோசனன், மாபலி, சர்ச்சன், சகுனி, பூதந்த நாபன், காலநாபன், மகா நாபன், மகா வாகு, புலத்தியன் (குமரவேல் மாணுக்கன் அல்லன்), கார்த்தவீரியார்ச்சுனன், புலத்தியன் பேரன்மாரான இராவணன், கும்பகர்ணன், விபீடணன், குபேரன், மது வலசிங்கன், கம்சன், சிசு

1. புராதன இந்தியா, இரண்டாம் பாகம்: பக்கம்-334. by P. V. ஜெகதீச அய்யர், மேலாளர், சென்னை ஆர்க்ய லாஜிகல் இலாகா.

பாலன், தந்தவக்கிரன், சராசந்தன், (இராஜ தஞ்சன்) முதலியோர் பலர் தமிழ்நாட்டில் பல இடங்களில் ஆண்டுள்ளார்கள்.

திருமாலின் ஒன்பது அவதாரங்களும் இவ்வரக்கர் ஆட்சியை ஒழிக்கவே நிகழ்ந்தன என்பது சரித்திரம். ஆகவே சேர, சோழ, பாண்டியர்கள் அயோத்தியா மத்திய அரசாங்கத்தில் சேரவேண்டியதாயிற்று.

சேரர்நாட்டுப்படம்.




சேரநாடு ஆதிகாலந்தொட்டே பன்னிரண்டு உட்பிரிவு கொண்டது. அவ்வுட் பிரிவுகளை மேலே காட்டியிருக்கும் படத்தில் காண்க:

### உட்பிரிவுகள்

1. பூழி (North Malabar - Tulu country)
2. குடம் (South Malabar - Coorg)
3. மங்கலாபுரம் (Mangalore - கடம்பர் நாடு)
4. குளத்து நாடு (சிரக்கல் - பழையங்காடி),
5. வள்ளுவ நாடு (West of Nilgris - Arangotta)
6. எராநாடு (Calicut - கோழிக்கோடு)
7. கற்கா (Palghaut - நெடும் படையூர்)
8. குட்டம் (Cochin - எரணுகுளம்)
9. வெங்கா நாடு (கொல்லங்கோடு)
10. ஒட்டநாடு (காயாங்குளம்)
11. வேணுடு (Travancore - மூஷிக நாடு)
12. நாஞ்சில் நாடு (நாகர்கோயில்)

குறிப்பு: பூழி-மங்கலாபுரம் இரண்டும் ஒரு காலத்தில் கடம்பர்களுடைய ஆட்சியில் சில காலம் இருந்ததால், அந்நாட்டைக் கடம்பர் நாடு என்று கூறுவதும் உண்டு.

சேர, சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டைமண்டலங்களுக்கு எல்லைகள் வகுத்த காலை, அவ்வெல்லைகளைக் குறித்துக் கீழ்வரும் பாடல்களால் புலவர்கள் விளக்கியுள்ளார்கள்.

### சேர மண்டலம்

"வடக்குத் திசைபூழி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைக்கோழிக் கோடாம் - கடற்கரையின்
ஓரமே தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு."

### சோழ மண்டலம்

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள் வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

பாண்டி மண்டலம்

"வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் - உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி."

கொங்கு மண்டலம்

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று - கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிநன் னாடா
குழித்தண் டலையளவும் கொங்கு."

தொண்டை மண்டலம்

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்குமுவரி அணிகிழக்கு - பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு."

இதில் சேர நாட்டெல்லைப்பாட்டில் 'வடக்குத்திசை பழனி' என்றிருப்பது சரியல்லவெனத் தெரிகிறது. "வடக்குத்திசை பூழி" என்று இருக்கவேண்டும்; என்னெனின், சேரநாட்டுப் படத்தைப் பார்த்தாலே அது விளங்குமாதலின் என்க.

## 2. 'சேரர்' முதலிய சொற்களின் பொருள் விளக்கம்

சேரநாட்டை ஆண்ட அரசர்களுக்குப் பல பெயர்கள் இலக்கியங்களில் வழங்கக் காண்கின்றோம். அவையாவன: (1) சேரர் (2) சேரலர் (3) கேரளர் (4) உதியர் (5) பொறையர் (6) குடவர் (7) குட்டுவர் (8) ஆதர் (9) வானவர் (10) பூழியர் என்பனவாம்.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று". (குறள் : கூ௫௫)

என்னும் குறளுக்குப் பரிமேலழகர், "பழங்குடி - தொன்று தொட்டு வருங்குடி; தொன்றுதொட்டு வருதலாவது

சேர, சோழ, பாண்டியர் என்றாற்போல, படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வருதல்,'' என்று உரை வகுத்துள்ளார்.

ஆதலின் படைப்புக் காலந்தொட்டு, மேம்பட்டு வருங் குடிகள் மூவரில் ஒருவர் சேரர் ஆவர் என்பது போதருகின்றது. அத்தகைய மேம்பாடும், ஆற்றலும், நாகரிகமும் வாய்ந்த மக்களுக்குச் சேரர் என்ற பெயர் எப்படி வந்தது என்பது, ஆராயத்தக்கது.

[1]சேரல் என்றால் மலை அடுக்கு என்று பொருள். சேர் = சேர்த்து, பிணை. மலை அடுக்குகள் அடுத்தடுத்துப் பிணைந்து நெருங்கி இருப்பதற்குச் சேரல் என்று பெயர். மேற்குத்தொடர்ச்சி மலையானது (Western Ghauts) பல அடுக்குகளைக் கொண்டது. அம்மலையை உட்கொண்டு, மலைக்கும் கடலுக்கும் இடையில் உள்ள நாடு முழுவதும் சேரல் நாடு என்னப்படும். அதனால், அந்த நாட்டு அரசர்களுக்குச் சேரலர் என்று பெயர் அமைந்தது. சேரலர் = சேரல் + அர். சேரல் மலைத்தொடர்ச்சியைச் சேர்ந்த நாட்டையுடையவர் என்பது பொருள். சேர் + அல் + அர் என்று பிரித்துப் பகைவர், சேராதவர் என்று பொருள் செய்யக்கூடாது. அது இடம் நோக்கிப் பொருள் கொள்ள வேண்டும். அல் என்னும் விகுதிக்கு அன்மைப்பொருளும் உண்டு, தொழிலைக் குறிக்கும் பொருளும் உண்டு என்பது கருதவேண்டும்.

சேரலர் என்ற சொல்லே பிற்காலத்தில் கன்னடமொழி பிரிந்தபின் கேரளர் என்று திரிந்தது. கன்னடமொழி தமிழ்மொழியின் பிரிவானபடியால், சொற்கள் எல்லாம் சிறிது மாறுபாட்டுடன் வழங்கப்பட்டன. மேற்கோளாக, சென்னி என்னும் தமிழ்ச்சொல், கன்னடத்தில் கென்னி என வழங்குவதை நோக்கினால் சேரலர் - கேரளர் என அம்மொழியில் வழங்கப்பட்டது என அறியலாம். இது சகரம் ககரமாகத் திரிதல் என்னும் வழக்கு.

1. " Seran Vanchi,"—Dr. Krishnasawmi Ayyangar.

இன்னும், பாலு என்பது ஆலு என்றும், பணம் என்பது அண என்றும், பண்டு என்பது அண்ணு என்றும் சிறு மாறுபாடுகளுடன் வழங்குவதை நோக்குக.

நீர் - மனே போன்ற சில தமிழ்ச்சொற்கள் திரிபு இன்றியே அம்மொழியில் வழங்கப்படுகின்றன. ஆதலின், கேரளர் என்பது சேரலர் என்ற மொழியின் திரிபே ஆகும்.

பொறையர் என்னும் சொல்லானது பொறை என்ற பகுதி அடியாகப் பிறந்த சொல். பொறை என்றாலும் மலை அடுக்கு என்று பொருள். ஆதலின், பொறையர் என்றால் மலைநாட்டையுடைய அரசர் என்பதே பொருள்.

சேரநாட்டின் உட்பிரிவுகளான சிறுசிறு நாடுகளை முடியரசுக்குக் கீழ் ஆண்ட சேரர் குலத்தவருக்கு அந்தந்த உட்பிரிவின் பெயரே அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, பூழிநாட்டை ஆண்ட சேரர் பூழியர் என்றும், குட்டநாட்டை ஆண்ட சேரர் குட்டுவர் என்றும், குடநாட்டை ஆண்ட சேரர் குடவர் என்றும், வழங்கப்பட்டார்கள்.

உலகத்திலேயே மிக உயர்ந்த பீட பூமியாகிய திபேத் நாட்டில் உள்ளவர்களுக்கு வானவர் என்ற பெயர் உண்மை போலத் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் உயர்ந்த நாடாகிய சேரநாட்டில் உள்ளவர்களுக்கும் வானவர் என்ற பெயர் உண்டு. வானத்தைத் தொடும்படியான கொடுமுடிகளையுடைய மேற்கு மலைத்தொடரையுடைய நாட்டவர் என்பது பொருள்.

பூழி என்ற பெயருடைய நாடு பாண்டி நாட்டிலும் உண்டு. பூழியில் ஆண்ட பாண்டியர்களுக்குப் பூழியர்கோன் என்று பெயர் உண்டு. "பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன்" என்ற அடி இதனை வலியுறுத்தும். ஆதலின், இரண்டும் ஒன்று என்று மயங்கற்க. இடம் நோக்கிப் பொருள்கொள்ள வேண்டும்.

சேரர் குலத்தில் உதியன் குடும்பம், பொறையன் குடும்பம் என்ற இரண்டு பிரிவுகள் உண்டு. உதியன் குடும்பத்தாருக்கு "ஆதன்" என்ற பட்டமும், பொறையன் குடும்பத்தாருக்கு " இரும்பொறை, கடுங்கோ" என்ற பட்டங்களும் உண்டு.

## 3. ஆரியர் தென்னாடு போந்தது

தற்காலம் பாகிஸ்தான் ஏற்பட்டபோது எந்த மாதிரி கொலைகள், கொள்ளைகள், பட்டணங்களையும் கோட்டைகளையும் எரியூட்டும் செய்திகள், பெண்களைக் கெடுத்தல், கடத்தல் முதலியன நடந்தனவோ, அதே மாதிரி, இந்துஸ்தான் ஏற்பட்ட காலத்திலும் நடந்ததாக ஆரியர்களுடைய [1]இருக்கு வேதம் கூறுகிறது. இது இயற்கை. அரசாங்கம் மாறும்போது இந்த மாதிரி ஏற்படுவது சகசம்.

இனி, ஆரியர்கள் தென்னாடு புகுந்தது எப்போது, என்று ஆராய்வாம்.

கி. மு. 9560-ல் அரக்கர் (Red-Indians) தமிழ் நாட்டுக்கு வந்து, பல இடங்களைக் கைப்பற்றி, அசோபிலம்-அரைதைப் பெரும்பாழி முதலிய இடங்களை அரச இருக்கையாக் கொண்டு ஆண்டு வந்தார்கள்.

அப்படி ஆண்டு வந்தபோது, கி. மு. 7500-ல்[2] பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி என்பவன், ஆரிய அரசர்களுடைய உதவியையும் ஏனைய தமிழ் அரசர்களுடைய உதவியையும் பெற்று, 2060 ஆண்டுகளாக நடைபெற்றுவந்த அரக்கர் ஆட்சியில் வெறுப்புக் கொண்ட குடிகளுடைய உதவியையும் பெற்று, அரக்கர்களிடம் போரிட்டு, பாண்டிய நாட்டை மீட்டு, கொற்கையம் பெருந்துறையை அரச இருக்கையாகச் செய்து அரசாண்டான். தனக்குப் போரில் உதவி செய்தவர்களுக்கெல்லாம் தக்கபடி உதவிகளைச் செய்தான். ஆரியர்களைத் தென்னாட்டில் குடியேறும்படி

1. Rig Veda of Aryans.
2. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு: பக்கம், 65 - 66.

செய்து, அவர்களுக்காகப் பல வேள்விகளைச்செய்து, வேள் விக்குடி முதலிய பல ஊர்களை முற்றாட்டாக வழங்கினன்.[1]

முதுகுடுமிப் பெருவழுதிக்கு அதனால் "பல் யாக சாலை" என்ற பட்டம் வழங்கப்பட்டது. வழுதி வரவழைத்த குடும்பங்களை ஒட்டி, வேறு பல குடும்பங்களும் கும்பல் கும்பல்களாக வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்தவர்களில் மூக்கியமானவர்கள் பிரகச்சரணர் (விரைவாக முன்னல் நடந்து வந்தவர்கள் என்பது பொருள்,) அட்டசகசரர் (எண் ணுயிரவர்), தில்லை மூவாயிரவர், திருச் செந்தில் ஆறுயிரவர், நாங்கூர் நாலாயிரவர், திருவெண்காடு ஈராயிரவர், சீரங்கத்தார் முதலியோராவர்.

ஆரியர்கள் விந்தியமலை-சாத்பூரா மலைகளைத் தாண்டித் தென்னுடு வரவே, தென்னுட்டின் வடபகுதியில் இருந்த தமிழர்கள் அவர்களுடன் கலந்து, உறவாட ஆரம்பிக்கவே, ஆரியமொழியும் தமிழ்மொழியும் கலந்து, ஆந்திர-கன்னட மொழிகளாகத் திரிவுபட்டன. ஆந்திர நாட்டில் இருந்த தமிழ்க்குடிகள் எல்லாம் ஆரிய மதத்தைத் தழுவிக் கொண்டு, வைதீகலு, வேனுடு, முருக்கிநாடு, கர்னக்கம்ம, ஆறு வேலு முதலிய வகுப்புக்களாகப் பிரிந்தார்கள்.

கி. மு. 7,500-லேயே தமிழ்மொழியினின்றும் ஆந் திர-கன்னட மொழிகள் பிரிந்தன. இருக்க இருக்க ஆரிய நாகரிகம் ஆந்திர நாட்டிற்குத் தெற்கிலும் பரவவே, கி. மு. 6805-ல் ஆரம்பிக்கப்பட்ட இடைச்சங்கத்தில் மாபுராணம், பூதபுராணம் என்ற இலக்கண நூல்கள் ஏற்படலாயின. அவைகளிலே "பார்ப்பன இயல்" என்ற பிரிவு வகுக்கப் பட வேண்டியது ஆயிற்று.[2]

கி. மு. 6000-ல் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் செய்த தொல்காப்பியத்துக்கும் முற்பட்ட நூல்கள் மாபுரா ணமும் பூத புராணமும் என்று ஆராய்ச்சியால் வெளியா கிறது.

---

1. வேள்விக்குடிச் சாசனம்.
2. தொல்காப்பியம் பாயிர உரை-நச்சினர்க்கினியர்.

## 4. 'பெருமாள்' என்ற சொல்லின் வரலாறு

சேர அரசர்களிற் பலர் 'பெருமாள்' என்ற பட்டம் வகுத்துக் கொண்டு ஆட்சி செய்திருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக, முதலாம் சேரமான் பெருமாள் என்கிற கழறிற்றறிவார், இரண்டாம் சேரமான் பெருமாள் என்கிற குலசேகராழ்வார், மூன்றாம் சேரமான் பெருமாள் என்கிற பாஸ்கர இரவிவர்மன் முதலியோர். ௧

சேர அரசர்களைத் தவிர ஏனைய சோழ-பாண்டிய-கொங்கு-துளு-வாண அரசர்களிலும் சிலர் பெருமாள் பட்டம் பெற்றுச் சேர நாட்டில் உள்ள 64 நம்பூத்திரி கிராமங்களை ஆட்சி செலுத்தியுள்ளார்கள். இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பெருமாள் அட்டவணையைப் பார்த்தால் இது விளங்கும். ஆதலின், அச் சொல்லினுடைய வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டியது முக்கியமானது.

இராமாயண காலத்தில், அதாவது கி. மு. 6015-ல், பரசுராமர், தசரத இராமரால் தோல்வியுற்ற பின், தம்முடைய மரபைச் சேர்ந்த 64 குடும்பங்களையும் உடன் அழைத்துக் கொண்டு சேர நாடு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் சேர நாட்டில் ஆட்சி செய்து வந்த சேரன் பரசுராமருக்கு உற்ற நண்பன். அதனால், சேர அரசன் பரசுராமரையும் 64 குடும்பங்களையும் வரவேற்று உபசரித்தான். தற்காலம் நாம் எவாக்குவீஸ் (Evacuvees) என்று சொல்லுகிறோமே அந்த மாதிரி இந்துஸ்தானத்தினின்றும் சேரநாடு வந்த அந்த 64 குடும்பத்தாரும் 'எவாக்குவீஸ்' ஆவார்கள் என்று கொள்க.

64 குடும்பங்களுக்கும் 64 வளப்பமுள்ள நல்ல கிராமங்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்குத் தானமாக அளித்து, சுதந்தரமாக ஆண்டுகொள்ளும்படியாகச் சாசனம் எழுதிக் கொடுத்து அவர்களை ஆதரித்தான் சேரன். அந்த 64 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான் சேரநாட்டில் உள்ள நம்பூத்திரிகள்.

கி. பி. 350 முதல் கி. பி, 370 வரை துளு நாட்டில் அரசாண்ட கடம்ப மரபினனான மயூரவர்மன் என்னும் அரசனும் அஹீக்ஷேத்திரத்தில் (Rohil Kand) இருந்து 84 குடும்பங்களைச் சேர்ந்த ஆரியப் பிராமணர்களை வரவழைத்துத் தன்நாட்டில் குடியேற்றியுள்ளான் என்று கடம்பர் சரித்திரம் கூறுகிறது. அக் குடும்பத்தாருக்கு அவீக பிராமணர் (Haiga-Havika Brahmans) என்று பெயர். இவர்களையும் மேலே கூறிய நம்பூத்திரிகளையும் ஒன்றுபடுத்தக்கூடாது.

மயூரவர்மனுக்குப் பின் அவன் மகன் கங்கவர்மன் என்கிற சந்திரகாந்தன் (கி. பி. 375-400) என்பவன் கராச்சியில் (Karachi) இருந்து பல பிராமணக் குடும்பங்களை வரவழைத்துத் தன் நாட்டில் குடியேற்றினான். இவர்களும் மேலே கூறிய நம்பூத்திரிகளினின்றும் வேறுபட்டவர்களே. சில புலவர்கள் இவர்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்திக் கூறுகிறார்கள். அது பொருந்தாது.

64 கிராமங்களையும் சுதந்திரமாகக் கொடுத்துவிட்ட பிறகு, அவைகளைப் பரிபாலிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, 64 குடும்பத்து நம்பூத்திரிகளும் ஒன்று சேர்ந்து, 64 கிராமங்களையும் நான்கு பிரிவுகளாக (கலக்கங்களாக) வகுத்தார்கள். (They devided their 64 Villages into four Revenue Firkas for administration Purposes) அந்த நான்கு பிரிவுகளாவன:

(1) பெருஞ்செல்லூர் (2) பையனூர் (8) பட்டப்பூர் (4) செங்கனூர் (செங்குன்றூர்) என்பனவாம்.

ஒவ்வொரு பிரிவுக்கும் (கலக்கத்திற்கும்) 16 கிராமங்களாகப் பிரித்தார்கள். தற்காலம் உள்ள கிராம பஞ்சாயத்துச் சபை போல, 64 கிராமங்களுக்கும் 64 கிராம சபைகளை உண்டுபண்ணினார்கள்.

ஒவ்வொரு பிரிவிலுள்ள 16 கிராம சபையோர்களும் சேர்ந்து, ஒவ்வொரு பிரிவுக்கும் சபை ஏற்பாடு செய்தார்கள்.

நான்கு கலக்க (பிரிவு) சபையோர்களும் சேர்ந்து தங்களுக்குள் ஒரு இரக்ஷ புருஷனை (Protector) தேர்ந்து எடுத்தார்கள்.

அந்த இரக்ஷ புருஷனுக்கு உதவி செய்ய "ஆலோசனை சபை" (Advisory Council) ஒன்று ஏற்பாடு செய்தார்கள். அந்த இரக்ஷ புருஷன் நான்கு கலக்க சபையாரின் உதவியைக் கொண்டு வரிவசூல், நகர்காவல், குற்ற விசாரணை, கல்வி வளர்ச்சி, விவசாயம், கோவில் ஆட்சி, சுகாதாரம் முதலியவைகளை நடத்தி வந்தான். இதற்காக வரி வசூலில் ஆறில் ஒரு பங்கு அவன் (இரக்ஷ புருஷன்) எடுத்துச் செலவு செய்து வரலாம் என்று தீர்மானம் செய்தார்கள். இரக்ஷ புருஷனுக்கு "அவரோதி நம்பி" என்ற பட்டமும் கொடுத்தார்கள். இம் முறையான ஆட்சி பல ஆண்டுகள் நடைபெற்றது. பிறகு இருக்க இருக்க சீர் கெட்டு விட்டது.

64 கிராமங்களும் ஒன்றுக்கொன்று தொலைவில் இருந்தபடியாலும், போக்குவரத்து சாதனங்கள் ஒன்றும் சரியான முறையில் இல்லாததாலும், கலக்க (பிரிவு) சபையாருக்குள் கலகங்கள் உண்டானதாலும், அவரோதி நம்பியைக் கணக்கு வழக்குக் கேட்க ஒருவரும் இல்லாததாலும், ஆலோசனை சபையாரைக் கைக்குள் வைத்துக்கொண்டு அவரோதி நம்பியாக வந்தவர்களிற் பலர் அக்கிரமம் செய்யத் தலைப்பட்டார்கள். அம் முறையான ஆட்சி சில காலம் நடைபெற்று வந்தது.

சின்னாட் கழித்துக் கிராமத்தார்களுடைய முறையீட்டின் பேரில், 64 கிராமங்களின் நம்பூதிரிகளும் திருநாவாய் என்ற ஊரில் ஒன்றுகூடிப் பேசி, அடியில் கண்டபடி முடிவு செய்தார்கள் :

(1) கிராம பரிபாலனத்தை இனிமேல் அவரோதி நம்பியிடம் விடக்கூடாது.

(2) சேர-சோழ-பாண்டிய-கொங்கு-துளு-வாண மண்டலங்களில் உள்ள அரசர்களையோ, அவர்களைச் சேர்ந்தவர்களையோ ஒருவனைத் தேர்ந்து எடுக்க வேண்டியது.

(3) அப்படித் தேர்ந்து எடுத்தவர், பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி செலுத்த வேண்டியது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தரம் தேர்தல் நடைபெற வேண்டியது. நடுவில் ஏதாவது எதிர்பாராதது ஏற்பட்டால், அப்போதும் தேர்தல் நடத்த வேண்டியது.

(4) தேர்ந்து எடுத்த நபருக்கு அவருடைய இயற் பெயருடன் "பெருமாள்" பட்டம் கொடுக்க வேண்டியது.

(5) வரி வசூலில் ஆறில் ஒரு பங்குத் தொகையை "பெருமாள்" பட்டம் பெறறவனே அரசியல் காரியங்க ளுக்காக எடுத்துக்கொள்ள வேண்டியது.

(6) அவரோதி நம்பி நடத்தி வந்த சகல காரியங் களையும் கலக்க (பிரிவு) சபையாரைக் கொண்டும், கிராம சபையாரைக் கொண்டும் நடத்தி வர வேண்டியது.


இத்தகைய முடிவுகள் நிறைவேறியவுடன், முதன் முதல் கி. பி. 216-ல் "பெருமாள்" ஆனது கொங்கு நாட்டில் இருந்து வந்த அரச பரம்பரையினன் ஆவன். இது பின்இணைப்பிலுள்ள "பெருமாள்" அட்டவணையைப் (பக்கம்: 267) பார்த்தால் விளங்கும்.

அப்படி வந்தவன் "கோயப் பெருமாள்" என்னப் பட்டான். கோயமுத்தூரைக் கோயை என்றும், கோவை என்றும் குறுகிய பெயரால் அழைப்பது வழக்கம். கொங்குநாட்டை கி. பி. மூன்றும் நூற்றாண்டில் அர சாண்டவன் கங்க வம்சத்தைச் சேர்ந்த முதலாம் கொங்கணி வர்மன் ஆவான்.

கி. பி. 216-ல் இருந்து கி. பி. 798 வரை மொத்தம் 25 பெருமாள்கள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் சிலபேர் அரசர்கள், சிலபேர் அரச மரபைச் சேர்ந்தவர்கள்.

பெருமாள் அட்டவணையில் 'எலிப்பெருமாள்' என்ற ஒருவர் உளர். அவர் சேரநாட்டின் உட்பிரிவில் குளத்து

நாட்டைச் சேர்ந்த சிரக்கல் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர். அக் குளத்துநாட்டில் உள்ள மலைக்கு 'எலிமலை' [1] என்று பெயர். சிரக்கல் அரச குடும்பத்தாருக்கு கோலத்திரி ராசாக்கள் என்றும் பெயர். "ஆழிமலை" அஃதாவது




1. எலிமலை :—Mount Ely-De, Ely-Eli Madu-Mount De. Eli. The name of Marabia or Maravi is preserved in Madai or Madavi situated 13½ miles N. W. of Cannanore. Upon the river which enters the bay about 7 or 8 miles S. E. of Mount Ely. There is an old temple here. Close by, in this the Madai Township, is the hamlet of Payangadi. (Palayangadi) which means *Old Town or Market*, with an old tank called "*The Jewish Tank*" near which stands the ruins of the old fort or palace of the *Eli* or *Kolattiri Raja's*.

Eli malai may be a Varient of *Ali malai* meaning *Mount near the Sea*. —*History of Kerala*: *pages*, 14 & 15.

கடலோரத்துள்ள மலை, என்பது திரிந்து 'ஏலிமலை' என்று ஆகியிருக்கலாம் என்று கேரள சரிதக்காரர் எண்ணுகிறார். சிலபேர் 12 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியுள்ளார்கள். சிலபேர் குறைந்த ஆண்டுகள் ஆட்சிசெலுத்தி உள்ளார்கள். அகால மரணத்தாலும், குரூரமான ஆட்சி முறையாலும், மதம் மாறுபாட்டாலும் ஆட்சி ஆண்டுகள் குறைந்தன என்று கொள்ளக் கிடக்கிறது.

கி. பி. 462-ல் இருந்து கி. பி. 765 வரை 'பெருமாள் களே' கிடையாது. பிறகு கி. பி. 798 வரை 'பெருமாள்' தேர்தல் நடைபெற்றது. பின்னால் அம்முறை நிறுத்தப் பட்டது. இதனால், "பெருமாள்" என்ற பட்டம் நம்பூத்திரி களுடைய கிராம ஆட்சிக்குரிய பட்டமேயொழிய, சேர நாட்டு அரசர்க்குரிய பட்டம் அல்ல. சேரநாட்டு அரசர் கள் நம்பூத்திரிகளுடைய கிராமங்களின் ஆட்சியை ஏற்றுக் கொண்டபோது 'பெருமாள்' என்ற பட்டம் தரித்துக் கொண்டார்கள் எனத் தெரிகிறது.

## 5. கொல்லம் ஆண்டு

சேரநாட்டில் கொல்லம் ஆண்டுதான் வழக்கத்தில் உள்ளது. ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு சகம் வழக்கத்தில் உள்ளது. பின்னிணைப்பில் இணைக்கப்பட்டிருக்கும் சகங்களின் (பக்கம்: 271) அட்டவணையைப் பார்க்க.

கொல்லம் ஆண்டு கி. பி. **825**-ல் துவக்கம். கி. பி. **822**-ல் ஏற்பட்ட அராபிக் கடலின் கொந்தளிப்பினால் பழைய கொல்லம் கடலில் மூழ்கிற்று.[1] பின் புதிய கொல்லம் (Quilon) கி. பி. 825-ல் பாரசீக வர்த்தகன் மருவன் சபரீசோ என்பவனால் கட்டப்பட்டது. அதுமுதல் கொல்லமாண்டு துவக்கம்.[2] சிலபேர் முதலாம் சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்திகளும் கயிலை சென்ற நினைவாக இக் கொல்லம் ஆண்டு துவக்கப்பெற்றதென்று கூறுவர்.

---

1. தமிழ்ப் பொழில்: தொகுதி 12 பக்கம், 294 - 297.
2. Travancore Archaeological Series: Vol. P. 57-58.

அவ்வாறு கூறுபவர்களுக்குச் சான்று எதுவும் இல்லை. சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்திகளும் திருவஞ்சைக் களத்தினின்றும் கயிலை சென்றதாகச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறுகிறார். திருவஞ்சைக் களத்துக் கோவிலிலும் அதற்குரிய அடையாளங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கத் திருவஞ்சைக்கள சகம் என்றாவது, சேரமான் பெருமாள் சகம் என்றாவது அச்சகத்துக்குப் பெயரிட்டிருக்க வேண்டும். அப்படியில்லை என்பது தெரிகிறது. ஆகையால் கொல்லம் ஆண்டுக்கும் முதலாம் சேரமான் பெருமாளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. முதலாம் சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்திகளும் கைலை சென்றது கி. பி. 712-ல். கொல்லம் ஆண்டோ கி. பி. 825-ல் துவக்கம். ஆதலால், காலத்தாலும், இடத்தாலும், பெயராலும் யாதொரு தொடர்பு இல்லை என்பது தெளிவு.

முதலாம் சேரமான் பெருமாள் காலத்தில் பல்லவர் நாட்டில் காடவர்கோன் கழற்சிங்க நாயனாரும் (கி. பி. 685—710), பாண்டிய நாட்டில் கோச்சடையன் இரணதீரனும் (கி பி. 670—710) அரசர்களாக இருந்தார்கள். சேர-சோழ-பாண்டிய மூவேந்தர்களும் சுந்தரமூர்த்திகள் மதுரை சென்றபோது ஒன்று கூடிச் சொக்கலிங்கப் பெருமானையும், அங்கயற்கண் அம்மையையும் தரிசித்தார்கள் என்று சேக்கிழார் கூறுகிறார். முதலாம் சேரமான் பெருமாள் கி. பி. 667 முதல் கி. பி. 712 வரை ஆண்டார் என்றும் சேர நாட்டுச் சரித்திரம் கூறுகிறது.

புதிய கொல்லம் கி. பி. 798 முதல் கி. பி. 834 வரை சேர நாட்டை ஆண்ட மூன்றும் சேரமான் பெருமாள் காலத்தில் கி. பி. 825-ல் கட்டப்பட்டது. அவர் காலத்தில்தான் மகமதியர்களும், கிறித்தவர்களும், பௌத்தர்களும், பாரசீகர்களும் சேர நாட்டில் தங்கி வியாபாரம் கப்பல் மூலமாக நடத்தி வந்தார்கள். சேர அரசன் அவர்களுக்கெல்லாம் வேண்டிய உதவி புரிந்து வந்தான். அந்த மாதிரி மூன்றும் சேரமான் பெருமாளிடம் உதவி பெற்றவன் மருவன் சபரிசோ என்னும் பாரசீக வர்த்தகன் ஆவன்.

## 6. மருமக்கள் தாயம்

சேர நாட்டார் எல்லாரும் மருமக்கள் தாயமுறையைக் கைக்கொண்டுள்ளார்கள் என்று சிலர் கருதுகின்றனர். அது தவறான எண்ணம்.

சேர அரசர்களுக்குள் மக்கள் தாய முறையேயன்றி மருமக்கள் தாய முறை கிடையாது. என்று திருவாளர் எம். இராகவையங்கார் அவர்களும், திருவாளர் எஸ். சோம சுந்தர பாரதியார் அவர்களும் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள்.

சேரநாட்டில் நாயர்களுக்குள்ளும் மாப்பிள்ளைகளுக் குள்ளும்தான் மருமக்கள் தாயமுறை வழக்கில் உண்டு. ஏனைய வகுப்பாரிடத்தில் அவ் வழக்கு இல்லை.

திரு. கோபால பணிக்கர் பி. ஏ. தம்முடைய 'மலையாள மும் அதன் மக்களும்' என்னும் நூலில்[1] நம்பூதிரிகள் தான் நாயர் வகுப்பில் மருமக்கள் தாய முறையைத் தங்களுடைய நன்மைக்காக ஏற்பாடு செய்து கொண்டார்கள் என்கிறார்.

மலையாளத்தில் மாவட்ட நீதிபதியாக இருந்த விக்ராம் என்பவர் நாயர்மார்களுக்குள் மருமக்கள் தாய முறையை ஏற்படுத்தியது நம்பூததிரி பிராமணர்களே என்று கூறு கிறார்.[2] மூர் மகமதியர்களும் அக் காரணத்தினாலேயே மாப்பிள்ளைகளுக்குள் மருமக்கள் தாய முறையை ஏற்பாடு செய்துள்ளார்கள். ஆதலின், சேர அரச பரம்பரையில் எப்போதும் மருமக்கள் தாய முறை இருந்ததில்லை.

---

1. Malabar and its Folks, T. W. Gopala Panicker B. A. Pages, 29-30.

2. "I am quite ready to admit that but for the Brahmans all traces of Polyandry would long since have disappeared and that the Brahman encouraged conqubinage between the younger members of their family and the Nair Women for the purpose by maintaining of the impartibility of the estates. Moppilhas also followed the Same System."

(Mr. Wigram, Sessions Judge.)

மூன்றாம் சேரமான் பெருமாள் (798—834 கி. பி.) என்கிற பாஸ்கர இரவிவர்மன் கி. பி. 834-ல் மெக்கா போவதற்குமுன், தனக்குப் பிள்ளை இல்லாததால் சேர நாட்டைப் பன்னிரண்டு பாகங்களாகச்செய்து, கொச்சியைத் தன்னுடன் பிறந்த ஐந்து சகோதரிகளுக்கும், கோழிக்கோடு என்கிற எரநாட்டைத் தன் தம்பி மகனுக்கும், வேணாடு—ஒட்டநாடு இரண்டையும் இரண்டாம் சேரமான் பெருமாள் மகன் மார்த்தாண்ட வர்மனுக்கும், ஏனைய பாகங்களைப் பந்துக்கள், நண்பர்கள், வேலைக்காரர்கள் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து, சுய ஆட்சியாக வாழும்படி ஏற்பாடு செய்துவிட்டு, மெக்கா போய் மகமதிய மதத்தைத் தழுவிக்கொண்டு, மெக்காவுக்குப் பக்கமாக உள்ள ஜபார் (Jaffar) என்னும் கிராமத்தில் தங்கி, அங்கேயே இறந்து போனான். அங்கேயே சமாதியும் கட்டப்பட்டது. அந்தச் சமாதி இன்றும் உள்ளது. அதில், "அப்துல் ரஹிமான் சாமொரின்," என்று எழுதப்பட்டுள்ளது. ஆதலால், அப்துல் ரஹிமான் என்பது சேர அரசனுடைய மதமாற்றப் பெயர் என்று தெரிகிறது.

பிற்காலத்தில் இந்தப் பன்னிரண்டு நாடுகளில் திருவாங்கூர் முதலிய சில நாடுகள் மருமக்கள் தாய முறையைக் கைப்பற்றி இருப்பதாகத் தெரிகிறது. வேணாடு என்பது திருவாங்கூர். திருவாங்கூர் அரசருக்கு வேணாட்டடிகள் என்ற பட்டம் உண்டு,

திருவிசைப்பாப் பாடிய வேணாட்டரசன் என்பவர், வேணாடு, ஒட்டநாடு இரண்டையும் சுய ஆட்சியுடன் கி. பி. 834-ல் ஆளத் தொடங்கியதாலும், வேணாட்டில் உள்ள சிவாலயம், பெருமாள் ஆலயங்களுக்கு வேண்டும் திருப்பணிகள் செய்து தொண்டு செய்ததாலும், "வேணாட்டடிகள்," என்ற பட்டம் பெற்ற மார்த்தாண்ட வர்மா ஆவர். இவருடைய தகப்பனார் இரண்டாம் சேரமான் பெருமாள் வைணவராக இருந்தபோதிலும், இவர் சேரநாட்டுக் குலமுறைப்படி சைவராகவே இருந்தார் என்று தெரிகிறது.

## 7. மலையாள மொழி


"[1]"தென் பாண்டி, குட்டம், குடம் கற்கா, வேண், பூழி,
(1) (2) (3) (4) (5) (6)
பன்றி, அருவா, அதன் வடக்கு—நன்றாய
(7) (8) (9)
சீத, மலாடு, புனனாடு, செந்தமிழ் சேர்
(10) (11) (12)
ஏதமில் பன்னிரு நாட்டெண்." (பழம்பாடல்)

சேர நாட்டில் ஆதிகாலந் தொட்டு, கி. பி. 17-ம் நூற்றாண்டுவரை தமிழ்தான் நாட்டு மொழியாகவும், அரசியல் மொழியாகவும் இருந்து வந்தது.

ஆனால், கி. மு. 6015-ல் ஆரியர் நாட்டிலிருந்து ஆரியப் பிராமணர்கள் 64 குடும்பங்கள் சேரநாடு வந்து குடியேறிய தாலும், கி. பி. 4-ம் நூற்றாண்டில் மயூரசர்மன் (கடம்ப அரசன்) காலத்தில் 84 குடும்பங்கள் அஹிக்ஷேத்திரத்திலிருந்து (Rohilkund) வந்து சேர நாட்டில் குடியேறிய தாலும், அதே நூற்றாண்டின் கடைசியில் கடம்ப அரசன் கங்கவர்மன் என்கிற சந்திரகாந்தன் என்பவன் கராச்சி (Karachi) யிலிருந்து பல ஆரியப் பிராமண குடும்பங்களை சேரநாட்டில் குடியேற்றியதாலும், கி. பி. 9-ம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னிட்டும், அஃதாவது, சங்கராசாரியார் காலம் முதற்கொண்டு தமிழ்நாட்டிற்கு வந்த சுமார்த்தப் பிராமணர்கள் (அதாவது, பிரகச்சரணம்—அஷ்டசகஸ்ரம் —வடதேசத்து வடமாள் — வைதீகலு முதலியோர்) மலையாள நாட்டில் ஏராளமாகக் குடியேறியதாலும், அங்கங்கே ஆற்றோரங்களில் பல அக்கிரகாரங்கள் ஏற்பட்டன. அதன் பயனாக ஆரியமொழியும் தமிழ்மொழியும் கலந்தன.

தமிழ்மொழி அதற்கு முன்னேயே நாட்டின் வெப்பங்களால் சிறிது மாறுபட்டுக் கொடுந்தமிழாக (கோடிய தமிழ்; அஃதாவது, தூயதமிழ் மொழியானது சிறிது

1. படம் அடுத்த பக்கம் பார்க்க.


மலையாள மொழி
கொடுந்தமிழ் நாடுகள் 12
கோதாவிரி
கிருஷ்ணா
அருவா வடதலை 9
வடபெண்ணை
நந்தி துர்க்கம்
பூழி 6
8 அருவா
பாலாறு
3 குடம்
தென்பெண்ணை
சீதநாடு 10
மலாடு 11
12 புனல்
கற்கா 4
காவிரி
குட்டம் 2
பன்றி 7
மணிபல்லவம்
வைகை
செந்தமிழ் நாடு
வேணா 5
1
தென்பாண்டி
ஈழம்
(இலங்கை)
குமரிமுனை

மாறுபட்டு) வழங்கிவந்தன. அம் மாதிரி தமிழ்மொழி திரிவுபட்டுக் கொடுந்தமிழ் நாடுகளாகப் பன்னிரண்டு நாடுகள் ஏற்பட்டிருந்தன. அவைகளை மேலே காட்டிய படத்தில் காணலாம்.

கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரண்டில் (1) பூழி (2) குடம் (3) கற்கா (4) குட்டம் (5) வேண் இந்த ஐந்து நாடுகளும் சேர நாட்டில் உள்ளன.

மேலே கூறிய ஐந்து கொடுந்தமிழ் நாடுகளிலும்தான் ஆரியர் கூட்டம் ஏராளமாக வந்து சேர்ந்தது. ஆரிய மொழியும் தமிழ் மொழியும் கலக்க வசதிகள் ஏற்பட்டன. சேரநாட்டில் உள்ளவர்களுக்கு புதிதாக வந்த ஆரிய மொழியின் மோகம் உண்டாயிற்று. ஆரிய நாட்டு இதிகாச புராணங்களில் உள்ள சரித்திரம் கதைகளைப் படிக்க வேண்டுமென்கிற ஆசை உண்டாயிற்று. ஆதலின் பலர் ஆரிய மொழி பயின்றனர்.

கி. பி. 17-ம் நூற்றாண்டில் துஞ்சத்து எழுத்தச்சன்[1] என்னும் அறிஞர் ஒருவர் தோன்றி மலையாளம் என்ற

---

1. *History of Kerala: page,* 468.

"The Modern Malayalaṃ or Aryan Eluthu is the product of the development of ages and attained its present shape only in the 17*th century* A. D. having been introduced, it is said, by *Thunjat Eluthachan,* the father of Malayalam language, and literature.

*Mr. Logan* is inclined to think that Eluthachan not simply introduced the Modern Malayalam alphabet, but *Rather invented it.* For he says, "it was no less than a revolution when in the 17th century, one Thunjathu Eluthachan a man of the Sudra (Nair) caste boldly made an alphabet—the existing—Malayalam one derived chiefly from the Grandha—the Sanskrit of the Tamils—which permitted of the free use of sanskrit on writing and boldly set to work to render the chief sanskrit poems into Malayalam.

Before 17th century, Vatteluthu was in use in Malabar.

ஒரு பெயர் கொடுத்து, பெரும்பான்மை சமஸ்கிருதமும், சிறுபான்மை கொடுந்தமிழும் கலந்த ஒரு மொழியை ஏற்பாடு செய்தார்.

தெலுங்கு, கன்னட, கிரந்த மொழிகளைப் பார்த்து ஒரு நெடுங் கணக்கு ஏற்பாடு செய்து, மொழியை ஒழுங்கு படுத்தினர். அதற்கு வேண்டிய நூல்களும் எழுதினர். அப்போது, தமிழ் வட்டெழுத்துத்தான் மலையாளத்தில் வழக்கில் இருந்தது. மலையாள மொழிக்கு தமிழ் வட்டெழுத்துக்களையே எடுத்துக்கொண்டார்.

தற்காலம் சமஸ்கிருதமும், மலையாள மொழியுமே தான் சேர நாட்டில் வழக்கத்தில் உள்ளன. தமிழ் படிப்பார் மிகச் சிலரேயாவர்.

சில மலையாளமொழிப் புலவர்கள் மலையாள மொழி சமஸ்கிருதத்தினின்றும் பிரிந்த மொழி என்று கூறினும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, இலக்குமணப் பிள்ளை, பொன்னம்பலம் பிள்ளை முதலியோர் ஆராய்ந்து சரித்திரம் உணர்ந்து, மலையாள மொழி, தமிழ் மொழியினின்றும் பிரிந்த மொழி என்று முடிவு கட்டியுள்ளார்கள்.

---

*Dr. Burnell* says, that Vatteluthu was the "Original Tamil Alphabet which was once used in all the part of the peninsula south of Tanjore and also in south Malabar and Travancore."

He adds that the *Vutteluthu Alphabet* remained in use in Malabar up to the end of the 17th centuary A. D. among the Tamils and since then, the form of *Kol - Eluthu* (Sceptre Writing); it is the character in which the Hindu sovereigns have their grants drown up."

# சேரர் வரலாறு

## I. உதியன் குடும்பம்

### க. இமயவரம்பன் - வானவரம்பன்

[கி. மு. 30,000-க்கு முன்]

பூதத்துவ நூலின்படி (Geology) இமயமலை கடலினின்றும் வெளிக்கிளம்பி இரண்டு கோடி (20,000,000) ஆண்டுகள் ஆகின்றன.

இமயமலை கிளம்புவதன் முன்னம் விந்தியமலைக்கும் திபேத்துக்கும் இடையில் கடல் இருந்தது. விந்தியமலையிலிருந்து தெற்கே குமரி வரையும், அதற்கு அப்பால் தென் சமுத்திரம் (Antarctic) வரையிலும், ஒரே நாடாக இருந்தது. இந்துமாக் கடல் அப்போது கிடையாது. இந்த நிலப்பாகத்திற்குத் தமிழர்கள் தமிழகம், அல்லது, குமரிக் கண்டம் என்று பெயரிட்டு இருந்தார்கள். பூதத்துவ நூல் வல்லவர்கள் காண்டுவானு (Gondwana land) பூமி என்று பெயரிட்டார்கள். ஐரோப்பிய நாட்டினர் அதே பூமிக்கு இலெமூரியாக் கண்டம் (Lemuria continent) என்று பெயர் கொடுத்தார்கள். இந்தக் குமரிக் கண்டமானது தென் அமெரிக்காவில் இருந்து ஆஸ்திரேலியா வரையும், விந்திய மலையிலிருந்து தென்கடல் (Antarctic) வரையும் பரவி இருந்தது.[1]

---

1. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, முகப்புப் படம் பார்க்க.

இந்தக் குமரிக் கண்டத்திலேதான் முதல் முதல் மனித உற்பத்தி உண்டாயிற்று. மனிதர் ஐந்து கணங்களாக ஏற்பட்டனர்.[1] உலகத்திலேயே இங்கே கூறப்பட்ட ஐந்து கணங்களின் சந்ததியாரே இன்றும் இருப்பதைப் பார்க்கலாம்.

அவ் வைந்து கணங்கள் :—

(1) தமிழர் கணம் (தமிழ் நாட்டவர்)

(2) ஆரியர் கணம் (காக்கேசியா மலைநாட்டினர்)

(3) அவுணர் கணம் (மங்கோலியா நாட்டினர்)

(4) நிருதர் கணம் (ஆபிரிக்கா நாட்டு நீகிரோவர்)

(5) அரக்கர் கணம் (அமெரிக்கா நாட்டுச் சிவப்பு இந்தியர்) என்பனவாம்.[2]

இக் கணங்களைப்பற்றி விரிவாக, நிறம் உருவ பேதங்களை விரித்து, எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி "கழகத் தமிழ் வினு விடை' ஒன்று—இரண்டு பாகங்களில் கூறியுள்ளேன். ஆண்டுக் கண்டுகொள்ளுக.

குமரிக் கண்டத்தின் மேல்கோடியாகிய தென் அமெரிக்காவில் அரக்கரும் (Red Indians), நடுப்பகுதியாகிய ஆபிரிக்காவில் நிருதரும் (Black Negroes), வடகீழ்ப் பகுதி மேல்பாகத்தில் ஆரியரும் (Caacsians), கீழ்பாகத்தில் அவுணரும் (Mangolians), தென்பகுதியில் வடதென் அயனவரைகளுக்கு இடையில் தமிழரும் (Tamilians), வாழ்ந்து வந்தனர்.

இருக்க இருக்கத் தமிழர்கள் அவரவர்கள் இருந்த இடத்தின் பெயரால் 18 வகுப்பினராகவும், தொழிலின் பெயரால் 18 வகுப்பினராகவும் பிரிந்தார்கள்.

1. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, 16-ம். பக்கத்திலுள்ள படம் பார்க்க.

2. கழகத் தமிழ் வினுவிடை II-பக்கம், 19—20.

இடத்தின் பெயரால் ஏற்பட்ட 18 வகுப்புக்கள் :—

(1) சேரர் (சேரநாட்டு வேளாளர்)
(2) சோழர் (சோழநாட்டு வேளாளர்)
(3) பாண்டியர் (பாண்டியநாட்டு வேளாளர்)
(4) ஒளியர், (ஒளிநாட்டு வேளாளர்)
(5) நாகர் (நாகநாட்டு (ஈழம்) வேளாளர்)
(6) பல்லவர் (பல்லவநாட்டு வேளாளர்)
(7) கொங்கர் (கொங்குநாட்டு வேளாளர்)
(8) துளுவர் (துளுநாட்டு வேளாளர்)
(9) கார் காத்தார் (கார்மண்டல வேளாளர்)
(10) தொண்டைநாட்டார் (தொண்டைமண்டல வேளாளர்)
(11) குறவர் (குறிஞ்சிநில மக்கள்)
(12) ஆயர் (முல்லைநில மக்கள்)
(13) வேடர் (பாலைநில மக்கள்)
(14) பரதவர் (நெய்தல்நில மக்கள்)
(15) பள்ளர் - மள்ளர் (மருதநில மக்கள்)
(16) கள்ளர்
(17) மறவர் } (சேனைக்கு உரியவர்)
(18) அகம்படியர்

[1] தொழிலின் பெயரால் ஏற்பட்ட 18 வகுப்புக்கள் :—

(1) நாவிதன் (2) குயவன் (3) வண்ணான்
(4) ஓச்சன் (5) தச்சன் (6) தட்டான்
(7) கொல்லன் (8) கன்னான் (9) கம்மியன்
(10) அறுவைவாணிகன் (11) இலைவாணிகன் (12) எண்ணெய் வாணிகன்
(13) மாலைக்காரன் (14) பாணன் (15) பள்ளன்
(16) வலையன் (17) இடையன் (18) வீரமுடையான்

1. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, பக்கம், 97—98.

இதுபோலவே, மற்றக் கணங்களைச் சேர்ந்தவர்களும் பல பிரிவினர்களாகப் பிரிந்து வாழ்ந்துவந்தார்கள்.

தமிழ்நாட்டுப் பதினெண் குடிகளில் சேரர்—சோழர்—பாண்டியர்—ஒளியர் என்பாரே சிறந்து விளங்கினூர்கள். முடிசூடி அரசாண்டனர். ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு விதமான கொடியை (Flag) அடையாளமாகக் கொண்டார்கள். சேரருக்கு விற்கொடியும், சோழருக்குப் புலிக்கொடியும், பாண்டியருக்கு மீன்கொடியும், ஒளியருக்கு எருதுக் கொடியும் (Bull) ஏற்பட்டன.

இமயமலை கடல் அடியினின்றும் கிளம்பியபின் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுவில் இருந்த கடல் வற்றி நிலமாக மாறிற்று. மனிதர்கள் குடியிருக்க வசதிகள் ஏற்பட்டன. புதிதாக ஏற்பட்ட நிலமானது (1) சிந்து நாடு (Sindh), (2) கசமார் நாடு (Cashmere), (3) கங்கை நாடு (Gaugetic plain), (4) இமயநாடு (Nepal), (5) பூதர் நாடு (Bhutan) எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. மக்கள் குடியேறி வாழத் தலைப்பட்டார்கள்.

இதற்குப் பல ஆண்டுகள் கழித்துச் சேரமன்னன் இமயம்வரை படைகொண்டுசென்று, இடைப்பட்ட நாடுகளையும் வென்று, இமயத்தில் விற்கொடியை நாட்டி, சேரநாட்டவரை இமயத்தில் குடியேற்றினான்.[1]

இவன் கி. மு. 30,000-ல் பஃறுளியாற்றுத் தென்மதுரையில் அரசாண்ட நெடியோன், ஆறிவடிம்பலம்ப நின்றவன், மாகீர்த்தி என்ற பட்டமுடைய முதலாம் நிலந்தரு திருவிற்

1. History of Kerala - Page 463:— "Dr *Buchanan Hamiltan* Points, in his work Called "Account of the Kingdom of Napal" pages 29-42-51, to the similarity between the architecture of the West - Coast and of Nepal, and both he and Col *Kirckpatrick* remark that this, coupled with the strange nations as to conjugal relations and other peculiarities prevailing among the *Nairs* of the West-coast and the *Newars* of Nepal, *points to a Similarity of Race.*

***Kirck-patrick's Nepal*, page, 187.**

பாண்டியன் காலத்திற்கும் முற்பட்டவன் என்று தெரிகின்றது.

இமயத்தில் முதல் முதல் தன்னுடைய கொடியை நாட்டியதில் இவனுக்கு இமய வரம்பன் என்ற பட்டம் கிடைத்தது. இவனே பின்னும் வானவர் (சீனர்) நாடாகிய திபேத் நாட்டையும் வென்று, கைப்பற்றித் தன் அரசுக்குக் கீழ் கொணர்ந்ததால் வான வரம்பன் என்னும் பட்டத்தையும் பெற்றான். சீனர் தங்களை வானவர் என்று கூறிக் கொள்ளுவது சரித்திரம் வல்லார் அறிவர்.

நேபாள நாட்டில் இருக்கும் நீவார் என்னும் வகுப்பார் சேர நாட்டு நாயர்களைப்போல, பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பது இதனை வலியுறுத்தும் என்று டாக்டர் புக்கானன் ஆமில்டன் என்பவரும் கர்னல் கர்க்பார்ட்டிரிக்கும் கருதுகின்றனர்.

பிரியன் அட்சன் (Mr. Brian Hudgson) என்பவரும் இதே மாதிரி கருதுகின்றார் என்று கேரளச் சரித்திரம் கூறுகின்றது.[1]

சேரநாட்டார் இமயமலையில் குடியேறியதைப் பார்த்து, சோழர்களும், பாண்டியர்களும் மாறி மாறி இமயம்வரை சென்று, வென்று, அரசாண்டும், குடியேறியும் இருக்கிறார்கள். புலிக்கொடியும் மீன்கொடியும் ஒவ்வொரு காலத்தில் இமயத்தில் நாட்டப்பட்டுள்ளன.

இருக்க இருக்கக் காந்தர்வ நாடும் (Kandhadar), காமரூப நாடும் (Assam) தமிழர் ஆட்சிக்கு உட்பட்டன. அக்காலத்தில்தான் "வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்", என்றும், "தென்குமரி வடபெருங்கல்" என்றும் தமிழ் நாட்டுக்கு வட எல்லை இமயமலை என்று பாடியுள்ளார்கள். 'பனிபடு நெடுவரை' என்பதும் 'வட பெருங்கல்' என்பதும் இமயமலையையே குறிக்கும்.

1. *History of Kerala, Page*, 463.

Mr. Brian Hudgson refers to this similarity and remarks that the *Nayars* of Malabar and the *Newars* of Nepal may, perhaps, *belong to the same race.*

ஆரியர்கள் கி. மு. 9,000-ல் இந்தியாவுக்குள் நுழைவதற்கு முந்தியே வடநாடுகளில் தமிழர்கள் குடியேறி பல வகுப்பார்களாக விளங்கினார்கள் என்பது ஆரியர்களுடைய இருக்கு வேதத்திலேயே கூறப்பட்டுள்ளது என்று பாதிரி ஹீராஸ் (Rev. Fr. Heras) என்பவர் இந்தியச் சரித்திரக் காங்கிரஸ் 10-வது கூட்டத்தில் "வடநாடுகளில் உள்ள தமிழ்க் குடிகள்" என்ற தலைப்பில் கி.பி. 1947-ல் பம்பாயில் பேசி உள்ளார்.[1]

இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள தமிழ்க் குடிகளாகிய பறவர் (=பறவைக் கொடியை உடையவர்), மீனவர் (=மீனக் கொடியை உடையவர், அஃதாவது, பாண்டிய நாட்டார்), பானியர்[2] (=பனைக் கொடியை உடையவர், அஃதாவது, சேர நாட்டார்—பானியர் என்பது பணிக்கர் =பனைக் கையர் என்றும் ஆகும்), அணிலர் (=அலினர் அணிற்[3] கொடியை உடையவர்), சிவையர் (=கிளிக் கொடியை உடையவர்—சிபையர் என்றும் வழங்கும்), கோழியர்[4] (=கோழிக்கொடியை உடையவர் - கோழியர் = சோழியர் என்றாகிச் சோழரைக்குறிக்கும்), நாகர் (= நாகப் பாம்புக் கொடியை உடையவர்), வானரர் (=குரங்குக் கொடியை உடையவர்—குடகர்), வில்லர் (= விற் கொடியை உடையவர்—அஃதாவது சேரர்), கருடர் (= கருடக் கொடியை உடையவர்) முதலிய எல்லோரையும் தாசர்கள் என்று இகழ்ந்து கூறப்பட்டுள்ளது நோக்கத் தக்கது.

அந்த இருக்கு வேதத்திலேயே இத்தகைய தாசர்கள் எல்லாம் இரும்புக் கதவுகள் கொண்ட, கருங்கல் - செங்கல் களால் ஆகிய மதிற் சுவர்களை உடைய கோட்டைகளையும்,

---

1. Vide the article "the Dravidian Tribes of Northern India" in the proceedings of the Indian History Congress, 10th Session - Bombay - page, 5.

2. Ludwigs Translation of Rig Veda III, page, 213-216.

3. Rig Veda VII - 187.

4. "The Kozhi - kon in Mohanjo-Daro" by Heras (The New Indian Antiquary I, pp. 275 - 279.

சுகாதார விதிப்படி அமைக்கப்பட்ட நகரங்களையும், விந்திய மலையின் சிகரத்துக்கும் உயர்ந்த மாடங்களையுடைய நூறு அரண்மனைகளையும் உடையவர்களாக இருந்தார்கள் என்றும், அவர்களுடைய பெண்கள் எல்லாம் நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்து, பாலிலே தலைமுழுகுகிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளதை நோக்க, ஆரியர்கள் வருமுன்னரே தாசர்கள் என்று சொல்லப்பட்ட தமிழ்க் குடிகள் வடநாட்டில் குடியேறி, நல்ல ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டு நலத்துடன் வாழ்ந்து வந்தார்கள் என்று அறியக் கிடக்கின்றது. அக் குடிகளுக்குச் சேர—சோழ—பாண்டியர் என்ற முடிமன்னர் மூவரும் மாறிமாறி அரசர்களாக ஏற்பட்டுள்ளார்கள் என்றும் அறிகிறோம். இத்தகைய குடிகளுக்கு முதன் முதல் அரசனானவன் இமயவரம்பன் வானவரம்பன் என்னும் சேரனாவான்.

இவ்வளவு காலத்துக்கு முன் மனிதர்கள் இவ்வளவு நாகரீகத்தோடு இருந்தார்களா என்ற சந்தேகம் எல்லாருக்கும் எழலாம். அவர்கள் எல்லாம் மொகெஞ்சதாரோ, அரப்பா புதைபொருள் ஆராய்ச்சியையும், பென்சில்வானியா (Pennsylvaniya) பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புரொபசர் கார்லடன் கூன் (Prof - Carleton. S. Coon) என்பவர் பாரசீகத்தில் கண்டுபிடித்து எடுத்த மூன்று மனித எலும்புக் கூடுகளைப் பற்றிய ஆராய்ச்சியையும் படித்தால் ஐயம் உண்டாகாது என்று நினைக்கிறேன்.

காஸ்பியன் கடல் (காக்கேசியா மலைப்பக்கம்) பக்கம் உள்ள பேஷகார் (Behshahr) என்னும் இடத்தில் தோண்டிப் பார்த்ததில், 75,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று மனித எலும்புக் கூண்டுகள் அகப்பட்டன என்று நியூயார்க் டைம்ஸ் (Newyork Times) என்ற நாளிதழில் வெளியிடப்பட்டிருந்ததை சென்னை [1]மெயில் பத்திரிகை 13-5-51-ல் எடுத்துக்காட்டி யிருக்கிறது.

1. Evidence that a modern form of man lived at the same time as previously known primitive types. Some 75,000 years

இதற்கு முன் 75,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட விலங்குகள் — பறவைகள் — மீன்களின் எலும்புக் கூடுகளும், மரத்தின் அடிப்பாகங்களும் அகப்பட்டிருக்கின்றனவே ஒழிய, மனிதர் எலும்புக் கூடுகள் அகப்பட்டது இதுதான் முதல் தடவை.

தமிழ்நூல்களில் கூறப்பட்டுள்ள உண்மைகள் எல்லாம் இருக்க இருக்க இனி வரும் ஆராய்ச்சியால்தான் உறுதிபெறும்.

ஆதலின், கி. மு. 30,000-க்கு முன் ஒரு சேரன் இமயமலை நாட்டைப் பிடித்து அரசாண்டான் என்று கூறுவதில் யாரும் ஐயங்கொள்ள வேண்டியதில்லை.

---

ago was produced here by Prof - Carleton S. Coon of the University of Pennsylvania.

Digging in a cave near *Behshahr* on the Caspian sea. *Dr. Coon* an anthropologist, and his assistant *Louis Dupree* of Harward University, a geologist, uncovered three human skeletons in what appeared to be *Pleistocene Age gravels.*

The Skeletons were found by Dr. Coon and Mr. Dupree after they had dug through three gravel and three Sand layers to a depth of about *twelve* meters (approximately 40 feet). The two Scientists concluded that their find dated back to somewhere near the end of the third inter-glacial period that making it roughly 75,000 years old.

*'Mail' Sunday Dated* 13—5—51.

## உ. கேலன்—கேரளன்—சேரலன்

[கி. மு. 9000—கி. மு. 7000]

ஆரியர்களுடைய இருக்குவேதத்தில் சேரநாட்டு அரசர்களைப்பற்றிப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அவர்களுடைய சரியான தமிழ்ப்பெயர் குறிக்கப்படவில்லை. கேலன்—கேரளன் என்றே கூறப்பட்டுள்ளது[1].

திரு. கா. நமசிவாய முதலியார் எழுதிய "அகத்தியர் ஆராய்ச்சி" என்னும் நூலில் [2]"இருக்குவேத காலத்தில் அகத்தியர் என்பவர் ஒருவர், கேலன் (சேரன்) என்பவனுக்குப் புரோகிதராக இருந்தார்" என்று சாயனர் கருதுவதாகக் கூறுகிறார்.

இருக்குவேதத்தில் கேலன் ஒருவன் கூறப்படுகின்றான். சாயனர் இவன் அரசன் என்றும், இவன்புரோகிதர் அகத்தியர் என்றும் கேலன் என்னும் மொழி கேரளன்—சேரலன் என்று திரியும் என்றும் 'தமிழ் வரலாறு' உடையார் கூறுகின்றார்.[3]

ஹீராஸ் பாதிரியாரும் தம்முடைய "வடநாடுகளில் உள்ள தமிழ்க்குடிகள்" என்ற கட்டுரையில் இருக்கு வேத காலத்தில் சேர—சோழ—பாண்டியர் மாறி மாறி வடநாடுகளை ஆட்சிசெய்தும், குடியேறியும், ஆரியர்களோடு நட்புமுறை பாராட்டியும், சில ஆரியக் குடும்பங்களோடு கொண்டு கொடுத்து உறவு கொண்டாடியும் உள்ளார்கள் என்று கூறுகிறார்.[4]

ஆதலின், இருக்குவேத காலத்தில் பலசேர அரசர்கள் சேரநாட்டில் ஆட்சிபுரிந்ததோடு வடநாட்டின்பேரில்

---

1. Rig Veda I. page, 115-116.
2. அகத்தியர் ஆராய்ச்சி நமசிவாய முதலியார், பக்கம், 6.
3. 'தமிழ் வரலாறு' R. R. இராகவையங்கார், பக்கம், 325.
4. The Proceedings of the Indian History Congress, 10-th Session, Page, 75.

அடிக்கடி படையெடுத்தும், வென்றும் இருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது.

ஆரியர்கள் கி. மு. 9000-லேயே இந்தியாவுக்குள் குடியேறிவிட்டார்கள் என்பதற்கு ஆதாரம் முன்னமே தோற்றுவாய் என்னும் பகுதியில் காட்டப்பட்டுள்ளது. அவ் வாதாரங்களை ஈண்டுக் கீழே மீண்டும் கொடுத்துள்ளேன்.[1]

ஆதலின், இருக்குவேத காலத்திலேயே பல சேர அரசர்கள் இருந்திருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய பெயர் வரலாறு முதலியவைகள் இனிவரும் ஆராய்ச்சியில் வெளிப்படலாம் என்றும் எண்ண வேண்டியிருக்கிறது. 'நெருப்பில்லாமல் புகையில்லை' என்பதை மனத்திற் கொண்டால் இருக்குவேதத்தில் சேரர்களைப்பற்றி விளக்கமாக, சரித்திரமுறையாக இல்லாமற் போனபோதிலும் சில குறிப்புக்கள் இருப்பனவற்றைக் கொண்டு உணரலாம்.

---

## ௩. சேரலன் - வானவன்

[கி. மு. 6045—கி. மு. 6000]

சேரநாட்டு அரசனுக்கு **வானவன்** என்றும், அந் நாட்டில் உள்ளவர்க்கு **வானவர்** என்றும் பெயர்கள் உண்டு

**வானவர்** (Celestials) என்னும் பெயர் சீன நாட்டார்க்கு இன்றும் வழங்கி வருதலால், சேரர் ஆதியில் சீன தேசத்தினின்றும் வந்தவராக வேண்டும் என்று காலஞ்சென்ற வீ. கனகசபை பிள்ளை அவர்கள் கருதினர்.[2]

1. Proceedings of the Indian History Congress 10-th Session, Page, 126. தமிழ்ச்சங்கங்களின் வரலாறு, பக்கம் 64. Letters of Jawaharlal Nehru to his daughter Indira (Tamil Edition), pp. 165—175.

2. Vide, 'The Tamils 1800 years ago', Page, 52.

அது பொருந்துவதாயில்லை. அப்படிக் கூறுதற்குச் சரித்திரம் இடம் கொடுக்காது.

திபேத்—சீனம் முதலிய இடங்களில் உள்ளவர்க்கு வானவர் என்ற பெயர் எப்படி வந்தது? என்று பார்ப்போமானால், திபேத்—சீனா முதலிய இடங்கள் உலகத்திலேயே உயர்ந்த பீடபூமிகள்; உயர்ந்த இடத்திலிருந்து இழிந்து தாழ்ந்த நிலப்பகுதிகளுக்கு மனிதர்கள் வரும்போது, கீழிருந்து பார்த்தால் வானத்தினின்றும் இறங்குவது போலிருக்கும். அதனால் அவர்கள் வானவர் என்னப் பட்டனர். அதுபோல் தமிழ்நாட்டில் மேற்குமலைத் தொடரைச் சார்ந்த நிலப்பகுதிகள் எல்லாம் உயர்ந்து இருப்பதால், அந் நிலத்தில் வசிப்பவர்கள் உயர்ந்துள்ள இடத்திலிருந்து இறங்கித் தாழ்ந்த பூமிக்கு வரும்போது வானத்திலிருந்து வருவதுபோலிருக்கும். அதனாலேயே சேரநாட்டார்க்கு வானவர் என்றும், சேரநாட்டு அரசனுக்கு வானவன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. பண்டை நூல்களும் நிகண்டுகளும் சேரரை வானவர் என்ற பெயரால் குறிக்கின்றன என்று "சேரன் செங்குட்டுவன்" நூலாசிரியர் கூறுகிறார்.[1] சேரரது நாடும் ஊரும் பழமையான வடநூல்களிலும் கூறப்பட்டுள்ளன.[2] வடமொழி ஆதி காவியமாகிய வான்மீகி இராமாயணத்தே சீதாதேவியை வானரவீரர் தேடிவரும்படி சுக்கிரீவன் குறிப்பிட்ட இடங்களுள் கேரளநாடும் முரசீபத்தனமும் (முசிறித்துறை) உரைக்கப்பட்டுள்ளன.[3] இவற்றுள் முரசீபத்தனம் என்பது மேல் கடற்கரையில் இருந்த முசிறி என்னும் துறைமுகப்பட்டினமாகக் கருதப்படுகிறது. இது, முற்காலத்தே சுள்ளி என்னும் பேரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் விளங்கிய பெருந் துறையாகவும், சேரனுடைய தலைநகரங்களுள் ஒன்றாகவும்

1. சேரன் செங்குட்டுவன், பக்கம், 5.

2. „ „ 6.

3. வான்மீகி இராமாயணம், கிஷ்கிந்தா. 43-ம் சருக்கம், 12-ம் சுலோகம்.

இருந்ததென்பதும், மேனாட்டு யவனரது மரக்கலங்கள் மிளகு முதலிய பண்டங்களை ஏற்றிச் செல்லுவதற்கு இதுவே அக்காலத்தில் ஏற்ற நகராக இருந்ததென்பதும் தமிழ் நூல்களாலும், தாலமி முதலிய பழைய யவனாசிரியர் குறிப்புக்களாலும் தெளிவாகின்றன. ஆகவே, சேர நாட்டையும், சேர அரசனையும், அவனுடைய முக்கிய நகராகிய முசிறியையும் குறிப்பிட்டமை தெளிவாம்.

[1]தசரத இராமனால் தோல்வியுற்ற பரசுராமன் தன் னாட்டைவிட்டு, தன்னைச் சேர்ந்த 64 குடும்பங்களுடன் தென்னாட்டுப் படையெடுப்பில் தனக்கு உதவிபுரிந்த சேரனுடைய நாட்டுக்கு வந்தபோது, சேரன் பரசுராமனை யும் அவனுடன் வந்தவர்களையும் வரவேற்று, உபசரித்து, அவர்கள் தங்கி வாழ்வதற்கு 64 சிற்றூர்களைத் தான மாக அளித்துள்ளான். தானம் செய்ததுடன் அந்தக் ஊர்களில் சுதந்தரமாக ஆட்சி செய்துகொள்ளவும் அனுமதித்தான். அவர்கள்தான் தற்காலம் நம்பூத்திரிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். பரசுராமன் சேரநாடு வந்தது கி. மு. 6020-ல் ஆகும். அந்த 64 ஊர்கள் அடங்கிய சேரநாட்டுப் பகுதிக்கு "பரசுராம க்ஷேத்திரம்" என்று பெயரும் கொடுக்கப்பட்டது. அப்பெயர் இருக்க இருக்கச் சேரநாடு முழுவதுக்குமே ஏற்பட்டு வழங்கி வருகின்றது. இந்தச் சரித்திர உண்மை தெரியாதவர்கள் வார்த்தையைக்கொண்டு கதை ஒன்று கட்டிவிட்டார்கள். அக் கதையானது — "பரசுராமர் துளுநாட்டிற்கு வந்து சேர்ந்ததும் தன்னுடைய மழு(பரசு) ஆயுதத்தைத் தெற்கு நோக்கி வீச, கடலானது நகர்ந்து மூஷிகநாடு வரை இடம் கொடுத்தது. அந்த இடம்தான் 'பரசுராம க்ஷேத்திரம்.' அதுதான் பிறகு சேரநாடு ஆயிற்று" என்பதே. இக் கதை கட்டியவர்கள் இருக்குவேதத்தைப் படியாதவர்கள் என்று வெளியாகிறது. அதனோடு, தமிழில் உள்ள புறநானூறு முதலிய நூல்களையும் படியாதவர்கள் என்றே எண்ண வேண்டி இருக்கிறது.

1. அகத்தியர் வரலாறு, துடிசைகிழார். பக்கம், 36-37.

பரசுராமன் காலத்தில் அரசாண்ட சேரன் பரசுராமனுக்கு உரிய நண்பன். அதனாலேதான், பரசுராமன் தென்னாட்டுப் படை எடுப்பில் சோழ பாண்டியநாடுகளுக்குச் சென்றவன் சேரநாட்டைத் தாக்கவில்லை.

புகார் நகரில் அப்போது அரசாண்ட காந்தமன் என்னும் சோழன் பரசுராமனுக்குப் பயந்து, தன் வைப்பாட்டியின் மகன் ககந்தனை அரியணையில் இருத்திவிட்டு, தன்னுடைய நண்பனும் பரசுராமனுடைய நண்பனுமான கவேர அரசனுடைய நாடாகிய குடகுமலை (Coorg) நாட்டிற்குச் சென்று, மறைந்து, மற்றும் சில அரசர்களுடன் காட்டில் வாழ்ந்து வந்தான் என்று சோழர் சரித்திரம் கூறும். காவிரி நதி, அப்போது, அஃதாவது, பரசுராமனுடைய தென்னாட்டுப் படைஎடுப்பின்போது, சோழநாட்டில் கிடையாது. சோழநாடு அப்போது வானத்தை எதிர்பார்த்த நாடாகத்தான் இருந்தது. "எல்லாம் நன்மைக்கே ஏற்படுகிறது" (Every thing happens for good) என்ற பழமொழிப்படி, பரசுராமன் படை எடுப்பானது சோழநாட்டிற்கு நன்மையாக முடிந்தது. காந்தமன் என்னும் சோழ அரசன், குடகுமலை நாட்டில் மறைந்து ஒழுகும்போதுதான் மேற்குமலைத் தொடரினின்றும் மேற்கே பாயும் காவிரி நதியை மலையைத் தகர்த்துக் கிழக்கே பாயவிட்டால் சோழநாடு வளப்பம் அடையும் என்று கருதி, காந்தமன் கவேரனிடமும் கவேரனுடைய முதன்மந்திரி குடமுனி என்ற குடகுமலை அகத்தியரிடமும் கலந்து முடிவுசெய்து, குவட்டை ஊடறுத்து, காவிரியை வெட்டி, சோழநாட்டில் பாயும்படி செய்தான்.

பெருவள நாட்டில் முதலாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் எப்படிப் பஃறுளியாற்றை வெட்டிப் பெருவள நாட்டை வளப்படுத்தினனோ, அப்படியே, காந்தமன் என்ற சோழனும் காவிரி நதியைக் குடகுமலையினின்றும் வெட்டிச் சோழநாட்டுக்குக் கொணர்ந்து, நாட்டை வளப்படுத்தினன் என்பது தமிழ்நூல்களால் உணரக்கிடக்கின்றது. அதனால், காந்தமன் வழிவந்த விக்கிரமச்சோழனை,

"மேற்குயரக்
கொள்ளும் துவடு ஊடறுத் திழியத்
தள்ளும் திரைப் பொன்னி தந்தோனும்" (விக். சோழ-உலா)

என்று ஒட்டக்கூத்தரால் காந்தமன் பாராட்டப்பட்டான்.

குடகுநாடு எப்போதுமே ஒரு தனிப்பட்ட சுதந்தர நாடாகவே இருந்து வந்திருக்கிறது. இதுகுறித்து மணிமேகலையில்,

"ககந்த னும் எனக் காதலிற் கூஉய்
அரசாள் உரிமை நின்பால் இன்மையின்
பரசு ராமன் நின் பால்வந் தணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது
துயர்நீங்கு கிளவியின் யான்தோன் றளவும்
ககந்தன் காத்தல் காகந்தி என்றே
இயைந்த நாமம் இப்பதிக்கு இட்டு; ஈங்கு
உள்வரிக் கொண்டஃ வுரவோன் பெயர்நாள்[1]

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையில் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை
செங் குணக் கொழுகியச் சம்பா பதியயல்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற
ஆங்கினி திருந்த அருந்தவ முதியோள்"[2]

"செய்தற் கரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை ஒருவனுற் போந்தரமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்"[3]

இதனால், தனித்த ஆட்சியையுடைய சேரன் ஒருவன் இருந்ததாகத் தெரிகிறது.

---

1. மணி, உஉ : ௩௯-௧ ; 2. பதிகம் : ௧-௧௫.
3. புறத் : 36.

## ச. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்

[கி. மு. 3145—கி. மு. 3105]

வடமொழி இதிகாசமாகிய மகாபாரதத்தும் சேரர் செய்திகளைக் காணக் கூடும்.

பாரதப் போரில் பாண்டவர் பக்கத்தில் நின்று சேரர் துணைபுரிந்தார் எனப் பொதுவாக அவ்விதிகாசத்தால் அறியப்படினும், உதியன் சேரல் என்பான் அப் பெரும் போரில் இறந்துபட்டவர்களுக்கு, பகைவர் நண்பர் என்று பாராது உணவளித்தான் என்று தமிழ் நூல்களில் சிறப்பிக்கப்படுகின்றான். இதனை :—

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை! நீயோ பெரும!
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிய
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"[1]

என்று முரஞ்சியூர் முடிநாக ராயர் பாடிய பாட்டால் அறியலாம். இச் சேரனுடைய நாடு அப்போது குணக்கும் குடக்கும் கடலை எல்லையாகக் கொண்டிருந்தது என்பது வெளியாகிறது.

நினது கடற்கண் தோன்றிய ஞாயிறு, பின்னும், நினது வெளிய தலைபொருந்திய திரையையுடைய மேற் கடற்கண்ணே முழுகும். புதுவருவாய் இடையறாத ஊர் களையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தே! வானவரம்பனே! பெரும! நீ, அசையும் தலையாட்டம் அணிந்த குதிரைகளை யுடைய பாண்டவர் ஐவருடனே சினந்து, நிலத்தைத் தம் மிடத்தே கொண்ட பொற்பூந்தும்பையையுடைய துரியோ தனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்

1. புறம்: உ.

தின்கண் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இரு படைக்கும் வரையாது வழங்கினோய்!" என்பதே.

இங்குக் கூறப்பட்ட உரை கழகப் பதிப்பில் கண்டது. இனித் "தமிழ் வரலாறு" எழுதியவர் கூறுவது காண்மின்:-

[1]"நூற்றுவர் ஒழியும் வரையும் இருபடைக்கும் சோறு வழங்கியவனைப் பழைய உரைகாரர் கருதுவர். அது பொருந்தாமை காட்டுவாம். இளங்கோ அடிகளும்,

"ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன்."[2]

என்று பாராட்டிக் கூறியுள்ளார். இவற்றால் இவ்வுதியஞ் சேரல் பாண்டிய குலத்து மலையத்துவசன் (சித்திராங்கத பாண்டியன்) போலப் பாண்டவர் போர்க்குத் துணையாய்ச் சென்றவன் எனவும், அவர் போரில் பெருஞ்சோறு வழங்கினன் எனவும், அதனால் பெருஞ்சோற்று உதியன் எனப் பெயர் பெற்றான் எனவும் தெரியலாம். பாரதப்போர் கி. மு. 3105-ல் நடந்ததென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. பொய்கலவாது நிகழ்ந்த மெய்ச்சரிதங்களை உள்ளவாறு அமைத்து, இனிய செய்யுளிற் பாடும் பேரறிவாளரும் நல்ல துறவியுமாகிய கவிவேந்தர் இளங்கோவடிகள் இம் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலைத் தாம் வழிவழியாய்க் கேட்டு வந்த குலவரலாற்றோடு இனிது பொருந்துதல் கண்டே அதைப் பின்பற்றி இச் செய்தியின் வாய்மை விளக்கினார் என்று தெளியலாம். இச் செய்தியைக் குறித்து,

"மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியன் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ யிருந் தாங்கு."[3]

1. தமிழ் வரலாறு R. இராகவையங்கார், பக்கம்: 227-238.
2. சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை. உக : உச.
3. அகம் : உந்ந.

என்று மாமூலனாரும் பாடியுள்ளார். இதன்கண் உதியன் சேரல் துறக்கம் எய்திய நோய்யா நல்லிசை முதியர்ப் பேணிய பெருஞ்சோறு கொடுத்த ஞான்று என இயையக் கிடத்தலால், போர்க்களத்து உயிர் துறந்து வீர சுவர்க்கம் எய்தியோரும், இவ்வுலகில் கெடாத நல்லிசையை நிறுத்தியோருமாகிய மறப்படைக் குதிரை மாறாமைந்தின் முதியரைப் பேணி பெருஞ்சோறு கொடுத்தனன் என்று கொள்ள வைத்தல் காணலாம். ஈண்டு முதியர் என்றது நட்பிற் பழமையோரை.

இம் மாமூலனார் பாட்டைக் கொண்டு முடிநாகராயர் பாட்டுக்குப் பொருள்கூறின், ஈரைம்பதின்மரும் பொருது களத்து ஒழிந்த அளவில் இவ்வுதியஞ் சேரல் ஆண்டு இருபடையினும் இறந்தார் பொருட்டுப் பெருஞ்சோறு கொடுத்தான் என்று துணிவதே பொருந்துவதொன்றும். வரையாது—போற்றாது என்றதெல்லாம் பகை, நட்பு என்று பாராது என்பதாம். இறந்த வீரரைப் பேணி அவர் பொருட்டுப் பெரும்பலி கொடுத்த அக்காலத்து அவ்விடத்துக் கரிய பல பேய்ச்சாதி குழுமி இருந்ததென்று தெரிதலானும், அவ்விடம் இறந்தார் களமாதல் தெரியலாம். பெருஞ்சோறு என்றது பல்லோர் பொருட்டும் ஒருசேர வழங்கிய பெரும் பலியாகிய பிண்டங்களை என அறிக. இதனைப் பிரபூதபலி என்பர் வடவர். பிரபூதம் = மிக்கிருப்பது என்பது பொருள்.

[1]பாரத காலத்தில் சேர—சோழ—பாண்டியர் மிகுந்த வலி பெற்றவராய், வடநாட்டரசரும் அவருடைய நட்பை விரும்பக் கூடியவராய்த் திகழ்ந்தார்கள் என்பது, பஞ்சபாண்டவர்களில் அர்ச்சுனன் சித்ராங்கதன் என்ற சித்திரவாக பாண்டியன் மகள் சித்திராங்கதை என்ற அல்லியை மணந்ததினாலும், சேரநாட்டு அரசன் மகள் பவளக்கொடியை மணந்ததாலும், நாகநாட்டு அரசன் மகள் நாககன்னியை மணந்ததாலும் அறியலாம்.

1. வியாசர் மகாபாரதம், ஆதிபர்வம்: 234-ம் அத்தியாயம்.

முரஞ்சியூர் முடிநாக ராயர் இப் பாரத காலத்துச் சேரனை "வானவரம்பனை" என்று விளிக்கிறார். இது அவன் வானவரம்பன் என்ற பட்டத்தை யுடையவன் என்பதனைத் தெரிவிக்கும். இப்பட்டம் இவனே வானவர் நாடாகிய திபேத் நாட்டைக் கைப்பற்றிக் கப்பங்கட்டச் செய்ததினா லாவது, அல்லது, அப் பட்டமுடைய அவன் மூதாதையர் களின் வழிவந்தவன் என்பதினாலாவது அவனுக்கு ஏற்பட் டிருக்கலாம். இதனால், இவன் மூதாதையர்களில் ஒரு சேரனுக்கு வானவரம்பன் என்ற பட்டம் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

பாரத காலத்திலும் தமிழ்நாடு தன்னுரிமை நாடாகத் திகழ்ந்தது என்பதற்கு உதியஞ்சேரல் சரித்திரமே சான்று பகரும்.

புறம் 2-ல் முரஞ்சியூர் முடிநாக ராயர் இச் சேர மான் நிலம்—விசும்பு—காற்று—தீ—நீர் என்ற ஐம்பெரும் பூதங்களின் இயற்கை போலப் பொறை—சூழ்ச்சி—வலி—தெறல்—அளி என்ற ஐந்தும் உடையவன் என்று சுருங்கச் சொல்லி அவனுடைய பண்புகளை விளங்க வைத் துள்ளது நோக்கத் தக்கது. இவன் எச் சமயத்திலும் நடுவு நிலைமை தவறாதவன் என்பதனை,

> [1]"பாஅல் புளிப்பினும், பகல் இருளினும்,
> நாஅல் வேத நெறி திரியினும்,
> திரியாச் சுற்ற மொடு முழுது சேண் விளங்கி
> நடுக்கின்றி நிலிய ரோ."

என்பதால் அறியலாம்.

இவ்வுதியஞ் சேரல் காலத்தில் சேரநாடு குணக்கும் குடக்கும் கடலை எல்லையாகக் கொண்டிருந்தது என்று கூறுவதால், சோழ—பாண்டிய நாடுகளைத் தவிர எஞ்சிய கொங்கு நாடு—தொண்டை நாடு இவனுடைய ஆட்சிக்குள் இருந்தன என்று சொல்லாமலே விளங்கும்.

---

1. புறம்: உ.

# ரு. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் மாக்கோதை

[கி. மு. 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதி - கி. மு. 3-ம் நூற்றாண்டின் முற்பகுதி] [1]

இவன் ஒரு கடைச் சங்கப் புலவன் (புலவர் எண் 204.) இவனுடைய பாடல் அகநானூற்றில் 168-ம் பாட்டாக விளங்குகிறது. குறிஞ்சி ஒழுக்கம் பாடுவதில் சிறந்தவன். அக்காலத்தில் சேர அரசர்களில் பெரும்பாலோர் அரசர்களாகவும், தமிழ்ப் புலவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இவனே ஒரு எடுத்துக்காட்டு.

இவன் பாடிய அகப்பாட்டு, "இரவுக்குறி வந்த தலைமகனை, இரவுக்குறி விலக்கி, வரைவுகடாயது" என்னும் துறையில் பாடப்பட்டுள்ளது.

அப்பாட்டின் பொருள்:—"இராப் பொழுதை நம்முடன் கழிக்கும் நாள் எல்லாம் அப்பொழுது இன்பமாயினும் நீ வரும் வழியின் ஏதத்தை நினைந்து பெரிதும் துன்புறுகின்றோம்; ஆகலின், இனி, நீ அவ்வாறு வருதலை ஒழிதல் வேண்டும் என்று கூறி இரவுக்குறி விலக்கி வரைவு கடாயினாள் என்க" என்பதே. இவ்வகப் பாட்டில்,

> [2]"பல்லான் குன்றில் படுநிழற் சேர்ந்த
> நல் ஆன் பரப்பில் குழூஉர் ஆங்கண்
> கொடைக் கடன் என்ற கோடா நெஞ்சின்
> உதியன் அட்டில் போல."

"பல்லான் குன்றில் உள்ள குழூஉர் என்ற ஊரில் வாழ்ந்து வந்த, கூத்தர்—பாணர்—பொருநர் முதலியோருக்கு ஈகையாகிய கடனை ஏற்றுக் கொண்ட கோட்டமில்லாத நெஞ்சினையுடைய உதியன் என்பானது அடுக்களைபோல" என்று, உதியன் குடும்பத்தில் உதித்து

1. மவுரிய சந்திர குப்தன் காலம். 2. அகம்: கசுஅ.

குழூமூரில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னனைப் புகழ்ந்துள்ளான். இவ்வுதியன் இவனுக்குச் சம காலத்தவனாகவாவது, அல்லது, சற்று முன் இருந்தவனாகவாவது இருக்க வேண்டும். பல்லான் குன்று—குழூமூர் என்பன சேர நாட்டின் எல்லைக்கு உட்பட்டனவேயாகும்.

கோட்டம் பலம் = கோட்டை + அம்பலம். கோட்டம் என்பது கோட்டயம் என்பதன் குறுக்கம். அம்பலம் = கோவில்.

இவ்வரசன் கோட்டம்பலம் என்ற இடத்தில் துஞ்சினவன் என்று தெரிகிறது. ஆனால், கோட்டம்பலம் என்னும் இடத்தில் நடந்த போரில் இறந்தானோ, அல்லது, கோட்டயம் என்னும் ஊரில் உள்ள கோவிலில் தொண்டு செய்துகொண்டிருந்து அங்கேயே இறந்ததனால் அப்பெயர் பெற்றானோ உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை.

சேர அரசர்கள், அரசாட்சியில் வெறுப்பு ஏற்பட்டால் அரசைத் துறந்து, அம்பலம் (= கோவில்) சென்று, தவம் இயற்றிக் கொண்டிருந்து இறப்பது வழக்கம். செங்கோற் பொறையன் என்னும் சேர அரசன் அவ்வாறு அரசைத் துறந்து தவம் இருந்தது பெரிய புராணத்தால் அறியலாம்.

சேர நாட்டில் கோட்டயம் தாலுக்காவில் உள்ள "அக்கால குன்னம் பாருட்டி" என்னும் இடத்தில் இருந்து, 188 வெள்ளி நாணயங்கள் பூமியிலிருந்து எடுக்கப்பட்டன அந் நாணயங்கள் எல்லாம் கி. மு. 321 முதல் கி. மு. 297 வரை மகத நாட்டில் அரசாண்ட சந்திரகுப்தன் காலத்து நாணயங்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[1]

ஆதலின், கி. மு. 4—3-ஆம் நூற்றாண்டுகளில் மகத நாட்டிற்கும் சேர நாட்டிற்கும் வியாபாரம் நடந்துவந்து உள்ளது என்றும், இரண்டு நாட்டு நாணயங்களும் பரிவர்த்

1. Vide 'Mail' of 28-11-45 (for details Vide next page)

தனமாகச் செலவாணியாய்க் கொண்டு இருந்ததென்றும், அக்காலத்தில் கோட்டயம் முக்கியமான நகரமாகவும், அரச இருக்கையாகவும், வியாபார நகராகவும் இருந்ததென்றும் அறியக் கிடக்கின்றது.

சேர நாட்டில் பல நகரங்கள் அரச இருக்கையாக விளங்கினதுபோல கோட்டயமும் ஒரு காலத்தில் அஃதாவது, கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் காலத்தில் அரச இருக்கையாக இருந்திருக்கிறது. இவ்வரசன் தமிழ்ப் புலவர்களுடைய தரம் அறிந்து பரிசளித்து வந்தான் என்றும் அறியக்கிடக்கின்றது.

இவன் சேரநாட்டு அரசனாக இருந்தபோதிலும் கூடல் என்ற மதுரையில் நடைபெற்ற கடைச் சங்கமாகிய தமிழ்ச் சங்கத்தில் ஒரு புலவனாக அமர்ந்து, முத்தமிழையும் வளர்த்து வந்தான். இவனுக்கு அரசமாதேவியாகவும் கற்புக்கரசியாகவும் விளங்கிய இவன் மனைவி பெருங்கோப் பெண்டு என்னும் பெயரினை உடையாள். இவர்கள் இருவரும் நகமும் சதையும் போலவும், நறவும் சுவையும் போலவும் வாழ்ந்து வந்தார்கள் என்பது, பெருங்கோப் பெண்டு இறந்துபோய், அவளை ஈமத்தீயில் வைத்துச் சுடும்

---

*Madras 'Mail' D-28—11—45, Wednesday:*

"Punch marked Coins in Travancore have been brought to light by the Archaeological discovery of a hoard of 188 Silver coins unearthed in Akala—Kunnam Pakutty, Kottayam Taluq. The coins are believed to belong to the 4th and 3rd centuary B. C. when the *Maureiyan Empire* was at its height.

The coins are rectangular in Shape and the device on each side consists of a variety of symbols impressed by separate punches. The symbols represent human figures, arms, trees, birds, animals, solar and planetary signs and so forth."

This clearly shows that there was trade connections between *Chera* and Magadha countries in the 4th and 3rd centuary B. C.

போது சேரமான் மாக்கோதை பாடிய பாட்டால் தெரி கின்றது. அப்புறப்பாட்டு அடியில் வருமாறு :—

[1]"யாங்குப் பெரிதாயினும் நோயளவு எனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையின்;
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழல் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந் தனள் மடந்தை,
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே."

"எப்படிப் பெரிதாயினும் யானுற்ற நோயினது எல்லை எவ்வளவாயிற்று, என்னுயிரைப் போக்கமாட்டாத வலியை யுடைத்தல்லாமையால்? கள்ளி வளர்ந்த புறங்காட்டுள் வெள்ளிடையின் மூட்டிய தீயை விளக்கும் சிறிய விறகை யுடைய படுக்கையின்கண் ஒள்ளிய அழலாகிய பாயலின் கண்ணே பொருந்தப் பண்ணி மேலுலகத்தே போயினாள் மடவாள்; அவள் மாயவும் இன்னமும் உயிரிருந்து வாழ் வேன்; இவ்வுலக இயற்கை இருந்தவாறு என்னோ?"

தன் காதலியை இறந்தபின் சுடுவதற்குச் சுடுகாட்டுக்கு அவள் உடலை எடுத்துச்சென்று ஈமத்தீயை மூட்டியபின், சேர அரசன் மேலே கூறிய பாட்டை மனத்துயரத்தால் பாடி முடிக்க, கூடச்சென்றிருந்த புலவர்களில் ஒருவர்,

[2]"கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமந் தரியாது அசையுந் தளிர் மேனி
ஈமந் தரிக்குமோ என்று"

பாடி அரசனுடைய ஆற்றாமையையும் துயரத்தையும் வெளிப்படுத்தினார். இப் பாட்டைத் தண்டியலங்காரம் 68-ஆம் சூத்திரத்துக்கு எழுதிய உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது காண்க.

---

1. புறம்: உசஅ. 2. தண்டி. சூ: சுஅ மேற்கோள்.

## கூ. பல்லான் குன்றில் குழூமூர் உதியன்

[கி. மு. 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதி -
கி. மு. 3-ம் நூற்றாண்டின் முற்பகுதி]

இவன் சேர முடிமன்னருக்குக் கீழ் அரசாண்ட ஒரு சிற்றரசன்; உதியன் குடும்பத்தை சேர்ந்தவன். இவன் கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் மாக்கோதை என்பவனுடைய காலத்தவனாகவாவது, அல்லது, அவனுக்குச் சற்று முற்பட்டவனாக ஆவது இருக்கவேண்டும் என்று 168-ஆம் அகப் பாட்டால் தெரிகிறது.


திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியார் வீட்டின் முன்கதவை எப்போதும் சாத்துவதே கிடையாது என்றும், அதனால் அதனைக் கம்பர் "அடையா நெடுங் கதவு" என்று சிறப்பித்து உள்ளார் என்றும், விருந்தினர்களும், புலவர்களும் வந்துகொண்டும், உண்டு விட்டுப் போய்க்கொண்டும் இருந்ததால் இரவும் பகலும் ஆரவாரம் இருந்துகொண்டிருந்தது போல, குழூமூர் உதியன் வீட்டிலும் புலவர் - பாணர் - கூத்தர் முதலானோர் எப்போதும் வந்து விருந்தயர்ந்து செல்வார்கள் என்று அவ் வகப் பாட்டில் சேரமான் மாக்கோதையாகிய முடியரசனே கூறுவான் ஆனால், குழூமூர் உதியனுடைய புகழைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? அவ் வடிகள் வருமாறு:—

[1]"பல்லான் குன்றில் படுநிழற் சேர்ந்த
நல்ஆன் பரப்பில் குழூமூர் ஆங்கண்
கொடைக்கடன் என்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பில்".

இதில் குழூமூர் உதியனுடைய அன்னதானச் சிறப்பு எவ்வளவு அழகாகக் கூறப்பட்டுள்ளது காண்க.

'நல்லான் பரப்பிற் குழூமூர்' என்றதால் அச் சிற்றரசன் நல்ல பசுக்களை, அதாவது கறவைப் பசுக்களை மந்தை

1. அகம்: கசுஅ.


THE EMPIRE OF ASOKA
250 BC
அப்போது,சேர,சோழ,பாண்டிய
நாடுகளின் பரப்பு.
காந்தாரம்
காஷ்மீர்
இமயமலை
கபிலவாஸ்து
கோசலம்
காமரூபம்
உஞ்சேனை
மகதம்
அங்கம்
நர்மதை
தபதி
இராட்டிரர்
கலிங்கர்
ஆந்திரர்
தொன்றுமுதிர் கடல்
தொடு கடல்
திருவேங்கடம்
சத்தியபுத்திரர்
சோழர்
கேரளபுத்திரர்
பாண்டியர்
தாம்பிரவன்னி
குமரிப்பவ்வம்

மந்தையாக வைத்திருந்தான் என்றும், அதனால் அவனுக்கு விருந்து செய்வது வெகு எளிதாக இருந்ததென்றும் புலவர் சேரமான் மாக்கோதை குறிப்பிடுகின்றார். விளை நிலமும் கறவைப் பசுவும் இருந்தால் விருந்துக்கு ஒருவன் அஞ்ச வேண்டுவதில்லை. ஆனால், இல்லாளும் அதற்குத் தகுந்தாற்போல் ஏற்படவேண்டும். ஆதலின், இவ்வளவும் பொருந்தியவன் குழுமூர் உதியன் என்பது போதருகின்றது.

---

## எ. கேரள புத்திரன்

[கி. மு. 3-ம் நூற்றாண்டு][1]

மவுரிய அசோகன் காலத்தில் கி. மு. 250-ல் அவனுடைய நாடானது காந்தாரம் முதல் காமரூபம் வரையிலும், இமயம் முதல் திருவேங்கடம் வரையிலும் பரவி இருந்தது. அப்போது சேர—சோழ—பாண்டியர்—சத்திய புத்திரர் (கோசர்)—தாமிரபன்னியர் (இலங்கை) முதலியோருடைய நாடுகள் சுதந்தர ஆட்சி உடையவைகளாய் இருந்தன. அசோகச் சக்கரவர்த்திக்கு உட்பட்டவை யல்ல. அசோகன் இவர்கள் நால்வரிடத்திலும் நட்புரிமை பாராட்டி வந்தான்.

அசோகன் பௌத்த சமயத்தைத் தழுவியவன். போர் செய்து நாட்டைப் பிடிப்பதிலும் ஆள்வதிலும் விருப்பம் இல்லாதவன். ஒற்றுமை நெறியை உடையவன். பௌத்த சமய பிக்குக்களையும் சமய வாதிகளையும் தென்னாடு—இலங்கை—பர்மா—சீனா முதலிய இடங்களுக்கு அனுப்பி, பௌத்த சமயத்தைப் பரவச் செய்தவன்.

அசோகன் தன்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட நாட்டில் பல இடங்களில் தூண்கள் (Edicts or pillars)

---

1. மவுரிய அசோகனின் ஆட்சிக்காலம்: கி. மு. 272 - கி. மு. 232.

நிறுவி, அவைகளில் தன்னுடைய கொள்கைகளை வரைந்துள்ளான். அந்தத் தூண்களில் கண்ட எழுத்துக்களில் தமிழ் நாடுகளைப் பற்றி வரைந்துள்ளான்.[1]

அந்த நாடுகள் நான்கும் சுதந்தர ஆட்சியை உடையன என்று அவனே கூறியுள்ளான். அப்போது, சேர நாட்டில் அரசு செலுத்திய சேர அரசன் மிகுந்த வல்லமையும், நீதியும், நடுநிலைமையும் பொருந்திய அரசனாகவும், அசோகச் சக்கரவர்த்தியின் நண்பனாகவும், தன்னுடைய நாட்டுக் குடிகளுக்குத் தாயைப்போலவும் இருந்தான் என்று கொள்ளக் கிடக்கின்றது. கேரள நாட்டின் தவப்புதல்வன் என்று பொருள் படும்படியான 'கேரளபுத்திரன்' என்று அசோகன் கூறுவானேயானால் அவ்வரசனுடைய புகழ் எத்தன்மையது என்று கூறாமலே அமையும். அப்படியே ஏனைய சோழரும்—பாண்டியரும்—சத்திய புத்திரரும் இருந்ததால்தான் அசோகன் அவர்களுடைய நாட்டைப் பிடிக்காமல் அவர்களிடம் நட்புரிமை பாராட்டி வந்தான் என்று தெரிகிறது.

---

1. According to the rock edicts, there were four independent states in the south of India at that time viz:—the *Pandyan* and the *Chola* on the east of the Western Ghauts, and on the western coast *Keralaputra* or Malabar, and *Satyaputra* or the Tulu country of Canara.—History of India by Marsden, page, 130.

## அ. செல்லூர் ஆதன் எழினி

[கி. மு. 3-ஆம் நூற்றாண்டு]

இவன் சேர நாட்டில் செல்லூர் என்னும் இடத்தில் இருந்துகொண்டு, சேர நாட்டின் ஒரு பகுதியைச் சேர முடியரசின் கீழ் அரசாண்டவன். இவன் ஒரு குறுநில மன்னன். சேர நாட்டு உதியன் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆதன் என்ற இயற்பெயரையும் எழினி என்ற பட்டப் பெயரையும் பெற்றவன்.

எழினி என்ற பட்டம் தகடூரில் அரசாண்ட குறுநில மன்னர்களுள் சிலபேருக்கு உண்டு உதாரணமாக:— தகடூர் பொருட்டெழினி என்பது காண்க.

இங்குக் கூறிய ஆதன் என்பவன் வேற் சண்டையில் சிறந்தவன். களிறு எறிவதில் வல்லவன். இவனுடைய வலிமையைச் சிறப்பித்து ஐயூர் முடவனார் என்னும் புலவர்,

[1]"எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத் தழுத்திய
பெருங்களிற்று எவ்வம்போல."

என்று கூறியுள்ளமை காண்மின்.

இவன் செல்லூருக்குக் கிழக்கேயுள்ள நியமம் (நேமம்) என்னும் ஊரில் கோசர் படையை வைத்திருந்தான். நியமந்தான் அவனுடைய படைவீடு (Cantonment). இவ்வூரைக் குறித்து மதுரை மருதன் இளநாகனார்,

[2]"அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்து
கடுங்கட் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே"

1, 2. அகம்: உகக.

என்று நியமம் என்னும் படை வீட்டின் சிறப்பை நன்கு எடுத்து விளக்கியுள்ளார்.

"அருந் திறற் கடவுள் செல்லூர்" என்றதால், செல்லூரில் பல கோயில்கள் இருந்தன என்றும், அக் கோவில்களில் உள்ள தெய்வங்கள் எல்லாம் ஆற்றல் வாய்ந்து, வேண்டும் வரங்களைத் தரக்கூடியவைகள் என்றும் அறிந்தாம்.

புலவர் இளநாகனார், 'பெரிய கடல்போலும் ஆரவாரத்தினையுடைய படைக்கலம் இடம்படச் செய்திட்ட வடுக்களையுடைய முகத்தினராய், அஞ்சாமையையுடைய கோசர்கள் வாழும் புது வருவாயை உடைய நியமம்' என்று கூறுகிறார். இதனால், கோசர்கள் அஞ்சாமையை மேற்கொண்டு போரில் மார்பிலும் முகத்திலும் புண்படுவதையே அணிகலமாகக் கொண்டவர்கள் என்றும், அப்பேர்ப்பட்டவர்களுடைய படையை உடையவன் ஆதன் எழினி என்றும் நாம் அறியலாம்.

இக் கோசரைப் பற்றிச் சிறிது விளக்கமாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது முதன்மை. இக்கோசரைப் பற்றி ஐயூர் முடவனார்,

[1]"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்,
கழனி உழவர் குற்ற குவளையும்,
கடிமிளைப் புறவில் பூத்த முல்லையொடு
**பல்லிளங் கோசர்** கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன்எழினி அருநிறத் தழுந்திய
பெருங்களிற்று எவ்வம் போல
வருந்துவர் மாதவர் சேரியாஞ் செலினே."

என்று கோசர் சிறப்பினை உணர்த்தியுள்ளார்.

1. அகம்: உகசு.

[1] "கோசர் என்பார் வீரத்துக்கு மிகவும் பேர்போன ஒரு பழைய மரபினர். இன்னோர் சிற்றரசர்களாகவும், தமிழ்முடி மன்னரின் படைவீரர்களாய் அவரவர்களால் அன்புக்குட்பட்டவர்களாகவும் [2], விளங்கியவர்கள் என்பதும், ஒற்றுமையும், சொல்தவறாமையும் உடையவராய் அவற்றால் "ஒன்றுமொழிக் கோசர்" (அகம் - 196), "வாய்மொழி நிலைஇய கோசர்" (அகம் - 205), என, நாடு புகழ வாழ்ந்தவர் என்பதும் முன்னூல்களால் அறியப்படுகின்றன. 'கொங்கு இளங்கோசர்' என்பதனுள் கொங்கு என்பது மேல்கொங்கு, குடகு, மைசூர்ப் பகுதிகளும் அடங்கிய கங்கதேசமாகும். கங்கதேசத்து அரசர்களை [3] 'கொங்குதேச அரசர்கள்' என்பர். [4]'குடக்கொங்கரும்' என இளங்கோ அடிகளும் [5]'கோசர் துளுநாடு' என மாமூலனாரும், கூறுவதினின்று, இன்னோரது ஆட்சி குடகு—துளுநாடுகளில் சிறந்து இருந்ததென்பது தெரியலாம். இக்கூட்டத்தவருள் [6]'முதுகோசர்' (அகம் - 262) என்ற பகுப்பினர் உண்மையால் இளங்கோசர் என இவர்கள் வழங்கப்பட்டார்கள். [7]'நான்மொழிக்கோசர்' என்றும் இன்னோர் வழங்கப் பெறுவர். இக் கோசர் கொங்குநாட்டில் நாமக்கல் பகுதியை ஆண்டவர் என்பதற்கு நாமக்கல் கல்வெட்டால் [8] அறியக்கிடக்கின்றது. அதில் "நாமோழிநாடு" என வரையப்பட்டுள்ளது. மவுரிய சக்கிரவர்த்தி அசோகன் காலத்தில் தென்னாட்டில் சுதந்தரம் பெற்றிருந்த அரசர்கள் :—சோழர்—பாண்டியர்—சத்திய புத்திரர்—கேரள

---

1. சேரன் செங்குட்டுவன், M. இராகவையங்கார், பக்கம், 108—109.

2. "இளம்பல் கோசர் நின் வாய்மொழி கேட்ப" எனப் பாண்டியன் படைவீரராக மதுரைக்காஞ்சி அடிகள் 773-4 கூறுதல் காண்க.

3. கொங்குதேச இராசாக்கள் சரித்திரம்.

4. சிலம்பு, ௩௦ : க௫௧.  5. அகம், க௫.

6. அகம், ௨௬௨.  7. மதுரைக் காஞ்சி, ௭௦௧.

8. Ep-Rep. 11—1906.

புத்திரர்—தாம்பபன்னி அரசர்கள் என்று அவனது முதற் சாசனத்தால்[1] அறியக்கிடக்கின்றது"

சத்திய புத்திரர் என்போர் வாய்மையை யுடைய கோசர் என்றும், கேரள புத்திரர் என்போர் சேரநாட்டு முடி அரசர்கள் என்றும், தாம்பபன்னி என்போர் இலங்கை அரசர்கள் என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

நான்மொழிக் கோசர் என்றால் நான்கு மொழிகள் பேசக்கூடிய கோசர் என்றும் பொருள்கொள்ளலாம். என்னெனின் அவர்கள் எல்லாம் துளு—கன்னட—குடகு—தமிழ் நாடுகளில் இருந்தமையால் அந்த நான்கு மொழிகளையும் கற்றவர்களாக இருந்தார்கள். அதனால் அவர்களுக்கு 'நான்மொழிக் கோசர்' என்று பெயர் ஏற்பட்டது. தமிழுக்கும் கன்னடத்துக்கும் வரிவடிவுகள் உண்டு; ஆனால் துளுவுக்கும் குடகுக்கும் எழுத்துக்கள் கிடையா. ஆனால் அவர்கள் கன்னட எழுத்துக்களையே தங்கள் மொழிகளுக்கு வரிவடிவங்களாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இக்காலத்தில் 'கூர்க்கர் படை' வீரத்தில் சிறந்து விளங்குவதுபோல் அக்காலத்தில் 'கோசர் படை' விளங்கிற்று. கூர்க்க சாதியார் பசுவை வணங்குகிறவர்கள். அதனால், அவர்களுக்கு 'கோ ரக்ஷகர்' என்று பெயர் அமைந்தது. கோ ரக்ஷகர்—என்பது கோரக்கர்—கூர்க்கர் என்று மருவி வழங்குவதாகச் சிலர் கருதுகின்றனர்.

இத்தகைய வீரம் செறிந்த, வாய்மையை உடைய, ஒற்றுமையை உடைய கோசர் படையை உடையவன் ஆதன் எழினி. அதனால் அவன் குறுநில மன்னர்களில் சிறந்து விளங்கினான். அவனும் வேல் சண்டையில் இணையற்றவனாகவும் களிறு எறிந்து மீள்வதில் சிறந்தவனாகவும் விளங்கினான். இவன் காலத்துச் சேரநாட்டு முடிமன்னர் இவனுடைய உதவியைப் பெரிதும் விரும்பிவந்தார்கள் எனத் தெரிகிறது.

---

1. அசோக சாசனங்கள், பக்கம், 94.

# ௬௰. முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்

[கி. மு. 2-ம் நூற்றாண்டு]

இவன் ஒரு சிறந்த தமிழ்ப் புலவன். கடைச் சங்கப் புலவர்களில் ஒருவன் (புலவர் எண் 208). அகநானூற்றில் இவனுடைய பாடல் 30-ஆவதாகத் திகழ்கின்றது. இவனுடைய பாடல்களில் மீதியாய் நமக்குக் கிடைத்திருப்பது இஃது ஒன்றுதான். ஏனையவை அகநானூறு—புறநானூறு முதலிய தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்திலேயே அகப்படவில்லை. ஆகையால், இவன் அத்தொகைநூல்கள் தொகுக்கப்பட்ட காலத்திற்கு முந்தினவன் என்று வெளியாகிறது. இவன் கி. மு. 2-ஆம் நூற்றாண்டினனாக இருக்கலாம் என்பது சில ஆராய்ச்சியாளர் கருத்து. வேறு காலம் உறுதிப்படுத்தப்படுகிற வரையில் நாம் இதனையே கொள்ளலாம்.

இச் சேர அரசன் நல்ல உடம்பையும் நீண்ட உருவத்தையும் உடையவன் ஆனதால் 'நெடுஞ்சேரலாதன்' என்று அழைக்கப்பட்டான் என்றும், ஆனால், இளவயதிலேயே 'முடக்குவாதம்' என்னும் நோய் பழவினை காரணமாக இவனைப்பற்றிக்கொள்ள, அதனால் இவன் 'முடங்கிக் கிடந்த' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டு அழைக்கப்பெற்றான் என்றும் அறிகிறோம். இவன் முடக்குவாத நோயால் பீடிக்கப்பட்டதால் இவன் அரசாளுவதற்கு இல்லாமல் அரசு உரிமையைத் தன் தாயாதிகளுக்குக் கொடுத்துவிட்டு, தான் கூடலில் நடைபெற்ற கடைச் சங்கத்தில் அங்கத்தினனாகச் சேர்ந்து, பல நூல்களைப் பயின்று, புலவர்களுடைய நட்பைப்பெற்று, தானும் ஒரு சங்கப் புலவனாக விளங்கினான். இவன் நாட்டரசனாக இல்லாமற் போனபோதிலும், பாட்டு கவி அரசனாக விளங்கினான்.

இனி இவன் பாடிய அகநானூற்றில் உள்ள பாடலைச் சிறிது நோக்குவோம்.

"நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல் பாடழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்பொய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பகடு ஒப்பக் குழீஇ
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணல் துஞ்சுந் துறைவ!
பெருமை என்பது கெடுமோ? ஒருநாள்
மண்ணுறு முத்தம் அரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்து நும்
வண்ணம் எவனோ? என்றனிர் செலினே."[1]

இதன் உள்ளுறை :—"பெருங் கடலுட் சிக்கிக்கிடக்கின்ற மீனை நுளையர் அதனினின்றும் நீக்கி, உயிர் செகுத்து, கண்டார் எல்லார்க்கும் கூறுவைத்து, பரப்பி, பின்பு உயிர் வருத்தினோம் என்னும் இரக்கமின்றி, மணற் குன்றிலே உறங்கினாற்போல, பெருங்குலத்துப் பிறந்த இவளை, நீயிர் நும் வசமாக ஆயத்தினின்றும் நீக்கி, வருத்தி, வேறுபாட்டான் எல்லாரும் இவளைச் சூழும்படி அலராக்கி, பின்பு நீர் துயரமின்றி உறங்குகின்றீர். ஒருநாள் கானல் வந்து, நும் வண்ணம் எவனோ? என்று கேட்டுச் செலின் உம்முடைய பெருமை என்பது கெட்டா போய்விடும்" என்பதே.

நெய்தல் பாடுவதில் இவன் சிறந்தவன் என்பது போதருகின்றது. தமிழுக்காகப் பாடுபட்டுத் தன் புகழை இவ்வுலகில் நிலைநிறுத்திக் கீர்த்தியுற்றான் என்று அறிகிறோம்.

---

1. அகம், ௩௦.

## ௬௦. சேரமான் பெருஞ்சேரலாதன்

[கி. மு. 2-ம் நூற்றாண்டு]

இவன் சோழ நாட்டு அரசனாகிய முதலாம் கரிகாலன் (120 B C—90 B C) காலத்தவன். இவனுக்கும் முதலாம் கரிகாலனுக்கும் போர் மூண்டு விட்டது. இருவரும் சிறந்த வீரர்கள்; பெரும் படையை உடையவர்கள். சிறந்த அறிவாளிகள். அப்படி இருந்தும் ஒருவர்க்கொருவர் பகைத்துக் கொண்டு நாட்டில் போர் நடப்பதற்கு இடம் கொடுத்து விட்டார்கள். போரானது சோழ நாட்டில் உள்ள வெண்ணிப் பறந்தலையில் கி. மு. 100-ல் நடந்தது. இது முதலாம் வெண்ணிப் போர் ஆகும்.

வெண்ணிப் பறந்தலையைத் தற்காலம் கோயில் வெண்ணி என்று சொல்லுவார்கள். தஞ்சை—நாகபட்டினம் இருப்புப் பாதையில் ஒரு புகைவண்டி நிலையமாக அமைந்துள்ளது. பாண்டி நாட்டு அரசனும் இப்போரில் கலந்து கொண்டான். போர் மும்முரமாக நடக்கும்போது, கரிகால்வளவன் செலுத்திய வேல் சேரமான் பெருஞ்சேரல் ஆதன் மார்பில் பட்டு முதுகில் புறத்தே உருவிச் சென்று, புண் செய்தது. மார்பினும் முகத்தினும் பட்ட புண்ணையே வீரர் விழுப்புண் என விரும்புவார். மார்பிற் பட்ட கருவியால் முதுகிடத்தும் இச் சேரமானுக்குப் புண்ணாயினமையின், அது வீரர்களுக்கு ஒரு இழுக்கென்று கருதி, மானம் பொறாது, வடக்கிருந்து உயிர் துறப்பானாயினன்.

இச் செய்தி நாடெங்கும் பரவிற்று. புலவரும், அரசரும், சான்றோரும் இவன்பால் பெருமதிப்புற்று அவனைப் பாராட்டுவாராயினர். இதனைக் கேள்வியுற்ற கழாஅர்த் தலையார் (புலவர் எண் 125) என்னும் புலவர், ஆற்றாமை மிகக் கொண்டு, "தன் போலும் வேந்தனொருவன் மார்பு குறித்து எறிந்த படையால் உண்டாகிய புறப் புண்ணிற்கு நாணி மறத்தகை மன்னனாகிய எங்கள் பெருஞ் சேரலாதன் வாள் வடக்கிருந்தனன். எங்கட்கு இனி

ஞாயிறு விளங்கும் பகற்போது முன்போலக் கழியாது; உழவர் உழவு மறப்பர்; சீறூர்களும் விழாவை மறக்கும்; இவனது வடக்கிருப்பு உவா நாளில் திங்கள் தோன்ற ஞாயிறு மலைவாய் மறைவதுபோல உளது. அஃதாவது, தமிழ் நாட்டில் மேலைப் பகுதியில் இனி இருள் சூழ்வதன்றி ஒளியில்லையாம்," என்ற பொருள் அமையக் கையறவுற்றுக் கலுழ்ந்து பாடியுள்ளார். அப் பாட்டு வருமாறு:—

"மண்முழா மறப்பப், பண் யாழ் மறப்ப,
இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்,
சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப,
உழவ ரோதை மறப்ப, விழவும்
அகலு ளாங்கட் சீறூர் மறப்ப,
உவவுத்தலை வந்த பெருநா ளமயத்து
இருசுடர் தம்முள் நோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன் ஈங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே." (புறம்-65)

[துறை—கையறுநிலை. சேரமான் பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற் பெருவளத்தானோடு பொருது புறப்புண் ணாணி வடக்கிருந்தானைக் கழாஅர்த்தலையார் பாடியது.]

இதில், புலவர் உவா (பூரணை) நாளில் மாலை வேளையில் மேற்குமலையில் மறைவது சூரியனே என்று கூறிச் சூரியனைச் சேரனுக்கும் சந்திரனைச் சோழனுக்கும் உவமித்துப் பாடியதே சேரமானுடைய ஆற்றலை விளக்கக் கூடியதாயிருக்கிறது.

போர் நடந்த வெண்ணி என்னும் ஊரில் வாழ்ந்து வந்த குயத்தியார் என்னும் பெண் புலவர் (புலவர் எண் 315), இப் போரினை நேரே கண்ணுற்று, முதலாம் கரிகாலனை விளித்து, "வெண்ணிப் பறந்தலையில் புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் துறந்தோனாகிய சேரமான் பெருஞ்-

தோள் ஆதன் நின்னினும் நல்லவனும் சிறந்தவனும் அல்லவா?'' என்ற கேள்வியைக் கேட்டு, சேரமானது சிறந்த பண்பை வெளிப்படுத்தியது பாராட்டத்தக்கது. அப் பாட்டு வருமாறு :—

"நளியிருமுந்நீர் நாவாயோட்டி
வளிதொழிலாண்ட உரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!!
சென்றமர்க் கடந்த நின்னாற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே?
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலக மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே." (புறம் - 66.)

[துறை—அரச வாகை. சோழன் கரிகாற்பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் பாடியது.]

இந்தப் பாட்டில் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக் குயத்தியார் "**நளியிருமுந்நீர் நாவா யோட்டி, வளிதொழிலாண்ட உரவோன் மருக**" என்று கூறியிருப்பதால் கரிகாலனின் முன்னோர்கள் எல்லாம் வணிகக் கப்பல்களும், போர்க் கப்பல்களும், ஏனைய புணரிகளும், படகுகளும், வஞ்சிகளும் வைத்து வாழ்ந்தவர்கள் என்று அறியக் கிடக்கின்றது. சோழர்கள் கடல் கடந்து சென்று, வாணிபம் செய்து, கடற் கொள்ளைக் கூட்டத்தாரை அடக்கி, அந்நிய நாட்டுப் பினீசியர்—சுமேரியர்—எகிப்தியர் முதலாயினரோடு நட்புரிமை பூண்டிருந்தார்கள் என்று தெரிகின்றது. தமிழ் நாட்டிலிருந்து மிளகு, சந்தனக் கட்டை, மயிலிறகு, மெல்லிய ஆடை முதலியவைகள் அந்நிய நாட்டுக்குச் சென்றது என்பது அவ்வந்நிய நாட்டுச் சரித்திரங்களாலும் அங்கு நடக்கும் புதை பொருளாராய்ச்சியாலும் தெரிய வருகிறது.

சில புலவர்கள் கி. மு. 120 முதல் கி. மு. 90 வரை சோழ நாட்டை ஆண்ட முதலாம் கரிகால்வளவனை மறந்துவிட்டு, கி. மு. 50 முதல் கி. பி. 37 வரை அரசாண்ட

இரண்டாம் கரிகால்வளவனை முதல்வனாக மயங்கி எழுதி யுள்ளார்கள். அப்படி அவர்கள் கொண்டது சரித்திர. முரண் ஆகும்.

வெண்ணிக் குயத்தியார் என்பவர் "வளிதொழி லாண்ட" என்று கூறியதால், "சோழர்கள் பருவக் காற்றின் திசை தெரிந்து, காலம் அறிந்து கப்பலோட்டி வாணிகம் செய்து வந்தார்கள் என்றும், அதனால் அவர் களுக்குத் 'திரையர்' என்ற பெயர் கிடைத்ததென்றும் அறி கிறோம். திரை = அலை; அது ஆகுபெயராய் கடலை உணர்த் திற்று. தற்காலம் இங்கிலாந்து 'கடல் அரசி' (Queen of the Seas) என்று கூறப்படுவதுபோல, அக்காலத்தில் சோழர் 'திரையர்' (*Lord of the Seas*) என்று அழைக்கப் பட்டார்.

பெருந்தோள் ஆதன் காலத்தில் சேரநாடு வாணிகத் தில் சிறந்து விளங்கியிருந்ததாகவும் குடிகள் எல்லாம் அமைதியாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள் என்றும் அறியக் கிடக்கின்றது.

---

## கக. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்
### [கி. மு. 100—கி. மு. 80]

இவன் சேரமான் பெருந்தோள் ஆதன் காலத்திலும் அவனுக்குப் பின்னும் இருந்தவன் ஆவன். பெருந்தோள் ஆதனைப்பாடிய கழாஅர்த்தலையார் என்னும் புலவர் இவ னையும் பாடியுள்ளார். இவன் கி. மு. 90 முதல் கி. மு 80 வரை அரசாண்ட சோழன் முதலாம் வேற்பஃறடக்கை பெரு விறற்கிள்ளி என்கிற பெருநற்கிள்ளியுடன் பொருது போர்க் களத்தில் இருவரும் உயிர் துறந்தனர். இவ்விரு பெரு வேந்தர்க்கும் மண் ஆசையின் விளைவாகப் போர் உண்டா யிற்று. போர் கி. மு. 80-ல் திருப்போர்ப்புறத்து நடந்தது. இது முதலாம் திருப்போர்ப் புறப்போர். திருப்போர்

என்பது தற்காலம் திருப்பூர் என்று வழக்கத்தில் உள்ளது. திருப்போர்ப்புறத்து என்றதால், இப்போது திருப் பூருக்குத் தென்புறம் இருக்கும் கோயில் வெளியைக் கோயில் வெண்ணி என்றும் கூறுப. அவ்விடத்தில் போர் நடந்ததாக ஏற்படுகிறது. இப்போதும் அவ்விடத்தில் அகழ்ந்த இடங்களில் குதிரை—யானை—மனித எலும் புகள் காணப்படுகின்றன.

கழாஅர்த்தலையார் என்னும் புலவர் சேரலாதன் போர்க்களத்திருப்பதை அறிந்து, அவனைக் காண்பது கருதிச் சென்றார். அவர் சென்று காணும்போது இரு பெருவேந்தரும் (வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி 1-ம் குடக்கோ நெடுஞ்சேரலாதனும்) பொருது விழுப் புண்பட்டு, வீழ்ந்துகிடந்தனர். சேரமான் உயிர் நீங்குந் தறுவாயில் இருப்பதைக்கண்டு புலவர்,

"களிறு முகந்து பெயர்குவம் எனினே
ஒளிறு மழை தவிர்க்கும் குன்றம் போலக்
கைம்மா வெல்லாம் கணையிடத் தொலைந்தன;
கொடுஞ்சி நெடுந்தேர் முகக்குவம் எனினே
கடும்பரி நன்மான் வாங்குவயின் ஒல்கி
நெடும் பீடழிந்து நிலஞ்சேர்ந் தனவே;
கொய் சுவற் புரவி முகக்குவம் எனினே
மெய்நிறைந்த வடுவொடு பெரும்பிறி தாகி
வளிவழக் கறுத்த வங்கம் போலக்
குருதியம் பெரும்புனல் கூர்ந்தனவே; ஆங்கம்
முகவை யின்மையின் உகவை யின்றி
இரப்போர் இரங்கும் இன்னா வியன்களத்து
ஆளழிப் படுத்த வாளேர் உழவ!
கடாஅ யானைக் கால்வழி யன்னவென்
தெடாரித் தெண்கண் தெளிர்ப்ப வொற்றிப்
பாடி வந்த தெல்லாம் கோடியர்
முழவுமருள் திருமணி மிடைந்தநின்
அரவுறழ் ஆரம் முகக்குவம் எனவே."

(புறம்: ௩௬௮)

[திணை — வாகை — துறை — மறக்களவழி. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியொடு போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்து ஆரம் கழுத்து அன்னதாக உயிர்போகாது கிடந்தானைக் கழாஅர்த்தலையார் (பாடியது).]

என்று அவன் புகழைப் பாடி வியந்தாராக, அவன் தன் கழுத்திலிருந்த ஆரத்தை வழங்கி இறவாப் புகழ்பெற்றான். சிறிதுபோழ்தில் அவன் உயிரும் நீங்கிற்று. அதன்பின் சோழனுடைய உயிரும் நீங்கிற்று.

இருவரும் வீழ்ந்துகிடத்தலைக் காணுந்தோறும் கழாஅர்த்தலையார் ஆறாத்துயரமெய்தி,

[1]"வருதார் தாங்கி அமர் மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர் புண்டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்த நீட்டி
நிறங்கிளர் உருவிற் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி அனந்தல் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந்தனரே ; குடை துளங்கினவே ;
உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே ;
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட ஈண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றால் அமரே ; பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவி னோரு மாற்ற
அரும்பெற லுலக நிறைய
விருந்து பெற்றனரால் பொலிகநும் புகழே." (புறம் : கஉ)

1. புறம் 62. இப்போர் இந்த இடத்தில் நடந்த முதற்போர் ஆகும். இது கி. மு. 35-ல் நடைபெற்றது. இதே இடத்தில் இரண்டாம் போர் கி. மு. 20-ல் கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் முதலாம் கோச்செங்கணானுக்கும் நடந்தது.

[சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் (இவன் பெருநற்கிள்ளி என்றும் வழங்கப்படுவான்) போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கழாஅர்த்தலையார் பாடியது.]

என்று இருபெரு வேந்தராகிய சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனையும், சோழன் முதலாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற பெருநற்கிள்ளியையும் பாடியுள்ளமை காண்க.

இவ்விரு பெருவேந்தரும் போர்க்களத்தில் பட்டு வீழ்ந்தது கண்டு, கழாஅர்த்தலையார் இரங்கியதுபோலவே, ஆசிரியர் முதலாம் பரணரும் அமர்க்களம் போந்து, இருவரையும் கண்டு, "ஒருவரை ஒருவர் வஞ்சியாது நின்று வென்றி பெறுவேம்" என்று போரில் மண்டிய இவர்தம் வீழ்ச்சி மண்ணாளும் மன்னர்க்கு ஒரு நல்ல உண்மை உணர்த்தும் என்ற கருத்தால்,

"எனைப்பல் யானையும் அம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படை ஒழிந்தனவே;
விறற்புகழ் மாண்ட புரவி எல்லாம்
மறத்தகை மைந்தரொடு ஆண்டுப்பட்டனவே;
தேர்தர வந்த சான்றோர் எல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந் தனரே;
விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குநர் இன்மையின் இருந்து விளிந்தனவே;
சாந்தமை மார்பில் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருது களத்தொழிந்தனர்; இனியே,
என்னாவது கொல் தானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனற் பாயும்
யாணர் அறாஅ வைப்பில்
காமர் கிடக்கையவர் அகன்றலை நாடே." (புறம் : கூ௩)

என்று இரங்கிப் பாடியுள்ளார்.

[அவரை (குடக்கோ நெடுஞ்சேரலாதனையும் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்கிற பெருநற் கிள்ளியையும்) [1]பரணர் பாடியது.]

கி. பி. 2-ம் நூற்றாண்டுப் பரணரை "கபிலபரணர்" என்று கூறுவதுபோல, கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த பரணரை "கழாஅர்த்தலையார்—பரணர்" என்று கூறுவது பொருந்தும்.

குடக்கோ என்பது சேரமன்னர்களுக்கு ஏற்பட்ட ஒரு பொதுப்பெயர். குடக்கோ=மேறகேயுள்ள நாட்டின், அதாவது தமிழ்நாட்டின் மேல்பகுதியில் உள்ள நாட்டின் அரசன் என்பது பொருள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் இப்பட்டம் உண்டு என்பது,

"குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்"

என்று பதிற்றுப்பத்து 6-ம் பத்துப் பதிகத்திலும்,

"வடவருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேரலாதற்கு
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்"

என்ற ஐந்தாம் பத்துப் பதிகத்திலும் காண்க.

'குடக்கோ' என்று கூறப்பட்டதாலேயே சில புலவர்கள் சோழன் முதலாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி காலத்தில் இருந்த குடக்கோ நெடுஞ்சேரலாதனையும், குடக்கோ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் ஒன்றுபடுத்திக்கொண்டு வழுக்கி வீழ்வர். இருவர் காலமும் வெவ்வேறு என்பதனை அவர்கள் உணரவேண்டும்.

கழாஅர்த்தலையார் என்னும் புலவர் பாடிய 62-ம் புறப்பாட்டிலிருந்து சேரர் நாட்டில் நடைபெற்றுவந்த ஒரு

1. இங்கு கூறப்பட்ட பரணர் கி. மு. 80-ல் இருந்த முதலாம் பரணர் ஆவர். கி. பி. 2-ம் நூற்றாண்டில் இருந்த 'கபில பரணர்' என்று கூறப்பட்ட பரணர் இரண்டாம் பரணர் ஆவர் என்பதனை நினைவில் வைக்க.

சிறந்த ஒழுக்கம் வெளியாகிறது. அதுதான் அரசர் இறந்துபட்டால் அவர் தேவியாரும் உடன்கட்டையேறி மாய்ந்து வீரசொர்க்கம் அடைதல். அதனை,

"...........................பெண்டிரும்
பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,
மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே,
வாடாப்பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவினோரும் ஆற்ற
அரும்பெறல் உலகம் நிறைய
விருந்து பெற்றனரால் பொலிகநும் புகழே"
(புறம்: ௬௨)

என்று வெகு அழகாக அமைத்து உண்மையை விளக்கியுள்ளார்.

---

## ௬௨. சேரமான் இளங்குட்டுவன்
[கி. மு. 80—கி. மு. 30]

இவன் ஒரு கடைச்சங்கப் புலவன் (புலவர் எண் 200). பாலை பாடுவதில் சிறந்தவன். இவன் இளவயதில் குட்டநாட்டை (Cochin) ஆண்டுவந்ததால் "குட்டுவன்" என்னப்பட்டான். சேர அரசர்களுக்குள் அடுத்தாற்போற் பட்டத்துக்கு வரவேண்டியவர்களை குட்டநாட்டிற்கு அரசராக்கி அரசியலில் பழக்கம் செய்வது வழக்கம். இங்கிலாந்தில் இளவரசர்கள் எல்லாம் வேல்ஸ் நாட்டு இளவரசர்கள் (Princes of Wales) என்று இருப்பதுபோலக் கொள்க.

இவன் இளவயதிலேயே முத்தமிழும் கற்றுப் புலமையெய்தி, கூடலில் நடந்த கடைச்சங்கத்தில் புலவர் குழாத்தில் ஒருவனாக அமர்ந்து, தமிழுக்குப் பணியாற்றி வந்ததோடு, சேரநாட்டில் ஆட்சியையும் செவ்வனே கவனித்துத் திறம்பட நடத்தி வந்தான்.

இவன் பாடிய பாட்டுக்களில் ஒன்றே ஒன்றுதான் கிடைத்திருக்கிறது. அது அகநானூறில் 153-வது பாட்டாகத் திகழ்கிறது. இவனுடைய ஏனைய பாட்டுக்கள் தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்திலேயே அகப்படவில்லை. ஆதலின், இவன் தொகைநூல்கள் தொகுக்கப்பட்ட காலத்துக்குமுன் வாழ்ந்தவனாக வேண்டும்.

இவனுடைய பாடல் வருமாறு:—

"நோகோ யானே நோதரும் உள்ளம்,
அம்தீங் கிளவி ஆயமொடு கெழீஇப்
பந்துவழிப் படர்குவள் ஆயினும் நொந்துநனி
வெம்புமன், அளியள் தானே இனியே
வன்கணாளன் மார்புற வளைஇ
இன்சொற் பிணிப்ப நம்பி நம்கண்
உறுதரும் விழுமம் உள்ளாள், ஒய்யெனத்
தெறுகதிர் உலைஇய வேனில் வெங்காட்டு
உறுவளி ஒலிகழைக் கண்ணுறுபு தீண்டலின்
பொறிபிதிர்பு எடுத்த பொங்கெழு கூரெரிப்
பைதரு சிமையப் பயம்நீங்கு ஆரிடை
நல்லடிக்கு அமைந்த அல்ல மெல்லியல்
வல்லுநள் கொல்லோ; தானே எல்லி
ஓங்குவரை அடுக்கத்து உயர்ந்த சென்னி
மீனொடு பொலிந்த வானில் தோன்றித்
தேம்பாய்ந்து ஆர்க்கும் தெரியிணர்க் கோங்கின்
காலுறக் கழன்ற கண்கமழ் புதுமலர்
கைவிடு சுடரில்தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே." (அகம் : கருக)

என்பதே.

இப்பாட்டின்கண் தமிழ்நாட்டு அரச குடும்பத்துப் பெண்களும் ஏனைய செல்வர்களுடைய பெண்களும் பந்து விளையாடுதலைக் குறித்து, "அம்தீங்கிளவி ஆயமொடு கெழீஇப் பந்துவழிப் படர்குவள் ஆயினும்" என்று குறிப்பிட்டுள்ளது நாண்க. பந்து விளையாடலுக்குத் தனி

யாகக் 'கந்துகவரி' என்ற பாடல்களும் உண்டு. 'அம்மானை', 'ஊசல்', 'சாழல்', 'உந்தி' என்ற விளையாட்டுக்களுக்கு எப்படித் தனித்தனிப் பாடல்கள் உண்டோ, அது போலவே பந்து விளையாட்டுக்கும் உண்டு. இது எதனைக் குறிக்கின்றது என்றால் தமிழ்நாட்டில் பெண்கள் கவலையற்றுக் களிப்புடன் பாட்டு இசைத்துக்கொண்டு எத்தொழிலையும் வருத்தம் உறாது செய்துவந்தார்கள் என்பதனைக் காட்டுகிறது.

---

## ௧௩. சேரலாதன்

[கி. மு. 30—கி. பி. 12]

இச் சேர அரசன் கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சேரநாட்டை 42 ஆண்டுகள் திறமைப்பட, புகழுடன் ஆண்டுவந்தான். இவனுடைய இயற்பெயர் இன்னதென விளங்கவில்லை. 'சேரலாதன்' என்பது சேர அரசர்களுக்கே ஏற்பட்ட ஒரு பொதுப்பெயர் ஆகும்.

இவன் சோழநாட்டைப் பெரும்புகழுடன் அரசாண்ட இரண்டாம் கரிகாலன் (B.C.50—A.D.37) காலத்தவன். இக் கரிகாற் பெருவளத்தான்-I என்பவனைப் பற்றி சிலப்பதிகாரம்—பொருநராற்றுப்படை—பட்டினப்பாலை—கலிங்கத்துப்பரணி—பெரிய புராணம் முதலிய நூல்கள் சிறப்பிக்கின்றன. இக் கரிகாற் பெருவளத்தான் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி-II-க்கும் அழுந்தூர்வேள் மகளுக்கும் பிறந்தவன். திருமாவளத்தான் என்ற பட்டம் பெற்றவன். அரசியல் சூழ்ச்சியில் வல்லவரும், கடைச்சங்கப் புலவரும், தன் தாய் மாமனுமாகிய இரும்பிடர்த்தலையாரை முதல் அமைச்சராகக் கொண்டவன். இவன் மிகுந்த படைப் பலம் பெற்றவன். அதனால் தமிழ்நாடு முழுவதையும் தன் ஆட்சிக்குக்கீழ்க்கொணர அவாவி, முதன்முதல் சேர - பாண்டியரோடு போர்தொடுத்தான். போர் பல இடங்

களில் நடந்தது. கடைசியாக கி. பி. 12-ல் தஞ்சை நாட்டுக்கோயில் வெண்ணிப்பறந்தலையில் போர் நடந்தது. இது மூன்றும் வெண்ணிப்போர் ஆகும். முதலாம் வெண்ணிப்போர் கி. மு. 100-ல் முதலாம் காரிகாலனுக்கும் சேர அரசன் பெருஞ்சேரலாதனுக்கும் நடந்தது என்று முன்னரே கூறினோம். இரண்டாம் வெண்ணிப்போர் கி. மு. 45-ல் கணைக்கால் இரும்பொறைக்கும் செங்கணானுக்கும் நடந்தது.

இந்த மூன்றும் வெண்ணிப்போரைக் குறித்து முடத்தாமக்கண்ணியார் என்னும் புலவர்,

> "இரும்பனம் போந்தைத் தோடும், கருஞ்சினை
> அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்,
> ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
> **இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய**
> **வெண்ணித் தாக்கிய** வெருவரு நோன்றாள்
> கண்ணார் கண்ணிக் **கரிகால்வளவன்.**"
>
> (பொருந: கசரு-அ)

என்று பொருநராற்றுப்படையில் பாடியுள்ளார்.

முதலாம் வெண்ணிப்போரில் சேரன் புறப்புண்நாணி வடக்கிருந்து உயிர் துறந்தான். மூன்றும் வெண்ணிப் போரில் சேரனையும் பாண்டியனையும் கரிகால் வளவன் போரில் கொன்றான். இவ்விரு பெரும்போர்களையும் ஒன்றெனக்கருதும் புலவர்கள் சிந்திப்பார்களாக.

மூன்றும் வெண்ணிப்போரில் வெற்றியடைந்ததும் கரிகாலன்-II என்பவன் சேனையோடு புறப்பட்டு பன்றி—கற்கா—வேண் — குட்டம்—குடம் — பூழி—நாடுகளையும், சேதி நாடு—தொண்டை நாடு—வடுகர் நாடு—வடக்கில் இமயம் வரையுள்ள நாடுகள் அனைத்தையும் வென்று வாகைசூடி இமயத்தில் புலிக்கொடியைப் பொறித்து மிகுந்த திறைப்பொருள்களுடன் மீண்டான் என்று தெரிகிறது.

கி. பி. 12-ல் நடந்த வெண்ணிப்போரில் சேரலாதன் கொல்லப்பட்டதும், உதியஞ் சேரல் என்பவன் சோழனோடு

சமாதானம் செய்துகொண்டு சேரநாட்டில் முடிசூடி ஆளத் தொடங்கினான். இவனுக்கும் சேரலாதனுக்கும் என்ன முறை என்பது விளங்கவில்லை. இனிவரும் ஆராய்ச்சியில் அறியக்கிடக்கின்றது.

---

## கச. உதியன் சேரலாதன்

[கி. பி. 12—கி. பி. 42]

கி. பி. 12-ல் இரண்டாம் வெண்ணிப்போரில் சேரலாதன் என்னும் சேரநாட்டு அரசன் இரண்டாம் கரிகாலனால் கொல்லப்பட்ட உடனே, உதியன் சேரலாதன் என்பவன் சோழ அரசன் இரண்டாம் கரிகாலனோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு, சேரநாட்டில் வஞ்சியில் முடிசூட்டிக்கொண்டு அரசனானான். இவன் கொலைசெய்யப்பட்ட சேரலாதனுக்கு என்ன உறவுள்ளவன் என்று தெரியவில்லை. மகனாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

இவன் முடிசூடிக்கொண்டதும் வெளியன் வேண்மான் என்னும் குறுநிலமன்னனுடைய மகள் நல்லினியை மணந்துகொண்டான்.

சேர சோழ பாண்டியர்கள் தங்கள் தங்கள் நாட்டில் உள்ள மகட்கொடைக்குரிய குறுநில மன்னர்களான வேளிர்களிடத்தில் இருந்து பெண்கொள்ளுவது வழக்கம். அல்லது, சேர—சோழ—பாண்டியர்களே தங்களுக்குள் ஒருவர்க்கொருவர் கொண்டும் கொடுத்தும் வந்தார்கள் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் நிறைய உள்ளன. ஆகையால் இம்மூன்று குலத்தாரும் படைப்புக்காலந் தொட்டு மேம்பட்டுவரும் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும். இவர்கள் பரம்பரையிற் சிற்சில அரசர்கள் அரசியல் காரணமாக, அதாவது தங்களுக்குப் படைப்பலம் உண்டாகும்பொருட்டு

வேற்றுநாட்டு அரசகுலத்துப் பெண்மணிகளை மணந்து கொண்டும் இருந்திருக்கிறார்கள் என்பது சங்க நூல்களால் வெளியாகிறது.

சேரநாட்டு அரசர்களைப்பற்றி விரிவாகக் கூறும் நூல் 'பதிற்றுப்பத்து' என்பதாகும். அந்நூலில் இப்போது நமக்குக் கிடைத்துள்ளன 2 முதல் 9 பத்துக்களேயாகும். முதல் பத்தும், பத்தாம் பத்தும் கிடைக்கவில்லை. பதிற்றுப் பத்தில் இரண்டாம் பத்து இவ் வுதியஞ்சேரல் உடைய மூத்த மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்பற்றிப் பாடப்பட்டிருக்கிறபடியால், முதலாம் பத்து இவ் உதியஞ்சேரலாதனைப் பற்றிப் பாடப்பட்டிருக்கவேண்டும் என்று 'சேரன் வஞ்சி' என்ற நூலாசிரியர் கருதுகின்றார்.[1] பெரும்பாலும் அப்படித்தான் இருக்கவேண்டும் என்பது பல புலவர்களுடைய கருத்து.

" மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரல் "

என்று 2-ம் பத்துப்பதிகம் கூறுவதால் முதல் பத்தில் பாடப்பட்டவன் இவனேயாகும் என்பது உறுதியாகின்றது.

இவ் வுதியஞ்சேரலுக்கு நல்லினியிடத்தில் பிறந்த ஆண்மக்கள் இரண்டுபேர்.—அவர்கள் (1) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், (2) பல்யானைச் செல்கெழுகுட்டுவன்; இவர்கள் இருவரையும் பற்றி பதிற்றுப்பத்து 2-ம் பத்திலும், 3-ம் பத்திலும் கூறப்பட்டுள்ளது காண்க.

இவ் வுதியஞ்சேரல் சோழர்களிடத்தில் நட்புரிமையுடன் பழகிவந்தவனுகையால், தன்னுடைய மூத்தமகன் இமயவரம்பனுக்கு இரண்டாம் கரிகாலனின் பேத்தியும், கரிகாலன் மகன் மணக்கிள்ளியின் மகளும் ஆன நற்சோணையை மணமுடித்து வைத்துள்ளான். அதனால் இரு குலத்தாருக்கும் நட்பு வலிமைப்பட்டு ஒற்றுமையுடன் வாழ வழியேற்பட்டது.

1. Seran Vanchi by Dr. S. K. Ayyangar, Page 93.

## கரு. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

[கி. பி. 42—கி. பி. 100]

இவன் உதியஞ்சேரலின் மூத்த மகன். வீரத்திலும், சூழ்ச்சியிலும், அரசியல் நடத்துதலிலும் இரண்டாம் கரிகாற் சோழனை நிகர்த்தவன். இவன் காலத்தில் இவனுடைய ஆட்சியானது வடக்கே இமயமலையையும் மற்ற மூன்று பக்கங்களிலும் கடலையும் எல்லையாகவுடைய தமிழகம் முழுவதும் பரவி இருந்தது. தற்காலம் பாகிஸ்தான் சேர்ந்த இந்தியாவின் பரப்பு எவ்வளவோ அவ்வளவையும் வென்று அரசாண்டவன். தமிழ்மொழியே இந்தியா முழுதும் அப்போது அரசியல் மொழியாக இருந்துவந்தது. இவனைப்பற்றி 2-ம் பத்துத் பதிகத்தில் கூறுவதாவது :—

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு,
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்,
அமைவரல் அருவி இமயம் விற்பொறித்து,
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத், தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி,
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ,
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு,
பெருவிறன் மூதூர்த்தந்து, பிறர்க் குதவி,
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதனைக்
குமட்டூர்க் கண்ணனார் பாடினார் பத்துப்பாட்டு."

அவைதாம், புண்ணுமிழ்குருதி—மறம் வீங்குபல் புகழ்—பூத்த நெய்தல்—சான்றோர் மெய்ம்மறை—நிரைய வெள்ளம்—துயிலின் பாயல்—வலம்படு வியன்பணை—கூந்தல் விறலியர்—வளனறுபைதிரம்—அட்டுமலர் மார்பன். இவை பாட்டின் பதிகம்.

பாடிப்பெற்ற பரிசில் உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயம் கொடுத்து, முப்பத்தெட்டியாண்டு தென்

ளுட்டுள் வருவதனில் பாகம் கொடுத்தான் அக்கோ. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான்.

"பிரமதாயம்" என்று குறிக்கப்பட்டிருப்பதால் புலவர் குமட்டூர்க் கண்ணனார் ஆரியப் பார்ப்பனப் புலவர் என்று தெரிகிறது. உம்பற்காடு = ஆனைமலையைச் சேர்ந்த நாட்டகத்துள்ள ஊர்கள். உம்பல் = யானை.

இப்பதிகத்தால் நாம் அறிந்துகொள்ளக்கூடிய சரித்திரம் வருமாறு :—

இமயவரம்பன் என்பவன் உதியஞ்சேரலாதனுக்கும் வேண்மாள் நல்லினிக்கும் பிறந்தவன் என்றும், இமயம் வரை படையெடுத்துச் சென்று ஆரிய அரசர்களையும் ஏனைய அரசர்களையும் வென்று தன்னரசுக்குக்கீழ்க் கொணர்ந்து, கப்பங் கட்டச்செய்து, இமயத்தில் தன்னுடைய விற்கொடியைப் பொறித்துவைத்து, வடக்கே இமயமும் ஏனைய மூன்று திக்குகளில் கடலே வேலியாகவுள்ள தமிழகம் முழுவதையும் ஒருமொழி (தமிழ்மொழி) வைத்து உலகாண்டு, இமயவரம்பன் என்ற பட்டம் பெற்று, வெல்லப்பட்ட அரசர்கள் கொடுத்த பொருள்கள், அணிகலன்கள், பொற்குவியல்கள், வயிரமொடு ஒன்பது விதமான இரத்தினக் கற்கள் முதலிய திரைப்பொருள்களை எடுத்துக்கொண்டு வஞ்சி மூதூர் வந்து, கூத்தர், பாணர், புலவர் முதலிய எல்லோருக்கும் ஈந்து பெரும் புகழ் எய்தியவன் என்பதே.

குமட்டூர்க் கண்ணனாரைப்பற்றிச் சிறிது தெரிந்துகொண்டு மேலே செல்வாம். குமட்டூர் என்பது இப்புலவருடைய ஊர். கண்ணனார் என்பது இயற்பெயர்.[1] ஓய்மானாட்டை(திண்டிவனம்)ச் சேர்ந்த குமட்டூர் (முட்டூர்) என்னும் ஊரில் பிறந்த ஒரு பார்ப்பனர் என விளங்குகிறது. இவருக்கு ஆனைமலைத் தொடரில் உள்ள

1. பதிற்றுப்பத்து—(கழகப் பதிப்பு) ஔவை. சு. துரைசாமி பிள்ளை, பக்கம் 27-28.

ஐஞ்ஞூறு ஊர்களையும், தென்னாட்டு வருவாயுள் சிறிது பாகமும் இமயவரம்பனால் கொடுக்கப்பட்டது. இவர் பாடிய வேறு பாடல்கள் கிடைக்கவில்லை. தமிழ்ப்புலமை எய்தியவர்கள் யாராயிருந்தாலும் பாகுபாடு கருதாமல் புலமை ஒன்றனையே தமிழ் அரசர்கள் கருதி மரியாதை செய்துவந்தார்கள் என்பது தெரிகிறது.

இதுவரை 2-ம் பத்துப் பதிகத்தில் கண்ட வரலாற்றினைக் கூறினோம். இனி 2-ம் பத்தில் உள்ள பத்துப்பாட்டுக்களிலும் கூறியிருப்பனவற்றை ஆராய்வாம் :—

11-ம் பாட்டில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது இமய வெற்றியைப்பற்றிக் கூறியிருப்பதோடு குமரவேள் கடலில் படைகொண்டு சென்று சூரபதுமனுடைய காவன் [1]மாமரத்தைத் தடிந்து வெற்றிகொண்டதுபோல, நெடுஞ்சேரலாதனும் கடலிற் படைகொண்டு சென்று கடம்பர் (கடற்கொள்ளைக் கூட்டத்தார்) தாம் பலராய்க் கூடிநின்று காத்த கடம்ப மரத்தினை அடியோடு தடிந்து அவரை வென்று, அவ்வடி மரத்தினால் வெற்றி [2]முரசு செய்து கொண்ட வரலாற்றினையும் கூறப்பட்டுள்ளது.

---

1. "நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு"
(பதிற், கக : ௩-௬)

"பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்"
(திருமுருகு : ௪௫ - ௬)

"அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்"
(திருமுருகு : ௫௯ - ௬௧)

2. "மாக்கடல் நீக்கிக் கடம்பறுத்து
இயற்றிய வலம்படு வியன்பணை" (பதிற் : கஎ)

"சால்பெருந் தானைச் சேரலாதன்
மாக்கடலோட்டிக் கடம்பறுத்து இயற்றிய
பண்ணமை முரசு"
(அகம் : ௩௪௭)

கடம்பர்

கி. மு. மூன்றும் நூற்றுண்டில் அசோகச் சக்கரவர்த்தியால் 'சத்தியபுத்திரர்' என்று புகழப்பட்ட கோசர் என்பவருடைய துளுநாட்டை, அந்நூற்றுண்டின் இறுதியில் கடம்பர் என்ற கூட்டத்தார் வென்று பிடித்து எழுநூறு ஆண்டுகள் ஆட்சிசெலுத்தி வந்தார்கள்.

கி. பி. முதல் நூற்றுண்டில் சேரநாட்டோடு வாணிபம் செய்துவந்த யவனர் — உரோமர் — எகுபதியர் — அராபியர் — போர்த்துக்கேசியர் — உலாந்துக்காரர்— தானியர் முதலியோர், முசிறி—தொண்டி—நறவு—மரந்தை முதலிய துறைமுகங்களுக்கு வரும்போது, மேல்கடலில் உள்ள தீவுகளில் வசித்துக்கொண்டு துளுநாட்டையும் ஆண்டுவந்த கடற் கொள்ளைக்கூட்டத்தாராகிய கடம்பர், அவர்களைக் கொள்ளையடித்துவந்தனர். இக் கடம்பரை அடக்குவதே சேர அரசர்களுக்கு ஒரு பெரிய வேலையாய் இருந்தது. கடம்பருடைய விரிவான சரித்திரம் இத்துடன் [illegible]ணைக்கப்பட்டிருக்கும் வரலாற்றில் காண்க.

மரந்தை—நறவு முதலியன வட மலையாளத்தில் [illegible]ள்ளன. உரோமன் பிளினி என்னும் ஆசிரியர் துளுநாட்டு [illegible]வு என்னும் ஊரைத் தம் நூலுள் நவுர என்றும், எகிப்[illegible]யன் தாலமியும், கிரீஸ் தேசத்துப் பெரிபிளஸ் என்பவரும் அந்த ஊரை நித்திரியஸ் என்றும் கூறியுள்ளார். நேத்திரவதி ஆற்றங்கரையிலுள்ள மங்களூரைத்தான் நறவு என்றும், நித்திரியஸ் என்றும் மேனாட்டுப் புலவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தகைய கடம்பரோடு போர்தொடுத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அக்கடம்பர்களை வென்று அடக்கினான் என்பதனை,

"திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய வேஎய்
வென்றெறி முழங்கு பணைசெய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பிற்
போரடு தானைச் சேரலாதன்" (பதிற் : கக)

என்று புலவர் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளது காண்மின்.

14-ம் பாட்டில் இமயவரம்பனைப் பற்றி :—

"எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை"

என்று கூறப்பட்டுள்ளது.

பகைவரை வென்று அவருடைய முடிகளின் பொன்னால் ஆரமும் வீரகண்டையும் பிறவும் செய்துகோடலும், காவன்மரத்தால் முரசு முதலியன செய்துகோடலும், அவர்களுடைய நாட்டினின்றும் பெற்ற பெருவளத்தைப் பாணர் கூத்தர் முதலிய இரவலர்க்கு வழங்கலும் படைவேந்தர் மரபு. அதுபோல, இமயவரம்பனும் ஏழு பகைவேந்தர்களுடைய ஏழு முடிகளில் இருந்த பொன்னால் செய்த ஆரத்தை மார்பில் அணிந்தவன் என்று கூறப்பட்டுள்ளது.

16-ஆம் பாட்டில் இமயவரம்பனுடைய அரசமாதேவி நற்சோணையைக் குறித்து,

"ஆறிய கற்பின், அடங்கிய சாயல்,
ஊடினும் இனிய கூறும் இன்னகை,
அமிர்து பொதி துவர்வாய், அமர்த்த நோக்கிற்
சுடர் நுதல், அசைநடை"

உடையவளாகப் புலவர் கண்ணனார் வருணித்துள்ளார்.

சோணை (River Sone) என்பது வடதேயத்திலுள்ள ஒரு ஆற்றின் பெயர். இரண்டாம் கரிகாலன் அச்சோணை யாற்றங்கரையில் படைவீட்டில் இருக்கும்போது, தன் மகன் சோழன் மணக்கிள்ளிக்கு இவள் பிறந்தவள் ஆதலால் வடநாட்டுப் போர் நினைவாக அந்நதியின் பெயரைப் பேத்திக்கு இட்டுமகிழ்ந்தனன். தமிழ்நாட்டில் இந்தமாதிரி நதியின் பெயரைக் குழந்தைகளுக்கு இடுவது வழக்கம். எடுத்துக்காட்டாக, கங்கை, காவேரி, பொன்னி, கோதாவரி முதலியன காண்க.

ஏனைய பாட்டுக்களில் இமயவரம்பனது வெற்றிச் சிறப்புக்களும், ஓலக்கச் சிறப்புக்களும், அரசியற் சிறப்புக்

களும், இன்பச் சிறப்புக்களும், கொடைச் சிறப்புக்களும் கூறப்பட்டுள்ளன.

இமயவரம்பன் கடற்கொள்ளைக் கூட்டத்தாராகிய கடம்பரையும், ஆரிய அரசர்களையும், யவன அரசர்களையும் வென்று அடக்கி அவர்களிடம் இருந்து பெற்ற பொருள் களையும், அணிகலன்களையும், செல்வத்தையும் தன்னுடைய வடசேரநாட்டுத் தலைநகரான மரந்தை என்னும் மூதூருக்குக் கொண்டுபோய் வீரர்களுக்கும், புலவர்களுக்கும், கூத்தர்களுக்கும், பாணர்களுக்கும் வழங்கியதுபோக மீதியை நிலத்தில் புதைத்துவைத்து நிலந்தின்னவிடுத் தான். இதனை,

"வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து, இமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து,
நன்னகர் [1]மரந்தை முற்றத்து, ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு [2]ஆம்பல்
ஒன்று வாய்நிறையக் குவைஇ, அன்றவண்
நிலந்தினத் துறந்த நிதியம்" (அகம்: ௧௨௭)

என்று மாமூலனூர் பாடியதால் அறியலாம்.

இமயவரம்பன் ஆந்திரநாட்டுச் சாதவாகன குடும்பத் தைச் சேர்ந்த சதகர்னி என்ற அரசனையும் வென்று அடக் கியதாக Dr. S. K. Ayyangar 'சேரன் வஞ்சியில்' கூறு கிறார்.

இமயவரம்பனுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி: சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணை. இவள்தான் அரசமா தேவி இரண்டாவது மனைவி வேள்ஆவிக்கோ

1. மரந்தை—மாந்தை என்றும் பாடம்.

2. ஆம்பல்—29 தானங்களையுடைய ஒரு எண். விந்தம் எண் மடங்குகொண்டது. (குமுதம் என்றும் கூறுப. (Vide மேல் வாய் இலக்கம் attached herewith.)

பதுமன் என்பவனுடைய மூத்த மகள் வேண்மாள் என்பவள்.

முதல் மனைவிக்கு செங்குட்டுவன், இளங்கோவடிகள் என்ற இரண்டு ஆண்களும், இரண்டாவது மனைவிக்கு களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற இரண்டு ஆண்களும் உண்டு. இவர்கள் நால்வரில் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் மரந்தையிலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தொண்டியிலும் இமயவரம்பனுக்குக்கீழ் அரசாண்டார்கள். செங்குட்டுவன் குட்டநாட்டு இளவரசனாக இருந்தான். இளங்கோவடிகள் அரசச் செல்வத்தை வெறுத்து, துறவுபூண்டு தவம் செய்வதிலும், முத்தமிழைப் படிப்பதிலும் காலம் கழித்து வந்தார். இவர் முத்தமிழிலும் வல்லவர் என்பது இவர் பாடிய சிலப்பதிகாரமே சான்று பகரும். இமயவரம்பனைப் பற்றிச் சிலப்பதிகாரத்தில் இவர்,

"கடற்கடம் பெறிந்த காவல னாயினும்,
விடர்ச்சிலை பொறித்த விறலோ னாயினும்"

(சிலப் : உஅ : கஅ-க)

என்று மாடலன் கூற்றாகக் கூறுவது காண்மின்.

கி. பி. 100-ல் இமயவரம்பனுக்கும் சோழன் இரண்டாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் யாது காரணத்தாலோ போர் ஏற்பட்டு, இருவரும் காயம்பட்டுப் போர்க்களத்தில் மடிந்தார்கள்.

இமயவரம்பன் இறந்துபட்டதும் பட்டத்துக்கு உரியவனான செங்குட்டுவன் சேரர் மக்கட்டாய முறைப்படி பட்டம் எய்தினான். எய்தியபின் தன் தாய் நற்சோணையைக் கங்கை நீரில் முழுக்காட்ட வடநாட்டுக்குப் படையொடு சென்று, அங்கே அவனை எதிர்த்த ஆரிய அரசர் நூற்றுவரையும் வென்று அடக்கிக் கப்பங்கட்டச் செய்து, தாயைக் கங்கையில் மூழ்கச்செய்து காசியில் தந்தைக்குரிய இறுதிக் கடனைச் செய்துவிட்டுச் சேரநாடு வந்ததை,

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ்ஞாற் றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்"

(சிலப் : உகு : கசுO-ச)

என்று இளங்கோ பாடியுள்ளார். அவர் 'எங் கோமகளை' என்றது செங்குட்டுவன்—இளங்கோ இவருடைய தாயை. அரும்பத உரை ஆசிரியரும் அப்படியே கூறுவர். ஆனால் சில புலவர்கள் புறம் 62-ல் கூறப்பட்டுள்ள முதலாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும், குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் கி. மு. 80-ல் நடந்த சண்டையில் இருபெரு வேந்தரும இறக்க, அவர் மனைவியர் உடன்கட்டை ஏறிய தாய்க் கூறப்பட்டுள்ளதால் அந்தப் போர்தான் இது என மயங்கி எங்கோமகளை என்பதற்கு தன் தாயின் படிமக் கல்லை என்று பொருள்கொண்டு எழுதியுள்ளார்கள். அது பொருந்தாது என்பது இளங்கோவடிகள் வாக்கு நமக்கு அறிவிக்கிறது. இளங்கோவடிகள் நேரே அறிந்த வரலாற்றைக் கூறுகிறார் ஆதலால், அதற்கு மாறாகப் பொருள் கொள்ளுவது ஒரு சிறிதும் பொருந்தாது என்பதனை அறிக.

## கஃ. பல்யானைச் செல்கெழு குட்டுவன்
[கி. பி. 47—கி. பி. 72]

இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய தம்பி. சேரநாட்டின் வடபகுதியைப் பூழியில் இருந்துகொண்டு நெடுஞ்சேரலாதனுக்குக்கீழ் அரசாண்டவன். இவனைப் பற்றி 3-ம் பத்துப்பதிகம் கூறுவதாவது:—

"இமைய வரம்பன் தம்பி அமைவர
**உம்பற் காட்டைத்** தன்கோல் நிறீஇ,
**அகப்பா** எறிந்து, பகற்றீ வேட்டு,
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇ,
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்து,
கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி,
இருகட னீரும் ஒருபக லாடி,
அயிரை பரைஇ ஆற்றல்சால் முன்போடு
ஒடுங்கா நல்லிசை உயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனார் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவனைப்

பாலைக் கௌதமனார் பாடினார் பத்துப்பாட்டு." பாடிபெற்ற பரிசில், 'நீர் வேண்டியது கொண்மின்' என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என, பார்ப்பாரில் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெரு வேள்வி வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணார் ஆயினர்." செல்கெழு குட்டுவன் இருபத்தைந்து யாண்டு அரசுவீற்றிருந்தான் என்பதே.

இப்பதிகத்தால் செல்கெழு குட்டுவன் இமயவரம்பன் தம்பி என்றும், பிற ஆட்சியின்கீழ் இருந்த உம்பற் காட்டை (ஆனைமலையை) அடிப்படுத்திச் சேர முடியரசின் கீழ்க் கொண்டுவந்தவன் என்றும், வடமலையாளத்தில் உள்ள அகப்பா என்னும் காவற்கோட்டையைத் தகர்த்து, அதனைத் தீயிட்டு அழித்துப் பகைவரை வென்றவன் என்றும், மதிநலம் மிக்க பெரியவர்களைத் தழுவி நடந்து

வந்தான் என்றும், ஒரே நாளில் தொடுகடல்—தொன்று முதிர்கடல் என்ற இரு கடல்களிலும் நீராடி, அயிரை மலையிலுள்ள அயிரை என்னும் தெய்வத்தைப் பரவி வந்தான் என்றும், நெடும்பார தாயனார் என்பவர் உலகை வெறுத்துக் காட்டுக்குச்சென்று தவம் இயற்றியதை அறிந்து, தானும் அரசை வெறுத்து அரசியலை விட்டு விலகிக் காடு சென்று தவம் இயற்றிப் பேரின்பம் அடைந்ததாகவும், பாலைக் கவுதமனார் என்னும் பார்ப்பனப் புலவர் இவனைப்பற்றிப் பாடிய பத்துப்பாட்டிற்கும் என்ன பரிசு வேண்டும் என்று கேட்க, தானும் தன் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும் என, அப்படியே செய்யக் கருதிப் பெரியோர் சொற்படி ஒன்பது வேள்விகள் செய்து முடித்துப் பத்தாவது வேள்வியில் பாலைக் கௌதமனாரை அவர் பத்தினியுடன் சுவர்க்கம் புகச்செய்ததாகவும் அறிகிறோம்.

நெடும்பாரம் என்பது ஊர்ப்பெயர்; தாயனார் என்பது இயற்பெயர். அறுபத்துமூன்று நாயன்மார்களிலும் தாயனார் (அரிவாள் தாயனார்) என்பவர் ஒருவர் உண்டு என்பது நினைவுகூரத் தக்கது.

பதிற்றுப்பத்து 21-ம் பாட்டில் இவனை, 'மிதியற் செருப்பிற் பூழியர் கோவே' என்று கூறப்பட்டுள்ளதால் இவன் பூழிநாட்டில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குக்கீழ் அரசாண்டதாக ஏற்படுகிறது. செருப்பு என்ற பெயரையுடைய மலை பூழிநாட்டில் உள்ளது. செருப்பு என்றால் சாதாரணமாக மிதியடி என்று பொருளாகும். அப்பொருளை நீக்கவே 'மிதியற் செருப்பு' (=மிதியாத செருப்பு) என்றார் பாலைக் கௌதமனார். இது பூவா வஞ்சி, ஊராக் குதிரை, மண்ணா முத்தம், துவ்வா நறவு, நூலாக் கலிங்கம் என்பன போன்றதே.

இவனிடத்தில் யானைப்படை மிகுதியாக இருந்தது; அதனால் 'பல்யானை' என்ற பட்டம் பெற்றான். உம்பற் காடு என்ற யானை மிகுதியும் உள்ள ஆனைமலை நாட்டைக்

கைப்பற்றி சேர அரசுக்குக்கீழ்க் கொண்டுவந்ததனாலேயே இவன் பல யானைகளைத் திரட்டிப் படைக்கு உபயோகப் படுத்த வசதி ஏற்பட்டது.

பூழி என்னும் ஊர் பாண்டிநாட்டில் கீழக்கடற்கரையிலும் ஒன்று உண்டு. அது சிலகாலம் பாண்டியருக்குத் தலைநகராகவும் இருந்தது. ஆதலின் பாண்டியர்களைப் 'பூழியர்கோ' என்று அழைப்பது உண்டு. 'பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன்' என்பது காண்க. பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆண்ட பூழிநாடானது மேற்குக் கடற்கரையில் உள்ளது. இது பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்று.[1]

அயிரை என்னும் மலையின் பெயர் அம்மலையில் கோயில் கொண்டுள்ள பராசத்திக்கு ஆயிற்று; சாமுண்டி என்னும் மலையின் பெயர் அம்மலையில் கோயில் கொண்டுள்ள அம்மனுக்கு ஆனதுபோல. செல்கெழு குட்டுவனைப்பற்றி இளங்கோ அடிகள் :—

"நான்மறை யாளன் செய்யுள் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோ னாயினும்
போற்றி மன்னுயிர் முறையிற் கொள்கெனக்
கூற்றுவரை நிறுத்த கொற்றவன் ஆயினும்,
வன்சொல் யவனர் வளநா டாண்டு
பொன்படு நெடுவரை புகுந்தோ னாயினும்,
இகற்பெருந் தானையோடு இருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திற லாயினும்,
உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினோ னாயினும்"

(சிலப், உஅ: க௩எ - ௪௬)

என்று மாடலன் கூற்றாகச் சிலப்பதிகாரத்தில் கூறுவது காண்க.

---

1. தோற்றுவாய்—கொடுந்தமிழ் நாடுகள் என்ற தலைப்பும் படமும்.

சில புலவர்கள் இவனை ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் (கி. பி. 119-144) காலத்தவன் என்று கருதுகின்றனர். அது காலமுரண் ஆகும். செங்குட்டுவன் தான் (கி. பி. 100—155) அவனுடைய காலத்தவன். 'குட்டுவன்' என்ற பெயர் ஒற்றுமைபற்றி அவ்வாறு கருத இடம் ஏற்பட்டதே அன்றி வேறன்று. இவன் குட்ட நாட்டுக்கு இளவரசாக இருந்ததால் 'குட்டுவன்' என்னப் பட்டான். இவனுக்குப்பின் செங்குட்டுவன் குட்டநாட்டுக்கு இளவரசானன். அதனால் அவனும் 'குட்டுவன்' என்னப்பட்டான்.

'குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை' (பதிற் - 21) என்ற அடியால், இவ்வரசனிடம் 'மழவர் படை' இருந்த தென்பது தெளிவு. மழவர், கோசர், மறவர், கள்ளர், கொங்கர் முதலியோருடைய படைகள் அக்காலத்தில் சிறந்து விளங்கின.

'ஆயிர வெள்ளம் வாழிய பலவே' (பதிற் - 21) என்ற அடியில் வெள்ளம் என்பது ஓர் எண். நெய்தல் எண் மடங்கு கொண்டது வெள்ளம்; 57 தானங்களை உடையது. இத்துடன் இணைத்துள்ள 'மேல்வாய் இலக்கம்' பார்க்க.

22-ம் பாட்டில் இவனைப்பற்றி,

> "பொன்செய் கணிச்சித் திண்பிணி யுடைத்து
> சிரறுசில வூறிய நீர்வாய்ப் பத்தல்
> கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
> **ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த**
> வேல்கெழு தானை வெருவரு தோன்றல்"

என்று கொங்குநாட்டை வென்ற வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

கொங்கர் என்பவர் கொங்கு நாட்டவர். இவரை 'ஒளிறுவாட் கொங்கர்' (குறுந் - 393) என்றும், 'ஈர்ம்படைக் கொங்கர்' (பதிற் - 72) என்றும் சான்றோர் கூறுப. ஆகை யால் இவர் படைவன்மையால் புலவர் பாடும் புகழ்பெற்

றவர் என்பது விளங்கும். இவர்கள் வாழும் நாட்டின் பெரும்பகுதி மென்புல வைப்பின் நீர்நாடு அன்மையின், இவர்பால் ஆன்நிரை வளர்க்கும் தொழில் மிக்குநின்றது. அதனால் இவரை 'ஆகெழு கொங்கர்' என்றார். 'கொங்கர் படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதாவெடுத்த செந் நிலக் குருஉத்துகள்' (அகம் - 79) என்று குடவாயிற் கீரத்த னாரும் கூறுதல் காண்க. இன்றும் காங்கயம், பரூர், ஒரூர் முதலிய கொங்குநாட்டு ஊர்களில் மாட்டுப்பண்ணைகள் இருப்பது கண்கூடு.

கொங்குநாடு சேரநாட்டை அடுத்து இருத்தலின் பலகாலும் சேரர் இவர்களை வென்று இவர் நாட்டைத் தம் நாட்டோடு இணைத்துள்ளனர். அதுபற்றியே சேர மன்னர், 'நாரரி நறவின் கொங்கர்கோ' (பதிற்-87) என்றும், 'கட்டிப் புழுக்கிற் கொங்கர்கோ' (பதிற் - 90) என்றும் பாராட்டப்படுவர். இக்கொங்குநாட்டைத் தாம் கோடல் வேண்டிச் சோழரும் பாண்டியரும் போர் உடற்றி இருக் கின்றனர். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கொங்கரை வென்ற திறத்தை 'மைந்நாடிய மயங்கு பெருந் தானைக் கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே' (புறம் - 373) என்றும், பசும்பூண் பாண்டியன் வென்ற செய்தியை 'வாடாப் பூவின் கொங்கர் ஓட்டி, நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்' (அகம் - 253) என்றும், சான்றோர் கூறியிருத் தல் காண்க. இவ்வாறு முடிவேந்தரே அன்றிக் குறுநில மன்னரும் இக் கொங்கை வென்று கொள்ள முயன்றுள் ளார். ஆஅய் அண்டிரன் இம் முயற்சியில் ஈடுபட்டதை 'கொங்கர் குடகடல் ஓட்டிய ஞான்றை' (புறம் - 130) என்று கூறியிருப்பது காண்க. முடிவேந்தர் மூவர்க்கும் குறுநில மன்னர்க்கும் விழைவு தோற்றுவித்து, போருடற்றுவதற்கு ஏதுவாகிய நலம்பல உடைய கொங்கர், எக்காலத்தும் போரை எதிர்நோக்கி அதற்கேற்ற போர்ப்பயிற்சி உடை யாராக இருந்தமையால் அவரை முற்றவும் வென்று கோடல் அரிது என்பது தமிழகம் முழுவதும் அறிந்த செய்தியாகும். ஆகவே, அத்தகைய கொங்கரை வென்று,

அவர் நாட்டை அகப்படுத்தற்குத் துணைசெய்த தானையை 'வேல்கெழு தானை' என்றும், யானைப்படையை மிகுதியும் உடையவனாதலால் 'வெருவரு தோன்றல்' என்றும் கூறினர்.

ஏனைய பாட்டுக்களில் குட்டுவனுடைய வெற்றிச் சிறப்புகளைப் புலவர் கூறியுள்ளார்.

இவ்வாறு 25 ஆண்டுகள் புகழுடன் அரசுபுரிந்தபின் நெடும்பாரதாயன் உலக நிலையாமையைக் கருதித் தவம் செய்யக் காடு புக்கதை அறிந்து, தானும் தன்னுடைய நாட்டைக் 'கண்ணகன் வைப்பின் மண் வகுத்து ஈத்து' என்றபடி தன் மகனுக்குக் கொடுத்து ஆளும்படி செய்து, காடு புக்குத் தவம் இயற்றி, இறைவனடி சேர்ந்தான் என்று அறிகிறோம்.

---

## கஎ. சேரமான் குட்டுவன் கோதை

### [கி. பி. 80—கி. பி. 130]

சேரமான் என்பது சேரநாட்டு அரசர்களின் பொதுப் பெயர். குட்டுவன் என்பது தந்தையின் பெயர். கோதை என்பது இயற்பெயர். ஆதலின், இவன் இன்னாருடைய மகன் என்று விளக்கமாக இலக்கியங்களில் காணப்படவில்லை என்றாலும், இவன் பல்யானைச் செல்கெழு குட்டுவனின் மகன் என்று தெரிகிறது. குட்டுவன் கோதை என்பது செங்குட்டுவனின் மகனாக இருக்கப்படாதோ என்றால் இருக்கமுடியாது. ஏனெனின் செங்குட்டுவனின் மகன் குட்டுவன் சேரல் என்பவன், அவன் இரண்டாம் பரணருடைய மாணவன் என்றும் செங்குட்டுவன் சரித்திரத்தால் விளங்குகிறது. ஆதலின், செல்கெழு குட்டுவனுக்கு அப்புறம் பூழியில் இருந்து அரசாண்டவன் அவன் மகனாகிய குட்டுவன் கோதையே. இவன் இமயவரம்பனுடைய ஆட்சியில் 20 ஆண்டுகளும், செங்குட்டுவனுடைய ஆட்சியில் 30 ஆண்டுகளும் பூழியில் அரசாண்டவன்.

சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா

வளவன் என்ற மணக்கிள்ளியும், பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் இச் சேரமன்னன் காலத்தவர்கள்.

புறம் 61-ல் சோழன் நலங்கிள்ளி சேட்சென்னியையும், புறம் 197-ல் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனையும் பாடிய கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்னும் புலவர் இச் சேரமான் குட்டுவன் கோதையையும் புறத்தில் பாடியுள்ளார். அப்பாட்டு வருமாறு:—

> "எங்கோன் இருந்த கம்பலை மூதூர்
> உடையோர் போல இடையின்று குறுகி
> செம்மல் நாள்அவை அண்ணாந்து புகுதல்
> எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
> இரவலர்க் கெண்மை யல்லது புரவெதிர்ந்து
> வான நாண வரையாது சென்றோர்க்கு
> ஆனா தீயுங் கவிகை வண்மைக்
> கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
> நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
> பாசிலை தொடுத்த உவலைக் கண்ணி
> மாசுண் உடுக்கை மடிவா யிடையன்
> சிறுதலை ஆயமொடு குறுகல் செல்லாப்
> புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
> வலிதுஞ்சு தடக்கை அவனுடை நாடே." (புறம்: ௫௪)

இதில் குட்டுவன் கோதையினது வீரத்தின் சிறப்பையும், 'வானம் நாண வரையாது சென்றோர்க்கு ஆனாது ஈயும் கவிகை வண்மை' என்று அவனுடைய கொடையின் சிறப்பையும் மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

'கம்பலை மூதூர்' என்று குமரனார் குறிப்பிட்ட ஊர் எதுவெனக் காண்பாம். செல்கெழு குட்டுவனுடைய பூழிநகரைப்பற்றி 'விருந்தினர்க்கு சோறு அடும் ஆர்ப்பும், போர்ப்புறு முரசத்தின் ஆர்ப்பும் சேர்ந்துக் கடலொலி கொண்ட செழுநகர்' என்று பதிற்-21-ம பாட்டில் பாலைக் கௌதமனார்

குறிப்பிட்டதையே மதுரைக் குமரனாரும் ' கம்பலை மூதூர் ' என்றார் என்று அறியக்கிடக்கின்றது.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்ற மணக்கிள்ளி என்ற ஞாயிற்றுச் சோழன் (கி.பி. 37—கி. பி. 95), இமயவரம்பன் சேரலாதனுக்குப் பெண் கொடுத்த மாமனாகவும், சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி (கி. பி. 110-கி. பி. 150) இமயவரம்பனின் ஒன்றுவிட்ட மைத்துனனாகவும் (அதாவது, இமயவரம்பனின் சின்னமாமனான இரண்டாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியின் இரண்டாவது மகனாக) இருந்தபடியாலும், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பாண்டியன் பெருவழுதி சோழ அரசர்களின் நண்பனானபடியாலும் மூவேந்தர்களும் போர், வேறுபாடு இல்லாமல் நட்பு உரிமை பாராட்டிவந்தார்கள். அதனால் நாடு அமைதியுற்று வேறு துறைகளில் வளர்ச்சியடைந்து வந்தது.

சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் மிகுந்த படைவலி பெற்றவர்களாக இருந்தும் ஒத்தவலிமை உடையவர்களாக இருந்தபடியால் போர் நிகழவில்லை. படைப் பெருக்கில் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வு ஏற்பட்ட போதுதான் போர் நிகழும். இஃது உலக இயற்கை.

குட்டுவன் கோதைக்கு படைத்துணைவனாக இருந்தவன் பிட்டங் கொற்றன் என்பவன். 'இவன் பேராண்மையும் கைவண்மையும் ஒருங்குடையவன். சான்றோர் பலரும் பாராட்டும் தகுதிபெற்றவன். இவன் குதிரை மலையைச் சார்ந்த நாட்டை உடையவன். வேங்கைப் பூவால் தொடுத்த கண்ணி இவற்கு உரியதாகும். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் இவன்பால் மிக்க ஈடுபாடு உடையவர். போருடற்றிப் பெற்ற செல்வம் முழுதும் இவன் இரவலர்க்கு ஈந்து புகழ் வளர்த்தலிலேயே பயன்படுத்தினான். இவ்வாறு இருக்கையில் கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார் என்னும் புலவர், தமிழக முழுதும் உள்ள

பரிசிலர் பலரும் இப் பிட்டங் கொற்றன் புகழைப் பெரிது எடுத்துப் பேசுவது குறித்துப் பிறரை வினவினர். அவர்களும் 'சான்றோர் பலரும் பிட்டங் கொற்றனைப் பாடுவதில் பெருவிருப்புடையர்' என்றனர். அவர்க்கு இக்கொற்றனைக் காண்டலில் விருப்பு உண்டாக, விரைந்து சென்று கண்டு புறம் 168-ம் பாடலைப் பாடினர். இதன்கண் அவர் குதிரை மலைக் குறவர் விருந்தோம்பும் திறத்தை விரித்தோதி, 'வில்லோர் பெரும, கொற்ற, இத்தமிழகத்தில் ஈயா மன்னர் கேட்டு நாணுமாறு பரிசிலர் பலரும் நின் புகழையே பாடுவர் என்று சான்றோர் கூறுகின்றனர்' என்று குறித்துள்ளார்.

கருவூர்க் கந்தப்பிள்ளை என்பவருக்குச் சேரவேந்தர்பால் அன்பு எப்போதும் உண்டு என்பதற்கு அவர் பாடிய அகம் 309-ம் பாடலே சான்று பகரும். அதில் இக் குட்டுவன் கோதையைக் குறித்து,

"காடு மிக நெடிய என்னார் கோடியர்
பெரும்படைக் குதிரை நற்போர் வானவன்
திருந்து கழற் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு"

என்று பாடியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனும் குட்டுவன் கோதை படைத்தலைவனகிய பிட்டங்கொற்றனைப் பற்றிப் புறம் 169-ல் வெகு அருமையாகப் பாடிப் பரிசில் பெற்றுச் சென்றார்.

இவ்விரு புலவர்களைத் தவிர உறையூர் மருத்துவன் தாமோதரனும், சேரமான் கோதையின் படைத்துணைவனை பிட்டங் கொற்றனுடைய வண்மையையும் போர் வன்மையையும் கேள்வியுற்று, அவன்பால் பெருமதிப்பு உடையரானர். குதிரைமலையைச் சார்ந்த அவனுடைய நாட்டிற்குச் சென்று அவனைக் கண்டு இன்புற்றார். அவனும் அவரை வரவேற்றுத் தன்பால் சின்னாள் இருக்கச் செய்தான். அக்காலைக் கொற்றனோடு பொரக் கருதிய பகைவர் போர் தொடுத்தற்குச் சமைந்திருந்தனர். அதனை

ஒற்றரால் அறிந்தபோது, அவையிடத்து இருந்த புலவர் தாமோதரனுர் அப்பகைவருடைய ஒற்றர் அறியுமாறு, "பகைவர்களே, மலைநாடனுகிய கொற்றனைக் குறுகுதற்கு நினையாதீர்கள்; அவன் விறலியர்க்கு முத்தை ஈந்து, பாணர்க்குத் தேறலை அருத்தி, தன்னை நயந்தவர்க்கு மென்மையும் நயவாதவர்க்கு வன்மையும் உடையனுய் விளங்குகிறுன். பகைவர்க்குக் கொல்லன் கூடத்தால் எறியும் உலைக்கல் போலும் வல்லாண்மை உடையவன். நீங்கள் குறுகின் கெட்டு ஒழிவது திண்ணம் என்னும் பொருள்பட (புறம் 170) ஒரு பாடல் பாடிப் போரைத் தவிர்த்தார்.

"பகைதணி வினையே பாவலர்க்கு உரித்தே"

என்ற ஐந்திணை அகநூல் 37-வது சூத்திரப்படி, புலவர் மருத்துவன் தாமோதரனுர் பகை அரசர்களைச் சந்து செய்வித்தது போற்றத்தக்கது.

வடமவண்ணக்கன் தாமோதரனுர் என்னும் புலவர் ஒருவர் பிட்டங்கொற்றனைக் கண்டு அவரைப்பற்றிப் பாடிப் பரிசில் பெற்று இன்புற்றுர் :

"எற்றுக உலையே, ஆக்குக சோறே,
கள்ளும் குறைபடல் ஓம்புக, ஒள்ளிழை
பாடுவல் விறலியர் கோதையும் புனைக,
அன்னவை பிறவும் செய்க, என்னதூஉம்
பரியல் வேண்டா, வருபத நாடி,
ஐவனம் காவலர் பெய் தீ நந்தின்
ஒளிதிகழ் திருந்துமணி நளியிருள் அகற்றும்,
வன்புல நாடன் வயமான் பிட்டன்
ஆரமர் கடக்கும் வேலும், அவனிறை
மாவள் ஈகைக் கோதையும்
மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே."
(புறம் : களஉ)

இதில் புலவர் சேரமான் குட்டுவன் கோதையையும் அவனுடைய தானைத்தலைவன் பிட்டங் கொற்றனையும் பற்றிப் பாடியுள்ளார். இச் சேரமான் குட்டுவன்

கோதைக்கு வீரனும் வள்ளலுமாகிய பிட்டங்கொற்றன் இருந்ததுபோலவே, சோழனுக்கும் வீரரும் வள்ளல்களுமாகிய ஏனாதி திருக்கிள்ளியும், ஈந்தூர்க் கோயமான் வேளும், வெண்குடை (வெங்குடி near Palghat) ஏனாதி திருக்குட்டுவனும் இருந்தார்கள்.

ஒரு சமயம் பாண்டியன் பெருவழுதியும் சோழன் மணக்கிள்ளியும் ஒருங்கு வீற்றிருப்பது கண்டு, காரிக்கண்ணனார் என்னும் புலவர்,

"ஒருவீர் ஒருவீர்க் காற்றுதிர் இருவீரும்
உடனிலை திரியீ ராயின் இமிழ்திரைப்
பௌவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே." (புறம்: ருஅ)

என்று வாழ்த்தி ஒற்றுமையை நீடிக்கச்செய்தார். அதனால் குட்டுவன் கோதை ஆட்சிக்காலத்தில் போர் நிகழாமல் நாடு அமைதியுற்றுப் பலவகையினும் செழிப்புற்றிருந்தது.

---

## கஅ. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

[கி. பி. 72—97]

இவ்வரசனைப்பற்றிய 4-ம் பத்துப்பதிகம் வருமாறு:

"ஆராத் திருவின் சேரலா தற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் றேவி ஈன்றமகன், முனை
பனிப்பப் பிறந்து, பல்புகழ் வளர்த்து,
ஊழின் ஆகிய உயர்பெருஞ் சிறப்பிற்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ,
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச்செருவின் ஆற்றலை அறுத்தவன்,
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றிச்

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடினார் பத்துப்பாட்டு. பாடிப்பெற்ற பரிசில் நாற்பது நூறாயிரம் [1]பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதில் பாகம் கொடுத்தான் அக்கோ." இவன் இருபத்தையாண்டு வீற்றிருந்தான் என்பதே.

இப்பதிகத்தால் இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் அவனுடைய இரண்டாவது மனைவி, வேள் ஆவிக்கோபதுமனுடைய மூத்த மகள் வேண்மாள் என்பவளுக்கும் பிறந்தவன் என்றும், கி. பி. 72-ல் இவன் முடிசூட்டிக் கொள்ளும்போது முடித்தற்குரிய கண்ணியும் முடியும் பகைவராகிய கடம்பரால் கவரப்பட்டதனால் உதவாமை பற்றி, அவற்றையொப்பக் களங்காயால் கண்ணியும், நாரால் முடியும், புனைந்துகொண்டு பட்டம் பெற்றமையின், "களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்" என்னும் பெயர்பெற்றான் என்றும், பின்பு பகைவர் நாடாகிய பூழிநாட்டின்பேரில் படையெடுத்துச் சென்று, கடம்பர் தலைநகராகிய கடம்பின் பெருவாயில் என்ற நகரை முற்றுகையிட்டு, அப்போது அரசனாக இருந்த இரண்டாம் நன்னனை (கி. பி. 40—80), மேற்றிசையில் உள்ள பெருந்துறை என்னும் இடத்தில் கி. பி. 80-ல் நடந்த பெரும்போரில் சொன்று தான் இழந்த நாட்டோடு கண்ணியையும் முடியையும் திரும்பப்பெற்றான் என்று புலவர் கல்லாடர்,

> "..................................குடாஅது
> இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
> பொலம்பூண் நன்னன் பொருது களத்தொழிய
> வலம்படு கொற்றந் தந்த வாய்வாள்
> களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
> இழந்தநாடு தந்தன்ன." (அகம்: ககக)

என்று கூறுவதால் அறிகிறோம்.

---

1. பொன்=காணம் என்னப்படும். மலைநாடாகிய சேர நாட்டில் பொன் என்பது 3 கழஞ்சு அல்லது $1\frac{1}{2}$ பணம்.

கடம்பின் பெருவாயில் என்ற தலைநகரில் நன்னன்-II என்பவன் [1]வாகை மரத்தைத் தன் காவன் மரமாக வளர்த்து வந்தான். அதனை நார்முடிச்சேரல் தடிந்து, அதன் அடி மரத்தை நன்னனுடைய அந்தப்புர மகளிர் கூந்தலைக் களைந்து, கயிறாகத் திரித்துக் கட்டி, யானைகளைக் கொண்டு இழுத்துச்சென்று, அதனால் முரசுகள் பலசெய்து, புகழ் பட வாழ்ந்தான் என்றும்,[2]

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புறம்: ௩௧௨)

என்ற கொள்கைப்படி தன்னாட்டுக் குடிகளுக்கு நல்வாழ்வும் நல் ஒழுக்கமும் பொருந்தும்படி செய்து அரசாட்சி செய்தான் என்பது,

"துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றி"

என்ற நான்காம் பத்துப் பதிக அடியால் அறியக்கிடக்கின்றது.

பதிற். 31-ம் பாட்டில் இவன் திருவிதாங்கோட்டில் (Travancore) உள்ள பெருமாள் கோயிலுக்குச் (அனந்த பத்மநாபசுவாமி கோவில்) செல்லும் அடியார்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தமை கூறப்பட்டுள்ளது.

இவ்வரசன் காலத்தில் வண்டன் என்னும் புகழ்பெற்ற குறுநில மன்னனும் வள்ளலும் ஆனவன் சேரவேந்தர்களுக்குத் துணையாய் இருந்தான்.

"வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து வண்டன்"
(பதிற்: ௩௧)

என்று புலவர் கூறியது காண்க.

---

1. முடிமன்னர்களும் குறுநில மன்னர்களும் ஒவ்வொருவர் ஒவ்வொரு மரத்தைக் காவல் மரமாக வளர்ப்பது அக்கால வழக்கு. எடுத்துக் காட்டாக:—சூரபதுமன் **மாமரத்தையும்**; மோர்கூர்ப்பழையன் **வேப்ப மரத்தையும்**; சோழன் திதியன் **புன்னை மரத்தையும்**, வனவாசிக் கடம்பர் **கடம்ப மரத்தையும்** வளர்த்துவந்தது காண்க.

2. "பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ **வாகைக் கடிமுதல் தடிந்த**
தார்மிகு மைந்தின் **நார்முடிச் சேரல்**." (பதிற்று: ௪0)

இவனுக்குரிய வண்டமலை என்னும் குன்று கரூருக்குத் தெற்கே உள்ளது.

"வண்டன் அனையை மன் நீயே" என்று புலவர் நார் முடிச் சேரலைப் பார்த்துக் கூறுவாரேயானல் வண்டனு டைய புகழ் எத்தன்மைத்து என ஊகிக்கலாம்.

பதிற். 32-ல் "நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமிய, பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து" என்று கூறியுள் ளதால், நார்முடிச்சேரல் நெடுமிடல் அஞ்சியை வென்று அவனது நாட்டை அகப்படுத்திக்கொண்ட வரலாறு குறிக் கப்படுவது காண்க.

"நெடுமிடல் என்பது நெடுமிடல் அஞ்சியின் இயற் பெயர்." இவன் அதியமான் நெடுமான் அஞ்சியின் முன் னோன் ஆவன். இவனது நாடு மிக்க வளத்தது.

நீடூர் கிழவனை எவ்வி என்பவனது ஏவல் கேளாது, அவனை எதிர்த்த பசும்பூட் பொருந்திலர் என்பாரை, இந் நெடுமிடல் அஞ்சி என்பான் அரிமணவாயில் உறத்தூரின் கண் வென்றான் என ஆசிரியர் இரண்டாம் பரணர் (அகம்: 266-ல்) கூறுகின்றார்.

சேரமான் நார்முடிச்சேரல் யானைப்படை கொண்டு சென்று தங்கின அளவில் புலம் கெட்டமை தோன்ற, "பெருமலை யானையொடு புலங்கெட இறுத்து" என்றார். யானை புக்கவழி அதன் கை செய்யும் அழிவினும் கால் பெரிது கெடுக்கும் (புறம்-184) என அறிக.

பதிற். 38-ல் இவ்வேந்தனை "வசையில் செல்வ வான வரம்ப" என்றதால் இவன் சேர முன்னோர்க்கு உரித்தான வானவரம்பன் என்ற பட்டப்பெயர்க்கு உரிய புகழையுடைய வன் என்று கூறப்பட்டுள்ளது காண்க.

பதிற். 39-ல் "துப்புத்துறை போகிய வெப்புடைத் தும்பைக், கறுத்த தெவ்வர் கடிமுனை யலற" என்று கூறப் பட்டிருத்தலால் இவ்வரசன் காலத்தில் இவனுடைய தலை

நகரில் போர் அவை (Military Acadamy) இருந்ததாக ஏற்படுகிறது. துப்பு=வலி, பகை, போர் என்று பொருள்படும். துப்புத்துறை போகிய=போர்த் துறைகள் எல்லாம் முற்றவும் கடைபோகிய என்பது பொருள். போர்த் துறைகளாவன:—மற்போர், விற்போர், வாட்போர், வேற்போர், மழுப்போர், தேர், குதிரை, களிறுகளை ஊர்தல் முதலியவாம்.

பதிற். 40-ல் இவன் நன்னனுடன் இயற்றிய போரினையும் சோழனுடன் இயற்றிய போரினையும் கூறப்பட்டுள்ளது. "நீர் சிமிழ் சிலம்பின் நேரியோனே" என்றதால், இவன் சோழற்குரிய நேரிமலையை வென்று வாகைசூடினன் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இவ்வரசனுடைய இயற்பெயர் இன்னதென விளங்கவில்லை. இவன் கி. பி. 95-ல் குராப்பள்ளி (திருவிடைகழி) என்னும் இடத்தில் சோழன் பெருந்திருமா வளவனாகிய மணக்கிள்ளியோடு போர் உடற்றிச் சோழனை வென்று, அவனுடைய நேரிமலையைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது. சோழன் குராப்பள்ளியில் போரிலேயே உயிர்துறந்தான். ஆதலால், அவன் "குராப்பள்ளித் துஞ்சிய" என்று அடைமொழி கொடுக்கப்பட்டான்.

இச்சேரன் நார்முடிச்சேரல் தன் தகப்பன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குக்கீழ் மாந்தையில் கி. பி. 72 முதல் கி. பி. 97 வரை இருபத்தையாண்டுகள் புகழ்பட ஆட்சி செலுத்திவந்தான். மாந்தை வடமலையாளத்திலுள்ள ஒரு கடற்றுறைப் பட்டினம். இதனை மாந்தை என்றும் கூறுப. "கடல்கெழு மாந்தை" (நற். 395).

## கக௯. செங்குட்டுவன்

[கி. பி. 100—155]

இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் அவன் மூத்த மனைவி சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணைக்கும் பிறந்த மூத்த மகன். இவனுடன் பிறந்த தம்பி இளங்கோ அடிகள் (சிலப்பதிகார ஆசிரியர்). குட்டுவனும் இளங்கோவும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். நார்முடிச் சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் குட்டுவனின் மாற்றாந்தாய் மக்கள். குட்டுவன் — செங்குட்டுவன் — மணிக்குட்டுவன் என்பன ஒருவனையே குறிக்கும். இவன் சிவந்த மேனியன் ஆனபடியால் செங்குட்டுவன் என்னப் பட்டான். இவனைப்பற்றிய 5-ஆம் பத்துப்பதிகம் வருமாறு:

"வடவர் உட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானம் கணையிற் போகி,
ஆரிய அண்ணலை வீட்டிப் பேரிசை
இன்பல் அருவிக் கங்கை மண்ணி
இனந்தெரி பல்லான் கன்றொடு கொண்டு,
மாறா வல்வில் இடும்பிற்புறத்து இறுத்து,
உறுபுலி யன்ன வயவர் வீழ,
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி,
அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து,
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி,
வாலிழை கழிந்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியாற்
குஞ்சர வொழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத்து இறுத்து,
நிலைச் செருவினாற் றலையறுத்துக்
கெடல் அருந் தானையொடு"

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் காணமமைந்த காசறு செய்யுள் பரணர் பாடினார் பத்துப்பாட்டு. பாடிப் பெற்ற பரிசில், உம்பற்காட்டு வாரியையும் தன் மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான் அக்கோ. இவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்.

இந்தப் பதிகத்தில் செங்குட்டுவன் முதன்முதல் வடநாட்டு ஆரியருடன் செய்த கன்னிப்போரைப்பற்றிக் கூறப்படவில்லை. ஆனால், அதைப்பற்றிக் குட்டுவன் தம்பி இளங்கோ அடிகளே சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார்.

## (அ) வடநாட்டு ஆரியருடன் செய்த கன்னிப்போர்-(கி. பி. 100)

செங்குட்டுவனின் தகப்பன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் கி. பி. 100-ல் தனக்கும் சோழ அரசன் இரண்டாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் நடந்த போரில் இருபெரு வேந்தரும் பொருது களத்தொழிய, குட்டுவனின் தாய் நற்சோணை, சில புலவர் நினைக்கிறபடி உடன்கட்டை ஏறவில்லை.

செங்குட்டுவன் உடனே முடிசூடிப் பட்டமெய்தினான். அப்போது அவனுக்கு வயது 20. ஆதலின் குட்டுவன் கி. பி. 80-ல் பிறந்தவனாவான். 55 ஆண்டுகள் ஆட்சிசெய்தான் ; 75 ஆண்டுகள் உயிர்வாழ்ந்தான்.

செங்குட்டுவன் தந்தைக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களை முடித்துக்கொண்டு, அவருடைய எலும்புகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, கங்கையில் விடவும், தாயைக் கங்கையில் மூழ்கச்செய்யவும், தன் தாய் நற்சோணையைக் கூட்டிக்கொண்டு வடநாடு சென்றபோது, வடநாட்டு ஆரிய அரசர்கள் ஆயிரவர் ஒன்றுசேர்ந்து, தங்களை வென்றால் அல்லது தங்களுடைய நாட்டில் கால்வைக்க முடியாது என்று கூறிப் போருக்கு ஆயத்தமானார்கள். குட்டுவன் முன்வைத்த காலைப் பின்வைக்கக்கூடாது எனக் கருதி, அவர்களுடன் பொருது வென்று, தன் காரியத்தை முடித்துக்கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பினான். இதுதான்

குட்டுவனுடைய கன்னிப்போர் (முதன்முதல் செய்த போர்). இதனைப்பற்றி இளங்கோ அடிகள்

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்"
(சிலப். உ௫: ௧௬0-௪)

என்று சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளது காண்மின். செங்குட்டுவன் தன்னுடைய கன்னிப்போரில் ஆரிய மன்னர் ஆயிரவரை எதிர்த்து வெற்றிபெற்றான் என்றால், அவனுடைய ஆற்றல் வியக்கத்தக்கதே. "எங் கோமகளை ஆட்டிய அந்நாள்" என்ற தொடரில் எம்—கோ—மகள் என்றது செங்குட்டுவன்—இளங்கோ இவர்கள் இருவருடைய தாய் நற்சோணையை. கோமகள் என்பது பட்டத்துத் தேவியைக் குறிக்கும். இத்தொடருக்குச் சிலர் "நற்சோணையின் படிமக்கல்லை" என்று பொருள்கொள்ளுகிறார்கள். அது பொருந்தாது என்று இமயவரம்பன் வரலாற்றில் கூறியுள்ளோம். ஆங்குக் கண்டுகொள்க.

## (ஆ) கொங்கர் போர்—(கி. பி. 102)

செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து திரும்பி வந்ததும், கொங்குநாட்டுக் கொங்கு மன்னர்கள் சோழர், பாண்டியர் உதவிபெற்று, போர் தொடுக்க, அவர்களைக் கொடுகூர் (Now in Mysore Territory) என்னும் இடத்தில் எதிர்த்தான். அதில் சோழரும் பாண்டியரும் கொங்கு மன்னர்களுக்குத் துணையாக வந்திருந்தார்கள். அந்தப் போரில் மூவரையும் வென்று வாகைசூடிக் கொங்கு மன்னர்களைக் கப்பங்கட்டும்படி செய்தான்.

## (இ) கடம்பர் போர்—(கி. பி. 115)

இரண்டாம் நன்னன் என்னும் கடம்ப அரசன் கி. பி. 80-ல் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலால் போரில்

கொலையுண்டபின், அவனுடைய ஞாதிகளில் ஒருவன் துளுநாட்டை ஆண்டுவந்தான். சேரநாட்டுத் துறைமுகங் களுக்கு வரும் அந்நியநாட்டு வணிகக் கப்பல்களைக் கடம்பர் கொள்ளையிட்டுவந்தார்கள். குட்டுவன் கடலில் தன் கடற் படையைச் செலுத்திக் கடம்பரை வென்று அடக்கி, கடற் கொள்ளையை நிறுத்தினான். அதனால் செங்குட்டுவனுக்குக் "கடல் பிறக் கோட்டிய" என்று பட்டம் கிடைத்தது.

> "கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையிற்
> சிறுகுரல் நெய்தல் வியலூர்" (சிலப். உஅ: கக௪-ரு)

இவ் வியலூர் மேல் கடலோரத்தில் உள்ள ஒரு மலை நாட்டு ஊர். மிளகுக்கொடிகள் ஏராளமாக விளையக் கூடிய இடம். அதனால், 'கறிவளர் சிலம்பின் வியலூர்' என்றார் இளங்கோ அடிகள். இவ்வியலூர் இரண்டாம் நன்னனுக்கு உரியதாய் இருந்தது (அகம் 97 பார்க்க). கடம்பருக்கு இவ்வூர் வசதி உள்ளதாக இருந்ததால், செங்குட்டுவன் இவ்வூரைத் தாக்கிப் பிடித்துக் கடம்பரை அடக்கினான். சேரநாட்டுக் கடற்றுறைப் பட்டினங்களை யெல்லாம் புதுக்கிக் காவல் ஏற்பாடு செய்தான்.

செங்குட்டுவன் கப்பற்படை மிகுதியாக வைத்திருந் தான் என்பதும், மேல்கடலில் உள்ள பல தீவுகளில் இருந்த கடம்பரைப் படைகொண்டு சென்று அடக்கினான் என்பதும் அடியில் கண்ட பாடல்களால் அறியலாம்:

> "கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
> உடைதிரைப் பரப்பில் படுகடலோட்டிய
> வெல்புகழ்க் குட்டுவன்"
>
> (பதிற்: ௫க)

> "மட்டவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
> பொருமுரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து
> செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
> ஓங்குதிரைப் பௌவம் நீங்க வோட்டிய
> நீர்மாண் எஃகம்" (அகம்: உஉஉ)

"சொம்போர் கடந்து நெடுங்கட லோட்டி"
(சிலப் : உ அ-கக௯)
"பொங்கிரும் பரப்பில் கடல்பிறக் கோட்டி"
(சிலப். ௩௦ : கட்டுரை-கஉ)

(ஈ) பழையனுடன் போர்—(கி. பி. 135)

பழையன் என்னும் குறுநில மன்னன் பாண்டியனுடைய படைத்துணைவன். மோகூர் என்னும் ஊரின் தலைவன். சிறந்த வீரன். பழையன் மரபு பழைமையானது. 'பழையன்' என்பது குடிப்பெயர். அக்குடிவழி வருவோர்க்கு எல்லாம் 'பழையன்' என்ற பட்டம் உண்டு. கொங்குநாட்டு வள்ளல்களில் ஒருவன்.

கி. மு. 321 முதல் கி. மு. 297 வரை மகதநாட்டை அரசாண்ட மௌரிய அரசன் சந்திரகுப்தன் தன் தென்னாட்டுப் படையெடுப்பில் மோகூர்ப் பழையனுடன் போர் செய்து தோல்வியுற்றான் என்று மௌரியர் சரித்திரம் பேசுகிறது.

சந்திரகுப்தன் பாடலிபுரத்திலிருந்து பொதியமலை வரை படையெடுத்து வந்ததாக மாமூலனார், பரணர் முதலிய புலவர்கள் பாடியுள்ளார்கள்.

சந்திரகுப்தனுக்குப்பின் கி. மு. 297 முதல் கி. மு. 272 வரை அரசாண்ட மௌரிய பிந்துசாரன் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தபோது, சேரநாட்டில் உள்ள செருப்பாழி என்னும் இடத்தில் சோழ அரசன் இளஞ்சேட்சென்னியால் தோல்வியுற்றான். அதனால், சோழனுக்குச் 'செருப்பாழி எறிந்த' என்ற பட்டம் கிடைத்தது.

அறுகை என்பான் செங்குட்டுவனுடைய நண்பன்; ஒரு சிற்றரசன்; சிறந்த போர்வீரன். சேரர்களுடைய படைத்துணைவன்.

பழையனுக்கும் அறுகைக்கும் எப்படியோ போர் உண்டாயிற்று. அறுகை பழையனிடம் தோல்வியுற்றான். செங்குட்டுவன் இதனை அறிந்து, படைகொண்டு சென்று,

மோகூரை முற்றுகையிட்டுத் தாக்கி, பழையனுடைய காவல் மரமாகிய வேப்ப மரத்தை வெட்டி, பழையனுடைய அரண் மனையில் புகுந்து, அந்தப்புர மகளிரின் தலைகளை எல்லாம் மொட்டை அடித்து, அம்மயிரைக்கொண்டு திரிக்கப்பட்ட கயிறுகளால் காவல் மரத்துண்டுகளைப் பிணைத்துக்கட்டி யானைகளால் இழுத்துவரச் செய்தான் என்பதனை,

“ நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேண னாயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசல்
கரண்கடா வுரீஇ அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்” (பதிற்: ௪௪)

என்ற அடிகளால் அறியலாம்.

மோகூரில் அக் காவல்மரம் இருந்த இடத்தில் இப் போது ஒரு கோயில் இருக்கிறது. அதற்குப் ‘பட்டமரத் தையன் கோயில்’ என்று பெயர். வெட்டப்பட்ட வேப்ப மரத்து அடிப்பாகமும் உள்ளது; திருஆலவாயிலில் பட்டுப்போன கடம்பமரத்தின் அடிப்பாகம் இன்னும் கோவிலில் உள்ளதுபோல என்க.

### (உ) சோழர் ஒன்பதின்மருடன் போர்—(கி. பி. 145).

“ மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர், ஏவல் கேளார்,
வளநா டழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்”
(சிலப். உஎ: ௧௧௮-௨௨)

என்ற சிலப்பதிகார அடிகளின்படி தன் தாய்மாமன் காரி யாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியின் மகன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்கிற பெருங்கிள்ளிக்கு இள

வரசுப் பட்டம் கட்டக்கூடாதென்று தாயாதிச் சோழர் ஒன்பதின்மர் ஒன்றுசேர்ந்து கலகம்செய்ய, செங்குட்டுவன் படைகொண்டு சென்று, நேரிவாயில் என்னும் இடத்தில் கி. பி. 145-ல் சோழர் ஒன்பதின்மரையும் ஒருசேர முறியடித்து, பெருங்கிள்ளிக்கு உறையூரில் முடிசூட்டுவித்துப் பின் சேரநாடு திரும்பினான். இப்பெருங்கிள்ளி கி. பி. 150-ல் பத்தினிக் கடவுள் கண்ணகிக்குக் கோயில் எடுத்தான்.

நேரிவாயில் என்பது உறையூர்க் கோட்டையின் தெற்குவாயிலை அடுத்து இருந்த ஊர். நேரிமலையை நோக்கி இருந்ததால் தெற்கு வாயிலுக்கு நேரிவாயில் என்று பெயர்.

(ஊ) வடநாட்டு ஆரியருடன் இரண்டாவது தடவை ஏற்பட்ட போரும், கண்ணகி பிரதிட்டையும்—(கி. பி. 146—149).

இலவந்திகை என்பது சேரன் வஞ்சி நகரில் இருந்த ஒரு தடாகம். அத்தடாகக்கரையில் இருந்தது ஒரு வெள்ளி மாடம். அதில்தான் செங்குட்டுவனும் அவன் மனைவி பெருந்தேவியும் தங்கி இருந்தார்கள். செங்குட்டுவனுடைய மதிமந்திரி அழும்பில்வேள் என்பன் ஆவன். செங்குட்டுவனுடைய சேனாதிபதி வில்லவன் கோதை என்பவன்.

நேரிவாயில் போருக்குப் பிறகு, செங்குட்டுவன் வஞ்சி வந்து சேர்ந்தான். சின்னாட்கழித்து மலைவளம் காணவிரும்பி, விளையாட்டிற்குரிய பலவகைப் பொருளுங் கொண்டு, தானைகள் சூழ, தன் தேவியாகிய வேண்மாள்-ஆ பெருந்தேவியுடன் வஞ்சி நகரினின்றும் புறப்பட்டுச் சென்று, பேராற்றங்கரையில் உள்ள மணற்குன்றிலே தங்கியிருந்தான்; குன்றக்குரவை முதலியவற்றால் எழுந்த பலவகை ஓசைகள் அவர்கட்கு இன்பம் விளைத்தன.

கண்ணகி, அம்மலைமீதுள்ள ஒரு வேங்கை மரத்தடியில் இருக்கும்போது, விமானம் ஏறிச்சென்ற அதிசயத்தைத் தங்கள் நாட்டிற்கு அரசனாகிய குட்டுவனிடம் தெரி

விக்கக்கருதிய மலைவாணர்கள் குறிஞ்சியிற் கிடைப்பன வாகிய பலவகைப் பொருள்களையும் காணிக்கையாகக் கொண்டு சென்று அரசனைக்கண்டு அதனைக் கூறினார்கள். அப்போது அங்கு வந்து செங்குட்டுவனோடு இருந்த மதுரைத் தமிழாசிரியராகிய சாத்தனார், மதுரையிற் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி அரசன்முன் வழக்குரைத்து வென்று, மதுரையை எரித்ததும், நெடுஞ்செழியன் தேவியுடன் அரசுகட்டிலில் துஞ்சியதும் முதலிய செய்திகளை எடுத்து உரைத்தார். அவற்றைக் கேட்ட செங்குட்டுவன் பாண்டியன் இறந்ததற்கு வருந்தி,

"எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"
(சிலப். உரு: கரு-க)

எனத் தேறி, தன் பக்கத்தில் இருந்த தன் பத்தினி வேண்மாளை நோக்கி,

"உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்,
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்,
நன்னுதல்! வியக்கும் நயத்தோ ரியாரென"
(சிலப். உரு: க0எ-க)

செங்குட்டுவன் கேட்க, பெருந்தேவி மன்னனை நோக்கி,

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானகத்து,
அத்திறம் நிற்க; நம் அகல்நாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"
(சிலப். உரு: கக௧-௪)

என்று கூற, பத்தினிக் கடவுளாகிய கண்ணகியைப் பிரதிட்டைசெய்து வழிபடுதற்கு இமயமலையில் கற்கொளக் கருதி, வஞ்சிநகர் வந்தடைந்து, தான் இமயமலையை நோக்கிப் புறப்படுவதனையும், வடதிசையில் உள்ள மன்ன

ரெல்லாம் திறையுடன் வந்து காணவேண்டுமென்பதனையும் தெரிவித்து நகரின்கண் பறை அறைவித்தான்.

இங்ஙனம் வஞ்சிமாநகரில் பறை யறையப்பட்ட பின்னர், சேரர்பெருமானான செங்குட்டுவன் அன்று மாலையில் ஆசான் (புரோகிதன்), பெருங்கணி (சோதிடன்), அமைச்சர் (மந்திரிகள்), தானைத்தலைவர் (சேனாதிபதிகள்), தூதுவர் (Ambassadors), ஒற்றர் (சாரணர்) எல்லோரும் ஒருங்குகூடி தன்னை வாழ்த்தியவராகி, யாத்திரையில் நடத்தற்குரிய ஆணைகளைக் கேட்டுநிற்க, தான் சிங்காதனத்தே வீற்றிருந்து, சேனாதிபதிகளை நோக்கி, "ஆரிய மன்னர் பலரும் தம் நாட்டில் நிகழ்ந்த சுயம்வரம் ஒன்றன்பொருட்டுக் குழுமிஇருந்த இடத்தே, 'தென்தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டு, புகன்றெழுந்து, மின் தவழும் இமய நெற்றியில் விளங்கும் வில்—புலி—கயல் பொறித்த நாளில் எம்போலும் முடிமன்னர் ஈங்கு இல்லைப் போலும்' என்று கனகனும் விசயனும் நகைத்து இகழ்ந்தனர் என்று தீர்த்தயாத்திரை செய்துவந்த இமயத் தாபதரால் அறிந்தேன்.[1] அவ் விழிமொழி நம்பால் தங்குமாயின், அஃது எனக்கு மட்டுமன்றி என்போன்ற சோழ—பாண்டியராகிய தமிழ் வேந்தர்கட்கும் இகழ்ச்சியினை விளைவிக்கக்கூடியதன்றோ? ஆதலின், அங்ஙனம் இகழ்ந்த வடதிசை மன்னராதி முடித்தலையில் பத்தினிக் கடவுளைச் சமைத்தற்குரிய கல்லை ஏற்றிக்கொண்டுவருவேன்" என்று வஞ்சினங்கூறி முடிக்க, உடனே பெருங்கணி எழுந்து, "அரசே! நின் வெற்றி வாழ்வதாக. இவ்வுலகிலுள்ள பகை அரசர்கள்[2] எல்லாம் நின் அடித்தாமரைகளைப் பணியத்தக்க நன்முழுத்தம் இதுவே. நீ கருதிய வடதிசை யாத்திரைக்கு இப்போதே எழுவாயாக" என்று கூறி அமர்ந்தார். உடனே செங்குட்டுவன்

1. சிலப். 29, வாழ்த்துக் காதை; உரைப்பாட்டு மடை.

2. கனக விசயருக்கு உதவியாய் இருந்த ஏனை ஆரிய அரசர்களாவார்:—உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலியோர்.

தன் வாளையும், குடையையும் அந் நன்முழுத்தத்தில் வடதிசைப் பெயர்த்து நாட்கொள்ளும்படி ஆணையிட்டனன்.

பிறகு தானையுடன் வடதிசை சென்று, ஆரிய அரசர்களை வென்று அடக்கி, கனக விசயர்களைச் சிறை செய்து, இமயத்தில் கல் எடுத்து, கண்ணகி உரு அமைத்து கங்கையில் நீராட்டி, கனக—விசயர்களுடைய தலையில் ஏற்றிக் கொணர்ந்து, கி. பி. 149-ல் வஞ்சிக்கு அடுத்துள்ள கொடுங்கோளூரில் கண்ணகிக்குக் கோயில் எடுத்து, கண்ணகியின் உருவைப் பிரதிட்டைசெய்து எல்லா அரசர்களையும் வரவழைத்து வழிபட்டான்.

செங்குட்டுவன் வடநாட்டில் பல ஆரிய மன்னர்களுடன் செய்த போரை ஏனைய போர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவனுடைய வீரம் விளங்கும். முப்புர கிருதர்களுடைய போர் தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் 18 ஆண்டுகள் நடைபெற்றது. சூரபன்மன் செய்த போர் ஆறுநாளில் முடிவுபெற்றது. இராம இராவணப் போர் 18 மாதங்கள் நடைபெற்றது. பாரதப்போர் குருச்சேத்திரத்தில் 18 நாட்கள் நடைபெற்றது. ஆனால், செங்குட்டுவன் கனக விசயர் போரோ என்றால் 18 நாழிகையில் முடிவடைந்தது.[1]

செங்குட்டுவன் கொடுங்கோளூரில் கண்ணகிப் பிரதிட்டை செய்ததைப் பார்த்துக்கொண்டிருந்த ஏனைய அரசர்களில் நூற்றுவர் கன்னர் மாளுவத்திலும் (Malwa), கயவாகு இலங்கையிலும் (Ceylon), நெடுங்கிள்ளி - எ பெருநற்கிள்ளி உறந்தையிலும், பாண்டியன் வெற்றிவேற் செழியன் கொற்கையிலும், கொங்கு இளங்கோசர் தங்கள் நாட்டிலும், கண்ணகிக்குக் கோயில்கள் எடுத்தார்கள்.

செங்குட்டுவனுடைய பகை அரசர்களாகிய கொங்கணர், கலிங்கர், கொடும் கருநடர், வங்காளர், கங்கர்,

1. சேரன் செங்குட்டுவன்—M. இராகவையங்கார், பக்கம் 65.

பல்வேற்கட்டியர், வடஆரியர் எல்லோரும் அடக்கப்பட்டுக் கப்பம் கட்டிவந்தார்கள். செங்குட்டுவன் வஞ்சியிலிருந்து புறப்பட்டு, வடதிசை நோக்கிச்சென்று திரும்பிவர முப்பத்துமூன்று மாதங்கள் ஆயின; (2 ஆண்டுகள் ஒன்பது மாதங்கள்).

## (எ) இடும்பாவனப் போர்—(கி. பி. 150)

இடும்பாவனம் என்பது இடும்பில் என்னப்படும். இது தஞ்சைக் கோட்டததில் திருத்தருப்பூண்டிக் கூற்றத்தில் உள்ளது. இது ஒரு பாடல்பெற்ற தலம். இந்த இடத்தில் சேரனுக்கும் சோழனுக்கும் போர் நிகழ்ந்தது. போரிட்ட சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியாய் இருக்கமுடியாது. ஏனென்றால், அவன் செங்குட்டுவனுக்கு மாமன் மகன்—மைத்துன வளவன். மேலும், செங்குட்டுவன்தான் அவனை அரசனாக்கியது. புகாரில் கி. பி. 145-ல் கடல்கோள் ஏற்படப் புகார் அழிந்தது. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மகன் ஆதொண்டன்—இளந்திரையனாகவும் இருக்கமுடியாது. ஏனென்றால் அவன் காஞ்சிபுரத்தை அரச இருக்கையாகக்கொண்டு அங்கே போய்விட்டான். ஆனால் கரூர்—அழுந்தூர்—பழையாறை—சேய்ஞலூர் முதலிய ஊர்களில் இருந்து கொண்டு சோழ நாட்டின் பகுதிகளை ஆண்டுவந்த தித்தன் பரம்பரையாராகவாவது, கோப்பெருஞ்சோழன் மக்களாகவாவது இருக்கவேண்டும். இந்த இடும்பாவனப் போரில் செங்குட்டுவனே வெற்றிபெற்றான். கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் ஒற்றுமையில்லாமல் இருந்ததே செங்குட்டுவனுடைய வெற்றிக்குக் காரணமாக இருக்கலாம்.

செங்குட்டுவனால் பாராட்டப்பட்ட புலவர்கள் பரணரும் சாத்தனாரும் ஆவர். இங்கே கூறப்பட்ட பரணர்,

> "ஆக்கவும் கெடவும் பாடல் தரும்
> கபிலர்—பரணர்—கல்லாடர்—மாமூலர்
> பெருந்தலைச் சாத்தனார் இத்தொடக்கத்தார்"
>
> (யாப்பு, கக-ம் சூத். உரை, பக். கஇக)

என்று கூறியபடி கபிலர் காலத்து இரண்டாம் பரணர் ஆவர். முதலாம் பரணரும் கழாஅர்த்தலையார் என்னும் புலவரும் ஒரு காலத்தவர்கள். செங்குட்டுவனால் பாராட்டப்பட்ட சாத்தனார் பெருந்தலைச் சாத்தனார் அல்லர்; மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவர்.

---

## உ0. இளங்கோ அடிகள்

இளங்கோ அடிகள் என்ற பெயரினை உடைய அரிய துறவியான இவர் சேரநாட்டிலே வஞ்சிநகரில் புகழ்பெற ஆட்சிசெய்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு முதன் மனைவி நற்சோணையினிடம் பிறந்த இரண்டாவது மகனும், முதன் மகனாகிய செங்குட்டுவனுக்குத் தம்பியும் ஆவர்.

வஞ்சி மூதூர் மணி மண்டபத்தில் இமயவரம்பன் தன் மக்கள் இருவருடனும் இருக்கும் காலத்து, ஒருநாள் ஆண்டுப் போந்த நிமித்தகன் ஒருவன் இளங்கோவை நோக்கி, அரசு கட்டில் ஏறும் இலக்கணம் உண்டு என்று கூற, தமையன் செங்குட்டுவன் இருக்க இவ்வாறு முறைமைகெடச் சொன்னாயே என்று அவனை வெகுண்டு நோக்கி, செங்குட்டுவற்கு வருத்தம் உண்டாகாதபடி அன்றைக்கே குணவாயிற் கோட்டம் சென்று துறவுபூண்டு, பேரின்ப வீடாகிய அரசினை ஆளுதற்கு உரியராய் அமர்ந்தார்.[1]

இவர் துறவு பூண்டபின், இயல்—இசை—நாடகம் என்னும் முத்தமிழையும் பயின்று, அவைகளில் வல்லராகத் திகழ்ந்துவந்தார். மதுரைக் கடைச்சங்கப் புலவர்கள் பலர் இவரிடம் நட்புக்கொண்டு, அளவளாவிப் பரிசுபெற்றுப் போவார்கள். அடிகளும் முத்தமிழ் ஆராய்ச்சியினும்,

1. இச்செய்தியை பத்தினிக்கடவுள் தேவந்தி மேற்கொண்டு தம்மை நோக்கி உரைத்ததாக, அடிகள் தாமே (வரந்தரு காதை 170-183 அடிகளில்) கூறியுள்ளது காண்க.

முத்தமிழும் வல்ல புலவர்களிடம் அளவளாவியும் காலத்தைக் கழித்துவந்தார்.

குணவாயில் என்பது வஞ்சிமூதூர்க் கோட்டையின் கிழக்குவாயில் ஆகும். அப்பக்கத்தில் இருக்கும் சிவன் கோயிலுக்குக் கோட்டம் என்று பெயர். கோட்டம் என்ற சொல்லுக்கு உள்ள பல பொருள்களில் கோயில் என்பதும் ஒன்று. ஈண்டுக் 'கோயிலை'க் குறித்துள்ளது.

இரண்டாம் சேரமான் பெருமாள் என்ற குலசேகராழ்வார் ஒருவரைத் தவிர சேர பரம்பரை அரசர் எல்லோரும் சைவ சமயத்தை மேற்கொண்டவர்களே. இவருடைய தலைமகன் செங்குட்டுவன் சிறந்த சிவனடியார் என்பது,

> "நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ் சென்னி
> உலகுபொதி உருவத் துயர்ந்தோன் சேவடி
> மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
> இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு
> மறையோ ரேந்திய ஆவுதி நறும்புகை
> நறைகெழு மாலையின் நல்லகம் வருத்தக்
> கடக்களி யானைப் பிடர்த்தலை யேறினன்
> குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
> ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
> சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
> தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
> வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
> ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
> தாங்கினன்"
>
> (சிலப், உசு: ௫௪-௬௭)

என்ற சிலப்பதிகார அடிகளால் அறியலாம். ஆதலின், இதனைப் பாடிய அவர் தம்பியும் சிவனடியார் என்பதில் யாதொரு தடையும் இல்லை. இவர் இயற்றிய காப்பியத்தில் இவர் சிவனடியார்தான் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள. அவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, மகாமகோபாத்தி

யாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தம் பதிப்பிலும், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தாம் வெளியிட்ட உரைப் பதிப்பிலும் விளக்கியுள்ளார்கள். ஆனால், இவரைச் சிலர் பௌத்த மதத்தினர் என்று கூறுவது பொருந்துமாறு இல்லை. அவர்கள் கூறும் ஆதாரங்கள் வலிவுடைத்தன்று.

கோவலன்—கண்ணகி வரலாறு நிகழ்ந்த காலத்தில் இவர் வாழ்ந்தவர் ஆனபடியால், புகாரிலும், மதுரையிலும், நிகழ்ந்தவற்றை அறிந்தோர் வாய்க்கேட்டும், வஞ்சியிலும் வடநாட்டிலும் நடந்தவற்றை நேரில் கண்டும், அறிந்தும் சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார்.

"குணவாயிற் கோட்டத்து அரசு துறந்து இருந்த" என்புழி, அடியார்க்குநல்லார் கோட்டம் என்பதற்கு "அருகன் கோயில்" என்று பொருள் கூறியது, அடிகள் என்ற பெயர் சைன—பௌத்த துறவிகட்கு மாத்திரம் உரியதென்ற தவறான உணர்வினால் ஏற்பட்டது என்று கொள்ளவேண்டியிருக்கிறது. கோட்டம் என்பது எல்லா மதத்தாருடைய கோயில்களைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர்; அது போலவே, அடிகள் என்பதும் எல்லா மதத்துத் துறவிகளையும் குறிக்கும் ஒரு பொதுப்பெயர். ஆகையால் அதனை நம்பி இன்ன மதத்தினர் என்று கூறுவது பொருந்தாது.

ஒரு காப்பியம் செய்பவர், அவர் எச்சமயத்தினராயினும், அருகன்—கொற்றவை—திருமால்—செவ்வேள்—சிவன் முதலிய தெய்வங்களை, அவ்வத் தெய்வங்களைப் பரவும் அடியார்கள் உணர்ச்சியோடு கலந்துநின்று, பாடவேண்டிய முறைப்படி இவர் பாடியுள்ளார். அதனால், இவருடைய மனத்தூய்மையும், நடுவுநிலைமையும் நன்கு புலனாகும்.

உலகிற்கு மூன்று உண்மைகளைத் தெரியப்படுத்தவே இக்காப்பியம் அவரால் இயற்றப்பட்டது. அந்த உண்மைகளாவன :—

“அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்,
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்,
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்.”
(சிலப். பதி: ருரு-சுO)

என்பதில் விளக்கப்பட்டுள்ளது.

கடைசியாக, அவருடைய காப்பியத்துள் மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதை,

“பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்,
தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்,
பொய்யுரை அஞ்சுமின், புறஞ்சொற் போற்றுமின்,
ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்,
தானம் செய்ம்மின், தவம்பல தாங்குமின்,
செய்ந்நன்றி கொல்லன்மின், தீநட் பிகழ்மின்,
பொய்க்கரி போகன்மின், பொருண்மொழி நீங்கன்மின்,
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்,
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்,
பிறர்மனை அஞ்சுமின், பிழையுயிர் ஓம்புமின்,
அறமனை காமின், அல்லவை கடிமின்,
கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்,
இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையா,
உளநாள் வரையாது, ஒல்லுவ தொழியாது,
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்,
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்.”
(சிலப். ௩O: கஅசு-உOஉ)

என்று விளக்கிக் கூறியுள்ளார்.

இவர் செய்த காப்பியம் முத்தமிழுக்கும் இலக்கியமாக விளங்குகிறது. இவர் இளமையில் துறந்தது முத்தமிழையும் காப்பாற்றவே ஆகும். இப்போது இவர் செய்த நூலைத்தவிர, வேறு பழந்தமிழ் நூல்கள் இசையைப்

பற்றியனவும் நாடகத்தைப் பற்றியனவும் கிடைக்கவில்லை. சிலப்பதிகாரம் இல்லையேல் பழந் தமிழ்நாட்டு யாழைப் பற்றியாவது, இசை நாடகங்களைப் பற்றியாவது அறிந்து கொள்ளுவது கடினமாகும். ஆதலின், தமிழ்நாடு செய்த தவமும், தமிழ்மொழி செய்த தவமும்தான் இளங்கோவை இளமையில் துறக்கச்செய்து, முத்தமிழையும் பயிலச் செய்து, முத்தமிழுக்கும் இலக்கியமாகக் காப்பியத்தையும் செய்யும்படியாகத் தூண்டினது என்பேம்.

இவர் கடைசியில் தம்முடைய காப்பியத்தில் கூறி யுள்ள நீதிமொழிகளை ஒவ்வொருவரும் மனப்பாடம் செய்து, அவைகளின்படி நடக்க முயலவேண்டும்.

அடியார்க்குநல்லார் கூறுகிறபடி இவர் சமணராக வாவது, அல்லது பௌத்தராகவாவது இருந்திருந்தால், இசையையும் நாடகத்தையும் இவர் கற்றே இருக்க மாட்டார், பாடியும் இருக்கமாட்டார். என்னெனின், இசையும் நாடகமும் சமண பௌத்தருக்குப் பகை. இது ஒன்றே இவர் சமண பௌத்தர் அல்லர் என்பதைத் தெளிவுபடுத்தும்.

தமிழ்நாட்டில் சமண, பௌத்த மதங்கள் பரவத் தலைப்பட்டபோதே இசைத் தமிழையும் நாடகத் தமிழை யும் படிப்பவர் தொகை குறையலாயிற்று. அவ்விரண்டும் காமத்தை வளர்த்து நாட்டைக் கெடுத்துவிடும் என்பது அவர்களுடைய கருத்து.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சம்பந்தர்—அப்பர் காலத்துக்கு அப்புறம்தான் இசைத்தமிழும் நாடகத் தமிழும் பரவத்தலைப்பட்டன.

## உக. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

[கி. பி. 80—118]

பதிற்றுப்பத்தில் இவ்வரசனைப் பற்றிய பதிகம் வருமாறு:—

"குடக்கோ நெடுஞ்சேர லாதனுக்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்
தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்கு
கபிலையொடு குடநாட் டோரூர் ஈத்து
வானவரம்பன் எனப்பே ரினிதுவிளக்கி
ஏனை மழவரைச் செருவிற் சுருக்கி
மன்னரை ஓட்டிக்
குழவிகொள் வாரிற் குடிபுறந் தந்து
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
ஆடுகோட் பாட்டுச் சேரலாதனை
யாத்த செய்யுள் அடங்கிய கொள்கைக்

காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடினார் பத்துப்பாட்டு. பாடிப் பெற்ற பரிசில், 'கலன் அணிக' என்று அவர்க்கு ஒன்பது கா[1]ப் பொன்னும், நூறாயிரம் காணமும் கொடுத்துத் தன்பக்கத்துக் கொண்டான் அக்கோ.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டியாண்டு அரசு வீற்றிருந்தான் என்பதே.

இப்பதிகத்தால் இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும், அவனுடைய இரண்டாம் மனைவி வேள் ஆவிக்கோ பதுமனின் முதல் மகள் வேண்மாளுக்கும் பிறந்த இரண்டாம் மகன். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் தம்பி. இவன் இமயவரம்பன் காலத்தும்,

1. கா=துலாம் என்னும் நிறையளவு, காணம்=3 கழஞ்சு அல்லது 1½ பணம் Vide Dr. Gundarts' Malayalam Dictionary.

செங்குட்டுவன் காலத்தும் அவர்களுக்குக்கீழ், தொண்டியில்[1] அரசாண்டவன்.

தண்டகாரணியம் என்பது ஆரியர் நாட்டின் ஒரு பகுதி. அது இப்போது பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த தாகும் (Vide Dr. Bhandarkar History of Dekkan, Page 136). இவன் தண்டகாரணியத்தின் பேரில் படை கொண்டு சென்று, ஆரிய அரசர்கள் பேரில் போர் தொடுத்து, போர் தொடங்குவதன் முன்னம் அங்குள்ள வருடை என்ற இனத்தைச் சேர்ந்த வெள்ளாடுகளையும், ஏனைய கால்நடைகளையும், பெண்களையும், தாபதர்களையும் தீங்கு ஏற்படாமல் அப்புறப்படுத்தித் தொண்டிக்கு அனுப்பிவிட்டு, போர்தொடங்கி வெற்றிபெற்ருன். தமிழர் களுடைய போர் முறை இன்னது என, இவ்வரசன் காட்டி யுள்ளது நோக்கத்தக்கது. பிறகு தொண்டிக்கு வந்து, பார்ப்பனர்களுக்கு ஒவ்வொரு ஊர், ஒவ்வொரு ஆடு, ஒவ்வொரு கபிலநிறப் பசு இவைகளைத் தானமாகக் கொடுத்து, வானவரம்பன் என்ற பட்டமும் பெற்று, பிறகு சின்னுட் கழித்து மழவருடன் போர்தொடுத்து அவர்க ளையும் அடக்கி வெற்றிபெற்ருன் என்றும் அறிகிருேம்.

இவனைப் பாடிய பெண் புலவர் நச்செள்ளையார்க்கு அணிகலன்களுக்காக வேண்டிய பொன்னும் பொருள் களும் கொடுத்து, அத்தாணி மண்டபத்தில் தன் பக்கத்தில் உயரிருக்கையில் உட்காரும் பதவியையும் கொடுத்துச் சிறப்புச் செய்தான்.[2]

---

1. **தொண்டி** மேல் கடற்றுறைப் பட்டினம். கீழ்க்கடற் கரையில் பாண்டிநாட்டைச் சேர்ந்த **தொண்டி** என்ற பட்டின மும் உண்டு. அது இப்போது **காயல்பட்டினம்** என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

2. Dr. S. K. ஐயங்கார் அவர்கள் தம்முடைய நூல் (*Seran Vanchi*) 'சேரன் வஞ்சி'யில் இப்புலவர் பெருமாட்டியைத் 'தன் பக்கத்துக் கொண்டான்' என்று கூறப்பட்டிருப்பதால், அரசன் அவரைப் பட்டத்துத் தேவியாகக் கொண்டான் என்று கூறுவர். அது பொருந்தாது.

வடநாட்டு ஆரிய மன்னர்களை இமயவரம்பனும், செங்குட்டுவனும், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனும், இவர்களுக்குமுன் இரண்டாம் கரிகாலனும் வென்று அடக்கித் திறை பெற்றுள்ளார்கள். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தண்டகாரணியத்தில் இருந்த ஆரிய மன்னரை வென்றது இமயவரம்பனுடைய வடநாட்டுப் போருக்குப் பின்னும், செங்குட்டுவனுடைய இரண்டாவது வடநாட்டுப் போருக்கு முன்னும் நிகழ்ந்ததாகவுள்ளது. ஆனால், வானவரம்பன் என்ற பட்டம் இவனுக்கு மக்கள் வழங்கினதைநோக்கின், இவனும் திபேத்து (வானவர்நாடு) வரையும் சென்று வெற்றிபெற்று மீண்டான் என்று கொள்ளக்கிடக்கின்றது.

இவ்வரசன் காலத்தில் சேர அரசர்களுடைய ஆட்சியானது, வடக்கே இமயமலையையும், ஏனைய மூன்று திசைகளில் கடலையும் எல்லையாகக்கொண்டு இருந்தது என்பது,

> "பெருமலை வயின்வயின் விலங்கு மருமணி
> அரவழங்கும் பெருந்தெய்வத்து
> வளைநரலும் பனிப்பவ்வத்துக்
> குண—குட—கடலோ டாயிடை மணந்த
> பந்தர்." (பதிற். ருக: கஉ-கூ)

என்ற அடிகளால் அறியலாம். இவ்வாறு தமிழர் ஆட்சி, இமயம் முதல் குமரிவரை பரவியிருந்தது இமய வரம்பன் காலத்திலும் அவன் மகன் செங்குட்டுவன் காலத்திலும் ஆகும். அப்போது தமிழ்மொழிதான் அரசியல் மொழியாகவும் நாட்டு மொழியாகவும் இருந்து வந்தது.

தமிழ்மொழிதான் இந்தியா முழுமைக்கும் அரசியல் மொழியாக வழங்கப்படுதற்கு ஏற்ற மொழி. ஆதிகாலத்தில் அரசியல் மொழியாக இருந்ததும் அதுவே. இன்றும் அம்மொழியானது எல்லா வளங்களும் பெற்று நாட்டு மொழியாகவும் அரசியல் மொழியாகவும் வழங்கப்படுதற்கு உரிய இலக்கணங்கள் வாய்ந்ததாக இருக்கிறது. தனித்தியங்கும் ஆற்றலும், புதுப்புது விஞ்ஞான ஆராய்ச்

சிக்கு வேண்டிய சொற்களை உண்டாக்கிக்கொள்வதற்கு வேண்டிய தகுதியும் உடைய மொழி வழக்கத்தில் இருக்க, இதனைவிட்டு எந்த வளமும் இல்லாத இந்தியை அரசியல் மொழியாகச் செய்ய முயல்வது விளக்கிருக்க மின்மினிக்கு அலைந்த செயலை ஒக்கும். சிலர் நினைப்பதுபோல் தமிழ் மொழி குறைபாடுகளையுடைய எழுத்துக்களைக் கொண்டதல்ல. தமிழில் எழுத்துக்கள் முப்பத்தொன்றே (உயிர்: 12, மெய்: 18, ஆய்தம்: 1). இம் முப்பத்தொரு எழுத்துக்களுடன் குற்றியலுகரம்—குற்றியலிகரம் இரண்டினையும் சேர்த்தால் முப்பத்துமூன்றாகும். இதற்குமேல் தமிழில் எழுத்துக்கள் கிடையா. வேண்டிய முதன்மையும் இன்று. இந்த 33 எழுத்துக்களைக்கொண்டு உலகத்திலுள்ள எல்லா மொழிகளையும் ஒலி குன்றாமல் எழுதிக்காட்ட முடியும். அப்படி நிறுவிக் காட்டியவர் காலஞ்சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் ஆவார்கள். இதனைத் தெரிந்துகொள்ளாமல் சிலர் தமிழ் எழுத்துக்களைத் தங்கள் மனம்போனவாறு திருத்த முயல்வது இரங்கத் தக்கது. திருத்த முயல்பவர் யாராயிருந்தாலும் தவம் நிறைந்த தொல்காப்பியர் முற்றும் உணர்ந்து, எக்காலத்துக்கும் எந்நாட்டிற்கும் பொருந்தும்படியாக ஒரு தமிழ் நெடுங்கணக்கை ஏற்படுத்தியுள்ளார் என்பதனை உணர வேண்டும். அரசியலார் இம்மாதிரியான சீர்திருத்தத்துக்கு இணங்குவதும், சென்னைப் பல்கலைக் கழகத்தார் இதனைப் பார்த்துக்கொண்டிருப்பதும் காலவேறுபாடே. ஆதலின், கி. மு. 6000-த்தில் இருந்து நாளதுவரை சீர்திருத்தமில்லாமல் வந்திருக்கிற ஒரு மொழியை இப்போது சீர்திருத்த முயல்வது தமிழ்மொழிக்குக் கேடு சூழ்வதாகும்.

சேரர்கள் வணிகக் கப்பல்களும் போர்க் கப்பல்களும் வைத்திருந்தார்கள் என்பது,

> " அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
> பெருங்கலி வங்கம் திசைதிரிந் தாங்கு " (பதிற்: ௰௨)

என்ற அடிகளே சான்று பகரும்.

இவ்வரசன் மழவர் படையையும் வைத்திருந்தான் என்பதற்கு,

"செவ்வூன் தோன்றா வெண்டுவை முதிரை
வாலூன் வல்சி மழவர் மெய்ம்மறை
குடவர் கோவே" (பதிற்: ௫௫)

என்ற அடிகளால் அறியலாம்.

இச் சேரலாதன், காலத்தில் தன் நாட்டில் வறுமை இன்மையால் இரவலர் வாரார் ஆயினும், பிறர் நாட்டில் வறுமை உண்மையால் இரவலர் உண்மை தெரிந்து, அவரைப் பெறவிரும்பி, அவர்களைத் தேரேற்றிக் கொணர்ந்து, பரிசில் நல்கும் பான்மையுடையான் என்பது,

"வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரிற் றந்து அவர்க்கு ஆர்பத னல்கும்
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"
(பதிற் : ௫௫)

என்ற அடிகளால் அறியலாம்.

இச்சேரலாதன் தொண்டியில் இருந்து அரசுபுரிந்தோ னாயினும், இமயவரம்பன் இறந்தபின், செங்குட்டுவன் வஞ்சியில் இருந்து ஆளுங்காலத்தில், இவன் நறவு (Mangalore) என்னும் ஊரிலும் இருந்து ஆட்சிசெலுத் தினன் என்பதனை,

"துவ்வா நறவின் சாயினத் தானே" (பதிற். ௬0: ௧௨)

என்ற அடியால் அறியக்கிடக்கின்றது.

## உஉ. குட்டுவன் சேரல்

## [கி. பி. 155—213]

இவன் செங்குட்டுவனின் மகன். குட்டநாட்டு இளவரசாக இருந்தபடியால் அப்பெயர் பெற்றான். செங்குட்டுவனைப் பாடிய இரண்டாம் பரணரிடம் குருகுலவாசம் செய்து முத்தமிழையும் முறையாகக் கற்றவன். "ஆக்கவும் கெடவும் பாடல் தரும் கபில—பரணர்" என்று புகழப் பட்ட பரணரிடம் கற்றவன் ஆனதால், மொழிப்பயிற்சி மாத்திரம் அல்லாமல், அரசியல், போர் முதலிய துறைகளிலும் சிறந்து விளங்கினவன் ஆவான்.

பாண்டவ, குருகுலத்தாருக்கு துரோணாச்சாரியார் இருந்ததுபோலச் சேரன் செங்குட்டுவனுக்கு இரண்டாம் பரணர் விளங்கினார்.

கி. பி. 155-ல் சேரன் செங்குட்டுவன் இறந்ததும் இக் குட்டுவன் சேரல் பட்டம் எய்தி, வஞ்சியில் முடிசூடிக் கொண்டு, சேரநாட்டைத் திறம்பட ஆண்டுவந்தான். இவன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவி இருந்தது. புலவர், பாணர், கூத்தர், விறலிகளுக்கு மாரிபோன்று வரையாது பொன்னும், மணியும், பொருளும், தானம் வழங்கினான் ஆதலால், "மாரிவெண்கோ" என்று புகழப் பட்டான். செங்குட்டுவனுக்கும் [1]இளம்கோ வேண்மாள் கோப்பெருந்தேவிக்கும் பிறந்தவன் குட்டுவன் சேரல். இவன் பட்டம் எய்தியபின், முற்கால வழக்கப்படி பட்டப்

---

1. **இளங்கோ வேண்மாள்** என்பது இளங்கோ வேளிர் மரபினள் என்று பொருள்படும். இருக்குவேள்—இருங்கோவேள் (Epi.—Rep —1908—p 879)—இளங்கோவேள் (Ibid—815 of 1903) என்பன பிற்காலச் சோழர் காலத்து விளங்கிய கொடும்பாளூர் வேளிர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்கள் என்பது சாசனங்களால் அறியக்கிடக்கிறது. இதனால் இவ் வேளிர் மரபும், செங்குட்டுவன் மனைவியின் மரபும் ஒன்று என்பது பெறப்படுகின்றது (Vide சேரன் செங்குட்டுவன் by M. R. ஐயங்கார், பக்கம்: 24).

பெயர் ஒன்று தரித்திருக்கவேண்டும். அப்பெயர் 'சேரமான் மாரிவெண்கோ' என்பதாகத்தான் இருக்கவேண்டுமென்று நண்பர் M. R. ஐயங்கார் அவர்கள் கருதுகிறார்.

சேரமான் மாரிவெண்கோ—உக்கிரப்பெருவழுதி—சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி மூவரும் ஒருகாலத்து ஒருங்கு இருந்தபோது ஒளவையார் என்னும் பெண்புலவர்,

"கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்!
யானறி அளவையோ இதுவே, வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும், இம்மென
இயங்கு மாமழை உறையினும்
உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நும் நாளே"

(புறம்: ௩௬௭)

என்று வாழ்த்தியுள்ளதை நோக்கின், இவர்கள் எல்லோரும் சமகாலத்தவர்கள் என்று கூறலாம். ஆனால் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி மாத்திரம் பட்டம் எய்துமுன் இளவரசாக இருக்கும்போது சேர சோழருடன் இருந்ததாகக் கொள்ளவேண்டி இருக்கிறது. ஏனென்றால்,

| | |
|---|---|
| இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் ஆட்சிக்காலம் | கி. பி.—கி. பி. 145—190 |
| குட்டுவன் சேரனுடைய ஆட்சிக்காலம் | 155—213 |
| உக்கிரப்பெருவழுதியின் ஆட்சிக்காலம் | 204—235 |

இவர்கள் மூவரையும் ஒளவையார் ஒருங்கே கண்டது கி. பி. 185-க்குமேல் கி. பி. 190-க்குள் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆதலால், உக்கிரப்பெருவழுதி தன் தகப்பன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்-III காலத்தில் இளவரசாய் இருக்கும்போது சேர சோழருடன் ஒருங்கு காணப்பட்டார் என்பதே பொருத்தம்.

## உங. சேரமான் கேரளன்

[கி. பி. 216—கி. பி. 225]

இவன் முதன்முதல் 'பெருமாள்' பட்டம் பெற்று நம்பூத்திரிகளுடைய 64 கிராமங்களையும் ஆட்சி புரிந்தவன். சேர நாட்டையும் திறம்பட ஆண்டவன்.

இவன் காலத்தில் சோழ நாட்டில் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியும் (கி. பி. 215—கி. பி. 225), பாண்டி நாட்டில் இரண்டாம் உக்கிரப் பெருவழுதியும் (கி. பி. 204—235) அரசாண்டார்கள்.

யாது காரணத்தாலோ சேரனுக்கும் சோழனுக்கும் பகை ஏற்பட்டு, போர் நடந்தது. கடைசியாக பாமுளூர் என்னும் இடத்தில் நடந்த போரில் சேரன் தோல்வி யுற்றான். சோழன் வெற்றிபெற்றான். சோழன் "பாமுளூர் எறிந்த" என்ற பட்டம் பெற்றான். (Vide புறம்: 203)

'பாமுளூர்' என்பது சேர நாட்டில் உள்ள ஓர் ஊர்.

---

## உச. வாட்டாற்று எழினியாதன்

[கி. பி. 182—கி. பி. 290]

இவன் சேரர் பரம்பரையினன். ஒரு குறுநில மன்னன். குட்டுவன் சேரல் (கி. பி. 155—213), யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை (கி. பி. 148—198), தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்-III (கி. பி. 174—204) இவர்களுடைய காலத்தில் வாட்டாற்றில் குறுநிலமன்னனாக எழினி என்ற பட்டத்துடன் ஆண்டவன். சேர முடிமன்னருக்கு உறுதுணையானவன்.

பாண்டியன் நெடுஞ்செழியன்-III தலையாலங்கானத் தில் தன்னை எதிர்த்த முடிவேந்தர் இருவரும், குறுநில மன்னர்

ஐவரும் ஆக எழுவரும் தோற்று ஓடுமாறு தான் ஒருவனே வென்ற சிறப்பை மதுரை நக்கீரர், ஆலம்பேரி சாத்தனார், கல்லாடர் முதலியோர் புகழ்ந்துள்ளார்கள். முடிமன்னர் இருவராவர் : சேரனும் சோழனும். குறுநில மன்னர் ஐவர் ஆவார் : திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்.

இங்கே கூறப்பட்ட எழினி என்பவன்தான் வாட்டாற்று எழினி ஆதன்.

தலையாலங்கானத்தில் செழியன் ஒருவனும் நின்று, எழுவருடன் மலைந்து வெற்றிபெற்றதை,

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
இன்றின் ஊங்கோ கேளலம், திரள்அரை
மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் தெண்கிணை கறங்கக் காண்தக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத் தடலே." (புறம் : எசு)

என்று இடைக்குன்றூர் கிழார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

தலையாலங்கானத்துப் போர் கி. பி. 195-ல் நடந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்தப் போரில் எழினி ஆதன் என்பவன் சேர மன்னனுக்கு உறுதுணையாகச் சென்று போரிட்டுத் தோல்வி அடைந்தான் என்று மேலே கூறிய புறப்பாட்டால் அறியக் கிடக்கின்றது.

வாட்டாற்று எழினி ஆதன் குறுநில மன்னனாக இருந்தபோதிலும் சிறந்த வீரன், வள்ளல், புலவர் பாடும் புகழ்பெற்றவன். இவனுடைய கொடைமடத்தையும் விருந்தோம்புதலையும் குறித்து மாங்குடி கிழார் என்னும் புலவர்,

"உள்ளிலோர்க்கு வலியாகுவன்
கேளிலோர்க்குக் கேளாகுவன்
.....................................
வளநீர் வாட்டாற் றெழினி ஆதன்
இணையேம் பெரும!
கொழுந்தாடிய சூடென்கோ,
வளநனையின் மட்டென்கோ,
குறுமுயலின் நிணம்பெய்தந்த
நறுநெய்ய சோறென்கோ,
திறந்துமறந்து கூட்டுமுதல்
முகந்துகொள்ளும் உணவென்கோ
அன்னவை பலபல
....................................." (உகக)

என்று புகழ்ந்து பாடியுள்ளதை நோக்குக.

---

## உரு. முதலாம் குலசேகரப்பெருமாள்
### [கி. பி. 257—269]

இந்தச் சேரமன்னன் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சேரநாட்டை ஆண்டவன்.[1]

சேர அரசர்களுக்குள் முதன்முதல் பெருமாள் என்ற பட்டப்பெயர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில்தான் ஏற்பட்டது. இப் பெருமாள் பட்டம் சேர அரசர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதனைப்பற்றித் தோற்றுவாய் என்ற

1. Vide List of Perumals attached.

அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது காண்க. அதன்படி நம்பூத்திரிகளுடைய 64 கிராமங்களை யாரொருவர் ஆட்சி செய்கின்றார்களோ அவர்களுக்குப் "பெருமாள்" என்ற பட்டம் உண்டு.

நம்பூத்திரிகளுடைய கிராமங்களின் ஆட்சிக்குச் சேர, சோழ, பாண்டிய, கொங்கு, துளு, ஆரிய, வாணர் முதலிய அரச பரம்பரைகளில் இருந்து ஆட்சியாளரைத் தேர்ந்து எடுப்பதுண்டு. இந்த முறை முதன்முதல் அமுலுக்குவந்தது கி. பி. 216 ஆகும். அதுமுதல் கி. பி. 798 வரை பெருமாள் ஆட்சி நடைபெற்றுவந்தது. அதற்கப்புறம் நின்று விட்டது. மேலே கூறப்பட்ட ஏழு பரம்பரையாரும் பெருமாள்களாக இருந்திருக்கிறார்கள் என்பது பெருமாள் அட்டவணையால் தெரியலாம். கி. மு. 216-ல் முதன் முதல் கொங்கு நாட்டிலிருந்து "கோயப் பெருமாள்" என்பவனைத் தேர்ந்து எடுத்தார்கள்.

ஒருதரம் தெரிந்து எடுக்கப்பட்டவர் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் இருக்கலாம். நடுவில் ஏதாவது காரணத்தால்—மரணத்தாலோ, அல்லது வேறு காரணங்களினாலோ ஆட்சி தடைப்பட்டால் வேறு ஒருவனைத் தேர்ந்து எடுப்பார்கள். அப்படிக் கோயப்பெருமாள் என்பவர் பத்து ஆண்டுகள்தான் ஆட்சிசெய்தார். பத்தாவது ஆண்டில் அவர் இறந்துபோக, அடுத்தாற்போல் சோழநாட்டில் இருந்து சோழ பரம்பரையைச் சேர்ந்த ஒருவனைத் தேர்ந்து எடுத்தார்கள். அவன் 'சோழப் பெருமாள்' என்னப்பட்டான். அவன் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான்.

இப்படி வேறு நாடுகளில் இருந்துவரும் பெருமாள்களுக்கு 64 கிராமங்களின் ஆட்சியைத் தவிர சேரநாட்டில் வேறு அதிகாரம் கிடையாது. ஆனால், சேரநாட்டு அரசனே 64 கிராமங்களின் ஆட்சியையும் ஏற்றுக்கொண்டால் சேரநாடு முழுமையிலும், 64 கிராமங்களிலும் அவனுக்கு அதிகாரம் உண்டு.

இவ்வாறு சேர அரசனாக இருந்து, 64 நம்பூத்திரிகளுடைய கிராமங்களின் ஆட்சியை முதன்முதல் ஏற்றுக் கொண்டவர் முதலாம் குலசேகரப்பெருமாள் ஆவார். இவருடைய ஆட்சி பன்னிரண்டு ஆண்டுகள் நடைபெற்றது. அதாவது, கி. பி. 257 முதல் கி. பி. 269 வரை என்று கேரள உற்பத்தி என்ற நூலும், கேரள மகாத்மியம் என்ற நூலும் பேசுகின்றன.

இவ்விரண்டு நூல்களையும் பிரமாணமாக மேற்கொள்ளச் சிலபேர் மறுத்தாலும், சரித்திரப் பகுதிக்கு எவ்வளவு தூரம் பொருத்தமாகக் கூறப்பட்டுள்ளதோ அந்தப் பகுதியை மாத்திரம் எடுத்துக்கொள்வதில் யாரும் ஆட்சேபனை சொல்லமாட்டார்கள். இவைகளைப் புராணங்கள் மாதிரி பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முழுக்கவே தள்ளிவிடக்கூடாது.

## உசு. சேங்கால் எ வீரராகவப்பெருமாள்

[கி. பி. 269—கி. பி. 281]

இந்தச் சேர அரசன் முதலாம் குலசேகரப்பெருமானுக்கு அடுத்தாற்போல் பட்டத்துக்கு வந்து நாட்டை ஆண்டவன் வந்ததும் நம்பூத்திரிகளுடைய 64 கிராமங்களின் ஆட்சியையும் ஏற்றுக்கொண்டு, 'பெருமாள்' என்ற பட்டமும் வகித்துக்கொண்டான். இவனுடைய இயற்பெயர் 'வீரராகவன்' என்பது. ஆனால், அவனுடைய செல்லப்பெயர் சேங்கால் என்பது. இவன் 12 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான்

இவனுடைய காலத்தில்தான் பாண்டி நாட்டில் அரிமர்த்தன பாண்டியன் (கி. பி. 265—310) என்பவன் ஆட்சி புரிந்துவந்தான். அரிமர்த்தனிடம் மந்திரியாய் இருந்தவர்[1] திருவாதவூரர் என்ற மாணிக்கவாசகர் (கி. பி. 250—

1. இலக்கிய வரலாறு: கா. சு. பிள்ளை, பக்கம் 300-301.

கி. பி. 282). திருவாதவூரர் மந்திரி வேலையில் இருந்து கொண்டே சைவசித்தாந்த நூல்களைப் படித்து, உலகின் பங்களை வெறுத்துப் பேரின்பத்தைப்பெற ஆசைகொண்டார். ஊழ்வினை கூட்டுவிக்க, அரசியலை விட்டுச் சிவகுருவிடத்து உபதேசம் பெற்று, துறவியாகி, சிவன் முத்தராக வாழ்ந்துவந்தார். அப்படி வாழ்ந்துவந்த காலத்தில் அவர் சேரநாடு சென்றிருந்தபோது 'மணிக்கிராமம்' என்னும் ஊரில் இருந்த சிரியன் கிறித்தவர்களை எல்லாம் சைவர்களாக மாற்றி உபதேசம் செய்தார். பாதிரிகள் இதைப் பற்றி அவர்களுடைய மூலகுருவாகிய உரோம் தேசத்துப் போப் ஆண்டவனுக்கு அப்போதே தெரிவித்துள்ளார்கள்[1]. சைவ சமயத்துக்கு மாறின மக்களை ஏழை கிறித்தவர்கள் தொந்தரவு செய்ய, மாணிக்கவாசகர் சேர அரசன் வீரராகவப்பெருமாளிடம் சொல்லி மதம் மாறின மக்களுக்கு எல்லாம் தனியாக ஒரு கிராமம் ஏற்பாடு செய்து சாசனமும் வாங்கிக்கொடுத்து, ஏழையோர்களுடைய தொந்தரவு இல்லாமல் வாழ வசதிகள் செய்துகொடுத்தார். அரசனுடைய பாதுகாவலும் அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்வரசன் காலத்தில் சைவசமயம் வளர்ச்சியுற்றது. நாடு அமைதியுற்று இருந்தது. மக்கள் இன்பமாக வாழ்ந்தார்கள்.

---

## உஎ. இரண்டாம் குலசேகரப்பெருமாள்

[கி. பி. 293—கி. பி. 305]

சேங்கால் ஏ வீரராகவப்பெருமாள் என்பவருக்குப் பின் கி. பி. 281 முதல் கி. பி. 293 வரை சேரநாட்டை ஆண்ட அரசன் பெயர் தெரியவில்லை. 'பெருமாள்களின்' அட்டவணையிலும், 64 நம்பூத்திரி கிராமங்களை ஆண்டது ஒரு சேரநிரப் பெருமாள் என்று தெரிகிறது. ஆனால் அதே அட்டவணையில் கி. பி. 293 முதல் கி. பி. 305 வரை பன்னிரண்டு ஆண்டுகள் இரண்டாம் குலசேகரப் பெருமாள்

---

1. இலக்கிய வரலாறு: கா. சு. பிள்ளை, பக்கம் 300-301.

ஆண்டதாகக் காணப்படுகிறது (Vide List of Perumals attached).

இவ்விரண்டாம் குலசேகரப்பெருமாள் என்னும் சேர அரசனும் முதலாம் குலசேகரப்பெருமாள் போலவே சேர நாட்டையும், 64 நம்பூத்திரிகளுடைய கிராமங்களையும் ஆட்சிசெய்து பெருமாள் பட்டமும் பெற்று, நாட்டில் அமைதிநிலவச் செய்தான் என்று அறியக்கிடக்கின்றது.

இவனுக்குப்பின் சேரநாட்டைக் கி. பி. 320 முதல் கி. பி. 350 வரை ஆண்ட மாந்தரஞ் சேர அரசனைப்பற்றி இரும்பொறை குடும்பச் சரித்திரத்தில் காண்க.

---

## உஅ. பாஸ்கர இரவிவர்மன்-I (கொடுங்கோளூர்)
### [கி. பி. 350—கி. பி. 385]

கி. பி. 281 முதல் கி. பி. 293 வரை சேர நாட்டை ஆண்ட அரசர்களின் பெயர்களும் அவர்களின் வரலாறுகளும் தெரியவில்லை. பெருமாள் அட்டவணையிலும் கி. பி. 281 முதல் கி. பி. 293 வரை வேறுநாட்டுப் பெருமாள் ஆண்டதாக இருக்கிறதேயொழிய சேரநாட்டு அரசர்கள் நம்பூத்திரி கிராமங்களை ஆளவில்லை என்று தெரிகிறது. ஆனால், கி. பி. 350 முதல் கி. பி. 385 வரை ஆண்ட சேர நாட்டு அரசனுடைய பெயர், அவன் காலத்தில் அவனால் கி. பி. 379-ல் கொச்சியில் குடியேறிய ஐரோப்பிய யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட செப்புபேட்டுச் சாசனத்தால் வெளியாகிறது. அந்தச் செப்பேட்டுச் சாசனத்தால் பாஸ்கர இரவிவர்மன் சேரநாட்டு அரசர்களில் மிகவும் முன்னோக்கு உடையவன் என்றும், மக்களுடைய நலத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தவன் என்றும், எல்லா மதங்களையும் வெறுக்காமல் சமநிலையாகப் பாவித்து எல்லாவித சுதந்திரங்களும் அளித்தவந்தான் என்றும், அவன் காலத்தில் யூதர்கள் மிகவும் பயன்பெற்றார்கள் என்றும் அறிகிறோம்.

இதனை 14-6-50 புதன்கிழமை 'Mail' பத்திரிகையில் அடியில் வருமாறு பிரசுரிக்கப்பட்டுள்ளது; சரித்திர உலகுக்கு மிகவும் பயன்படக்கூடியதாய் இருக்கிறது. அது வருமாறு :—

" Cochin (குட்டநாடு) is one of the most important Jewish Settlements in South India. There are about 2000 Jews in the Travancore-Cochin State. Jews migrated to Cochin, according to Jewish tradition, in *70 A. D.* Soon after the destruction of their Second Temple in Jerusalem and because of the persecution by the Romans.

The refugee Jews were given asylum and all facilities, almost equal with State Subjects, by the ruler of Cochin, in all departments of life, and the successive rulers maintained the tradition of giving every possible encouragment to the Jews to advance their prosperity. Recently, however, the Congress ministry withdrew the privilege of the community to be represented in the State legislature.

The community had adopted, for over 1800 years, Cochin as its home. 20 families have now left Cochin for Israel to help in the rebuilding of their country. One Jew said that it is the intention of these Jews to revive cordial relationship between Israel and India, a relationship which existed even during the time of *King Solomon.*

A replica of the ancient *copper plates* now in the possesion of White Jews of Cochin, was presented to *Dr. Olswager*, who recently visited Cochin to collect funds for settling the emigrants. The copper plates enshrined the privileges given to Jews in *379 A. D. by King Bhaskara Ravi Varma of*

*Cranganore* who belonged to the Cheraman Perumal dynasty. The replica presented to *Dr. Olswager* was now in the custody of the Department of Oriental Studies of the Hebrew University, which had under considerations a proposal to establish a Chair for Sanskrit.

[Mail, dated 14-6-50 Wednesday.]

---

## உ௪. மூன்றும் குலசேகரப் பெருமாள்
## [கி. பி. 450—கி. பி. 462]

கி. பி. 385 க்குப் பிறகு கி. பி. 450 வரை சேர நாட்டு அரசர்களுடைய பெயர் தெரியவில்லை. 'பெருமாள்' அட்டவணைப் பிரகாரம் கி. பி. 450 முதல் கி. பி. 462 வரை பன்னிரண்டு ஆண்டுகள் சேரநாட்டை ஆண்டது மூன்றும் குலசேகரப் பெருமாள் என்று ஏற்படுகிறது.

இந்த அரசனும் பட்டமெய்தியதும் நம்பூத்திரிகளுடைய 64 கிராமங்களின் ஆட்சியை ஒப்புக் கொண்டு, "பெருமாள்" என்னும் பட்டமும் வகித்துக்கொண்டு சேர நாட்டை ஆண்டு வந்ததாக ஏற்படுகிறது. இவனுடைய காலத்தில் நாடு போர்க்கொடுமை இல்லாமல் அமைதியாக இருந்தது என்பது வெளியாகிறது.

---

## ௩௦. முதலாம் சேரமான் பெருமாள்

[கி. பி. 667—கி. பி. 712]—வஞ்சி

[பிறந்தது கி. பி. 642; ஆட்சியைக் கைக்கொண்டது கி. பி. 667; ஆட்சியை விட்டு விலகியது கி. பி. 712; கயிலை சென்றது கி. பி. 712.]

சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறிய அறுபான் மும்மை நாயன்மார்களில் முடிமன்னர் அறுவர். அந்த அறுவர் முடிமன்னரில் நம் முதலாம் சேரமான் பெருமாள் ஒருவர் ஆவர். சேரர் குடியில் இவர் ஒருவரே நாயன்மார் கள் வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவர்.

முதலாம் சேரமான் பெருமாளுடைய இயற் பெயர், அதாவது, தாய் தந்தையர்கள் இட்ட பெயர் **பெருமாக் கோதையார்** என்பது.

**சேரமான்** என்பது சேர அரசர்களுக்கு ஏற்பட்ட பொதுப் பெயர்; அதன் பொருள் **மலைநாட்டு அரசன்** என் பது. **சேரமான்** என்ற சொல்லின் வரலாறும், '**பெருமான்**' என்ற சொல்லின் வரலாறும் '**தோற்றுவாய்**' என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. ஆண்டுக் கண்டுகொள்க.

**கழறிற்றறிவார்** என்னும் பெயரானது இவருக்குக் கடவுள் எல்லா உயிர்களுடைய பேச்சுக்களையும் அறி யக்கூடிய ஆற்றலைக் கொடுத்தபின் காரணப்பெயராக ஏற்பட்டது.

இதனை,

"முதல்வர் அருளினால்
மேவும் உரிமை அரசளித்தே விரும்பும் காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈறில்லாத்
தாவில் விறலும் தண்டாத கொடையும் படைவாகனமுதலாம்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாம் கைவந் துறப்பெற்றார்"

என்னும் பெரியபுராணச் செய்யுளால் அறியலாம். முதலாம் சேரமான் பெருமாளுடைய பெயர் 'பெருமாள்'

அட்டவணையில் இல்லை. ஆதலின், அவர் பெருமாள் என்னும் பட்டத்தை வகித்துக்கொண்ட போதிலும், நம்பூத்திரிகளுடைய கிராமங்களை ஆட்சி புரியவில்லை என்று தெரிகிறது. சேரநாட்டு ஆட்சியையே "இன்பம் பெருகும் திருத் தொண்டுக்கு இடையூறு" என்று கருதினவர் நம்பூத்திரிகளுடைய கிராம ஆட்சியை ஏற்றுக்கொள்ள ஒப்பி இருக்கமாட்டார் என்பது தெரிகிறது.

சேர அரச குடும்பங்கள் இரண்டு. ஒன்று உதியன் குடும்பம்—இன்னொன்று பொறையன் குடும்பம். இவ்விரண்டு குடும்பங்களும் தாயாதிகள். இந்த இரண்டு குடும்பங்களைத் தவிர சேர அரசர்களோடு பெண் கொடுக்க வாங்க உரியவர்களாய் உள்ள வேறு குடும்பங்களும் உண்டு. அவ்வாறமைந்த குடும்பங்களுள் வேணாட்டுவேள்—நாஞ்சில் நாட்டுவேள்—இளங்கோவேள்—இருங்கோவேள்—மையூர் கிழார்—வேள் ஆவிக்கோ பதுமன்—வெளியன் வேண்மான் முதலியோர் சிறந்தோராவர். சிற்சில சமயங்களில் சோழர்—பாண்டியர் குடும்பங்களிலிருந்தும் பெண்கள் கொள்வதும் கொடுப்பதும் உண்டு. இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுடைய முதன் மனைவியும், ஆட்டன் அத்தியினுடைய மனைவியும் சோழர் குலக்கொடிகளாவர்.

சேரநாட்டுக்கு அரச இருக்கையாக விளங்கி வந்தது 'வஞ்சிமாநகரம்.' அது கோட்டை கொத்தளங்களையுடையது. அரச குடும்பத்தாருக்குச் சொந்தமான சிவன் கோவிலும் வஞ்சிக் கோட்டைக்குள் உண்டு. அச்சிவன் கோவிலுக்கு அஞ்சிக்களம் என்று பெயர். இதுபோல் ஊருக்கு ஒரு பெயர், ஊரில் உள்ள கோவிலுக்கு ஒரு பெயர் பல இடங்களில் உண்டு.

உதாரணமாக:—

| ஊர்ப் பெயர் | கோவிலின் பெயர் |
|---|---|
| 1. திருவெண்ணெய் நல்லூர் | திருவருட்டுறை |
| 2. புக்கொளியூர் | அவிநாசி |
| 3. கறையூர் | கொடுமுடி |
| 4. பேரூர் | பட்டீச்சுரம் |

முதலியன காண்க. 'அஞ்சி' என்பது ஐந்து முகங் களையுடைய சிவனுடைய பெயர். களம் என்றால் கோவில் என்று பொருள்.[1] அதற்குத் திரு என்ற அடைமொழி கொடுத்தால் திரு அஞ்சிக் களம் என்றாகும். வஞ்சி அஞ்சிக் களம் என்ற சொற்றொடர் பேச்சுவழக்கில் வஞ்சை அஞ் சைக் களம என்றாகி, திரு என்ற அடை கொடுக்கப்பட்டு திரு வஞ்சை அஞ்சைக் களம் என்றாகி திருவஞ்சைக் களம் என்று திரிவுபட்டுத் தற்காலம் வழக்கில் இருக்கிறது.

அரசு கட்டிலில் ஏறிய அரசனும் அவனுடைய குடும் பமும் வஞ்சிமாநகரில் இருந்து வந்தார்கள். ஏனைய அரச குடும்பத்தினர் வஞ்சிக்கு அருகில் இருந்த கடல்துறைப் பட்டினமாகிய மகோதை என்னும் பட்டினத்தில் இருந்து வந்தார்கள். சமய குரவர்களில் ஒருவராகிய சுந்தரர்,

"ஆர்க்கும் கடல் அங்கரைமேல் மகோதை"

என்று தம்முடைய தேவாரத்தில் பாடியுள்ளார். இம் மகோதைப் பட்டினம் கி. பி. 822ல் ஏற்பட்ட கடல் கோளால் அழிக்கப்பட்டது. இப்பட்டினத்தோடு முசிறி —கொல்லம் முதலிய பட்டினங்களும் அழிக்கப்பட்டன.

முதலாம் சேரமான் பெருமாளுடைய தாய் தந்தையர் கள் மகோதைப் பட்டினத்தில்தான் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய பெயர் தெரியவில்லை.

கி. பி. 5ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து கி. பி. 7ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, அஃதாவது, கி. பி. 462 முதல் கி. பி. 657 வரை அரசாட்சி பொறையன் குடும்பத்திலேயே இருந்து வந்தது.

## பிறப்பு

கி. பி. 642ல் மகோதைப் பட்டினத்தில் முதலாம் சேரமான் பெருமாள் அவதரித்தார். அவருடைய பெற் றோர்கள் அவருக்குப் பெருமாக் கோதையார் என்று பெய

1. களம்=கோயில் திருநெடுங்களம், திருவேட்களம் என்பன போல.

ரிட்டார்கள். சிறுவயதிலிருந்தே அவர் பள்ளியில் இளவரசனுக்குரிய படிப்பும், போர் அவையில் (Military Academy) யானை யேற்றம், குதிரை யேற்றம், மற்போர், வாட்போர் முதலியன கற்று வந்தார். படிப்பு முடிந்ததும்,

"முன்னை வழி அன்பால்
கண்மேல் விளங்கு நெற்றியினார் கழலே பேணுங் கருத்தினராய்
உண் மேவிய அன்பினராகி உரிமை அரசர் தொழில் புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண்டே
புரிவார்" (பெரிய புராணம்)

என்றபடி, திருவஞ்சைக் களத்திலே கோயிலில் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தார். இவ்வாறு இவர் திருத்தொண்டு செய்துகொண்டு இருக்கும்போது, சேர நாட்டை, பொறையன் குடும்பத்தைச் சேர்ந்த செங்கோற் பொறையன் என்னும் அரசன், கி. பி. 648ல் பட்டத்துக்கு வந்து ஆண்டுகொண்டு இருந்தான்.

## செங்கோற் பொறையன் துறவு

செங்கோற் பொறையனும் சிவபத்தி வாய்ந்தவன். மன்பதைகளிடத்தில் இரக்கம் உடையவன். கோல் கோடாது ஆட்சி புரிபவன். இவனுடைய காலத்தில் பாண்டி நாட்டில் அரசுபுரிந்தவன் கூன் பாண்டியனாகிய நின்ற சீர் நெடுமாறன் என்கிற மாறவர்மன் அரிகேசரி என்கிற சுந்தர பாண்டியன் (640—670 A. D.) என்பவன் ஆவான். இந்தப் பாண்டியன் நெல்வேலிப் போரில் வெற்றி பெற்றவன். அப்பர் சுவாமிகளும் (567—648) திருஞான சம்பந்த சுவாமிகளும் (634—650) இக் கூன் பாண்டியன் காலத்தவர்கள்.

யாது காரணத்தாலோ கூன் பாண்டியனுக்கும் சேர அரசன் செங்கோற் பொறையனுக்கும் போர் மூண்டது. அதன் விளைவாக, பாழி—நெல்வேலி முதலிய இடங்களில் போர் நடந்தன. எல்லா இடங்களிலும் செங்கோற் பொறையன் தோல்வியுற்றான். கடைசியாக கி. பி. 667ல்

செந்நிலத்தில் (Shencottah) நடந்த போரில் செங்கோற் பொறையன் அறவே முறியடிக்கப்பட்டான். அதனால் அரசாட்சியில் வெறுப்புற்றான்.

அதனால்,

"நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையின் கொடிமதில் சூழ்
சீரின் மலிந்த திருநகரம் அதனிற் செங்கோற்பொறையனெனும்
காரின் மலிந்த கொடைநிழல்மேற் கவிக்கும் கொற்றக் குடைநிழற்கீழ்
தாரின் மலிந்த புயத்தரசன் தரணி நீத்துத் தவஞ்சார்ந்தான்"
(பெரிய புராணம்)

என்றபடி, திடும் என அரசாட்சியை விட்டு விட்டுத் துறவு நிலை எய்தி, தவத்துக்குச் சென்று விட்டான். பொறையனுக்குக் குழந்தைகள் கிடையா. அதனால் அவன் குடும்பம் அவனோடு முடிவடைந்தது.

அரசு காலியானதும் அமைச்சர் முதலானோர் எல்லாரும் ஒன்று சேர்ந்து, 'உதியன் குடும்பத்தில் யார் உள்ளார்?' என்று உசாவி, பெருமாக் கோதையாரைத் தேடிச் சென்று, அரசுரிமையை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்கள்.

"இன்பம் பெருகும் திருத்தொண்டுக் கிடையூறாக இவர் மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசு புரக்க அருளுண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை இடைபெற் றறிவேன் எனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பம் செய்தார் முதல்வர் அருளினால்,"
(பெரிய புராணம்)

என்றபடி, அமைச்சர் முதலானோர் திருத்தொண்டுக்கு இடையூறாக அல்லவா அரசாட்சியை ஏற்றுக்கொள்ளச் சொல்லுகிறார்கள். திருத்தொண்டுக்கு முன் அரசாட்சி ஒரு பெரிதா? திருத்தொண்டுக்கு இடையூறு இல்லாமல் முதல்வர் அருளினால் அரசாட்சி நிகழ்வதானால் ஏற்றுக் கொள்ளலாம்; இல்லையேல் வேண்டா. எதற்கும் இறைவனுடைய திருவருள் எப்படியென்று அறிய இறைவர்முன்

விண்ணப்பம் செய்தார். இறைவர் அவருடைய விண்ணப்பத்திற்கு இணங்கினவராக, யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும், தாவில் விறலும், தண்டாத கொடையும், படைவாகனம் முதலாம் காவன் மன்னர்க்கு உரியன எல்லாம் கொடுத்து அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்.[1] இறைவன் அருளால் எல்லா உயிரிகளும் சொல்லுவனவற்றை அறியும் உணர்வைப் பெற்றவரான படியால் அன்று முதல் பெருமாக் கோதையார்க்கு 'கழறிற்றறிவார்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

## சேரமான் பெருமாள் ஆட்சி

பிறகு, பெருமாக் கோதையார் அமைச்சர்களை நோக்கி, தாம் அரசை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னார். அமைச்சர்கள் எல்லாம் மகிழ்ந்து, திரும்பிச் சென்று, பட்டம்சூட்ட ஒரு நல்ல நாள் பார்த்து ஏற்பாடுகள் செய்து, கழறிற்றறிவார்க்கு முடி சூட்டினார்கள். முடி சூட்டிக் கொண்டு சிவபெருமானை வணங்குதற்குத் திருவஞ்சைக் களத்துக்குச் சென்று வழிபாடு ஆற்றியபின், திரும்பி யானைமேல் ஏறி உலா வரும்போது எதிரில் உவர் மண் பொதியைச் சுமந்த வண்ணான் ஒருவன் வரக்கண்டார். மழையில் நனைந்து, உவர்மண் ஊறி அவனுடைய மேனி வெளுத்த வடிவினால் "உழையிற் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம்" என்று உணர்ந்து, யானையினின்றும் இழிந்து, எதிரே சென்று கை தொழுதார். சேரமன்னன் தொழக் கண்டு, அவ்வண்ணான் "அடியேன் அடிவண்ணான்" என்னலும், சேரர் பிரானும் "அடிச்சேரன் அடியேன்; நீவிர் திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர் ஆதலால் வருந்தாது ஏகும்" என்று மொழிந்து, பின் ஆனையேறி வீதிவலங் கொண்டு தம் திருமாளிகைக்குச் சென்றார். புக்கபின் அரசு கட்டிலில் வைகி ஏனைய அரசர்கள் போற்றிட அரசு செலுத்தி வந்தார்.

---

1. பெரிய புராணம்—கழறிற்—14.

இவருடைய காலத்தில் சோழ நாட்டில் அரசாண்ட வளவன் பழையாறைச் சோழன். இவன்தான் பழையாறைக் கோவிலை மண்ணில் புதையுண்டிருந்ததை வெளிப்படுத்தி, அப்பர் அடிகள் வடக்கிருத்தலைத் தடுத்துத் தரிசனம் செய்வித்தவன். அச் சமயம் பாண்டி நாட்டில் அரசாண்டவன் கூன் பாண்டியனின் மகன் கோச்சடையன் இரணதீரன் (670—700 A. D.) என்பவன். அதே காலத்தில் பல்லவர் நாட்டில் அரசு புரிந்தவன் காடவர் கோன்கழற்சிங்கன் என்கிற இராசசிம்மன் நரசிம்மவர்மன் II (685—710 A. D.) என்பவன் ஆவான். இவர்கள் எல்லோரும் ஒற்றுமையாய், அகத்தும் புறத்தும் பகையறுத்து, திருநான்மறைகள் வளர, திருநீற்றொளி விளங்க, அரசு புரிந்து வந்தார்கள்.

இவ்வாறு நாடு அமைதி பெற்று இருக்கையில் கழறிற்றறிவார் "தேடும் பொருளும் பெருந்துணையும் [1] தில்லைத் திருச் சிற்றம்பலத்துள் ஆடுங்கழலே" என்று தெளிந்து, நடராசப் பெருமானுடைய பூசை கைக்கொண்டு வழிபட்டு வந்தார். பூசை முடிவில், "பெருங் [2] கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலி அளித்து வந்தார்."

## பாணபத்திரர்

இவ்வாறு இருக்கையில், ஆலவாய் என்னும் மதுரையில் பாணபத்திரர் என்பவர் ஆலவாய் இறைவனைப்பாடிப் பொருள் வேண்டி நின்றார். அன்று அவருடைய கனவில், "என்பால் அன்பால் எப்பொழுதும் பரவும் சேரன் தனக்கு உனக்குப் பைம் பொற்காணம், பட்டாடை, விரவு கதிர் செய் நவமணிப்பூண் வேண்டிற்றெல்லாம் குறைவின்றித் தர நாம் ஓலை தருகின்றோம்; தாழாது ஏகிப் பெற்று வருக" என்று கூறி, ஓலையில் அடியில் வரும் பாசுரத்தை எழுதிக் கொடுத்துவிட்டு மறைந்து விட்டார் இறைவர். அத் திருமுகப்பாசுரம் வருமாறு :—

---

1. பெரிய புராணம்—கழறிற்—23
2. பெரிய புராணம்—கழறிற்—24

“ மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமா உகைக்கும் சேரலன் காண்க ;
பண்பால் யாழ் பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன், தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே ”

என்பதே.

பாணபத்திரனார் விழித்து எழுந்து, சிவபிரானுடைய திருவருளை வியந்து, ஆலவாய் இறைவன் கோயில் இருக்கும் திசைநோக்கித் தொழுது வணங்கி, ஓலையை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு பரவசப் பட்டார். பின் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு இறைவன் கோவில் சென்று வணங்கி விட்டு, மலைநாடு நோக்கிச் சென்றார். சென்று திருவஞ்சைக்களம் சேர்ந்து, அரசன் மாளிகையை அடைந்து, தெரிவிக்க, சேரமான் ஓடோடியும் வந்து பாணனாரை வணங்கினார். அவர் கொடி சேர் விடையார் திருமுகம் கொடுத்து வணங்கினார். அரசன் திருமுகத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு, முடிமேல் கொண்டு கூத்தாடி, படி எடுக்கும்படி அருளிச் செய்து, அமைச்சர் முதலிய எல்லோருக்கும் அறிவித்து, பாணனாருக்கு வேண்டுவன வெறுக்க அளித்தார் பாணனார் பெற்றுக் கொண்டு மதுரை சென்றபின், சேரர் பெருமான், வளவன் —செழியன் முதலிய எல்லா அரசர்களும் நட்புரிமை கொள்ள அரசு செய்து கொண்டு, சிவத்தொண்டு, சிவபூசை முதலியன வழுவாமல் செய்து வந்தார்.

## சுந்தரர் நண்பர் ஆனது

சிவபூசை முடிவில் ஒவ்வொரு நாளும் நடராசப் பெருமானுடைய சிலம்பொலி சேர அரசருக்குக் கேட்டு வந்தது. ஒருநாள் அவ்வொலி கேளாதாயிற்று. உடனே சேரன், "அடியேன் என்னே பிழைத்தது?" எனப் பொருமி, "ஆசை உடம்பால் மற்றினி வேறு அடையும் இன்பம் யாது" என்று உடை வாளை உருவித் திருமார்பினில் நாட்டப்போக, ஈசர் விரைந்து சிலம்பின் ஓசையை இசைப்பித்தார். அவ்வொலி கேட்டதும் உடைவாளை அகற்றி, அங்கை தலைமேற் குவியத் தொழுது, எழுந்து, "நெடுமால்—பிரமன் — அருமறைமுன் தேடற்கரியாய், திருவருள் முன் செய்யா தொழிந்தது எதனால்?" எனக் கேட்க, இறைவர் அசரீரியாக, "மன்றினிடை நம் கூத்தாடல் வந்து வணங்கி, வன்றொண்டன் ஒன்றும் உணர்வால் நம்மைப் போற்றி, உரை சேர் பதிகம் பாடினன், அதனை நின்று கேட்டு வரத் தாழ்த்தோம், கவலற்க" என்று கூறினர். இதைக் கேட்டவுடனே சேரர் பெருமான் பொன்னம்பலத்தையும் வன்றொண்டரையும் காண்பான் விரும்பி வேண்டும் ஏற்பாடுகள் செய்யலானார்.

அக்காலத்தில், சோழநாடு பல்லவர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. அப்போது, சோழநாடு தொண்டை நாடு இரண்டிற்கும் அரசராக இருந்தவர் இராசசிம்மன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மனாகிய காடவர் கோன் கழற்சிங்கன் என்பவர் ஆவர். காடவர் கோனும் சிவனடி மறவாத சிந்தையாளன். அறுபான் மும்மை நாயன்மார்மார்களில் ஒருவன். சுந்தரரால் திருத்தொண்டத் தொகையில், "கடல் சூழ்ந்த உலகமெல்லாம் காக்கின்ற பெருமான், காடவர்கோன் கழற் சிங்கன்" என்று பாடப் பெற்றவன். பல்லவர் நாட்டைக் கி. பி. 685 முதல் கி. பி. 710 வரை ஆட்சி புரிந்தவன்.

முதலாம் சேரமான் பெருமான் காடவர் கழற்சிங்கனுடைய நட்பைப் பெற்றவரானபடியால், சிதம்பரம்

சென்று, கூத்தப் பெருமானை வணங்கி, அவர் பேரில் "பொன் வண்ணத்து அந்தாதி" என்னும் நூலைப்பாடி, அங்கேயே அரங்கேற்றிவிட்டு, சின்னாள் இருந்து, அங்கிருந்தும் திருவாரூர் சென்று, சுந்தரமூர்த்திகளைக்கண்டு தரிசித்து, அவருடைய நட்பைப் பெற்று, திருவாரூர்த் தியாகேசரை வணங்கி, அவர் பேரில் "மும்மணிக் கோவை" என்ற நூலைப்பாடி, அங்கே அரங்கேற்றிவிட்டு, தாமும் சுந்தரமூர்த்திகளும் மதுரை சென்றார்கள்.

மதுரையில் பாண்டியன் கோச்சடையன் இரணதீரனும் (கி. பி 670—710.), அவனுடைய மருமகன் சோழநாட்டு இளவரசனும், சுந்தரரையும் கழறிற்றறிவாரையும் எதிர்கொண்டு அழைத்து, வரவேற்று உபசரித்தார்கள். சேர—சோழ — பாண்டியர்கள் மூவரும் சுந்தரமூர்த்திகளும் மதுரையில் ஆலவாய்ப் பெருமானை வணங்கிக்கொண்டு சின்னாள் தங்கினார்கள். முடிமன்னர்கள் மூவரும் சுந்தரரும் சேர்ந்தே திருப்பூவணம், திரு ஆப்பனூர், திருவேடகம், திருப்பரங்குன்றம் முதலிய தலங்களை வணங்கிய பின், சுந்தரரும் கழறிற்றறிவாரும் சோழ--பாண்டியரிடம் விடைபெற்று, தென்பாண்டி நாட்டுத் தலங்களைக்காண்பான் சென்று, திருக்குற்றாலம், திருநெல்வேலி, திரு இராமேச்சுரம், அங்கிருந்தே இலங்கைத் தலங்களாகிய மாதோட்டம், திருக்கேதீச்சுரம் முதலியன வணங்கி, அங்கிருந்து புறப்பட்டு திருச்சுழியல், திருக்கானப்பேர், திருப்புனவாயில், திருப்பாம்பணி முதலிய தலங்களையும் கண்டு வணங்கிக் கொண்டு, திருவாரூர் சென்று சேர்ந்தார்கள்.

திருவாரூரில் பரவை நாச்சியாரால் உபசரிக்கப்பட்டு, புற்றிடங் கொண்டாரை வணங்கி, சின்னாள் தங்கி இருந்து, பரவையாருடைய இசைவு பெற்று, மலைநாடு செல்வான் கருதி, சேரர் பெருமானும் தம்பிரான் தோழரும் பூங்கோயில் புக்குத் தம்பிரான் அருள் பெற்று, இருவரும் புறப்பட்டு, திருக்கண்டியூர், திருவையாறு, முதலிய சோழநாட்டுத் தலங்களை வணங்கிக்கொண்டு, கொங்குநாடு சென்று அணைந்தார்கள். பிறகு கொங்குநாட்டுத் தலங்

களை வணங்கிக்கொண்டு மலைநாடு சேர, அமைச்சர் முதலி யோர் வஞ்சி நகரை அலங்கரித்து, இருவரையும் எதிர் கொண்டு அழைத்து வரவேற்று, உபசரித்தார்கள்.

இருவரும் நேரே திருவஞ்சைக்களம் சென்று அப்பனை வணங்கி, மாளிகை புக்கு வதிந்து வந்தார்கள்.

சின்னாட்கள் கழித்து, சுந்தரர் திருவாரூர் அரனை நினைந்து, சேரர் பெருமானிடம் விடைபெற்று, பொன் னும், மணியும், பொருளும், அணியும், ஆடையும், தூசும் பெற்று, ஆரூர் சென்று அணைந்தார்.

சில காலம் கழித்து, கி. பி. 712ல், சுந்தரர் மறு படியும் நண்பர் சேரமான் பெருமானைப் பார்க்க விரும்பி, ஆரூரினின்றும் புறப்பட்டு, வழியில் பல தலங்களை வணங்கிக் கொண்டு, மலைநாடு அணைந்து, வஞ்சி சென்று, சேரர் பெருமானோடு வதிந்து வந்தார். அப்படி இருக்கும் போது, அவ்வாண்டில் ஆடித்திங்கள் சுவாதிநாளில் திருவஞ் சைக்களம் சென்று, இறைவரை வணங்கி, தாம் இவ்வுல கிற்கு வந்த காரியம் முடிந்துவிட்டதாகவும், தாம் கைலைக்கு வர விழைவதாகவும் சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டார். திருவஞ்சைக்களத்தில் ஆரூரர் செய்து கொண்ட வேண்டுகோளைக் கைலையில் உள்ள சிவபெரு மான் உணர்ந்து, கணங்களுக்குக் கட்டளையிட்டார். கணங் கள் எல்லோரும் ஒரு வெள்ளை யானையுடன் திருவஞ்சைக் களம் வந்து, திரு ஆரூர் நம்பிக்குத் தெரிவிக்க, நம்பி ஆரூரர் அவ் வெள்ளை யானையின் பேரில் எழுந்தருளி திருக்கைலைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இது செய்தியைச் சேரமான் பெருமாள் கேள்வி யுற்று, தம் பட்டத்துக் குதிரையை வரவழைத்து, அதற்கு அஞ்செழுத்தை உபதேசம் செய்து, அதன்மேல் எழுந் தருளி சுந்தரரை வலம் செய்து வணங்கிக் கொண்டே அவரோடு கைலை சென்றார்.

கைலையில் கைலாயபதியாகிய சிவபெருமான் மீது "திருக்கைலாய ஞான உலா" என்ற நூலைச் சேரமான்

பெருமாள் பாடி, கைலாயபதியின் திருவடிகளில் அணிய அவருடைய அருள்பெற்று அங்கேயே அவ்வுலாவை அரங்கேற்றுதல் செய்தார். அந்த அரங்கேற்று அவையில் இருந்த சோழநாட்டுப் பிடவூர்ச் சாத்தனார் என்பவர், அத் திருக் கைலாய ஞான உலாவை எழுதிக்கொண்டு வந்து இவ்வுல கிற்கு உதவினார்.

முதலாம் சேரமான் பெருமாள் கைலைக்குச் சுந்தர ருடன் புறப்படுவதன் முன்னம் தம் மகனார் தம்பிரான் தோழர் பெருமாளுக்குப் பட்டஞ் சூட்டிவிட்டுப் பிறகு கைலை சென்றார்.

முதலாம் சேரமான் பெருமாள் சிவபெருமானுடைய அருளைப்பெற்று, அவருடைய அருளினால் எல்லா உயிர் களின் மொழிகளையும் உணர்ந்து, அருள்நெறியில் ஆட்சி செலுத்தி வந்தபடியாலும், ஏனைய அரசர்கள் எல்லோரும் இவருக்கு நண்பர்களாக இருந்தபடியாலும், இவர் காலத் தில் சேரநாட்டில் போர் முதலிய கொடுமைகள், வறுமை, நோய் முதலியவைகள் இல்லாமல் நாடு அமைதியுற்று, வளம்பெற்று இருந்தது. குடிகள் எல்லாரும் மகிழ்ச்சி யுடன் வாழ்ந்து வந்தார்கள்.

---

## ௩௧. தம்பிரான் தோழர் பெருமாள்
### [கி. பி. 712—கி. பி. 754]

இவர் முதலாம் சேரமான் பெருமாள் என்ற பெரு மாக் கோதையாரின் மகனார் ஆவர். கி. பி. 712ல் கழறிற் றறிவார் சுந்தரருடன் கைலை செல்லும்முன் இவருக்கு முடிசூட்டி விட்டுச் சென்றார்.

இவர் பட்டத்துக்கு வந்தபோது இவருக்கு வயது சுமார் 24 இருக்கும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின் றனர். இவர் இளவரசாக இருக்கும்போது எல்லாத் துறை

களிலும் பயிற்சி பெற்று அரசாளும் திறத்தைப் பெற்றிருந் தார். ஆதலினாலே, கி. பி. 712ல் முதலாம் சேரமான் பெருமாள் கைலை சென்றதும் முடிபுனைந்து, அரசாள் உரிமையை எளிதாக ஏற்றுக் கொண்டார்.

இவர் பிறந்தது கி. பி. 688ல். இவருடைய ஆட்சிக் காலம் 42 ஆண்டுகள். இவர் 66 வயது வரை இருந்து இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலத்திலும் சேரநாடு அமைதி பெற்று, வளம் உற்று, செழிப்படைந்து, மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந் தார்கள்.

---

## ௩௨. இரண்டாம் சேரமான் பெருமான்

[கி. பி. 754—கி. பி. 798]

[இவர் பிறந்தது கி. பி. 730; அரசு கட்டில் ஏறியது கி. பி. 754; 'பெருமாள்' என்னும் பட்டம் பெற்றது கி. பி. 789; அரசைக் கை விட்டது கி. பி. 798; பரம பதம் சேர்ந்தது கி. பி. 803.]

### பிறப்பு

இவர் திருவஞ்சைக் களத்தில் கி. பி. 730ல் பராபவ ஆண்டு—மாசி மாதம்—வளர்பிறை—12-ம் நாள்—வெள் ளிக்கிழமை புனர்பூசநாளில் அவதரித்தார்[1]

---

1. நாலாயிரப் பிரபந்தம் பக்கம் 6:—இவ்வாழ்வார் கொல்லி நகரில் கலி 28—பராபவ — மாசி—சுக்லபக்கம் — துவாதசி— வெள்ளி—புனர்பூசத்தில் த்திரடவிரதர்க்கு புத்திரராக அவதி ரித்தார் என்று இருக்கிறது.

சரித்திர ஆராய்ச்சிப்படி இவர் கி. பி. 730-ல் பிறந்தவர் என்று ஏற்படுகிறது (தமிழ் இலக்கிய வரலாறு—பக். 350- கா. சு. பிள்ளை.)

இவருடைய தகப்பனுர் த்ரடவ்ரதர் என்று நாலாயிரப் பிரபந்தம் கூறுகிறது. த்ரடவ்ரதர் என்பது திராவிட விருத்தர் (= தமிழ்ப் பெரியார்) என்பதன் மரூஉ என்று சிலபேர் கருதுகிருர்கள். இவருடைய தாயார் பெயர் தெரியவில்லை.

இளவயதிலேயே இவர் அரசியற்றுறைகளிலும், போர்த் துறைகளிலும் பயிற்சி பெற்றதோடு வடமொழி தென்மொழிகளிலும் பயிற்சி பெற்று வந்தார்.

தம்பிரான் தோழர் பெருமாளுக்கும் இவருக்கும் என்ன உறவு என்பது விளங்கவில்லை. ஆனுல், இவர் அவருக்குத் தாயாதி என்று மாத்திரம் விளங்குகிறது.

சேரர் குலத்தைச் சேர்ந்த அரசர்கள் எல்லாம் சைவர்களாய் இருக்க, இவர் ஒருவரே வைணவ நெறியைக் கைக்கொண்டு, அதில் ஒப்பற்றவராக விளங்கினுர்.

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் இவரும் ஒருவர். இவர் இரு மொழிகளிலும் வல்லவர் ஆனபடியால், வடமொழியில் "முகுந்தமாலா" என்ற நூலையும், தென்மொழியில் "பெருமாள் திருமொழி" என்ற பத்துப் பதிகங்களையும் (மொத்தம் 105 பாசுரங்கள்) பாடியுள்ளார்.

பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வாரும், ஆண்டாள் அம்மையாரும் இவர் காலத்தவர்கள். இவர்கள் இருவரும் பாண்டி நாட்டில் சீவில்லிபுத்தூரில் வாழ்ந்து வந்தார்கள். கி. பி. எட்டாம் நூற்றுண்டில், அதாவது, சுந்தரமூர்த்திகளும் முதலாம் சேரமான் பெருமாளும் கி. பி. 712-ல் கைலை சென்றபின் வைணவ மதம் நாடெங்கும் பரவியது.

பாண்டி நாட்டில் நெடுஞ்சடையன் என்னும் முதலாம் பராந்தகப் பாண்டியன் (கி. பி. 765—790) என்னும் அரசனும், பல்லவர் நாட்டில் இரண்டாம் நந்திவர்மன் (கி. பி. 717-775) என்னும் அரசனும் பெரியாழ்வார் உபதேசத்தால் வைணவ மதத்தை மேற்கொண்டனர். அத்துடன் நாடெங்கும் வைணவ மதம் பரவவேண்டுவதற்கான வசதிகளைச் செய்து வந்தார்கள். அப்போது சோழநாடு

பல்லவர்க்கு உட்பட்டு இருந்தது. சோழ பரம்பரையினர் இருந்த இடம் தெரியாமல், காலம் கருதி மறைந்து வாழ்ந்து வந்தார்கள்.

இவருடைய ஆட்சியில் முற்பகுதி, அஃதாவது கி. பி. 754 முதல் கி. பி. 775 வரை சேர நாட்டில் அமைதியே நிலவி இருந்தது. அதனால், இவர் திருமாலை வழிபடுவதிலும், திருமால் அடியார்களுக்கு அன்னம், ஆடை முதலியன அளிப்பதிலும், பாகவதர்களைக்கொண்டு இராமாயணச் சொற்பொழிவு செய்வதிலும் காலத்தைக் கழித்து வந்தார்.

இவர் பாடிய பெருமாள் திருமொழிப் பாட்டுக்களை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், அவர் தம்மைக் "**கூடல் நாயகன்**" என்றும், "**கோழிக்கோன்**" என்றும், "**கொங்கர் கோன்**" என்றும், "**கொல்லிநகர்க்கிறை**" என்றும் கூறியுள்ளார் என்று அறியக்கிடக்கின்றது.

பாண்டிய பல்லவ அரசர்கள் வைணவர்களாயும், இவரும் அவர்களும் ஒரே குருவாகிய பெரியாழ்வாரின் மாணவர்களாகவும், நண்பர்களாகவும் இருக்க, இவர் பாண்டிய, சோழ, கொங்கு நாடுகளை வென்று ஆட்சி புரிந்தது எப்போது என்பது ஆராயத்தக்கது.

கி. பி. 775-ல் இரண்டாம் **நந்திவர்மன்** இறந்தான். அவன் இறந்ததும் அவனுடைய மகன் **நந்திவர்மன்** என்ற **வைரமேகன்** பட்டத்துக்கு வந்தான். அவன் தகப்பனைப் போல வலிமைபெற்றோன் அல்லன். ஆதலால், அவன் காலத்தில் சேர அரசனுக்கும் தந்திவர்மனுக்கும் போர் நிகழ்ந்தது. போரில் தந்திவர்மன் தோற்கடிக்கப்பட்டான். இதனால், இரண்டாம் சேரமான் பெருமாள் உறையூரைக் கைப்பற்றிச் சோழநாட்டை இணைத்துக்கொண்டு "**கோழிக்கோன்**" என்ற பட்டம் சூட்டிக் கொண்டான்.[1]

கி. பி. 790-ல் நெடுஞ்சடையன் என்ற முதலாம் பராந்தக பாண்டியன் இறந்தான். அவன் இறந்ததும் அவன்

1. பல்லவர் சரித்திரம்: பக்கம் 20—25. P. T. சீனிவாச அய்யங்கார்.

மகன் இரண்டாம் இராசசிம்மன் பட்டத்துக்கு வந்தான். அவன் தந்தையைப்போல வல்லமையுடையவன் அல்லன். அவன் தந்தை இறக்கும்போது கொங்கு நாடும் பாண்டியர் ஆட்சியில் இருந்தது.

இரண்டாம் இராசசிம்ம பாண்டியனுக்கும் சேர அரசனுக்கும் பகைஏற்பட்டுப் போர் மூண்டது. போரில் சேரனே வெற்றி பெற்றான். அதனால் சில காலம் பாண்டிய நாடும் கொங்கு நாடும் சேரனுக்கு உட்பட்டிருந்தன. அதனால், சேரன் தன்னைக் "கூடற்கோன்"—கொங்கர்[1] கோன்" என்று கூறிக்கொள்ளும்படி ஆயிற்று. கி. பி. 790-க்கு அப்புறமே கொங்கு நாடும் பாண்டிய நாடும் சேரனுக்கு உட்பட்டன.

'**கொல்லி நகர்க்கு இறை**' என்று பாட்டில் கூறப்பட்டுள்ளது என்ன என்றால் **கொல்லிநகர்** என்பது **கொடுங்கோளூர்**; அதனால் கொல்லிநகர்க்கிறை என்றால் **வஞ்சி அரசன்** என்பதே பொருள் ஆகும்.

**வஞ்சி — கொடுங்கோளூர் — கொல்லிநகர் — மகோதைப் பட்டினம்** என்ற பல பெயர்கள் சேரர் அரசிருக்கையைக் குறிக்கும். அவைகள் எல்லாம் சேரரின் சிறந்த நகரத்தின் பல பகுதிகளாகும். இப்போது சென்னைப் பட்டினத்தில் சிந்தாதிரிப்பேட்டை—புரசைவாக்கம்—மயிலாப்பூர் — திருவல்லிக்கேணி — இராயபுரம் — இராயப்பேட்டை —சூளை முதலிய பகுதிகள் இருப்பதுபோல என்க.

இரண்டாம் சேரமான் பெருமாள் கி. பி. 789-ல் நம் பூத்திரிகளுடைய கிராம ஆட்சியை ஏற்றுக்கொண்டு, "**பெருமாள்**" என்ற பட்டம் பெற்று, ஒன்பது ஆண்டுகள் அக் கிராம ஆட்சி செய்து வந்தார். (Vide Perumal list attached). இருக்க இருக்க அவருக்கு அரசாட்சியில் வெறுப்புத் தோன்ற, கி பி. 798-ல் தன் மகன் **மார்த்தாண்ட வர்மனுக்குப்** பட்டம் கட்டி, அரசாட்சியை அவன் கையில்

1. திருவாய்மொழி 10—குலசேகராழ்வார்; பாண்டியர் வரலாறு—பண்டாரத்தார்: பக்கம், 30.

ஒப்புவித்துவிட்டு, திருமால் திருப்பதிகள் பலவற்றையும் கண்டு வணங்க, தம்முடைய குழாத்துடன் புறப்பட்டு, திருவரங்கம்—கண்ணபுரம்—தில்லை (சித்திரகூடம்)—திருவேங்கடம்—காஞ்சிபுரம்—திருநாராயணபுரம் (மேல் கோட்டை) முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு, ஆங்காங்குத் திருப்பாட்டுக்கள் பாடித் திருமாலை வழுத்தினர். அவர் பாடிய பாட்டுக்களுக்கு "பெருமாள் திருமொழி" என்று பெயர்.

கடைசியாக, கி. பி. 803-ல் இவரும் இவர் கூட்டமும் வீரநாராயணபுரம் என்னும் தலத்தை அடைந்து, அங்கே மன்னனூர் கோயில் என்ற இடத்தில் இவர் தம் பூத உடலை நீத்துப் பரமபதம் புக்கார்.

---

## ௧௧. மார்த்தாண்டவர்மன்

### [கி. பி. 798—கி. பி. 850]

இவர் இரண்டாம் சேரமான் பெருமானுடைய தவப் புதல்வர். கி. பி. 798-ல் குலசேகராழ்வார் என்ற இரண்டாம் சேரமான் பெருமாள் இவருக்குப் பட்டத்தைக் கட்டி அரசாளும்படி ஏற்பாடு செய்துவிட்டு, திருமால் திருப்பதிகளைத் தரிசிக்கச் சென்றதும், இவர் பட்டம் எய்தி நாட்டை ஆளத்தொடங்கினர்.

ஆனால், குலசேகர ஆழ்வாரின் தாயாதியாகிய பாஸ்கர இரவிவர்மன் என்பவன் மகமதியர்—பௌத்தர்—கிறித்துவர்—நம்பூத்திரிகளுடைய உதவி பெற்று, நாட்டில் கலகத்தை விளைவித்து, மார்த்தாண்ட வர்மனிடமிருந்து அரசைக் கைப்பற்றி, தான் மூன்றும் சேரமான் பெருமாள் என்னும் பெயர் தாங்கி, முடிசூடிக்கொண்டு சேரநாட்டை ஆட்சி புரிந்தான்.

மூன்றும் சேரமான் பெருமாள், மார்த்தாண்ட வர்மனையும் பகைத்துக் கொள்ளாமல் சேரநாட்டின் தென்

பகுதியாய் உள்ள வேண்நாட்டை (திருவிதாங்கோடு) அவனுக்குக் கொடுத்துத் தன்கீழ் அரசாட்சி செய்யும்படி பணித்து நட்புச் செய்து கொண்டான்.

மூன்றாம் சேரமான் பெருமாள் கி.பி. 798 முதல் கி.பி. 834 வரை சேரநாட்டை ஆண்டு வந்தான். கி. பி. 834-ல் சேரநாட்டைப் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்து மார்த்தாண்ட வர்மனுக்கு வேணாட்டோடு ஒட்ட நாட்டையும் கொடுத்து ஆளும்படி செய்தான். தன் சகோதரிகள் ஐந்து பேருக்கும் குட்ட நாட்டையும் (கொச்சி), தன் தம்பி மகனுக்கு ஏரநாட்டையும் (கோழிக்கோடு), மற்ற உறவினர், வேலைக்காரர்களுக்கு ஏனைய ஒன்பது நாடுகளையும் பிரித்துக் கொடுத்து விட்டு, ஒரு மகமதியப் பெண்ணுடன் மெக்கா சென்று, மகமதியமதத்தைத் தழுவி, மெக்காவுக்கு அருகில் உள்ள ஜபார் என்னும் இடத்தில் சின்னாள் தங்கியிருந்து, கி. பி. 838-ல் அங்கேயே இறந்து போனார்.

## மார்த்தாண்டவர்மன்

**மார்த்தாண்டவர்மன்** கி. பி. 798 முதல் வேணாட்டில் அரசு செய்துகொண்டு இருக்கும்போது, கி. பி. 834-ல் ஒட்டநாடும் கிடைக்கவே, இரண்டு நாடுகளையும் ஒன்று சேர்த்து திருவிதாங்கோடு[1] (திருவாங்கூர்) என்ற பெயரால் நல்ல முறையில் ஆட்சி செலுத்தி வந்தான். மூன்றாம் சேரமான் பெருமாள் கி. பி. 834-ல் மெக்கா சென்றதும் திருவிதாங்கோடு தன் ஆட்சி பெற்றது.

தன் ஆட்சி பெற்றதும், மார்த்தாண்டவர்மன் திருவிதாங் கோட்டிலேயே முடிசூடிக்கொண்டு, வேணாட்டடிகள் என்ற பட்டம் வகித்து, ஆட்சி புரிந்தான். அப் பட்டம் இன்றும் திருவாங்கூர் அரசர்களுக்கு வழங்கிவருவது இதனை வலியுறுத்தும்.

1. திருவிதாங்கோடு—அதங்கோடு என்றும் வழங்கப்படும். அகத்தியர் மாணவர் பன்னிருவரில் அதங்கோட்டாசான் அவ் ஊரினர்.

மார்த்தாண்டவர்மன் பரம வைணவரான குலசேகர ஆழ்வாரின் புதல்வராய் இருந்தும், சேர பரம்பரையின் முறைப்படி, சைவநெறியையே கொண்டிருந்தான். ஆனால், ஏனைய சமயங்களை வெறுத்தவன் அல்லன். பரம சிவபத்தனாக இருந்தும் திருவாங்கூரில் உள்ள அனந்த பத்மநாப சுவாமி கோவிலைப் புதுப்பித்துப் பல தானங்கள் வழங்கியுள்ளான். 'பத்மநாப தாசன்' என்ற பட்டமும் ஏற்றுக் கொண்டான்.

தகப்பனார் எப்படி இரு மொழிகளிலும் வல்லவரோ அது போலவே மார்த்தாண்டவர்மனும் இரு மொழியிலும் வல்லவன். பல தமிழ்ப் புலவர்களும் வடமொழிப் புலவர்களும் இவனுடைய அவையை அழகுறுத்தினார்கள். இவன் காலத்தில் வேளாண் வளப்பம் எய்தியது. வணிகம் செழித்தது. நாடு எங்கும் தெய்வநெறி பரவி ஒளிர்ந்தது. நாடு அமைதியுற்றுச் செழித்து ஓங்கியது. இப்படி இருக்கும்போது, கி. பி. 850-ல் இவருக்கு அரசியலில் வெறுப்பு ஏற்பட்டு, அரசைத் துறந்து, தவக்கோலம் பூண்டு, தில்லை சென்று, கூத்தப் பெருமானை வணங்கிக்கொண்டு இருக்கும் காலத்தில், திருவிசைப்பா என்னும் பாமாலைபாடி நடராசப் பெருமான் திருவடியில் சூட்டினார். அப்பதிகம் "வேணாட்டடிகள் திருவிசைப்பா" என வழங்கப்படும். பத்துப் பாட்டுக்கள் அடங்கிய ஒரு பதிகம் புறநீர்மைப் பண்ணில் பாடியுள்ளார். அப்பதிகம் "துச்சான செய்திடினும்" என்று ஆரம்பிக்கிறது.

அப்பதிகத்தை ஆராயின், துச்சான—கதலி—வேம்பு—தோரம்பன்—விளித்தல் முதலிய வேணாட்டுக் கொடுந்தமிழ் மொழிகளும், 'தம்பானை சாயப்பெற்றார்'—'பொரியோநோ கீழ்க் கொம்பு நிறை குளம்'—'இடுவது புல் ஓர் எருதுக்கு ஒன்றினுக்கு வை இடுதல்' முதலிய அந்நாட்டுப் பழமொழிகளும் விரவி உள்ளதைக் காணலாம்.

வேணாட்டடிகள் பத்மநாபதாசன் என்று பெயர் வைத்துக்கொண்டது போலவே, திருவிசைப்பா கடைசிப் பாட்டில் 'பத்தர் அடித்தொண்டன்'—'நாய் அடியேன்' என்று

தம்மைக் கூறிக்கொண்டுள்ளது ஒரு ஒற்றுமை நயத்தை வெளியாக்குகிறது.

9-ம் திருப்பாட்டில் "அடியோன் உன்தாள் சேரும்நாள் ஏதோ? திருத்தில்லை நடம் பயிலும் நம்பானே" என்று விண்ணப்பம் செய்து கொண்டுள்ளதை நோக்க, அவர் தில்லையிலேயே நடராசப் பெருமான் திருவடியில் கலந்தார் என்று கொள்ளக்கிடக்கிறது.

---

## ௩௪. மூன்றும் சேரமான் பெருமாள்

[கி. பி. 798—கி. பி. 834]

| | |
|---|---|
| இவ்வரசன் பட்டத்துக்கு வந்தது | கி. பி. 798 |
| பட்டத்தை வெறுத்து விட்டுவிட்டது | 834 |
| சேரநாட்டை 12 பகுதிகளாகப் பிரித்ததும் மெக்காவுக்குச் சென்றதும் | 834 |
| மெக்கா சென்று மகமதிய மதத்தில் சேர்ந்து, பின் ஜபார் (Jaffar) என்னும் இடம் சென்று வாழ்ந்து இறந்தது | 838 |

இரண்டாம் சேரமான் பெருமாள் கி. பி. 798-ல் தன்னுடைய மகனுக்கு அரசைக் கொடுத்துவிட்டு, தவக்கோலம் பூண்டு, பாகவதர் கூட்டத்துடன் திருமால் திருப்பதிகளைச் சேவிக்கச் சென்றவுடன், அவன் மகன் மார்த்தாண்டன் ஆட்சிக்கு வந்தான். ஆனால், தாயாதிகளுக்குள் கலகம் ஏற்பட்டு, நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன. அப்போது, சேரநாட்டில் யூதர்களும் (Jews), சிறியன் கிறிஸ்தவர்களும் (Syrian Christians), மகமதியர்களும், நிறைந்து இருந்தார்கள். வாணிப நிமித்தம் வந்த இவர்கள் சேரநாட்டில் பல இடங்களைக் கைப்பற்றி, தற்பாதுகாப்புக் கொண்டு படைகளும் வைத்திருந்தார்கள்.

இரண்டாம் சேரமான் பெருமாளுக்குத் தாயாதியான மூன்றும் சேரமான் பெருமாள் தன் நாட்டில் இருந்த பௌத்தர், யூதர், கிறித்துவர், மகமதியர் என்பவர்களுடைய நட்பைப் பெற்று, அவர்களைத் தனக்குத் துணைபுரியும்படியும், அப்படித் தனக்குத் துணைபுரிந்தால், அரசாங்கத்தைத் தான் கைப்பற்றியதும் அவர்களுக்கு வேண்டும் உதவி செய்வதாகவும் வாக்களித்து, அவர்களுடைய துணைகொண்டு சேரநாட்டு அரசைக் கைப்பற்றிக் கொண்டான். மூன்றும் சேரமான் பெருமாளுக்கு இயற்பெயர் பாஸ்கர இரவிவர்மன் என்பது. அவனுடைய முடிசூடியபெயர் தான் மூன்றும் சேரமான் பெருமாள் என்பது.

வேள்விக்குடி--சீவரமங்கலம் செப்பேடுகளில், நெடுஞ்சடையன் என்கிற முதலாம் பராந்தக பாண்டியன் (கி.பி. 765—790), பல்லவர்களைப் பெண்ணுகடம் என்னும் இடத்தில் தோற்கடித்து, பல்லவ நாட்டின் தென்பகுதியைக் கைப்பற்றினன் என்றும், வேணாட்டில் (திருவாங்கூர்) ஆட்சி செலுத்தி வந்த வேள்ஆய் என்பவனை விழிஞம் என்னும் இடத்தில் முறியடித்து, வேணாட்டைப் பாண்டிய நாட்டோடு இணைத்துக்கொண்டான் என்றும் காண்கிறோம்.[1]

மேலே கூறப்பட்ட பாண்டியன் நெடுஞ்சடையன் கி. பி. 790-ல் இறந்ததும், இரண்டாம் சேரமான் பெருமாள் என்கிற குலசேகர ஆழ்வார் நெடுஞ்சடையன் மகன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியனோடு சண்டை செய்து, அவனைத் தோற்கடித்து, வேணாட்டைச் சேரநாட்டோடு சேர்த்துக்கொண்டான் என்று அவருடைய சரித்திரத்தில் படித்தோம். ஆதலின், மூன்றும் சேரமான் பெருமாள் கி. பி. 798-ல் பட்டத்துக்கு வந்தபோது வேணாடு சேரநாட்டுக்கு உட்பட்டிருந்தது என்பது தெரிகிறது.

இரண்டாம் சேரமான் பெருமாளுடைய மகனைப் பகைத்துக்கொள்ள மனம் இல்லாமல், உள்நாட்டுக் கலகம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, அவனுக்கு வேணாட்

1. Copper plates of Velvikudi and Seevaramangalam.

டைக் கொடுத்து, தனக்குக்கீழ் ஆளும்படி செய்தார் மூன்றாம் சேரமான் பெருமாள். இது அரசியல் சூழ்ச்சிகளில் ஒன்று. கடைசியாக, கி. பி. 834-ல் மூன்றாம் சேரமான் பெருமாள் சேரநாட்டைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்தபோது, வேணாட்டோடு, ஒட்டநாட்டையும் சேர்த்து மார்த்தாண்டவர்மனுக்குக் கொடுத்தார்.[1] அதுமுதல் சென்ற ஆண்டுவரை திருவாங்கூர் (வேணாடும் ஒட்டநாடும் சேர்ந்தது.) அரசு கட்டிலில் வீற்றிருந்தவர் இவர் பரம்பரையினரே ஆவர்.

கி. பி. 834-ல் வேணாடு தனியாகப் பிரிக்கப்பட்டு, தன் ஆட்சி ஏற்பட்டதும் அரசருக்கு வேணாட்டு அடிகள் என்ற பட்டம் ஏற்பட்டது.

இரண்டாம் சேரமான் பெருமாள் திருமால் அடியாராக இருந்தாலும், அவர் மகன் மார்த்தாண்டவர்மன் சேரநாட்டு மரபுப்படி சைவனாகவே வாழ்ந்து வந்தான். ஆனால், சைவனாக இருந்தாலும் திருமால் அடியார்களையும் திருமால் திருப்பதிகளையும் பாதுகாத்து வந்தான். அதனால் அவன் எல்லாச் சமயத்திடத்தும் பொதுநோக்கமுடையவனாக இருந்தான் என்று தெரிகிறது. திருவிதாங்கோட்டில் (திருவாங்கூர்) உள்ள பத்மநாப சுவாமி கோயிலுக்கும் வேண்டும் நிபந்தங்களைச் செய்துள்ளான். தந்தையைப் போலவே இவனும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான்.

வேணாட்டுக்கு இவன் முதல் அரசன் ஆனதால் எல்லோரும் இவனை வேணாட்டடிகள் என்றே கூறி வந்தார்கள். அவனுடைய இயற்பெயர் வழங்கப்பட இல்லை. திருவாங்கூர் அரசர்களுக்கு இன்றும் வேணாட்டடிகள் என்ற பட்டம் இருப்பதானது இவ் வரலாற்றை வலியுறுத்தும். இவ் வேணாட்டடிகள் கடைசியில் அரசைத் தன் மகனுக்குக் கொடுத்துவிட்டு, தில்லை சென்று, அங்கே தங்கி, தில்லைக் கூத்தப் பெருமான்பேரில் 'திருவிசைப்பா' பாடி, அங்கேயே

1. Vide History of Kerala: Page, 421.

முத்தி எய்தினர் என்பது அவருடைய திருவிசைப்பாக்களை ஆராய்ந்தால் இனிது விளங்கும்.

வேணாட்டடிகளுடைய திருவிசைப்பாப் பாடல்கள் மதுராந்தகம் உத்தமச் சோழ அரசர் (கி. பி. 970—984) காலத்திலேயே ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆதலால், இவருடைய காலம் உத்தமச் சோழர் காலத்துக்கு முற்பட்டது என்பது தெளிவாக விளங்குகிறது.

மூன்றும் சேரமான் பெருமாள் கி. பி. 798-ல் பட்டத்துக்கு வந்ததும், தனக்குத் துணை புரிந்த பௌத்தர்—யூதர்—கிறித்துவர்—மகமதியர் முதலியோருக்கு வேண்டுவன செய்தார். அத்துடன் உள்நாட்டுக் கலகம் ஏற்படாதபடி பார்ப்பனர்களுக்கும், நம்பூத்திரிகளுக்கும், ஏனைய செல்வர்களுக்கும் மனம் கோணாமல் நடந்து வந்தார் இவர் 36 ஆண்டுகள் ஆட்சி செய்ததில் மகமதியர்களுடன் அதிகமாய்ப் பழகி வந்தார்.[1]

மூன்றும் சேரமான் பெருமாளுடைய பட்டத்து அரசி செரோட்டி அம்மாள். சேரர் வீட்டு அம்மாள் என்பது மருவிப் பேச்சு வழக்கில் செரோட்டி அம்மாள் என்று ஆயிற்று. இவருக்குக் குழந்தைகள் கிடையா. இவருடன் கூடப்பிறந்தவர்கள் பெண்கள் ஐவரும் தம்பி ஒருவரும் ஆவர். ஐந்து பெண்களின் பெயர்கள் வருமாறு:—1. மூத்த தாவளி 2. இளைய தாவளி 3. மூரின்னூர் தாவளி 4. சாலியூர்த் தாவளி 5. பள்ளிவிருத்தித் தாவளி. தம்பியின் பெயர் தெரியவில்லை.

மூன்றும் சேரமான் பெருமாள் மகமதியர்களுடன், அதாவது, மாப்பிள்ளைமார்களுடன் மிகப் பழக்கமாய் இருந்தபடியால், வினைக்கு ஈடாக, அவருக்கு மாப்பிள்ளைகளைச் சேர்ந்த ஒரு மகமதியப் பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. இது பலநாள் இரகசியமாக இருந்து

1. Vide History of Kerala: Page, 310.

பிறகு எப்படியோ வெளிப்பட்டு விட்டது. அது முதல் மக்களுக்கு, சிறப்பாக நம்பூத்திரிகளுக்கும் ஏனைய செல்வர்களுக்கும், மன்னனிடத்தில் கசப்பு ஏற்பட்டுவிட்டது.

அதனால் பாண்டியநாட்டு அரசனைச் சேரநாட்டின்மீது படையெடுக்கும்படி தூண்டினார்கள்.

கி. பி. 830-ல் மூன்றும் வரகுணபாண்டியன் இறந்தவுடன், சீமாறன் பரச்சக்கர கோலாகலன் என்னும் ஏகவீரன் என்கிற ஸ்ரீவல்லபன்[1] பட்டத்துக்கு வந்தான். இவன் சேர அரசன் மூன்றும் சேரமான் பெருமாளோடு போர் தொடுத்து, விழிஞம் என்னும் இடத்தில் நடந்த போரில் சேரனைத் தோற்கடித்தான். விழிஞம் என்பது திருவாங்கூருக்குத் தெற்கே பத்துக்கல் தொலைவில் இருந்த ஒரு கடற்றுறைப்பட்டினம். சேரர்களுடைய கப்பற் படைகள் தங்கும் துறைமுகமும் ஆகும் தன் சொந்த நாட்டு மக்களும் வேறுபட்டு விட்டார்கள். விழிஞத்திலும் பாண்டியன் தன்னைத் தோற்கடித்ததோடு நில்லாமல், வஞ்சிநகர் மீது படையெடுத்து வருவதாகக் கேள்விப்பட்டு, தன்னுடைய நாட்டைப் பன்னிரண்டு சிறு நாடுகளாகப் பிரித்து, வேணாடு—ஒட்டநாடுகளை மார்த்தாண்டவர்மனுக்கும் அவனுடைய சந்ததியாருக்கும், கோழிக்கோடு என்னும் ஏரநாட்டைத் தன் தம்பி மக்களுக்கும், குட்டநாட்டை (Cochin) தன் சகோதரிகள் ஐவருக்கும், ஏனைய ஒன்பது பகுதிகளைத் தன்னுடைய சுற்றததார், நண்பர்கள், வேலைக்காரர்கள் முதலியோருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, அரேபியாவுக்குச் செல்லும் ஒரு கப்பலில் இரவுக்கிரவாக தன்னுடைய வைப்பாட்டியுடன் அரபிக் கரையில் உள்ள "சகர்முக்கல்" என்னும் துறைமுகப்பட்டினத்திற்குச் சென்று இறங்கினர். அங்கிருந்து புறப்பட்டு மெக்காவை

1. இவ்வரசனுடைய பெயரைப் பார்த்தால் தனித்தமிழ் நாடாகிய பாண்டிநாட்டில், முத்தமிழ் வளர்ந்த நாட்டில், முத்தமிழை உயிரினும் மேம்பாடாக வளர்த்த பாண்டியர் குலத்தில் பிறந்த அரசர், எப்படி ஆரியர் மோகத்திலும் ஆரியமொழியின் மோகத்திலும் ஆழ்ந்துவிட்டார்கள் என்பது விளங்கும்.

அடைந்து, அங்கே மகமதிய மதத்தைத் தழுவி, அப்துல் ரஹிமான் சாமொரின் என்று பெயரை மாற்றிக்கொண்டு, சில நாள் அங்கிருந்து, பிறகு அவ்விடம் விட்டு கடற்கரை வழியாகவே, சென்று ஜபார் (Jaffar) என்னும் ஊரை அடைந்து வந்தார். அப்பால் உடல் தளர்ந்தது, மகமதியப் பெண்ணின் கண்காணிப்பில் இருந்து வந்தார். இவர் சேரநாட்டைப் பன்னிரண்டு பாகங்களாக வகுத்த செய்தியைக் கேமியான்ஸ் என்பவர் அவர் எழுதிய உலூசியாட் என்ற புத்தகத்தில் கூறுகிறார்.[1]

இவர் ஜபார் என்னும் அந்த ஊரிலேயே கி. பி. 838-ல் இறந்து விட்டார். அவருக்கு அந்த ஊரில் சமாதி ஒன்று கட்டி அவர் உடலை அடக்கம் செய்தார்கள். அந்தச் சமாதியில் "சேர அரசன் அப்துல் ரஹிமான் சாமொரின் அடக்கம். அவர் A. H. **212-ல் வந்து**, A. H. **216-ல் இறந்தார்**" என்று அரபி மொழியில் எழுதப்பட்டுள்ளது என்று மிஸ்டர் உலோகன் கூறுகிறார்.[2]

A. H. என்பது After Hijira என்பதின் முதல் எழுத்துக்கள். மகமதிய சகம் ஆரம்பம் கி. பி. 622-ல் ஆகும். ஆதலின், மேற்படி ஆண்டுகளுடன் 622ஐக் கூட்ட, **கி. பி. 834—838** ஆவதைப் பார்த்தால் தெளிவாக விளங்குகிறது.

---

1. "Having no heir, left Royal Home;
Before he parted, he did cantonize
His realm; those servants he loved best, he brings
From want of wealth, from Subjects to be Kings"
*(Cameons in his Lwsiad)*

2. Mr. *Logan's* article in *11th Vol. Indian Antiquary-P.* 116

# II. பொறையன் குடும்பம்

## க. அந்துவன் சேரல் இரும்பொறை—I

[குல முதல்வன்]

உதியன் குடும்பமும் பொறையன் குடும்பமும் தாயாதிகள்.

உதியன், இமயவரம்பன், வானவரம்பன், குட்டுவன் என்பன உதியன் பரம்பரையைக் குறிக்கும் பட்டப் பெயர்கள்.

அந்துவன், கடுங்கோ, மாந்தரன், பொறையன், இரும்பொறை என்பன பொறையன் குடும்பத்தைக் குறிக்கும் பட்டப்பெயர்கள்.

ஆதன், கோதை, சேரல், சேரமான் முதலியன இரண்டு குடும்பங்களையும் குறிக்கும் பொதுப்பெயர்கள்.

முதலாம் அந்துவன் சேரல் இரும்பொறை என்பவன் தான் பொறையன் குடும்பத்துக் குலமுதல்வன் என்பது வரலாற்று [1]ஆசிரியர்கள் துணிபு. இப்பரம்பரை முதல்வன் இன்ன காலத்தில்தான் இருந்தான் என்பது அறியக்கூட வில்லை.

இவனுக்குப் பின்னால், அந்துவன் சேரல் இரும்பொறை என்ற பெயரை உடைய ஒருவன், கி. பி. முதல் நூற்றாண்டில் கரூரில் அரசாண்டதாகப் [2]பதிற்றுப்பத்துக் கூறுகிறபடியால், இவன் முதலாம் அந்துவன் சேரல் இரும்பொறை என்றும், அவன் இரண்டாம் அந்துவன் சேரல் இரும்பொறை என்றும் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

இவனுக்கு 'அந்துவன்' என்பது இயற்பெயர். சேரல் என்பது அரசர் பிரிவின் பெயர். இரும்பொறை என்பது குலப்பெயர் என்று கொள்ளவேண்டும்.

---

1. சேரன் செங்குட்டுவன்—M. R. Ayyangar, P. 15.
2. பதிற்றுப்பத்து 7-ம் பத்துப் பதிகம்.

[1]அத்து = சிவப்பு. அத்து—அந்து என மெலிந்து, அத்துவன் (சிவப்பன்)—அந்துவன் என்று பேச்சுவழக்கில் வந்து வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் நிறத்தைக்கொண்டு பெயர் இடுவது வழக்கம். எடுத்துக்காட்டாகக் கறுத்த நிறம் உடையவனைக் கறுப்பன் என்றும், சிவந்த நிறம் உடையவனைச் சிவப்பன் என்றும், செம்பட்டை மயிர்த் தலையுடையவனைச் செம்பட்டையன் என்றும் கூறுவது காண்க.

---

## உ. பாலைபாடிய பெருங்கடுங்கோ

(கடைச்சங்கப் புலவர் எண் 206)

[கி. மு. மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதி]

இவன் கடைச்சங்கப் புலவர்களில் [2]ஒருவன். இவனைப் பற்றிக் கலித்தொகையில் நூலாசிரியர் வரலாற்றில் [3]கூறப்பட்டுள்ளதாவது :—

"கலித்தொகையின் முதற்பகுதியாகிய பாலைக்கலியிலுள்ள (35) பாடல்களையும் பாடினார் பெருங்கடுங்கோ என்பர். இவர் சிறந்த இப் பாலைக்கலியைப் பாடியமையினாலேயே, பாலைபாடிய பெருங்கடுங்கோ என்று அடைகொடுத்தழைக்கப்பெற்றார். சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவைப் பேய்மகள் இளவெயினி பாடியது என்று புறநானூறு 11-ஆம் செய்யுளின் அடிக்குறிப்பில் காணப்படுவது கொண்டு இவர் [4]சேரர் மரபினர் என்று எண்ணலாம். இவர் கொடையிலும், வீரத்திலும், தமிழ்ப் புலமையிலும் சிறந்த ஒரு செந்தமிழ்ப் புரவலர். நற்றிணையில் பத்தும், குறுந்தொகையில் பத்தும், அகநானூற்றில் பன்னி

1. யாழ்ப்பாண அகராதி, பக்கம் 10.
2. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, பக்கம் 109.
3. கலித்தொகை, த. இ. த. ச. வெளியீடு பக்கம் 27.
4. புறம் 11—கழகப் பதிப்பு, பக்கம் 32 - 33.

ரண்டும் ஆக முப்பத்திரண்டு செய்யுட்கள் இவர் பாடியன வாகக் காணக்கிடக்கின்றன. அறநூல், மரநூல், விலங்கு நூல் முதலிய பல நூற்றுறைகளிலும் வல்லார் இவர் என்பது இவர் பாடியுள்ள செய்யுட்களில் இருந்து இனிது பெறப்படும்."

புறம் 11-ல் இவனைப்பற்றிக் கூறியுள்ளதாவது:— "இச்சேரமான் முடிவேந்தர் மூவருள் ஒருவனுதலையன்றி, நல்லிசைச் செய்யுள் பாடும் சான்றோர் கூட்டத்தும் ஒருவனுவான். இவன் பாடிய பாட்டுக்கள் பலவும் பாலைத் திணைக்கு உரியனவாம். பாலைக்கலி முற்றும் இவன் பாடியனவே. நற்றிணை, குறுந்தொகை, அகம் முதலிய நூல்களுள் காணப்படும் பாலைப்பாட்டுக்களுள் பல, இவனுல் பாடப்பட்டவை. இப் பாட்டுக்கள் அனைத்தும் இலக்கிய வளமும், அறவுணர்வும், நல்லிசை மாண்பும் உடையன.

கொண்கான நாடு பொன் மிக உடையது என்றும், அந்நாட்டையுடையவன் நன்னன் என்றும், அந்நாட்டில் உள்ள ஏழிற் குன்றம் மிக்க பொருள்நல முடையதாகலின் பெறலரிது என்றும் பாராட்டிக் கூறுவன். வேனிற் காலத்தில் குயில்கள் மாம்பொழிலில் இருந்து, "புணர்ந்தீர் புணர்மினோ" என இசைக்கும் என்பதும், "கிழவோர் இன்னுர் என்னுது பொருள்தான் பழவினை மருங்கில் பெயர்பு பெயர் புறையும்" என்பதும், பிறவும் இவனது மனமாண் புலமையைப் புலப்படுத்தும். போரில் பகைவர் படையால் உடல் சிதைந்து உயிர்கெட்ட வீரனை, "அருங்கடன் இறுத்த பெருஞ்செயலாளன்" என்றும், அவன் யாண்டுளன் எனில், "சேண் விளங்கு நல்லிசை நிறீஇ, நாநவில் புலவர் வாயுளானே" (புறம்-உஅஉ) என்றும் கூறுவது இவனுடைய மறப்பண்பை வலியுறுத்தும். இச் சேரமானைப் பேய்மகள் இளவெயினி என்னும் பெண் புலவர் பாடியுள்ளார் (புறம் - கக).

பேய்மகள் கட்புலனுகாத வடிவுடையவள் ஆதலால், கட்புலனுமாறு பெண் வடிவு கொண்டு, இளவெயினி என்னும் பெயருடன் நின்று இதனைப் பாடினுள் என்று

இவ்வுரைகாரர் காலத்தே சிலர் கூறியிருக்கின்றனர். அது பொருந்தாது. போர்க்களத்துப் பிணந்தின்னும் பேய் மகளிரை வியந்து விரியப்பாடிய சிறப்பால், இளவெயினி யார்க்குப் பேய்மகள் என்பது சிறப்புப் பெயர். குறமகள் இளவெயினி என்பார் ஒருவர் சான்றோர் குழாத்துள் காணப்படுதலின், அவரின் வேறுபடுத்த இவரை இவ்வாறு சிறப்பித்தனர். குறமகள் என்றதை, குறிஞ்சி நிலத்து நன்மகள் என்று கொள்ளாது, குறக்குடியில் பிறந்த மகள் என்று பிழைபடக் கொண்டதுபோல, இவரைப் பேய்மகள் என்று கோடல் அறமாகாது."

இச் சேரமன்னன் கொண்கான நாட்டு நன்னனைப் பற்றிக் கூறுவதால், இவன் அவன் காலத்தவனாக இருக்க வேண்டும் என்று ஊகிக்க இடம் இருக்கிறது. இவன் அந்த நன்னனோடு போர் தொடுத்து, பொன்மிக்க அவன் நாட்டையும் ஏழிற் குன்றத்தையும் கைப்பற்ற முயன்று, இயலாததால் பெறல் அரிது என்று கைவிட்டவனாக ஏற்படுகிறது.

கடம்பர் குலத்து அரசர்களில் நன்னன் என்ற பெயரையுடைய அரசர்கள் இருவர் உண்டு. முதலாம் நன்னன் கி. மு. 300 முதல் 260 வரையும், இரண்டாம் நன்னன் கி. பி. 46 முதல் 80 வரையும் கொண்கான நாட்டை ஆட்சி புரிந்துள்ளார்கள். இவன் இரண்டாம் நன்னன் காலத்தவன் அல்ல என்பது இவனுடைய பாட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. ஆதலின், இவன் முதலாம் நன்னன் காலத்தவனேயாவன். ஆதலின், இவனுடைய காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

கடைச்சங்கப் புலவர் (எண் 305) பேய்மகள் இளவெயினி கூறுவதாவது :—

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்பவன், 'தண்பொருநைப் புனல்பாயும் விண்பொரு புகழ் விறல் வஞ்சிப் பாடல் சான்ற விறல் வேந்தன்' என்று கூறுகிறார். அஃதாவது, வானைமுட்டிய புகழினையும் வென்றியையு

முடைய, குளிர்ந்த ஆன் பொருநை என்ற நதி பாயும் கருவூரின் (வஞ்சி) கண் பாடுதற்கமைந்த வெற்றியையுடைய அரசன் என்கிறார். ஆதலால், உரையாசிரியன் கூற்றுப்படி பாலைபாடிய பெருங்கடுங்கோ கருவூரின்கண் அரசாண்டவன் ஆதல் வேண்டும். கி. பி. முதல் நூற்றாண்டில் சேர அரசன் ஆட்டன் அத்தி என்ற கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்பவன் கருவூரைச் சோழன் நலங்கிள்ளி என்பவனிடமிருந்து போரில் வென்று, பிடிப்பதற்கு முன்னேயே கருவூர் சோழர்—சேரர்க்குள் அடிக்கடி கைம்மாறி வந்துள்ளது என்பது இதனால் தெரிகிறது.

இவன் கரூரின்கண் இருந்து, சேரநாட்டின் கீழ்ப் பகுதியை ஆண்டுகொண்டிருந்தபோது, சேரநாட்டின் தலை நகராகிய வஞ்சியிலிருந்து (திருவஞ்சைக்களம்) முடிமன்னன் ஒருவன் அரசாண்டதாகவும், அவனும் மௌரியர் மரபின் அரசன் சந்திரகுப்தனும் வணிக உடன்படிக்கை செய்து கொண்டதாகவும் தெரிகிறது.[1]

"வெப்புடைய அரண் கடந்து
துப்புறுவர் புறம் பெற்றிசினே;
புறம்பெற்ற வய வேந்தன்
மறம் பாடிய பாடினி யும்மே
ஏருடைய விழுக்கழஞ்சில்
சீருடைய இழை பெற்றிசினே;
இழை பெற்ற பாடினிக்கு
குரல் புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே;
எனவாங்கு,
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப் பெற்றிசினே" (புறம்: )

என்று பேய்மகள் இளவெயினி பாடியுள்ளதால், இவன் வேற்றுநாட்டிலுள்ள பல அரண்களை அழித்து, பகைவர்

1. Vide 'Mail', dated 28-11-45—(Mail பத்திரிகையில் வந்துள்ள விபரம் கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் மாக்கோதை சரித்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது).

களை வென்று, திறைபெற்றுவந்த பொருள்களைப் பாடினிக்கும், பாணனுக்கும், புலவர்க்கும் கொடுத்தான் என்பதும், பெண்புலவர்க்குப் பொன்னரிமாலையும், முத்துமாலையும், ஆண்புலவர்க்குப் பொன்னாலாகிய பூவை வெள்ளிக்கம்பியால் பின்னிய மாலையையும் வழங்கினான் என்பது தெரிகிறது.

இக்காலத்தில் இராவ்பகதூர்—திவான்பகதூர் முதலிய பட்டங்கள் அரசர் கொடுக்கும்போது பொற் பூவும் மாலையும் கொடுப்பதுபோல, அக்காலத்தில் பாலைபாடிய பெருங்கடுங்கோ வழங்கிவந்துள்ளான் என்பது அறிந்து மகிழத்தக்கது.

இவன், சந்திரகுப்தன் காலத்தில் வஞ்சியில் ஆண்ட சேரப் பேரரசின்கீழ் கரூரில் அரசாண்டவன் என்றும், கடைச்சங்கப் புலவர்களில் ஒருவன் என்றும், சிறந்த புலவன் என்றும், புலவர், பாணர், கூத்தர் முதலாயினோருக்குப் பட்டம், பொற்பூ, மாலை முதலியன வழங்கித் தன் புகழை நிலைநாட்டியவன் என்றும், அறநூல் (Laws), மாநூல் (Botany), விலங்குநூல் (Zoology) முதலிய கலைகளையெல்லாம் நன்கு உணர்ந்தவன் என்றும் அறிந்தாம்.

## ந. மருதம் பாடிய இளங்கடுங்கோ

### (புலவர் எண் 207)

[கி. மு. மூன்ரும் நூற்ருண்டின் பிற்பகுதி]

இவன் இளங்கடுங்கோ என்று கூறப்படுவதால் பெருங் கடுங்கோவின் இளவலோ என்று ஐயத்துக்கு இடனுகின்றது.[1] பெருங்கடுங்கோவைப் போலவே இவனும் கடைச்சங்கப்புலவர்களில் ஒருவன். இவன் மருதத்தைப் பற்றிப் பாடுவதில் இணையற்றவன். இவன் அவன் இளவலாய் இருந்தால், இவனும் கரூரில் அரசாண்டவன் ஆவான். பெருங்கடுங்கோவுக்குப்பின் கி. மு. மூன்ரும் நூற்ருண்டின் பிற்பகுதியில் இருந்தவன் ஆவன். இவன் அகநானூற்றில் 96—176-வது பாடல்களைப் பாடியவன். அகம் 96-ல், "ஊர! நீ பரத்தையர் ஆயத்துள் ஓர் குறுமகளை நயந்து கொண்டனை என்ப; அது,

> "செம்பொற் சிலம்பின் செறிந்த குறங்கின்
> அம்கலுழ் மாமை [2]அஃதை தந்தை
> அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்
> வெண்ணெல் வைப்பிற் பருவூர்ப் பறந்தலை
> இருபெரு வேந்தரும் [3]பொருதுகளத் தொழிய
> ஒளிறுவாள் நல்லமர்க் கடந்த ஞான்றைக்
> களிறு கவர் கம்பலை போல
> அலரா கின்றது"

என்று இளங்கடுங்கோ கூறுவதால், பருவூர்ப் பறந்தலைப் போர் சோழர்க்கும் சேர பாண்டியர்க்கும் நடந்த போர் என்றும், அப்போரில் சோழன் வெற்றியடைய, சேர பாண்டியர் இருவரும் ஒருங்கே களத்தில் கொல்லப்பட்டார் என்றும் அறிகின்ரேம்.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 152-ல் இவன் பெருங் கடுங்கோவின் தம்பி என்றே கூறப்பட்டுள்ளது.
2. அஃதை = அகுதை (பெண்).
3. 'ஒருகளத் தொழிய' என்றும் பாடம் உண்டு.

"அஃதை தந்தை அடுபோர்ச் சோழர்" என்று ஒருமைச்சொல் பன்மைச் சொல்லோடு தொடர்ந்து வந்தால், சோழர் எல்லோரும் அஃதைக்குத் தந்தையாம் முறையராய் நிற்றலின் தந்தை என்னும் ஒருமை, சோழர் என்னும் பன்மையோடு தனித்தனி சென்று கூடுதலின் வழுவின்றேனும் ஈற்றுப் பன்மைபற்றி வழுவமைத்தார் என்றனர் நச்சினார்க்கினியர்."

ஆதலின், அஃதை தந்தையும் அவனுடன் கூடப்பிறந்தவர்களும் பருவூர்ப் பறந்தலைப் போரில் ஈடுபட்டார்கள் என அறியக்கிடக்கின்றது. சோழர் குடியில் ஐயை தந்தை என்று அழைக்கப்பட்ட தித்தன் சோழன் இருந்தது போல, அகுதை தந்தை என்று அழைக்கப்பட்ட சோழனும் ஒருவன் இருந்தான் என்பது போதருகின்றது.

பருவூர்ப் பறந்தலையில் வெற்றிகொண்ட அகுதைக்குத் தந்தையாகிய சோழன் யார்? பாண்டியன் யார்? என்று இதுவரை ஆராய்ச்சியில் ஏற்படவில்லை. பருவூர்ப் பறந்தலையில் இறந்த சேரன், சேரநாட்டு வஞ்சியில் ஆண்ட முடிமன்னனாக இருக்கவேண்டும். இளங்கடுங்கோ அல்ல என்பது வெளிப்படை.[1]

### அஃதை

அஃதை என்னும் குறுநில மன்னனைப்பற்றி பரணர் என்னும் புலவர்,

"மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்டுறை யூரன்எம் சேரி வந்தென
இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை
அவைபுகு பொருநர் பறையின் ஆனாது
கழறுப என்ப அவன் பெண்டிர்" (அகம்: எசு)

என்று பாடியுள்ளார்.

1. தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம் 152—"அஃதை என்னும் பெண்ணின்தந்தை சேர, சோழ, பாண்டியரைப் பருவூர்ப் பறந்தலையில் பொருது வென்றான்" என்கிறார். இப்பொருள் அப்பாட்டில் உளதா என்பது ஐயம்.

இங்கே, பரணர் அஃதை என்பான் ஒரு குறுநில மன்னனும், போர் வீரனும், மருதநிலத் தலைவனும், பரிசிலர்க்கு அவனுடைய நாளோலக்கத்தில் யானைகளும் பொன்னாலாகிய நன்கலன்களும் கொடுத்தவனும் ஆகப் பாடியுள்ளார். இதனால் அஃதை என்னும் பெயர் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வைத்து வழங்கப்படும் ஒரு பெயர் என அறிகின்றோம்.

இனி, புறம் 233-ல் வெள்ளெருக்கிலையார் என்னும் புலவர் அஃதையைப்பற்றிக் கூறும்போது,

"பொய்யாகியரோ பொய்யாகியரோ
பாவடியானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்றாள் அஃதைகட் டோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யாகியரோ"

என்று அஃதையைக் குறுநிலமன்னனாகவும் அவன் பரிசிலர்க்கு வழங்கும் சிறப்புப்பற்றியும் பாடியுள்ளார்.

கபிலரும் புறம் 347 ல் அஃதையைப்பற்றி, "கதுவாய் வேலின் மணநாறு மார்பின் மறப்போர் அஃதை" என்று பாடியுள்ளார்.

ஆனால், இளங்கடுங்கோ பாடிய அஃதையோ ஒரு பெண்பால். சீரும் சிறப்பும் புகழும் பெற்ற ஒரு பெண்பாலாக வருணித்துள்ளார். அவள் சோழர் குலக்கொடி என்றும், அவள் தந்தையாகிய சோழன் பருவூர்ப்பறந்தலையில் பொருது வெற்றிபெற்றவன் என்றும் கூறியுள்ளது வரலாற்றுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

## ௪. கணைக்கால் இரும்பொறை

(புலவர் எண் 202)

[கி. மு. 60—கி. மு. 35 தொண்டி]

இச் சேர அரசன் சோழன் முதலாம் செங்கணான் காலத்தவன். முதலாம் செங்கணான் காலம் கி. மு. 50 முதல் கி. பி. 25 வரை ஆகும்.

இவன் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவன். இச் சேரமானுக்கு முழங்காலின் கீழ் உள்ள கணைக் கால்கள் இரண்டும் வளைதடிபோல வளைந்து இருந்ததால் "கணைக் கால்" எனப்பட்டான். இவனுடைய இயற்பெயர் இன்னதென விளங்கவில்லை. 'இரும்பொறை' என்பது குடும்பப் பெயர்.

கழகப் பதிப்பில் இவனைப்பற்றி, இச் சேரமான் சான்றோர்களால் 'கோச்சேரமான்' என்றும் 'சேரமான்' என்ற பொதுப் பெயராலும் வழங்கப்படுவான். இதனால் இவன் காலத்தே இவன் மிக்க சிறப்புடன் வாழ்ந்தவன் என்பது புலனாகும். இவன் பெரும் படையும் மிக்க போர் வன்மையும் உடையவன். இவனுடைய தலைநகர் தொண்டி என்பது. மேனாட்டு யவன ஆசிரியர்களான பிளினி முதலியோர் இத் தொண்டியை 'டிண்டிஸ்' (Tyndis) என்று வழங்கி இருக்கின்றனர். இந் நகர்க்கண் பெரிய கோட்டை இருந்தது. இவன் தன்னொடு பகைத்துப் போர் உடற்றிய மூவன் என்பானைக் கொன்று, அவன் பல்லைப் பிடுங்கி வந்து கோட்டை வாயிற் கதவில் வைத்து இழைத்திருந்தான் எனப் பொய்கையார் கூறியுள்ளார். இவன் காலத்தை அடுத்தே சேரமான் கோக்கோதை மார்பன் தோன்றினான்.

இவன் காலத்தில், சோழநாட்டில் முதலாம் கோச் செங்கணான் ஆண்டுவந்தான். செங்கணானும் பெரும் படையை உடையவன்; வலிமை மிக்கவன்; சிவபத்தியில்

சிறந்தவன்; அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவன் திருவானைக்கா முதல் திரு அம்பர் வரை மாடக் கோயில்கள் 70-க்குமேல் கட்டி, சிவனை வழிபட்ட திருக்குலத்து வளச் சோழன். இவன் கட்டிய சிவன் கோயில்கள் 'மாடக் கோயில்கள்' என்ற பெயருடன் தென்னாட்டில் இன்றும் திகழ்கின்றன.

இவ்விரு பெரும் அரசர்களுக்கும் யாது காரணத் தாலோ பெரும்பகை மூண்டுவிட்டது. இருவருக்கும் பல இடங்களில் போர்கள் நிகழ்ந்தன. அவைகளில் சிறந்தன நான்கு.

முதற் போர் தமிழ்நாவலர் சரிதையில் கூறப்பட்ட குணவாயிற் கோட்டம் என்ற இடத்தில் கி. மு. 45-ல் நடந்தது. இதில் சேர அரசனே தோல்வியுற்றான். சோழர்களுடைய தலைநகராகிய உறையூர்க் கோட்டைக்கு அக்காலத்தில் நான்கு வாயில்கள் வகுத்திருந்தார்கள். அக்கோட்டையின் கிழக்குப் பக்கத்து வாயிலுக்குக் குணவாயில் என்று பெயர். 'கோட்டம்' என்ற சொல் லுக்குப் பல பொருள்கள் உளவேனும் ஈண்டுக் 'கோயில்' என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. ஆதலின், குணவாயிற் கோட்டம் என்பது இப்போது திருச்சிராப் பள்ளியில் 'தாயுமான சுவாமி மலைக்கோயில்' உள்ள இடமே ஆகும்.

இரண்டாம் போர் நற்றிணை முன்னுரையில் கூறப்பட்டுள்ள சோழநாட்டு வெண்ணிப்பறந்தலையில் கி. மு. 42ல் நடந்தது. அதிலும் கணைக்கால் இரும்பொறையே தோல்வியுற்றான். இது இரண்டாம் வெண்ணிப் போர்.

மூன்றும் போர் கழுமலம் என்னும் இடத்தில் கி. மு. 40ல் நடந்தது. இப் போரைப் பற்றித்தான் களவழி நாற்பது என்னும் நூல் விரிவாகக் கூறுகிறது. கழுமலம் என்ற பெயரையுடைய ஊர்கள் பல, சோழ பாண்டிய - கொங்கு நாடுகளிலும் உண்டு. திருஞானசமபந்தர் அவதரித்த சீகாழிப்பதிக்கும் கழுமலம் என்ற பெயர் உண்டு. அது

அப்பதிக்கு ஏற்பட்ட பன்னிரண்டு பெயர்களில் ஒன்று. கொங்குநாட்டிலும் நென்மலி என்ற ஊருக்கு அப்பெயர் உண்டு என்று கூறுவர். ஆனால் ஈண்டுக் குறிப்பிடப்பட்ட கழுமலம் என்ற ஊர், உறையூர்க் கோட்டையின் தெற்குப் பக்கம் இருந்த நேரிவாயில் என்ற பெயரையுடைய வாயிற் பக்கம் இருந்து அழிந்துபோன ஒரு ஊர். அவ்வூரில்தான் சோழர்கள் யானைகளைக் கட்டுவது வழக்கம். இலக்கியங் களில் 'கழுமலம் யாத்த களிறு' என்று வரும் சொற்றொடர் இதனை வலியுறுத்தும். மூன்றும் கரிகாலன் என்ற இரண் டாம் ஆதித்தன் தாயுடன் சிறு வயதில் கரூரின்கண் இருந்து கொண்டிருந்தபொழுது, இரண்டாம் பராந்தகன் இறந்தபின், சோழநாடு அரசன் இல்லாமல் இருந்த ஞான்று, கழுமலத்தில் கட்டப்பட்டிருந்த பட்டத்து யானையை அவிழ்த்துவிட, அது நேரே கரூர் சென்று மூன்றும் கரிகாலனைத் தும்பிக்கையால் தூக்கிப் பிடரிமீது வைத்துக் கொணர்ந்தது என்பது வரலாறு. ஆதலின், கழுமலம் என்னும் ஊர் உறையூர்க் கோட்டையின் தெற்கு வாயிலுக்கு அணித்தாக இருந்த ஒரு ஊர் ஆகும். உறை யூரின் தெற்கு வாயிலுக்கு 'நேரிவாயில்' என்று பெயர் வருவானேன் என்றால், அவ்வாயில் சோழர்களுடைய மலையாகிய நேரிமலையை நோக்கி இருந்ததால் அப்பெயர் பெற்றது. சோழநாட்டுக்கும் பாண்டிநாட்டுக்கும் இடையில் எல்லையாக அமைந்துள்ளது நேரிமலை. நீர் ஊற்றுக்கள் மிகுதியும் உடையதாதலால் அப்பெயர் பெற்ற தென்று 'சேரன் வஞ்சி' நூலாசிரியர் கூறுகிறார்.

மூன்றும் முறை கணைக்கால் இரும்பொறைக்கும் சோழன் முதலாம் செங்கணானுக்கும் போர் ஏற்பட்ட போது இக் கழுமலம் என்னும் ஊரில் போர் நடந்தது. இப்போரில் இருபெரு வேந்தர்களும் மிகுந்த திறமையுடன் கேட்டவர் திடுக்குறவும், கண்டவர் நடுக்குறவும், நால் வகைச் சேனைகளுடன் பொருதார்கள். இதிலும் சேர அரசனே தோல்வியுற்றுச் சிறை பிடிக்கப்பட்டான். சிறை செய்யப்பட்ட சேரன் கணைக்கால் இரும்பொறை

யைச் சோழன் செங்கணான் குடவாயில் கோட்டத்துச் சிறையில் கொண்டுபோய் வைக்கும்படி கட்டளையிட்டான்.

குடவாயில் என்பது உறையூர்க் கோட்டையின் மேற்குப்பக்கத்துத் தலைவாயிலுக்குப் பேர். குடவாயில் கோட்டம் என்பது கோட்டையின் மேற்குப் பக்கம் உள்ள கோயில் என்பது பொருள். இப்போது 'திருக் கற்குடி' (உய்யக் கொண்டான்) என்று வழங்கும் தலமானது குடவாயில் கோட்டம் எனப்பட்டது. அக் காலத்தில் அவ்வூரில் போரில் சிறைப் பிடித்துவரும் அரசர்களையும், வீரர்களையும் குறுநில மன்னர்களையும் அடைத்து வைப்பதற்குச் சிறைச்சாலை ஒன்று சோழர் களால் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சிறைச்சாலையில் தான் சேரன் கணைக்கால் இரும்பொறை காவலில் வைக்கப் பட்டான்.

பொய்கையார் என்னும் புலவர் சேரநாட்டில் உள்ள தொண்டி நகரத்தில் பிறந்து, வளர்ந்தவர். தொண்டியில் அரசாண்ட கணைக்கால் இரும்பொறைக்கு நண்பர். இப் புலவரைப் பொய்கை ஆழ்வார் என்று கூறுவாரும் உண்டு. கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணான் சிறை பிடிக்கப்பட்டு, குடவாயில் கோட்டத்துச் சிறையில் வைக்கப்பட்டிருப்பதைப் பொய்கையார் கேள்விப்பட்டு, தாம் கடைச்சங்கப் புலவராகவும், சோழன் செங்கணா னுடைய நண்பராகவும் இருந்ததால், சோழன் செங்கணா னுடைய கழுமலப் போரின் வெற்றியைக் குறித்து, 'களவழி' என்னும் நூலைப் பாடி, உறையூர் சென்று, செங்கணானைக் கண்டு, அவனுடைய அவையில் அந்நூலை அரங்கேற்றி, அதற்குப் பரிசாக, சேரன் கணைக்கால் இரும்பொறையைச் சிறையினின்றும் மீட்டார்.[1]

இச் செய்தியைத் 'தமிழ் இலக்கியம் சங்ககாலம்' என்னும் நூலில் அதன் ஆசிரியர் கூறுவதாவது :— "களவழி இயற்றிய பொய்கையார் வைணவ ஆழ்வார்களில் ஒருவர்

1. தமிழ் இலக்கிய வரலாறு கா. சு. : பக்கம் : 309.

என்று சிலர் கூறுவர். சேரமான் கணைக்கால் இரும்பொறையும் சோழன் செங்கணானும் கழுமலம் என்னும் இடத்தில் பொருதவிடத்து, சேரமான் தோல்வி அடைய, அவனைச் செங்கணான் குடவாயில்கோட்டத்துச் சிறையில் வைத்தானாக, சேரமானின் உயிர்நண்பராகிய பொய்கையார் சோழன் செங்கணானின் வெற்றியைப் புகழ்ந்து 'களவழி' பாடி, தம் நண்பர் சேரமானைச் சிறைமீட்டனர்'' என்பதே.

சிறையினின்று விடுபட்டபின் சேரமானும் சோழனும் நட்புமுறையில் சின்னாள் இருந்துவந்தார்கள். அந்நட்பு நெடுநாள் நீடிக்கவில்லை. சேரனுக்குத் தான் மூன்று முறையும் தோல்வியுற்றது பெருந் துன்பமாயிருந்தது. ஒரு முறையாவது தான் வெற்றிபெற்றால் அல்லாமல் தன்னுடைய மனது அமைதியுறாது என்பதனை உணர்ந்தான். அதனால் சேரன் படை திரட்டத் தொடங்கினான். இதனை ஒற்றர்களால் உணர்ந்த சோழனும் படைகளைத் திரட்டி ஆயத்தமாயிருந்தான்.

கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கொங்குநாட்டை ஆண்டவன் மராட்டியர் மரபைச்சேர்ந்த வீரராயச் சக்கரவர்த்தி (கி. மு. 27 முதல் கி. பி. 23) என்பவன் ஆவன். கொங்குநாட்டில் கோயமுத்தூர் சத்தியமங்கலம் தாராபுரம் முதலிய பழைய ஊர்களில் வீரராயச் சக்கரவர்த்தி வெளியிட்ட பொன்காசுகள் பல அகப்பட்டிருக்கின்றன. அக்காசுகளுக்கு 'வீரராயன் பணம்' என்று பெயர். அப்படி அகப்பட்ட பொன்காசுகளை மாலையாகச் செய்து பலர் குழந்தைகளுக்கு நகையாக அணிந்துள்ளார்கள். கொங்கு நாட்டில் மராட்டிய மரபு கி. மு. 27 முதல் கி. பி. 189 வரை 216 ஆண்டுகள் ஆட்சி செலுத்திற்று. வீரராயன் மிக்க படைவலிமையுடையவன்; சிறந்த போர்வீரன். சேர அரசன் வீரராயனுக்கு முன் இருந்த கொங்கு அரசனுடன் கலந்து, அவனுடைய நட்பைப் பெற்றுச் சோழ அரசனோடு கடைசிமுறையாகப் போர்தொடங்கினான். முன்னே நடந்த மூன்று போர்களும் சோழநாட்டிலேயே நடந்தன.

இந்தக் கடைசிப்போர் கொங்கு நாட்டில் திருப்பூருக்குப் பக்கத்திலுள்ள **கோயில்வெளி** என்னும் இடத்தில் கி. மு. 35-ல் நடந்தது. இது சோழனுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் நடந்த **நாலாவது போர்.** சேரனும் சோழனும் கோயில்வெளிக்குப் பக்கத்தில் பாசறை அமைத்துக் கொண்டு போர் தொடங்கினார்கள். போர் நடந்துகொண்டிருக்கும்போது, சேரன் பாசறைக்கண் ஒருநாள் இரவு சேரனுடைய யானைப் படையிலிருந்த களிறு ஒன்று, மதஞ் செறிந்து தீங்கு செய்யலுற்றது. வீரர் பலரும் அஞ்சி அலமந்தனர். அதனை அறிந்த சேரமான் சென்று, களிற்றை அடக்கி, வீரர் பலரையும் திரைதபு கடலின் இனிது கண்படுப்பச் செய்தான். பின்பு, பலநாள் போர்நடந்து, கடைசியில் சேரன் படை உடைந்துகெட்டது. சேரனும் சோழன் கையகப்பட்டு, கால்யாப்புற்று, சிறை பிடிக்கப்பட்டுக் குடவாயில்கோட்டத்துச் சிறைக்குக் கொண்டுபோகப்பட்டான். அந்தச் சிறையில் இருக்கும்போது, ஒருநாள் சேரமான் நீர் வேட்கையுற்று, காவலரை நீர் கொண்டுவருமாறு பணித்தான். அக்காவலர்கள் அவன் பணியை அவமதித்து, சில நாழிகை கழித்துக் கொணர்ந்து கொடுத்தனர். அந்த அவமதிப்பைப் பொறாத சேரமான், "அரசராயினோர் குழவி இறப்பினும், ஊன் தடி பிறப்பினும் இவை வாள்வாய்ப்பட்டு இறந்தாலன்றி நலம் இன்றெனக் கருதி அவற்றையும் வாளாற் போழ்ந்து அடக்கம் செய்வர். அக்குடியிற் பிறந்த யான் சிறைப்பட்டுக் கிடந்து உயிர்நீத்தல் தீது. இத்தகைய மறக்குடியினரான எம் பெற்றோர் பகைவர்பால் உணவு இரந்துண்டு உயிர்வாழுமாறு மக்களைப் பெறார்காண்" என்று நினைந்து, அதனை ஒரு பாட்டாக எழுதிவைத்துவிட்டுக் கொண்டு வந்து கொடுத்த தண்ணீரைக் குடிக்காமல் அப்படியே வைத்துவிட்டு, உயிர்நீத்தான். அப்பாட்டு வருமாறு:—

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆ ளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய

கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகையின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம்இரந் துண்ணும் அளவை
ஈன்மரோ இவ்வுலகத் தானே" . (புறம்: எச)

இப்பாட்டின் அடியில் காட்டப்பட்ட குறிப்பு வருமாறு :—"சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு [1]திருப்போர்ப்புறத்துப் பொருது பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற்கிடந்து, தண்ணீர் தாவென்று, பெறாது, பெயர்த்துப்பெற்று, கைக் கொண்டிருந்து, உண்ணான், சொல்லி, துஞ்சிய பாட்டு."

பண்டைத் தமிழ் வேந்தர், குழவி செத்துப்பிறப்பினும், அல்லது பிறந்தபின் இறப்பினும், உறுப்பில் பிண்டம் பிறப்பினும், மூத்து விளியினும், நோயுற்று இறப்பினும், வாளாற் போழ்ந்து அடக்கம் செய்யும் மரபினராய் இருந்தனர் என்பது இதனால் அறியக்கிடக்கின்றது. சிறைக்கோட்டம் காவலாளரைக் "கேளல் கேளிர்" என்றார். சிறுபதம் = உண்ணீர். மதுகை = மானத்தின் மிக்க அறமும் பொருளும் இன்பமும் இல்லை எனக் கருதும் மனத்திட்பம். குறிப்பறிந்து நல்கப்பெறாது, வாய்திறந்து கேட்டும் தாழ்த்திப் பெறுதலின் "இறந்துண்ணும் அளவை" என்றார்.

திருப்போர் என்பது இப்போது திருப்பூர் என்று மருவி வழங்கப்படுகிறது. 'திருப்போர்ப்புறத்து' என்றதால் திருப்பூருக்கு அணித்தாக உள்ள இடம் என்று தெரிகிறது. அந்த இடத்தைத் தற்காலம் கோயில்வெளி என்று கூறுகிறார்கள். திருப்பூரின் தண்ணீர் ஊற்று (Water Works) அந்த கோயில்வெளியில்தான் உள்ளது. அந்தக் கோயில்வெளிப் பறந்தலையில் சில இடங்களை அகழ்கின்ற

1. இது திருப்போர்ப்புறத்து நடந்த இரண்டாவது போர். கி. மு. 35-ல் நடந்தது. திருப்போர்ப்புறத்து நடந்த முதற்போர் கி. மு. 80-ல் சேரன் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கு முதலாம் வேற்பஃறடக்கை பெருவிறற் கிள்ளிக்கும் நடந்தது.

போது யானை, குதிரை, மனித எலும்புகள் அகப்படுகிற தாகக் கொங்குநாட்டுப் புலவர் பவானி குமாரசாமி பிள்ளை அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கணைக்கால் இரும்பொறை கி. மு. 35-ல் திருப்போர்ப் புறத்துப் போரில் சிறை பிடிக்கப்பட்டு, குடவாயில்கோட் டத்துச் சிறையில் கிடந்து, தண்ணீர்த்தாகம் எடுத்துத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டுப் பெறாது, பின் நேரம் தாழ்த்திப் பெற்று, உண்ணாது, இறந்ததைச் சோழன் செங்கணான் அறிந்து, சிறைக்கோட்டம் சென்று, சேரனது உடலைக்கண்டு வருந்தி, நடந்ததை உணர்ந்து, சிறைச்சாலை யைச சோதிக்கையில் சேரன் எழுதிய பாட்டின் ஓலை நறுக்கு கிடைக்கப்பெற்று உண்மையுணர்ந்தான். பின் அரசர்களுக்குரிய சிறப்புடன் அவனுடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தமிழ்மறையாகிய திருக்குறள் ஆசிரியர் காலம், கி. மு. 75 முதல் கி. பி. 36 ஆகும். திருவள்ளுவர் காலத்தில் அவரை ஆதரித்த கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழு தியின் காலமும் கி. மு. 50 முதல் கி. பி. 30 ஆகும். கி. மு. 60 முதல் கி. மு. 35 வரை வாழ்ந்த கணைக்கால் இரும்பொறை வரலாற்றையும், இறக்கும்போது இரும் பொறை பாடிய 74-ம் புறப்பாட்டையும் திருவள்ளுவரும் பாண்டியனும் உணர்ந்திருக்கக்கூடும். திருவள்ளுவர் தாம் பாடிய திருக்குறளில் இவ்வரலாற்றை உள்ளடக்கி 'இர வச்சம்' என்னும் அதிகாரத்தில்,

"ஆவிக்கு நீர்என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்த தில்"

என்று பாடிவைத்தார். இதனை அறியமாட்டாத ஏடு பெயர்த்து எழுதியவர்கள் 'ஆவிக்கு' என்றதை 'ஆவிற்கு' என்று எழுதிவிட்டார்கள். ஓலை எழுத்தில் க்—ற் போல எழுதப்படுவது இயற்கை. அந்தப் பிழைபட்ட பாடமே பல படிகளில் தற்போது உள்ளது. ஆனால், பத்துப்பேர் உரைகளில் பருதியார் உரையில் 'ஆவிக்கு' என்ற பாடமே

உள்ளது. இந்த வரலாற்றையே உரையில் காட்டியும் உள்ளார்.

ஒரு பசுவுக்கு நீர் வேண்டுமென்று கேட்பது இழிவு ஆகாது. தனக்கு வேண்டுமென்று கேட்பதுதான் இழிவு ஆகும். ஆதலால், பருதியார் உரையில் காட்டப்பட்டபடி "ஆவிக்கு" என்பதே சிறந்த பாடமாகத் தெரிகிறது. திருவள்ளுவர் பாடியதும் அதுவாகத்தான் இருக்க வேண்டும்.

"**மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணிய—தாம் இரந்துண்ணும் அளவை ஈன்மரோ**" என்பது தமிழர் கொள்கை. அக் கொள்கையைத்தான் ஆணித்தரமாக "ஆவிக்கு நீர் என்று இரப்பினும்" என்று பாடிவைத்தார் என்று அறிகிறோம்.

---

## ரு. சேரமான் கோக்கோதை மார்பன்

[கி. மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதி]

இச்சேரன் கணைக்கால் இரும்பொறை காலத்திலும் அவனுக்குப் பின்னும் இருந்தவன் ஆவான். இவன் கணைக் கால் இரும்பொறைக்கு என்ன உறவினன் என்பது தெரிய வில்லை. ஆனால், கணைக்கால் இரும்பொறைக்கு அப்புறம் தொண்டியில் இருந்து அரசாண்டதால் இவன் இரும் பொறைக்கு மகனாகவாவது, பங்காளியாகவாவது இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. பொய்கையார் என்னும் புலவர், கணைக்கால் இரும்பொறை காலத்திலும் இருந்தவ ராவார். இவனைப் பற்றிப் பொய்கையார் இரண்டு பாட்டுக்கள் (புறம்: 48 - 49) பாடியுள்ளார். கழகப் பதிப்பில் இவனைப்பற்றி கூறியுள்ளதாவது:—

"சேர வேந்தருள் ஒருவனாவன் இவன் 'கோதை மார்பன்' என்னும் இயற்பெயரை உடையவன். இவனு டைய தலைநகரம் தொண்டி என்பது. இவனுடைய நாடு குறிஞ்சி வளமும், மருத வளமும், நெய்தல் வளமும்,

பொருந்தியது. இவன் பொய்கையார் முதலிய புலவர் பெருமக்களை ஆதரித்து, அவரால் பாடப்பெறும் சிறப்புப் பெற்றவன். இச் சேரமானுக்கும் கூடல்நகரில் இருந்து ஆட்சிபுரிந்த பழையன் மாறன் என்ற பாண்டியனுக்கும் பகைமை உண்டு. அக்காலத்தே சோழவேந்தனான கிள்ளிவளவன் பழையன் மாறன்பால் பகைமை கொண்டு, கூடலை முற்றுகைசெய்து, மாறனை வென்று, அவனுடைய குதிரை யானை முதலிய பலவும் கைக்கொண்டான். தான் செய்தற்குரிய செயலைக் கிள்ளிவளவன் செய்தது கண்டு, இச்சேரன் பேருவகையுற்றுச், சிறந்தான். இச்சேரனது வள்ளன்மை, புலவர் பாடும் புகழ்பெற்றதாகும்.'' என்பதாகும்.

இவன் காலத்தில் இருந்த சோழன் கிள்ளிவளவன் என்பவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் அல்ல என்பது வெளிப்படை. என்னெனின் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் காலம் கி. பி. 100 முதல் 145 வரை ஆகும். ஆதலின், அவனுக்கு முற்பட்டு இருந்த முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளியின் முன்னோன் ஆகும்.

சேர சோழ பாண்டியர் குடும்பங்களில் பல கிளைகள் பிரிந்து அந்தந்த நாட்டின் பல பகுதிகளை ஆண்டு வந்தது இலக்கியங்களால் அறிகின்றோம். இந்தச் சேரன் காலத்தில் பாண்டிய நாட்டில் இரண்டு குடும்பங்கள் கூடலில் இருந்தே பாண்டியநாட்டின் பல பகுதிகளை ஆண்டு வந்தமை வெளியாகிறது. பழையன் மாறன் குடும்பம் ஒன்று; கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி குடும்பம் ஒன்று.

பழையன் மாறன் என்பவனைப்பற்றி முதலாம் நக்கீரர் (இவர் மதுரைக் கணக்காயனார் மகனார் இரண்டாம் நக்கீரர் அல்ல) அகம், 346-ல் கூறுவதாவது :—

"எம்மனை வாரா யாகி முன்னாள்
நம்மனைச் சேர்ந்த ஞான்றை அம்மனைக்
குறுந்தொடி மடந்தை உவந்தனள்; நெடுந்தேர்

இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதின் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே." (அகம்: ௩௪௬)

என்று, 'தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது' என்னும் துறையில் பாடியுள்ளமை காண்மின்.

திருக்குறள் ஆசிரியர் நெடுமாறன் வள்ளுவனாருடைய தந்தையாரை வெறுத்து ஒறுத்தவன் பழையன் மாறன். அதனால்தான் திருவள்ளுவர் குழந்தையாக இருந்தபோது அவர் குடும்பத்தார் பாண்டியநாட்டை விட்டுத் தொண்டை நாடு சென்று மயிலாப்பூரில் சின்னாள் வாழ்ந்தது. பின்பு திருவள்ளுவரையும் அவர் குடும்பத்தையும் ஆதரித்தவன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி ஆகும். இவ்வழுதியின் வேண்டுகோளுக்கு இணங்கியே திருவள்ளுவர் திருக்குறளைப் பாடினார் என்று தெரிகிறது.

பழையன் மாறனுக்குச் சேரனும் சோழனும் பகைவர்களாக இருந்தார்கள் என்பதும், பழையன் மாறன் முதலாம் கிள்ளி வளவனால் முறியடிக்கப்பட்டான் என்பதும், கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்பான் சேர, சோழர்களிடத்தில் நட்புரிமை பாராட்டி நட்பு முறையில் இருந்து வந்தான் என்றும் அறிகிறோம்.

சேரமான் கோக்கோதை மார்பனுடைய நாடு, அவன் காலத்தில் மிகுந்த வளப்பத்தை யுடையதாக இருந்தது.

ஒருகால் சேரமான் கோக்கோதை மார்பனுடைய நாட்டு நலம் பற்றிப் புலவரிடைப் பேச்சு நிகழ்ந்தபோது, பொய்கையார் என்னும் புலவர்,

"நாடன் என்கோ, ஊரன் என்கோ,
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ,
யாங்ஙன மொழிகோ ஓங்குவாட் கோதையை" (புறம்: ௪௯)

என்று பாடி, அவனுடைய நாடு நானில வளம் உடைய தென்று விளக்கினார்.

குறிஞ்சி, முல்லை நிலங்கட்குரிய தலைவனை நாடன் என்றும், மருத நிலக் கிழவனை ஊரன் என்றும், நெய்தல் நிலத் தலைவனைச் சேர்ப்பன் என்றும் கூறுவது தமிழர் [1]மரபு.

இச்சேரனுடைய நாட்டு வளப்பத்தைப் பற்றி முத்தொள்ளாயிரத்தில் ஒரு செய்யுள்,

“அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினம் தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு”

என, மிக அழகாகப் பாடப்பட்டுள்ளதைக் காண்மின்.

## புலவராற்றுப்படை

இச்சேரன் புலவர், பாணர், கூத்தர் முதலியோருக்கு வரையாது கொடுக்கும் வள்ளல் ஆவான். பொய்கையார் இச்சேரனைக், “கானலந் தொண்டிப் பொருநன்” என்றும், “தெறலருந்தானைப் பொறையன்” என்றும் பலபடப் புகழ்ந்துள்ளார். இப் புலவர் பெருமானாகிய பொய்கையார் ஒருகால் சேரமான் கோக்கோதை மார்பனிடத்தில் இருந்து பரிசுகள் பெற்றுத் திரும்பி வரும் சமயத்தில், வேறு ஒரு புலவன் சேரனைக் கண்டு பரிசுபெறச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்து, “முதுவாய் இரவல! தொண்டிநகர் எம்முடைய ஊர்; அதனைக் காக்கின்றவன் எம்முடைய அரசனாகிய கோக்கோதை மார்பன்; நீ அவனிடம் செல்வாயாயின், ‘நீ அமரின்கண் மேம்படுங் காலத்து, நின்னுடைய புகழை மேம்படுத்துவோனாகிய

---

[1]கணங்கொள் அருவி கான்கெழு நாடன்
குறும்பொறை நாடன், நல்வயல் ஊரன்
தண்கடற் சேர்ப்பன் (ஐங்: கஅஉ.)

பொய்கையாரைக் கண்டேம்' என்று கூறி, நீ எம்மை நினைப்பாயாக" என்று அப்புலவனைச் சேரனிடம் ஆற்றுப் படுத்தும் பாட்டு வருமாறு:—

"கோதை மார்பிற் கோதை யானும்,
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானும்,
மாக்கழி மலர்ந்த நெய்த லானும்,
கள்நா றும்மே கானலந் தொண்டி;
அஃதெம் மூரே; அவன்எம் மிறைவன்;
அன்னோற் படர்தி யாயின், நீயும்
எம்மும் உள்ளுமோ; முதுவாய் இரவல!
அவர் மேம்படூஉங் காலைநின்
புகழ்மேம் படுநனைக் கண்டனம் எனவே." (புறம்: சஅ)

இச்சேரமான் கோக்கோதை மார்பன் காலத்தில் சேரநாடானது அமைதியுற்று, எல்லா வளங்களும் பொருந்தி நாடு நாடாக இருந்ததென்பது பொய்கையார் என்னும் புலவர் வாக்கால் அறிகிறோம்.

---

## கூ. ஆட்டன் அத்தி

[கி. பி. 30—கி. பி. 32]

இச்சேரன் சோழ அரசன் இரண்டாம் கரிகாலன் (கி. மு. 50—கி. பி. 37) காலத்தவன். கரிகாலன் மகள் ஆதிமந்தியாரை (பெண்புலவர் எண் 290) மணஞ்செய்துகொண்டவன். கரிகாலனுடைய தாய்மாமனும், புலவர் கோமானுமான இரும்பிடர்த்தலையார் (புலவர் எண் 44) இச்சேரமானுக்கு வேண்டியவர். ஆட்டன் அத்தி நாடகக் கலையில் சிறந்தவன், வனப்பு மிக்கவன். இதனை,

"ஏற்றியல் எழில்நடை பொலிந்த மொய்ம்பின்
தோட்டிருஞ் சுரியல் மணந்த பித்தை
ஆட்டன் அத்தி" (அகம்: உஉஉ)

எனப் புலவர் பரணர் பாடியுள்ளதால் அறியலாம்.

(இ - ள்.) "ஏற்றின் தன்மையையுடைய எழுச்சி பொருந்திய நடையினையும், பொலிவுற்ற தோளினையும், தொகுதிகொண்ட கரிய சுருளைப்பொருந்திய தலைமயிரினையுமுடைய ஆட்டன் அத்தி" என்றவாறு காண்க.

இவன் சிறந்த போர்வீரனும் ஆவன். இவன் நாட்டியம் ஆடுவதிலும் ஆட்டுவிப்பதிலும் சிறந்தவன். இவன் நாகப்பட்டினத்து நெய்தல் நிலத்துத் தலைவனுடைய மகள் மருதிக்கு நாட்டியம் கற்றுக்கொடுத்தான். கற்றுக்கொடுக்கும்போதே இருவரும் ஒருவரையொருவர் காதலித்துவந்தார்கள். பின், இரும்பிடர்த்தலையார் முயற்சியினால் இவன் கரிகாலன் மகள் ஆதிமந்தியாருக்கும் நாட்டியம் கற்றுக்கொடுத்தான். நாட்டியக்கலையில் மூவரும் இணையற்றுச் சிறந்து விளங்கினார்கள். இவன் நாட்டியம் ஆடுவதிலும் ஆட்டுவிப்பதிலும் சிறந்தவனானபடியால் இவனுக்கு 'ஆட்டன்' என்ற பட்டப்பெயர் கிடைத்தது. இக்காலத்தில் அப்பெயர் 'நட்டுவன்' எனத் திரிபுபட்டு வழங்குகிறது. இவன் நாட்டியக்கலையில் இணையற்றவனாக இருந்ததற்கு, இவன் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவனாக இருந்திருக்கவேண்டும். அத்துடன் இவன் நீதியிலும், வீரத்திலும், ஒழுக்கத்திலும், சிவபத்தியிலும் சிறந்தவன். இவன் பார்வையினாலும் தீண்டுதலினாலும் பல நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் படைத்தவனாக இருந்தான். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இவன் ஒரு அருமருந்து போன்றவன். நோயுற்ற புலவர் ஒருவர் இவ்வரசனுடைய காட்சியால் நோய் நீங்கப்பெற்றுக் குணமடைந்ததைப் பற்றியும் அவனுடைய இயல்பு குன்றாதிருக்க வேண்டுமென்று வாழ்த்தியும் பாடிய பாடல் வருமாறு:—

"எருமை யன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோ ராகலின் நின்னொன்று மொழிவல்,
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொடு ஒன்றாது காவல்

குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானே யதுபெறல் அருங்குரைத்தே''
(புறம் : 5.)

(இ - ள்.) "எருமைபோலும் வடிவுடைய கரிய கற் பொருந்திய இடந்தோறும் பெற்றம்போலப் பரக்கும் யானையை உடையதாய், வலிமையுடைய காட்டிற்குள்ளாகிய நாட்டினையுடையாய்! பெரும! நீ இங்ஙனம் பகைவரான் அணுகப்படாத இயல்பாகிய பெருஞ்செல்வத்தை உடையவன் ஆதலால், நினக்கு ஒரு காரியம் சொல்லுவேன் கேட்பாயாக; அருளையும் அன்பையும் நீக்கி, பாவஞ் செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கு இடமாகக்கொள்பவரோடு பொருந்தாது, நீ காக்கும் தேயத்தைக் குழவியை வளர்ப்பார்போலப் பாதுகாப்பாயாக. அளிக்கத்தக்கது ஒன்று அக்காவல். அது பெறுதற்கரிது."

இப்பாட்டின் அடிக்குறிப்பு:—"திணை — பாடாண்டிணை. துறை—செவியறிவுறூஉ. பொருண்மொழிக் காஞ்சியுமாம். சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக்கண்ட ஞான்று நின்னுடம்பு பெறுவாயாகென, அவனைச் சென்று கண்டு, தம்முடம்பு பெற்று நின்ற நரிவெரூஉத்தலையார் பாடியது."

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ற ஔவையார் வாக்குக்கிணங்க, இச்சேரன் ஆட்டன் அத்தி நல்லார் குழாத்தில் ஒருவன் ஆவான். இவனுடைய காட்சியின் வன்மையால் நோய் நீங்கப்பெற்றார் புலவர் நரிவெரூஉத்தலையார் என்றால், இவனுடைய மாட்சி மிக்கது என்று கூறவேண்டியதில்லை. இவனுடைய ஆட்சிக்காலத்தில் இவனுடைய நாடானது வளப்பத்தைப்பெற்றுப் பசி, நோய் முதலியன இல்லாமல் புகழ்பெற்று விளங்கியது. புலவர் நரிவெரூஉத்தலையார், தாம் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தாலும், இத் தோற்றப்பொலிவு செல்வக் குறைவாலும், சிற்றினச் சேர்க்கையாலும், மக்கள்பால் அளி இன்மையாலும் குன்றும் என நினைந்தும், வாயுறை வாழ்த்தாகப் பாடியுள்ளார் என்று தெரிகிறது.

சோழன் முதலாம் செங்கணானும், சோழன் இரண்டாம் கரிகாலனும் ஒரே காலத்தவர்கள். தாயாதிகள். இரண்டாம் கரிகாலன் புகாரில் இருந்துகொண்டு சோழ நாட்டின் கிழக்குப் பகுதியை ஆண்டுவந்தான். முதலாம் செங்கணான் உறையூரில் இருந்துகொண்டு உறையூர், கரூர்ப் பகுதிகளை ஆண்டுவந்தான். சோழன் முதலாம் செங்கணானுக்கு முதலாம் நல்லடிக்கோன் என்ற அரும்பெறல் மைந்தன் ஒருவன் உண்டு. அவன் கல்வி கேள்விகளிற் சிறந்து, போர் வன்மையும் அரசியற்றிறமும் பெற்று விளங்கினான்.

ஒருகால், கரூரின்கண் நடந்த பசுபதி ஈச்சுவரர் கோயில் திருவிழாவுக்கு, நாட்டியத்தில் சிறந்த மருதியை நல்லடிக்கோன் வரவழைத்தான். மருதியும் தன் தந்தையுடைய அநுமதியின்பேரில் தன்னுடைய குழாத்துடன் கரூர் போந்து, நாட்டியம் ஆடி எல்லோரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினாள். அப்போது நல்லடிக்கோனுக்கு மருதியை நேரில் பார்க்கும் அமயம் கிடைத்தது. நேரில் அவளையும் அவள் நாட்டியத்தையும் அவன் பார்த்தபோது அவளுடைய அழகிலும், நாட்டியத் திறத்திலும் அவன் ஈடுபட்டு, அவளை மணந்துகொள்ளவேண்டும் என்று எண்ணி, மருதி நாகபட்டினம் திரும்பிச் செல்லும்போது கூடவே தக்க மனிதர்களை அனுப்பி, வழியில் உறையூரில் தங்கும்படி ஏற்பாடுசெய்து, நல்லடிக்கோனும் உறையூர் வந்து சேர்ந்தான். உறையூரில் மருதி தங்கியிருக்கும் போது, நல்லடிக்கோன் அவளைத் தனிமையில் கண்டு, தன் எண்ணத்தை அவளுக்கு வெளியிட்டான். அவள் தான் ஆட்டன் அத்தியைக் காதலிக்கிறதாகவும், அதனால் வேறு ஒருவருக்கும் தன் மனதில் இடம் இல்லையென்றும் கூறித் தன்னை நாகபட்டினம் செல்ல அநுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாள்.

நல்லடிக்கோன் இதனைக் கேள்வியுற்றதும் ஆட்டன் அத்தி உயிரோடிருக்கும்வரை தான் மருதியை அடைய முடியாது என்று கருதி, ஆட்டன் அத்தியுடன் போர்

தொடுத்து, அவனைக் கொன்றுவிடவேண்டும் என்று அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, அத்தியுடன் போர் தொடுத்தான். போர் நடந்தது உறையூரில். போர் நடந்துகொண்டிருக்கும்போது மருதி எப்படியோ உறையூரினின்றும் தப்பிப்போய் நாகபட்டினம் சேர்ந்தாள். அத்திக்கும் நல்லடிக்கோனுக்கும் நடந்த போரில் அத்திக்கு உதவியாக இரும்பிடர்த்தலையார் தூண்டுதலின்பேரில் சோழன் கரிகாலனுடைய படைகளும், கரிகாலன் மக்களாகிய குராப்பள்ளித் துஞ்சிய மணக்கிள்ளி என்ற பெருந்திருமாவளவனும், இரண்டாம் வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளியும் போர் செய்தார்கள். இறுதியில் நல்லடிக்கோனே போரில் இறந்துபட்டான். "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற முதுமொழி உண்மையாயிற்று.

நல்லடிக்கோன் இறந்துபட்டதும், ஆட்டன் அத்தி வெற்றிக்கோலத்துடன் கருவூரை நோக்கிச் சென்று, கருவூரைப் பிடித்து, அங்கேயே இரும்பிடர்த்தலையார் உதவியின்பேரில் மகுடஞ் சூடிக்கொண்டு கருவூர்ப்பகுதிச் சோழநாட்டைச் சேரநாட்டோடு இணைத்து அரசாண்டான். அதனால், அவனுக்குக் "**கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை**" என்ற பட்டப்பெயர் கிடைத்தது. அத்தி, கருவூரில் சேர அரசனாக முடிசூடிக்கொண்டதும், இரும்பிடர்த்தலையார் அவனுக்கு வேண்டுவன கூறி, மருதியின்பேரில் இருந்த காதலை விலக்கி, இரண்டாம் கரிகாலன் மகள் **ஆதிமந்தியாரை** மணம் முடித்துக் கொள்ளும்படி செய்தார். இது இரண்டாம் கரிகாலனுக்கு முதலில் மனம் இல்லாவிட்டாலும், இரும்பிடர்த்தலையாரும் மக்கள் மணக்கிள்ளியும் பெருவிறற்கிள்ளியும் சொன்னதின்பேரில் அவர்களுடைய சொற்களுக்குக் கட்டுப்பட்டு ஒத்துக் கொண்டான்.

நல்லடிக்கோன் இறந்த உடனே அத்தி கருவூரைப் பிடித்து, சேரநாட்டோடு இணைத்து, கருவூரிலேயே முடிசூடிக்கொண்டு, 'கருவூர்ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டதையும்,

இரும்பிடர்த்தலையார் நல்லுரையால் ஆதிமந்தியாரை அத்தி மணந்துகொண்டதையும் நாகபட்டினத்து நெய்தல்நிலத் தலைவனுடைய மகளாகிய மருதி கேள்விப்பட்டாள். கேள்விப்பட்டதும், "நாம் எப்போது ஒருவனை மனமாரக் காதலித்தோமோ, அவன் வேறு ஒரு மாதை மணந்துகொண்டாலும் அதற்காக நாம் வேறு ஒருவரையும் காதலிக்கவும் கூடாது; மணந்துகொள்ளவும் கூடாது" என்று மனத்தில் உறுதிகொண்டு, தன் தந்தையிடம் தனக்கு மணமே வேண்டாம் என்றும், தான் தவம் செய்ய உறுதி கொண்டுவிட்டதாகவும் அதற்காகக் கடற்கரை ஓரத்தில் ஓர் கன்னிமாடம் கட்டித்தரவேண்டும் என்றும் சொன்னாள். அவள் தந்தையும் அவளுடைய வேண்டுகோட்கு இணங்க ஒரு கன்னிமாடம் கட்டித்தர, அதில் மருதி தவம்செய்து வந்தாள். தமிழ்ப் பெண்களுடைய கற்பு எத்தகையது என்று மருதியின் மன உறுதியால் விளக்கமாகின்றது. அழகிலும், நாட்டியக் கலையிலும், இசையிலும், இயற்றமிழிலும், இளமையிலும் இணையற்று விளங்கும் தமிழ்ப் பெண்களின் மன உறுதிதான் என்னே! என்னே![1] இந்நெறியைத் தற்காலப் பெண்ணுலகு பின்பற்றி ஒழுக முயலவேண்டும்; நிற்க.

இது இப்படியிருக்க, கி. பி. 32-ல் காவிரியில் புதுவெள்ளம் வர, இரண்டாம் கரிகாலன் தன் மகள் ஆதிமந்தியாரையும், மருமகன் அத்தியையும் புதுப்புனலாட்டுக்குப் புகாருக்கு அழைத்தான். அழைப்பிற்கு இணங்கி அத்தியும் ஆதிமந்தியும் கருவூரிலிருந்து புகார் சென்றார்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் அந்த ஆண்டில் புனலாட்டு விழா கழாஅர் முன்றுறையில் ஆரம்பிக்கப்பட்டது (அகம் : கூஎசு). விழா முடிந்ததும் அவரவர்கள் வீடு சென்றார்கள். அத்தி மட்டும் எல்லோருடனும் வீடு செல்லாமல் புனல் விளையாட்டில் காலம் போக்கினான். விளையாட்டின் மிகுதியால் களைப்பு ஏற்பட்டபொழுது, காவிரியில் மேல்வெள்ளம் வர,

---

1. வீரணகூசி என்னும் ஏட்டுப் பிரதியில் மருதியைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அத்தியைக் காவிரி அடித்துக்கொண்டுபோய் கடலில் சேர்த்துவிட்டது (அகம்: ௩௭௬, ௩௯௬) அத்தியும் உடல் வலிமை பெற்றவனாகவும் நீந்தத் தெரிந்தவனாகவும் இருந்தபடியால், தாங்கிக்கொண்டு கடலிலே நெடுதூரத் துக்குச் சென்றுவிட்டான். கடலில் கட்டுமரம் ஏறி மீன் பிடிக்கிறவர்கள் எல்லாம் இப்படி ஒருவன் புனலில் தத்த ளிப்பதைக் கண்டு, கட்டுமரங்களை அவனுக்கு அருகில் செலுத்தி, அவனைத் தூக்கிக் கட்டுமரத்தில் போட்டு, கரைக்குக் கொணர்ந்து, அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, சிறிது உணர்வு வந்தவுடன் நெய்தல் நிலத்துத் தலைவனிடம் நாகபட்டினத்துக்கு எடுத்துச்சென்றார்கள். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நாகபட்டினம் தெற்கே சில கல் தொலைவில் உள்ளது. அந்தச் சமயம் அங்கே மருதியும் தன் தந்தை நெய்தல் நிலத்துத் தலைவனிடம் இருந்ததால், உணர்விழந்த நிலையில் கொண்டுவரப்பட்டவன் அத்திதான் என அடையாளம் அறிந்து, தந்தைக்கு அவனுடைய வரலாற்றைக்கூறி, அவனைக் கன்னிமாடம் கொண்டுசென்றாள். அங்கே அவனுக்கு வேண்டும் நலங்களைச் செய்து, முழு உணர்வும் வரச்செய்தாள். உணர்வு வந்ததும், அத்தி அங்கே சிலநாட்கள் தங்கி உடல்நலம் பெற்றுவந்தான்.

அங்குத் தங்கியிருந்தபோது, மருதியினுடைய வாயால் உறையூரிலிருந்து மருதி தப்பித்துச் சென்றதுமுதல் நடந்தவைகளைக் கேட்டு உண்மையுணர்ந்து, தான் மருதியைப் பற்றிக் கேட்டவைகள் எல்லாம்[1] பொய்யானவைகள் எனக் கண்டான். அதனால், மருதியைவிட்டு இனிப் போவதில்லை என முடிபு செய்துகொண்டு அக் கன்னிமாடத்திலேயே சிறிதுகாலம் தங்கியிருந்தான்.

---

1. ஆட்டன் அத்திக்கு மருதியின்பேரில் இருக்கும் காதல் ஒழியும்படி, தகுந்த ஆதுவர்களைக் கொண்டு, நல்லிடிக்கோன், "மருதி இழிகுல மாது; காதலிக்கத் தகுந்தவள் அல்ல; மாயக் காரி; வேசிமகள்" என்று பலவாறு சொல்லும்படி செய்திருந்தான்.

இப்படி இருக்கையில், காவிரிப்பூம்பட்டினத்தில் புதுப் புனல் விழா அன்று நெடுநேரமாகியும் அத்தி கரிகாலனுடைய அரண்மனைக்குச் செல்லாததால், ஆதிமந்தி ஒரு பக்கம், கரிகாலன் மக்கள் ஒரு பக்கம், ஆட்கள் பலபக்கம், கரிகாலனும் இரும்பிடர்த்தலையாரும் இன்னொரு பக்கமுமாகத் தேடினார்கள். கழாஅர் முன்றுறையில் இருந்து கிழக்கே கடல்வரை காவிரிப்புனலில் துருவிப் பார்த்து, எங்கும் தேடியும் அத்தியைக் காணவில்லை. காவிரிக் கரையில் இருந்த சிலர் தலைமயிர் நிறைய உடைய ஆண் தலை ஒன்றைக் காவிரிப்புனல் அடித்துக்கொண்டுபோய்க் கடலில் சேர்த்துவிட்டதைப் பார்த்ததாகச் சொன்னார்கள். கரிகாலன் கடலில் படகிலும், கட்டுமரத்திலும், பாய் மரக் கப்பல்களிலும் ஆட்களை அனுப்பித் தேடும்படி செய்தான். கடலில் மீன்பிடிக்கும் பரதவர்களை உசாவியும் புலன் ஒன்றும் அகப்படவில்லை. தேடுபவர்கள் எல்லாம் ஓய்ந்துபோய், அத்தி கடலில் இறந்துவிட்டதாக முடிவு செய்துவிட்டார்கள். இரும்பிடர்த்தலையாரும் கரிகாலனும் இன்னது செய்வது என்று அறியாமல் திகைத்தார்கள். அத்தி இறந்தான் என்ற முடிவிற்குவர அவர்களுடைய மனம் இடங்கொடுக்கவில்லை. அத்தி இறந்திருந்தால் அவனுடைய உடல், கடல் அலைகளால் கரைக்குக் கொணரப் பட்டிருக்கவேண்டும். அப்படி இல்லை. புகார்க் கடற் றுறையில் இதுவரை யாரையும் சுறுமீன்கள் தின்றுவிட்டது கிடையாது. கெட்ட சகுனங்களும் புகார் நகரில் ஏற்படவில்லை. ஆகையால் உண்மை எதுவெனக் கண்டறிய முடியாமல் பேதுற்று இருந்தார்கள் (அகம் : சுஎ, எசு).

ஆனால், ஆதிமந்தி மாத்திரம் கணவன் காணப்படவில்லையேனும் அவன் இறக்கவில்லை என்று உறுதி கொண்டிருந்தாள். அவளுடைய கற்பின் வலியால் அவளுடைய உள்மனது அவளுக்கு உணர்த்திற்று. கணவன் இறந்த மங்கைக்குச் செய்யவேண்டிய கடன்களைக்கூடச் செய்யக் கூடாது என்று மறுத்துவிட்டாள். என்னே! அவளுடைய மன உறுதி! அதனால், அவள் காவிரிக்கரையில் உள்ள துறைகள்தோறும் கடற்கரைப்பாங்கில் உள்ள பட்டி

னங்கள், பாக்கங்கள்தோறும் ஆட்களை அனுப்பியும் தானும் தேடினாள் (அகம் : உ௬௬). கணவனைக் கண்டு பிடிக்காமல் புகார் திரும்புவதில்லையென மனத்தில் உறுதி கொண்டாள். தான் தெய்வமாக வழிபடும் கணவன் அத்தியைத் தவிர, வேறு நினைவின்றி, ஊண் உறக்கம் இன்றித் தேடித் திரிந்தாள். அப்படித் தேடிக்கொண்டு நாகபட்டினம் வர, ஒருநாள் மருதியின் கன்னிமாடத் தருகிலே கடற்கரை மணல் வழியாக ஆதிமந்தி சென்று கொண்டு இருந்தபோது, அத்தியும் மருதியும் கன்னி மாடத்து மேல் மாடியில் நிற்பதைக் கண்டு உணர்ச்சி மேலீட்டால், சரேல் என்று கன்னிமாடம் புக்கு, இருவரும் நிற்கும் இடம் சென்று, அத்தியைத் தழுவிக் கண்ணீர் உகுத்து, களிப்பு மேலீட்டால் ஒன்றும் பேச நாவெழாமல் இருந்தாள். பிறகு நடந்தவைகளை எல்லாம் அத்தியும் மருதியும் கூற, தனக்குத் தன் கணவனை உயிருடன் அளித்ததற்கு மருதிக்கு முகமனுரை கூறி, தந்தை கரிகாலனுக்குச் செய்தி அனுப்பினாள்.

இதற்குள் மருதி, தான் உயிருடன் இருந்தால் அத்தி, ஆதிமந்தியிடம் இருக்கமாட்டான் என்பதை உணர்ந்து, ஆதிமந்திக்கும் அத்திக்கும் சொல்லவேண்டு வனவற்றைச் சொல்லிவிட்டு, கன்னிமாடத்துக் காவலர் களுக்கும், தான் இல்லாத சமயத்தில் அவர்கள் இருவ ரிடத்திலும் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துவிட்டு, அத்தியையும் ஆதிமந்தியையும் தனிப் பட இருக்க விட்டுவிட்டு, தன்னிமாடத்துக்குப் பின்னால் போவதாகப் போக்குக் காட்டி, நேரே கடற்கரை சென்று, கொந்தளித்து அலைமோதிக் கொண்டிருக்கும் படுகடலில் புக்கு, தன்னுயிரை மாய்த்துத் தன்னுடைய என்றும் அழியாப் பெரும்புகழை இவ்வுலகில் நிறுத்தினாள். (அகம் : உஉஉ,)

ஆதிமந்தியார் கன்னிமாடம் வந்த செய்தி கேட்டு, மருதியின் தந்தை நெய்தல் நிலத்துத் தலைவனும் அங்கு வந்து சேர்ந்தான்.

இரண்டாம் கரிகாலனும் அவனுடைய மக்கள் மணக்கிள்ளியும் பெருவிறற் கிள்ளியும் இரும்பிடர்த் தலையாரும் வந்தார்கள்.

மருதியின் தந்தை எல்லோரையும் வரவேற்று, உபசரித்து, கன்னிமாடம் அழைத்துச் சென்று, அங்கு மருதியைத் தேட, அவள் காணப்படவில்லை. எல்லா இடங்களிலும் தேடிக்கொணர ஆட்களை அனுப்பினார்கள். கடற்கரைப் பக்கம் சென்ற ஆட்கள் திரும்பிவந்து, மருதியின் உடல், கடற்கரை மணலில் அலைகளால் ஒதுக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்தார்கள். அத்தி, ஆதிமந்தி, கரிகாலன், மருதியின் தந்தை எல்லோரும் உண்மையுணர்ந்து, ஆராத்துயரத்தில் ஆழ்ந்து, மருதி ஆதிமந்திக்குச் செய்த உதவியை மெச்சி, உலகம் உள்ளளவும் அவள் புகழ் நிலைநிற்கும் எனக்கூறி, கடற்கரை சென்று, மருதியின் உடலுக்குச் செய்ய வேண்டும் கடன்களை ஆற்றி, அவளுடைய உடலை அக் கன்னிமாடத்திலேயே அடக்கம் செய்து, கல்நட்டு, பேரும்பீடும் எழுதி, வுணங்கிவிட்டு, எல்லோரும் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

பின்பு, இரண்டாம் கரிகாலன் அத்தியையும் ஆதிமந்தியையும் அழைத்துக்கொண்டு, புகாருக்குச் சென்று, அத்தி உயிருடன் திரும்பி வந்ததற்காக, புகார் நகரில் உள்ள கோவில்களுக்குச் சிறப்புகள் பல செய்தான்.

அத்தியும் ஆதிமந்தியும் புகார் நகரின்கண்ணே தங்கி, சிலகாலம் நல்வாழ்வு வாழ்ந்து, இறுதியில் சிவனடி அடைந்தார்கள்.

தமிழ் அரசர்களில் அத்தியைத் தவிர, இயல், இசை, நாடகம் வல்லானும், பாடலும் ஆடலும் கற்றும் கற்பித்தும் வந்தவனும், நீதி, ஒழுக்கம், வீரம், சிவபத்தி வழுவாதவனும் ஆன வேறு ஒரு அரசனைக் காண்டல் அரிது.

இவன் பொறையன் குடும்பத்திற் பிறந்து, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் கற்று வல்லனாகிப் பதிற்றுப்பத்து முதற் பத்துக்கு உரியவனாகிய உதியன் சேரலாதன் என்னும் முடி மன்னன் காலத்தில் போர் வீரனாகத் திகழ்ந்து, பல போர்களில் உதியன் சேரலாதனுக்கு உதவிபுரிந்து, வாகை சூடி, இறுதியில் முதலாம் செங்கணான் மகன் நல்விடிக்கோனைப் போர்க்களத்தில் கொன்று, அவனுடைய அரச இருக்கையாகிய கருவூரைப் பிடித்து, சேர நாட்டோடு இணைத்து, உதியன் சேரலாதனை மகிழ்வித்தான். உதியன் சேரலாதன் அவனைக் கருவூரிலேயே இருந்து புதிதாய்ச் சேர்க்கப்பட்ட நாட்டை ஆளும்படி அரசனாக்கினான். அத்தியும் "கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை" என்ற பட்டம் தாங்கிக் கருவூரிலிருந்துகொண்டு சேரநாட்டுக் கீழ்ப் பகுதியை அரசாண்டு வந்தான். அப்படி ஆண்டு வரும்போதுதான் ஆதிமந்தியை மணந்ததும், புதுப்புனல் ஆட்டுக்குப் புகார் சென்றதுமான மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

தமிழ்நாட்டுப் பத்தினிப் பெண்டிர்களில் ஆதிமந்தியும், மருதியும் சிறந்தவர்கள். ஆதிமந்தியார் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவர். தலைச்சங்கப் புலவர்களில் ஒருவர் (புலவர் எண் 290) அரச குமாரியாய் இருந்தும், கலையை வளர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்து, இயற்றமிழில் சங்கப் புலவராகவும், இசை பாடுவதில் இணையற்றும், நாட்டியத்தில் நிகரற்றும், கற்பிற் சிறந்தும் வாழ்ந்து வந்ததானது, தமிழ் நாட்டுப் பெண்களெல்லாம் பின்பற்றக்கூடிய சிறப்புடையது.

மருதியும் முத்தமிழிலும் சிறந்து, இசையிலும் நாட்டியக் கலையிலும் இணையற்று, உலகில் அரசர்கள் மெச்ச வாழ்ந்துவந்த காலத்திலும் தன் நிலை தவறாது, தன்னலமற்றுப் பிறர்நலங் கருதி வாழ்ந்து வந்தாள். கடைசியில் ஆதிமந்தியார் வாழும்பொருட்டு உயிரையும் விட்ட பெண்கள் திலகம்.

இவர்கள் இருவருடைய வாழ்க்கை வரலாறு பெண்கள் உலகுக்கே ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கிறது. இவர்களுடைய வரலாறு விரிவாக எழுதப்பட்டு உலகில் பரவவேண்டும். அப்போதுதான் நாடு முன்னேறும்.

இவர்களுடைய வரலாற்றை உள்ளடக்கிக் கடைச் சங்கப் புலவர்கள் பாடிய பாட்டுக்கள் வருமாறு :

" காதலற் கெடுத்த சிறுமையொடு நோய் கூர்ந்து
ஆதி மந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ"

(அகம்: சஊ.)

" கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
சுரியல் அம் பொருநனைக் காண்டிரோவென
ஆதி மந்தி பேதுற் றினையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே "

(அகம்: எசு.)

" எழுதெழில் மழைக்கண் கலுழநோய் கூர்ந்து
ஆதி மந்தியின் அறிவு பிறிதாகிப்
பேதுற் றிசினே "

(அகம்: கடுசு.)

" முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்டன் அத்தி நலன்நயந் துரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி அன்ன மாண்புகழ் பெறீஇயர் "

(அகம்: உஉஉ.)

" ஏற்றியல் எழில் நடைப் பொலிந்த மொய்ம்பின்
தோட்டிருஞ் சுரியல் மணந்த பித்தை
ஆட்டன் அத்தியைக் காணீ ரோவென
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
கடல்கொண் டன்றெனப் புனல் ஒளித்தன் றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த,
ஆதி மந்தி போல
ஏதஞ் சொல்லிப் பேது பெரிதுறலே "

(அகம் : உ௩௬.)

கல்லா யானை கடிபுனல் கற்றென
மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறை
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல்நயந் தாடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டு ஒளித்தாங்கு "

(அகம் : ௩௭௬.)

" ..........................மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திறல் அத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு "

(அகம் : ௩௯௬.)

## எ. அந்துவன் சேரல் இரும்பொறை II

(புலவர் எண் 201)

[காலம் கி. பி. 32—கி. பி. 90]

இவன் பதிற்றுப்பத்து ஏழாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாகிய செல்வக் கடுங்கோவாழி ஆதன் என்னும் சேர அரசனின் தந்தை. இதனை :—

> " மடியா உள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
> நெடுநுண் கேள்வி அந்துவற்கு ஒருதந்தை
> ஈன்ற மகள் பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன் "

என்ற ஏழாம் பத்துப் பதிகத்தால் அறியலாம். இவனுடைய மனைவி பெயர் 'பொறையன் பெருந்தேவி' என்பது. இவனுடைய மாமனார் ஒருதந்தை (ஒரூஉத் தந்தை - ஒரூஉத் தத்தனார் என்பதன் மரூஉ). ஒப்பற்ற தத்தனார் என்பது பொருள்.

உதியன் சேரலாதன் (கி. பி. 12—கி. பி. 42) என்பவனும், இமயவரம்பன் நெடுஞ்சேரல் ஆதனும் (கி. பி. 42—கி. பி. 100), சேர நாட்டில் மேற்குக் கடற்கரையில் உள்ள வஞ்சியில் இருந்து அரசாண்டபொழுது, இந்த இரண்டாம் அந்துவன் சேரல் கொங்குநாட்டு வஞ்சியாகிய கரூரில் இருந்து சேர நாட்டின் கிழக்குப் பகுதியை அரசாண்டான்.

முதலாம் கோச்செங்கணான் மகன் முதலாம் நல்லிடிக் கோனுக்கும் ஆட்டன் அத்திக்கும் கி. பி. 30-ல் போர் ஏற்பட்டு உறையூரில் போர் நிகழ்ந்தது. அதில் நல்லிடிக் கோன் இறந்துபட்டான். நல்லிடிக்கோன் திருமணம் செய்து கொள்வதன் முன்பு இறந்தானாகையால் சோழன் செங்கணான் வழிமரபு அவனோடு முடிவடைந்து விட்டது அதனால் கரூவூர் அத்தி மரபாயிற்று அதனால் அவனுக்குக் 'கரூவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற பட்டம் கிடைத்தது. அந்த ஆண்டிலேயே ஆட்டன் அத்தி இரண்டாம் கரிகாலனுடைய மகள் ஆதிமந்தியைத் திருமணஞ் செய்து கொண்டான்.

அதனால் அவனுக்குப் புகார்ச் சோழர் உதவியும் கிடைத்தது.

அக்காலத்தில், சோழர்கள் பல குடும்பங்களாகப் பிரிவுபட்டு உறையூர் - புகார் - கரூர் - ஆரூர் - பழையாறை - சேய்ஞலூர் - அழுந்தூர் முதலிய ஊர்களை அவரவர்கள் அரசிருக்கையாகக் கொண்டு, ஒருவர்க்கொருவர் பகைத்துக்கொண்டும் போரிட்டுக்கொண்டும் ஒற்றுமையின்றி வாழ்ந்து வந்தார்கள். ஆட்டன் அத்தி கரூர்ச் சோழரை முறியடித்துக் கரூரைக் கைப்பற்றியது புகார்ச் சோழர் உதவியினாலேதான்.

உதியஞ் சேரலாதன் என்பவன் ஆட்டன் அத்திக்குப் பதிலாகக் கரூர்ப் பகுதியை ஆள, இரண்டாம் அந்துவன் சேரல் இரும்பொறை என்பவனை நியமனம் செய்தான். அதுமுதல் அந்துவன் சேரல் கரூரின்கண் உள்ள அரண்மனையில் தங்கி அரசாட்சி செய்துவந்தான். அப்படி இருக்கும்போது, ஒருநாள் உறையூர்ப் பக்கம் உள்ள ஏணிச்சேரி என்னும் ஊரைச் சேர்ந்த புலவர் முடமோசியார் (புலவர் எண்—60) அந்துவன் சேரலைப் பார்க்கக் கரூர் சென்றிருந்தார். அவர் அவனுடன் தங்கி இருந்தார். ஒருநாள் அரண்மனை மேன்மாடத்தில் அரசனும் புலவரும் பேசிக்கொண்டிருந்தபோது, முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழன் மதம்பிடித்த யானையின்மேல் இவர்ந்து உறையூரிலிருந்து வர, யானைப்பாகர்களும் வேல் தாங்கிய படை வீரர்களும் யானையை அடக்கவும் அது அடங்காது, கரூரை நோக்கி வருவதை அரசன் பார்த்து, இன்னார் என்றும், அப்படி ஒரு சோழ அரசன் வேல் தாங்கியவர்களுடன் வருவதற்குக் காரணம் இன்னதென்றும் அறியாதவனாய், புலவர் முடமோசியாரைப் பார்த்துக் கேட்டபோது, புலவர் பாடியது:—

> "இவன் யார்? என்குவையாயின், இவனே,
> புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
> எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
> மறலி யன்ன களிற்றுமிசை யோனே;

களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்,
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்,
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம;
பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனியுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே." (புறம்: கந)

என்பதில், களிறுமிசை வந்தவன் உறையூர்ச் சோழன் முடித்தலைக்கோப் பெருநற் கிள்ளி என்றும், அவன் யானை ஊர்ந்து, வெளியே எக்களிப்பாகப் புறப்பட, யானை மதம் பட்டது என்றும், மறவரும் பாகரும் அடக்கவும் அடங்காது களிறு கருவூர்ப் பெரும்பாதையில் புறப்பட்டு வந்த தென்றும் புலவர் சேரனுக்கு விளக்கி, அச்சோழனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படாது அவன் திரும்பிச் செல்லட்டும் என்று வாழ்த்தவும் செய்தார்.

முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி புலவர்களிடத்து மிகுந்த அன்புள்ளவன். முடமோசியாருடைய நண்பன். தகுதியறிந்து பரிசில் நல்கும் பண்புடையவன். ஆனால், அந்துவன் சேரனுக்குப் பகைவன்.

இரண்டாம் அந்துவன் சேரல் என்பவன் இணையற்ற வீரன் என்பதும், அவன் பகைவர்களை எளிதில் சிறைப் படுத்தி வாகைசூடுபவன் என்பதும்,

"மடியா உள்ளமொடு மாற்றோர்ப் பிணித்து" என்ற அடியால் அறியக் கிடக்கின்றது. இவன் ஒரு கடைச் சங்கப் புலவன். இவனைச் 'சேரமான் எந்தை' என்றும், 'சேரமான் அந்தையார்' என்றும், 'அந்துவன்சேரல்' என்றும் பலபடக் கூறுப. இவன் பாடிய பாட்டுக்களில் ஒரே ஒரு பாட்டுத்தான் கிடைத்துள்ளது. 'நெடுநுண் கேள்வி அந்துவன்' என்ற அடியால், இச்சேர அரசன் நுண்ணிய கேள்வியை உடையவன் என்று அறியக்கிடக்கின்றது.

## அ. செல்வக்கடுங்கோ வாழிஆதன்

[கி. பி. 90—கி. பி. 115]

பதிற்றுப்பத்து ஏழாம்பத்தின் பாட்டுடைத் தலைவன், பாடியவர் கபிலர்.

இவனைப்பற்றிய பதிகம் வருமாறு :—

"மடியா உள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி அந்துவற்கு ஒருதந்தை
ஈன்றமகள் பொறையன் பெருந்தேவி ஈன்றமகன்
நாடுபதி படுத்து நண்ணார் ஓட்டி
வெருவரு தானைகொடு செருப்பல கடந்து
ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி
மாயவண்ணனை மன்னுறப் பெற்றவற்
கோத்திர நெல்லின் ஒகந்தூர் ஈத்துப்
புரோசு மயக்கி
மல்லல் உள்ளமொடு மாசற விளங்கிய
**செல்வக்கடுங்கோ வாழியாதனைக்**

கபிலர் பாடினார் பத்துப்பாட்டு.... பாடிப் பெற்ற பரிசில் :— சிறுபுறமென நூறாயிரங்காணம் கொடுத்து, நன்று என்னும் குன்றேறிநின்று, தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக்கொடுத்தான் அக்கோ. செல்வக்கடுங்கோ வாழியாதன் இருபத்தையாண்டு வீற்றிருந்தான்" என்பதே.

இச்சேரன் மனைவி **வேண்மாள்**. இவள் வேள் ஆவிக்கோவின் இரண்டாவது மகள். இவளுக்கு மூத்தவளைத்தான் உதியன் குடும்பத்தைச் சேர்ந்த இமயவரம்பன் நெடுஞ்சேரல் ஆதனுக்கு, இரண்டாவது மனைவியாகக் கொடுத்திருந்தது. அதனால் இவனும் நெடுஞ்சேரல் ஆதனும் சகளத்திரர் (சகலர்—சட்டகர்) ஆவர். இவன் இரண்டாம் அந்துவன் சேரலின் மகன்.

கபிலர் முதல் இரண்டு பாட்டுக்களில் இவனுடைய கொடைச் சிறப்பையும், வெற்றிச் சிறப்பையும் பற்றிப் பாடியுள்ள மூன்றும் பாட்டில்,

"பார்ப்பார்க் கல்லது, பணிபு அறியலையே;
.........................................
நட்டோர்க் கல்லது, கண்ணஞ் சலையே;
வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம்
மகளிர்க் கல்லது மலர்ப்பு அறியலையே;
நிலந்திறம் பெயருங் காலை யாயினும்
கிளந்த சொன்னீ பொய்ப்பு அறியலையே"

என்று அவன் குணநலங்களைப் புகழ்ந்துள்ளார்.

நான்காம் பாட்டைக் கபிலர் "பாணாற்றுப்படை"யாக, தான் பரிசில் பெற்று வரும்போது, செல்வக்கடுங்கோவைப் பார்க்க எதிரே வந்த பாணனை நோக்கி :—

"கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண!
தென்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை
.........................................
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே."

என்று பாடியுள்ளார். சேரர் நாட்டில் அக்காலத்தே கொடுமணம் என்ற ஊரும், பந்தர் என்றஊரும் முறையேநன் கலங்கட்கும், உயரிய முத்துக்கட்கும் சிறந்த இடங்களாக இருந்தன. கீழ்க்கடற்கரையில் பந்தர் (மகூலிப்பட்டினம்) என்ற ஊர் இப்போதும் இருக்கிறது. ஆனால் அதுவல்ல இது. "கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம், பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்" (பதிற்: எச) என, அரிசில்கிழாரும் கூறுவதால், இவ்விரண்டு ஊர்களும் சேர நாட்டில் இருந்து, இப்போது அழிந்துபோயின என்று கொள்ளவேண்டும். இச்சேரன் சோழர்களுடைய நேரி மலையை வென்று, கைப்பற்றினான் ஆதலால் "நேரிப் பொருநன்" என்று கபிலர் கூறுகிறார்.

ஏழாம் பத்துப்பதிகத்தால் இவன் சோழர்—பாண்டியரோடு போர்செய்து பல போர்களில் வெற்றிபெற்று,

வாகைசூடி, பகைவர்களிடம் கொண்ட திறைப்பொருள்களைப் பாணர்—கூத்தர்—புலவர் முதலியோருக்குக் கொடுத்துப் புகழ்பெற வாழ்ந்தான் என்று அறிகிறோம்.

"அடையடுப் பறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி யாத வாழிய பலவே"

என்று ௬௩-ஆம் பாட்டில் குறிக்கப்பட்ட 'ஆம்பல்' என்ற எண் ௨௬ இலக்கங்களைக்கொண்ட ஒரு எண். ஆம்பல் பல ஆயிரங்களாகப் பெருகியது 'வெள்ளம்' என்னும் எண். வெள்ளம் ௨௦ இலக்கங்களைக்கொண்டது (முன் இணைப்பு மேல்வாய் இலக்கம் பார்க்க).

"மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்"

என்று ௬௧-ஆம் பாட்டில் கபிலர் கூறுவதால், இச்சேரன் காலத்தில் பாரி இறந்துபட்டான் என, அறியக்கிடக்கின்றது. பாரி, இறந்தபின், கபிலர் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பவன், "ஈத்த திரங்கான்; ஈத்தொறுமகிழான், ஈத்தொறும் மாவள்ளியன்" எனக் கேள்விப்பட்டு, சேரநாடு சென்று, செல்வக்கடுங்கோவின் பேரில் பத்துப் பாட்டுக்கள் பாடிப் பரிசில் பெற்றான் என அறிகின்றோம். நன்று என்ற குன்று இக்காலத்து "தேனன்று மலை" என வழங்கும். சேலம் மாவட்டம், ஊற்றங்கரை வட்டத்துத் தென்பகுதியில், மஞ்சவாடிக் கணவாயின் வடபால் உள்ளது என்று சேரன் செங்குட்டுவன் நூலாசிரியர் (பக்கம் ௧௯-இல்) பகர்கின்றார்.

இச்சேர அரசன் சைவசமயத்தன் ஆக இருந்த போதிலும், பிற சமய வெறுப்பற்றிருந்து எல்லாச் சமயங்களையும் நடுநிலை நின்று பாதுகாத்துவந்தான்.

ஒகாண்டூர் (ஒகந்தூர்) என்னும் கிராமத்தைப் பெருமாள் கோயிலுக்குத் தானமாக வழங்கி, மாயவண்ணனுக்கு

வேண்டிய சிறப்புக்கள் செய்தான் என்று பதிகத்தால் அறியக்கிடக்கின்றது.

போரில் இச் சேரன் காட்டும் ஆற்றலைக் குறித்துக் கபிலர்,

"மாயிரு விசும்பிற் பன்மீன் ஒளிகெட
ஞாயிறு தோன்றி யாங்கு, மாற்றார்
உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள் வாழ்த்தி" (பதிற்று: சு௬)

என்று கூறுவதால், இவனுடைய போர் வன்மை வெளியாகிறது.

இவனைக் கபிலரேயன்றி "குண்டுகட் பாலியாதன்" என்ற மற்றொரு புலவரும் (புறம்: ௩அ௭-இல்) பாடியுள்ளார். "குண்டுகண் = ஆழமான கண். பாலி = (பாழி) ஓர் ஊர். நன்னனுடைய நாட்டில் உள்ளது. இப்புலவருக்குப் பெயர் சினையாலும் இடத்தாலும் ஏற்பட்டது. பகைவர் தரும் திறைப்பொருள்களை அரசர் இரவலர்க்குக் கொடுத்து விடும் வழக்கம் பண்டைக் காலத்தில் உண்டென்பது இவர் பாடலால் தெரிகிறது சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதனுடைய வண்மையைப் பாராட்டி இவர் கூறியிருக்கும் அருமைச்செய்யுள் பாராட்டற்பாலது" என்று மகாமகோபாத்தியாயர் உ. வே. சா. அவர்கள் கூறுவது நோக்கத்தக்கது.

இச் செல்வக்கடுங்கோ கி. பி. 115-ல், சோழ—பாண்டியரோடு போர் தொடுத்து சிக்கற்பள்ளியில் போர் நடந்தபோது அதில் வீரத்துடன் போர் உடற்றி இறுதியில் வீரசுவர்க்கம் அடைந்தான். இவனுடன் போர் தொடுத்தவர்கள் சோழன் தித்தன் மகன் போர்அவைக் கோப்பெருநற்கிள்ளியும் பாண்டியன் அறிவுடை நம்பியும் ஆவார்கள்.

இவன் காலத்தில் சேரநாடு, வளம்பெற்று இருந்தது. இவன் சோழநாட்டில் உள்ள சிக்கற்பள்ளியில் நடந்த சண்டையில் இறந்ததால் இவனைச் சிக்கற்பள்ளி துஞ்சிய செல்வக்கடுங்கோ என்று கூறுவார்கள்.

## ௪௨ தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

[கி. பி. 115—கி. பி. 132]

இச்சேரன் பதிற்றுப்பத்து—எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன். 17 ஆண்டுகள் ஆட்சி செலுத்தியவன். இவனைப்பற்றிப் பாடியவர் புலவர் அரிசில்கிழார் என்பவர் ஆவர். இவனைப்பற்றிய பதிகம் வருமாறு:—

"பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன்றேவி ஈன்றமகன்
கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற் றுனை அதிகமா னேடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகடீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறையை

மறுவில் வாய்மொழி அரிசில்கிழார் பாடினர் பத்துப்பாட்டு. பாடிப் பெற்ற பரிசில்: "தானும் கோயிலாளும் புறம் போந்து நின்று கோயிலுள்ளவெல்லாம் கொண்மின் என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசுகட்டிற் கொடுப்ப, அவர், யான் இரப்ப இதனை ஆள்க என்று அமைச்சுப்பூண்டார். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பதினேழியாண்டு வீற்றிருந்தான்" என்பதே.

இப்பதிகத்தால், இவன் செல்வக் கடுங்கோவுக்கும் வேள் ஆவிக்கோ பதுமனின் இரண்டாவது மகளுக்கும் பிறந்தவன் என்றும், இருபெரு வேந்தராகிய சோழர்—பாண்டியரையும் அவர்களுக்குத் துணையாக வந்த குறுநில மன்னர்களாகிய கொல்லிக் கூற்றத்து வல்வில் ஓரியையும் தகடூர் நாட்டு அதிகமான் அஞ்சியையும் வென்று வாகை சூடினன் என்றும் அறிகிறோம்.

இவனுடைய கொடைவன்மையைக் கேள்விப்பட்டு அரிசில்கிழார் என்னும் புலவர் (எண் 9) இவனுடைய வெற்றியையும் கொடையையும் புகழ்ந்து பத்துப்பாட்டுப் பாடிச் சென்று சேரனைக் கண்டார். சேரன் பாட்டுக்கு மகிழ்ந்து, தானும் தன் இல்லாளாகிய மையூர்கிழான் மகள் அந்துவன் செள்ளையும் புறம் போந்து, அரண்மனையில் உள்ளவெல்லாம் அரசுகட்டிலுடன் கொள்க எனக் கொடுத்தான். அரிசில்கிழான், "யான் இரப்ப இந்நாட்டை ஆள்க. யான் அமைச்சனாக இருக்கின்றேன்" என்று கூறி, அவ்வாறே இரும்பொறை அரசனாகவும், அரிசில்கிழார் அமைச்சராகவும் இருந்தார்கள் என்று அறிகின்றோம்.

கழுவுள் என்பவன் ஆயர் தலைவனாய் ஏனைய வேந்தருடன்பெரும்பகை கொண்டிருந்தவன். அதனால், அவனைப் "பொருமுரண் எய்திய கழுவுள்" (பதிற்று : அஅ) என்றார் பிறரும். சேரன் இவனோடு போர் தொடுத்து, அவனுடைய நகரை முற்றுகையிட்டு, அவனுடைய கோட்டை கொத்தளங்களையுடைய தோட்டிமலையைக் கவர்ந்துகொண்டான். அதனால் கழுவுள் என்பவன் அடைமதிற்பட்டுக் கிடப்ப, அவன்கீழ் வாழ்ந்த இடையர்கள் எல்லாம் வேறு புகல் காணாது, தம்முடைய ஆனிரைகளைத் தாமே கொணர்ந்து தந்து, இரும்பொறையிடம் அருள்வேண்டி நிற்க, அவ்வாறே அவர்களுக்கு அருள்செய்து, அனுப்பிவிட்டு, நகரை முற்றுகையினின்றும் நீக்கினான். இதனை அறிந்த கழுவுள் தான் அவர்கட்குத் தலைவனாகியும், தலைமைப் பணியினை ஆற்ற வலியின்மையால் நாணி, பகற்போதிலாவது கங்குற்போதிலாவது சென்று புகல் அடையாது வைகறைக்கண் சென்று புகலடைந்து, பகைமை நீக்கி நண்பனானான் என்பதை எக-ஆம் பாட்டில் அழகாகப் பாடியுள்ளார்.

> " உரவோர் எண்ணினும் மடவோர் எண்ணினும்
> பிறர்க்குநீ வாயினல்லது நினக்கு
> பிறர் உவமம் ஆகா ஒருபெரு வேந்தே " (பதிற் : எக)

என்ற அடிகளால் இவன் ஒப்பற்ற பெருமையையுடைய வேந்தன் என்று அறிகின்றோம். இவனை அரிசில்கிழார் "புகார்ச் செல்வ! பூழியர் மெய்ம்மறை! கொல்லிப் பொருந!" என்று கூறுவதால், இவன் சோழர் தலைநகராகிய புகாரையும், கடம்பரது பூழிநகரையும், வல்வில் ஓரியின் கொல்லிமலையையும் தன் ஆட்சிக்குக் கீழ்க் கொணர்ந்தவன் என்றும், பின் சோழர்—கடம்பருடன் சமாதானம் செய்துகொண்டான் என்றும் கொல்லிக் கூற்றம் இவன் காலம் முதல் பல ஆண்டுகள் சேரநாட்டுடன் இணைந்து இருந்ததென்றும் அறிகின்றோம்.

பெருஞ்சேரல் இரும்பொறைக்குத் '**தகடூர் எறிந்த**' என்னும் பட்டம் வந்ததன் காரணம் வருமாறு:—

திருச்சி, தஞ்சாவூர்க் கோட்டங்களில் கொள்ளிடத்துக்கு வடகரையில் உள்ளது **மழநாடு**. அம்மழநாடானது போர்த்திறம் மிக்க **மழவர்** என்பவருடைய நாடாகும். மழவரில் நான்கு பிரிவுகள் உண்டு. அவையாவன:— (1) **அதிகை மன்னர்**, (2) **மலை மன்னர்**, (3) **நத்த மன்னர்**, (4) **சுருதி மன்னர்**. இவர்கள் பரம்பரையினர் தற்காலம் கோயமுத்தூர்—சேலம்—திருச்சி—தஞ்சாவூர்க் கோட்டங்களில் உள்ளார்கள். இவர்களின் முன்னோர்கள் குறுநில மன்னர்களாகவும், சிறந்த வீரர்களாகவும், கொடைவள்ளல்களாகவும், சேர—சோழ—பாண்டியர்களால் பாராட்டப்பெற்றவர்களாகவும் திகழ்ந்தார்கள். இவர்களில் பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில் சிறந்து விளங்கினவர்கள் **அஞ்சி—ஓரி—காரி** என்பவர் ஆவர். அஞ்சியும் ஓரியும் அதிகை மன்னர் வகுப்பைச் சேர்ந்தவர். காரி மலைமன்னர் வகுப்பைச் சேர்ந்தவன். அஞ்சி என்பவன் தகடூரில் (தர்மபுரி) குறுநில மன்னனாக இருந்தவன். ஓரி, கொல்லிக் கூற்றத்தில் (நாமக்கல்லில்) குறுநில மன்னனாக இருந்தவன். காரி என்பவன் திருக்கோவலூரில் குறுநில மன்னனாக இருந்தவன்.

கொல்லிமலையானது மீமிசை நீரூற்றுக்களை மிகுதியும் உடையது. வாழை, மா, பலா முதலியன செழித்து

ளரும். வாழையில் கருவாழையும், நெல்லில் கருநெல்லும் அங்கேதான் உண்டு. அம்மலைக்கு உரிய தெய்வம் "கொல்லிப்பாவை". அது அழகு மிக்க தெய்வம். வனப்புமிக்க மகளிர்க்கு அப்பாவையைச் சான்றோர் உவமமாகக் கூறுவது வழக்கம். அப்பாவைக்கு நாடோறும் கருநெல் அரிசிப் பொங்கலும் கருவாழைப் பழமும்தான் படைப்பு. அத்தகைய வளப்பம் மிகுந்த மலை ஓரிக்கு உரியதாயினும், அதனைச் சேரமன்னர் தமக்குரியது ஆக்கிக்கொள்ள விழைந்தனர். அதனால் சேரன் திருக்கோவலூர் குறுநில மன்னன் காரியைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு, வல்வில் ஓரியைப் பகைக்கும்படி செய்தான். இவர்களுடைய சூழ்ச்சியை ஒற்றர்களால் அறிந்த ஓரி, தகடூர் அஞ்சியுடன் கலந்து, அவனது துணையுங்கொண்டு, திருக்கோவலூரை முற்றுகை செய்து, காரியைத் தோற்கடித்தான். திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்ட சேதிநாட்டை (மலாடு) ஓரியும், அஞ்சியும் தங்கள் நாட்டோடு இணைத்துக்கொண்டார்கள். காரி தப்பியோடிச் சேரநாடு சேர்ந்தான்.

பின், சின்னாட்கழித்துக் காரி என்பவன் தன் படையுடன் சேரர் படை உதவியும் பெற்று ஓரியுடன் போர் தொடுத்தான். முடிவில் நாமக்கல் என்னும் ஊரில் நடந்த (நற்றிணை : ௩௨0) போரில் ஒரு பெருந்தெருவில் காரி ஓரியைக்[1] கொன்றான். ஓரி இறந்ததும் சேரன் பெருஞ்சேரல் இரும்பொறையும் காரியும் நேரே தகடூர் (தர்மபுரி) சென்று, தகடூரை முற்றுகையிட்டு, இறுதியில் அஞ்சியையும் கொன்று சேரன் வாகை சூடினான். சேரனது வெற்றியைக் குறித்துத் "தகடூர் யாத்திரை" என்ற நூல் விரிவாகப் பேசுகிறது. இதனால் சேரனுக்குத் 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல்' என்ற பட்டம் கிட்டியது. சேரன் காரியுடன் முன்பு செய்துகொண்ட ஒப்பந்தப்படி கொல்லிமலை

---

1. காரி ஓரியைக் கொன்றான் என்றும், காரியும் ஓரியும் போர் செய்யும்போது பெருஞ்சேரல் இரும்பொறை மறைந்து நின்று அம்பெய்து ஓரியைக் கொன்றான் என்றும் கூறுப.

சேரநாட்டோடு இணைக்கப்பட்டது (அகம் : உ0௯). கழுமலம் மறுபடியும் திருக்கோவலூருக்கு அரசனானான். தகடூரும் கொல்லிக்கூற்றமும் சேரனுக்கு உட்பட்டன.

தகடூர் நாட்டுக்கும் கொல்லிக் கூற்றத்துக்கும் நடுவண் உளதாகிய மலையைச் சேரன் தான் தங்கி, புதிதாக இணைத்த நாடுகளை மேற்பார்க்க அரச இருக்கையாக்கினபடியால் அதற்குச் சேரஅரையன் மலை (சேரராயன் மலை—சேர்வராய மலை) என்ற பெயர் அமைந்தது.

தகடூர் வெற்றிக்குப் பின், பெருஞ்சேரல் இரும்பொறை தன் அரச இருக்கையாகிய கருவூரின்கண் இருக்கும்போது, "ஒருகால் இவனைக் காண்பதற்கு வந்திருந்த புலவர் மோசிகீரனார் என்னும் சான்றோர், வெற்றி முரசு வைக்கும் கட்டிலின்பேரில் தன்னை அறியாது கிடந்து உறங்கிவிட்டார். வெற்றித்திரு வீற்றிருக்கும் கட்டிலின் மேல் வேறு பிறர் இருந்து உறங்குவது குற்றமாகும். அது செய்வோர், கொலைத் தண்டத்துக்கு உரியவராவர். இஃது அக்கால அரசுமுறை. இதனை அறியாதவர் புலவர். அவர் உறங்கியதை அறிந்த இவ்விரும்பொறை அவரைக் கொலைபுரியாது, இனிதே உறங்குமாறு அவர்க்குக் கவரி கொண்டு வீசலுற்றான்." தமக்கு உறக்கம் தெளியுங் காறும் சாமரை வீசிய சேரமானது பேரருளை வியந்து:—

"முரசம்..................மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடும் அமையாது, அணுக வந்துநின்
மதனுடை முழவுத் தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே." (புறம்: ௫0)

என்று பாடியுள்ளமை காண்மின். இதனால், இச்சேரன் வெற்றித் திருவும் பிறவும் புலவர் புலமைக்கு நேர்க்கத் தாழ்ந்தன எனக் கருதும் கருத்தினன் ஆதலை நன்கு அறியலாம்.

இச்சேரமான் காலத்தில் கொண்கான நாட்டில் இருந்த கொண்கானங் கிழான் என்னும் வள்ளலையும் இந்த மோசிகீரனார் சென்று கண்டபோது, அவன் "பெருவேந்தரான் பாராட்டப்படும் பெருந்தகுதி வாய்ந்த தாங்கள், மிக எளிய என்பால் எழுந்தருளி எனது ஈகையினைப் பாராட்டுவது என் நல்வினைப் பயனே" என்று உரைத்து, "இவர் வரிசைக்கேற்ப யான் வழங்கும் வளம் பெற்றிலனே" எனத் தனக்குள் எண்ணமிட, அதனை உணர்ந்த மோசிகீரனார் :

"திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
இன்னீர் வினவுவர் மாந்தர்" (புறம்: கருச)

என்று பாடி அவ்வள்ளலை மகிழ்வித்தமை நனிபாராட்டத் தக்கது.

---

## கo. சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

[கி. பி. 90—கி. பி. 132]

இச்சேரமானது இயற்பெயர் மாந்தரன் என்பது. சேரல் என்பது சேரர் பரம்பரையின் பொதுப்பெயர். இரும்பொறை என்பது குடிவழிப் பெயர். இவன் இரும்பொறைக் குடிவழியினன் ஆதலால், இவ்வாறு கூறப்பட்டான்.

"அறன் வாழ்த்த நற்காண்ட
விறன் மாந்தரன் விறன் மருக" (பதிற்று: கo.)

(இ - ள்) "செங்கோன்மை மேற் கொண்டதால், அறவோர் மகிழ்ந்து வாழ்த்த, நன்றாக ஆட்சிபுரிந்த விறலையுடைய மாந்தரன் என்னும் சேரமானது மேம்பட்ட வழித்தோன்றலே" என்று இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் விளிக்கின்றபடியால், இந்த மாந்தரன் என்பவன் இளஞ்சேரலுக்கு முற்பட்டவன் என்றும்,

"வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுளன் ஆயின் நன்றுமன்" (புறம் : ருங.)

என்று பொருந்தில் இளங்கீரனர் பாடியிருப்பதால், கபிலன் இறந்த பின் இளங்கீரனர் இவ்வரசனைச் சென்று கண்டார் என்றும் கொள்ளக் கிடக்கின்றது.

கபிலர் காலம் கி. பி. 50—கி. பி. 125 என்றும் பரணர் காலம் கி. பி. 50—கி. பி. 140 என்றும் ந. மு. வே. கபிலர் வரலாறு பக்கம் (எகூ) இல் கூறுகிறார்.

ஆதலால், இவன் கபிலரால் சிறப்பித்துப் பாடப்பட்ட செல்வக் கடுங்கோவாழியாதன் முதலிய சேர மன்னர் கட்குக் காலத்தாற் பிற்பட்டவன் என்று தெரிகிறது. இவன் கபிலர் முதலிய நல்லிசைப் புலவர் பாட்டுக்களில் பெரிதும் ஈடுபாடு உடையவன்.

ஒரு சமயம் இவனுக்கும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்கும் (145—190 கி. பி.) போர் உண்டாயிற்று. இந்தப்போர் பெருநற்கிள்ளி பட்டத்துக்கு வருவதற்குமுன், இளவரசராயிருக்கும்போது நடந்தாகக் கொள்ளவேண்டும். இந்தப் போரில் தேர்வண் மலையன் என்பான் சோழர்க்குத் துணையாய் வந்து, இவனை (சேரனை) வேறற்கு உதவினன். அக்காலத்தே இச் சேரமான் தன்னைத் தொலைவித்த தேர்வண் மலையனது பேராண்மையை வியந்து,

"வல்வேல் மலையன் அல்ல னாயின்
நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கென" (புறம்: கஉரு)

நினைந்தான் என, வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனர் பாடுகின்றார்.

இச்சேரமான் இருந்து ஆட்சி செய்துவந்த விளங்கில் என்னும் ஊரைப் பகைவர் முற்றுகையிட்டு வருத்தம் உறுவித்தாராக, இவன் யானை - குதிரைப் படைகளைச் சிறப்புறக்கொண்டு சென்று, பகைவரை வெருட்டி, விளங்கிலரை உய்வித்தான். இச்சிறப்பு நிகழ்ச்சியை இப் புறப்பாட்டில் குறிக்கப்படுகிறது.

இதனால், இவன் முடிமன்னன் சேரன் செங்குட்டுவன் காலத்தில் விளங்கில் என்னும் ஊரைச் சுற்றியுள்ள நாட்டை ஆண்டுகொண்டு, முடிமன்னருக்கு உதவியாய் இருந்தானென்று தெரிகிறது.

கிடங்கில் - விளங்கில் என்பன போல, பொருந்தில் என்பதும் ஒரு ஊர்ப் பெயரே. இவ்வூரில் பிறந்தவர் கீரன் என்னும் புலவர். இவர் இளவயதிலேயே பாடத் தொடங்கியதால் இளங்கீரன் என்னப்பட்டார். இவர் சேரமான் மாந்தரஞ்சேரல் முன் சென்று பாடியவழி, அவன், கபிலன் இப்போது இல்லையே என்று வருந்தக் "கவலற்க, நின் ஆடுகொள் வரிசைக் கொப்ப பாடுவன் மன்" என்று இளங்கீரன் கூறி அவனுக்கு வருத்தத்தைப் போக்கினர். இதனால், இளங்கீரன் என்னும் புலவர், கபிலனை ஒப்பப் பாடும் ஆற்றல் வாய்ந்தவர் எனத் தெரிகிறது. இச்சேரன் புலவருக்குச் சிறக்கக் கொடுக்கும் கொடையாளியாக இருந்தான் என்பது புறம் (நிஙு) ஆம் பாட்டால் விளங்குகிறது.

இவன் புலவர், பாணர், கூத்தருக்கும், பார்ப்பனருக்கும் வரையாது கொடுக்கும் கொடைத்திறம் கேட்டு, சோழநாட்டில் இருந்த பராசரன் என்ற பார்ப்பான் சேரநாடு சென்று, மாந்தரஞ்சேரல் இரும்பொறையைக் கண்டு, வேண்டிய பொருள்களையும் நன்கலங்களையும் பெற்றுத் திரும்புகாலையில், ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியனுடைய (கி. பி. 119—144) நாட்டில் தங்கால் என்னும் ஊரில் தங்கினன். அவ்வூரில் உள்ள மறையவர்களின் சிறுவர்களை மறையோதும்படி செய்து, அதில் மேம்பட்ட சிறுவன் தக்கணமூர்த்தி என்பவனுக்குச் சில அணிகளையும் பொருளையும் பராசரன் கொடுத்தான். பிற்கு தன் ஊர் சென்றான். பரிசு பெறாத ஏனைச் சிறுவர்கள் பொறாமை கொண்டு, தக்கணமூர்த்திமேல் திருட்டுக் குற்றம் சாட்ட, அவனைப் பாண்டியநாட்டு அரசியலாளர்கள் சிறையிட்டனர். தக்கணன் தாயார் கார்த்திகை என்பவள் அழுது புரண்டு, ஐயை கோயிலில்

சென்று முறையிட, கோயிற் கதவு திறக்கப்படாம மூட்டப்பட, இது செய்தியை அரசன் நெடுஞ்செழியன் அறிந்து, நன்கு உசாவி உண்மை கண்டு, தக்கணனை விடு வித்துத் தங்கால், வியலூர் என்ற ஊர்களை அப் பார்ப்பனச் சிறுவன் தந்தை வார்த்திகனுக்கு இறையிலியாக நன் கொடை நல்கி, அவனுடைய சினத்தை ஆற்றி, ஏனைய பார்ப்பனச் சிறுவர்களையும் மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான் (சிலப்பதிகாரம், உங: ருசு - கஉஉ.)

இதனால் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவ னுடைய புகழானது எல்லா நாடுகளிலும் பரவி இருந்த தென்றும், கொடையில் சிறந்தவனாக இருந்தான் என்றும் அறிகிறோம்.

---

## கக. இளஞ்சேரல் இரும்பொறை

[கி. பி. 132—கி. பி. 148]

பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்துக்கு உரியவன் இவனேயாகும். இவனைப்பற்றிய பதிகம் வருமாறு:—

### பதிகம்

"குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழான்
வேண்மாள் அந்துவன் செள்ளை ஈன்ற மகன்
வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ
அருமிளைக் கல்லகத்து ஐந்தெயில் எறிந்து
பொத்தியாண்ட பெருஞ்சோழனையும்
வித்தையாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்து பிறர்க்குதவி
மந்திர மரபிற் றெய்வம் பேணி
மெய்யூர் அமைச்சியன் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி

*அருந்திறன் மரபில் பெருஞ்சதுக் கமர்ந்த*
*வெந்திறற் பூதரைத் தந்திவண் நிறீஇ*
*ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு*
*மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்*
*இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறையைப்*

பெருங்குன்றூர்க்கிழார் *பாடினார் பத்துப்பாட்டு. பாடிப் பெற்ற பரிசில்:—மருளிலார்க்கு மருளக் கொடுக்க வென்று உவகையின் முப்பத்திராயிரம் காணம் கொடுத்து, அவர் அறியாமை ஊரும், மனையும் வளமிகப் படைத்து, ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி, எண்ணற்கா அருங்கல வெறுக்கையொடு பன்னூறாயிரம் பாற்பட வகுத்துக் காப்பு மறம் தான் விட்டான் அக்கோ.''*

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை பதினாறாண்டு *வீற்றிருந்தான்.''*

இவ்விளஞ்சேரல் இரும்பொறை என்பவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் மையூர்கிழான் மகள் வேண்மாள் அந்துவன் செள்ளைக்கும் பிறந்தவன். பதிகத்தில் இவன் வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :—

இவன் உறையூர்க் கோப்பெருஞ் சோழனையும், பாண்டியன் பழையன் மாறனையும், அவர்களுக்குத் துணையாக வந்த விச்சி என்ற தானைத்தலைவனையும் வென்று, அவ்விரு வேந்தருக்கும் சொந்தமான ஐந்து மலைக்கோட்டைகளையும் பிடித்து அடிப்படுத்தி, மிகுந்த பொருளோடும், அணிகலன்களோடும், ஆடு மாடுகளோடும் வஞ்சி (கரூர்) மூதூர் திரும்பிவந்து, புலவர்—பாணர்—கூத்தர் முதலியோருக்கும் அளித்து, தெய்வம் பரவி, தன் மாமனார் மையூர் கிழானை அமைச்சராகவும் புரோகிதராகவும் அமைத்துக் கொண்டு அரசு செய்தான் என்றும், பின் புகார்ச் சோழருக்கும் இவனுக்கும் பகையுண்டாக, புகார் நகரின்மேல் படையெடுத்துப்போய், அங்கே அப்போது அப்பகுதியை ஆண்ட சோழனை முறியடித்து அடக்கி, புகாரின்கண்

இருந்த சதுக்கப்பூதத்தைத் தரூரின்கண் கொண்டுவந்து நிலை நாட்டி, பெருஞ்சாந்தி (அட்டபந்தன கும்பாபிடேகம்) செய்து, குடிகள் மகிழ அரசு செலுத்தியவன் என்பதே.

இவனைப் பாடிய பெருங்குன்றூர்க்கிழார் என்னும் புலவருக்கு அவர் அறியாமலே ஊரும்—மனையும் வளமிகு புலங்களும், ஏரும் இன்பமும், எண்ணற்காகா அருங்கல வெறுக்கையொடு, பன்னூறாயிரம் காணமும் கொடுத்தான். இவர்போல் பரிசு பெற்றவர் சந்திரூற்றப்புலவர் என்பவர் ஆவர்.

இவ்விளஞ்சேரனுக்குக் குடக்கோ—குட்டுவன்—ஏறு என்ற பட்டங்கள் உண்டு. குடக்கோ என்பது தமிழ் நாட்டின் மேல்பால் உள்ள சேரநாட்டு அரசன் என்றும், அல்லது சேரநாட்டின் ஒரு பகுதியாகிய குடநாட்டு (Coorg) அரசன் என்றும் பொருள்படும்.

ஆங்கிலநாட்டு இளவரசர்கள் எல்லாம் வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) என்று அழைக்கப்படுதல்போல, சேரநாட்டு இளவரசர்கள் எல்லாம் குட்டநாட்டு இளவரசர்கள் என்ற பொருளில் குட்டுவன் என்று அழைக்கப்பட்டார்கள். (குட்டநாடு=கொச்சி—Cochin). ஆதலின், குடக்கோ என்பது சேர அரசர்களுக்கெல்லாம் பொதுப் பெயர் என்றும், குட்டுவன் என்பது சேர இளவரசர்களுக்கெல்லாம் பொதுப்பெயர் என்றும் கொள்ளவேண்டும்.

இளஞ்சேரல் இரும்பொறை என்பவன் கொளக் கொளக் குறையாச் செல்வத்தையும், கொலக் கொலக் குறையாத் தானையையும் உடையவன். சான்றோரால் வண்மையும், செம்மையும், சால்பும், அறனும் உடையவன் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளான் (பதிற்று : அஉ).

> "ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
> இட்ட வெள்வேல் முத்தைத் தம்மென
> ........................................
> கபிலன் பெற்ற ஊரினும் பலவே" (பதிற்: அ௫)

"சோழர்களுக்குத் தலைவனான வேந்தனைப் பற்றி என் முன்னே கொண்டு தருவீராக என்று நீ நின் தானை வீரர்க்குச் சொன்னது கேட்டு, சோழர்களுடைய படைவீரர் தோல்விக்குறியாகக் கீழே எறிந்த வேல்கள், கபிலன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடிப்பெற்ற ஊர்களைக் காட்டிலும் பலவாகும்" என்று பெருங்குன்றூர்க்கிழார் பாடுவரேல், இவனுடைய போர்த்திறம் எத்தகையது என்பது ஊகிக்கத்தக்கது.

"..........................பல்வேற்
பூழியர் கோவே, பொலந்தேர்ப் பொறைய"
(பதிற்: அச)

என்று பெருங்குன்றூர்க்கிழார் கூறுவதால், சேரர்களுடைய பூழிநாட்டு வேற்படையானது, சோழர்களுடைய வேற்படையைவிடச் சிறந்தது என்பது போதருகின்றது. பூழி என்னும் நகர் சேரநாட்டில் ஒன்றும், பாண்டிநாட்டில் கீழ்க்கடற்கரைப்பக்கம் ஒன்றும் உண்டு. இங்கே கூறப்பட்டது சேரநாட்டுப் பூழியாகும்.

இளஞ்சேரல் இரும்பொறை போரில் பகைவர் உட்கப் பொருவோனாயினும், வானி நீரினும் தண்மையன் (பதிற்று: அசு) என்றும், இவனுடைய முன்னோர்கள் விந்தமுதல் குமரிவரை ஒருமொழி வைத்து உலகாண்டவர்கள் என்றும், அண்டர் (இடையர்) தலைவனாகிய காழூர்க் கழுவுள் என்பவனை வென்று, கொங்குநாட்டை அடிப்படுத்தியும், கடம்பரை வென்றும், அயிரைமலைத் தெய்வத்தை வழிபட்டு வந்தார்கள் என்றும் (பதிற்: அஅ-வது செய்யுளில்) கூறப்பட்டுள்ளது.

செங்குட்டுவன் சேரநாட்டு வஞ்சியில் முடிஅரசாக ஆண்டுவந்த காலத்தில், இவன் சேரநாட்டின் கீழ்ப்பகுதியைக் கொங்குநாட்டு வஞ்சியில் (கரூர்) இருந்துகொண்டு ஆண்டுவந்தான். கொங்கு, சோழ, பாண்டி மண்டலங்களை வென்று, அவ்வரசர்களுடன் ஒற்றுமை உடன்படிக்கை செய்துகொண்டு ஆண்டுவந்தான்.

இவன் காலத்தில் உறையூரில் ஆண்டவன் கோப்பெருஞ் சோழன். புகாரில் அரசாண்டவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன். பாண்டியர் நாட்டில் கூடலில் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் II என்பவனும் இளம்பழையன் மாறனும் ஆண்டுவந்தார்கள். சோழர்களில் பல குடும்பங்கள் ஒற்றுமையின்றி சோழநாட்டின் பல பகுதிகளைப் பல இடங்களில் இருந்து ஆண்டுவந்ததுபோல, பாண்டியரிலும் பல குடும்பங்கள் ஒற்றுமையின்றிப் பாண்டிநாட்டின் பலபகுதிகளைப் பல இடங்களிலிருந்து ஆண்டுவந்தார்கள். கூடல், ஆலவாய் என்னும் மதுரையிலேயே இரண்டு குடும்பங்கள் இருந்துகொண்டு பாண்டிநாட்டில் தனித்தனிப் பகுதிகளை ஆண்டுவந்தார்கள். கி. மு. முதல்நூற்றுண்டில் கூடலில் அரசாண்டுகொண்டிருந்த பழையன் மாறன் என்பவனுடைய பரம்பரையில் வந்த இளஞ்சேரல் இரும்பொறை காலத்தில் அரசாண்டு வந்ததால் இளம் பழையன் மாறன் என்னப்பட்டான்.

"பொத்தி யாண்ட பெருஞ் சோழனையும்
வித்தையாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று"

(கூ-ஆம் பதிற்றுப்பத்துப் பதிகம்)

'பொத்தியாண்ட சோழன்' - 'வித்தையாண்ட மாறன்' என்ற தொடர்களின் கருத்தொற்றுமை எளிதில் விளங்கலாம். சோழனைப் 'பொத்தியாண்ட' என்று ஒரு புலவனை ஆண்ட அளவே கூறிப், பாண்டியனை 'வித்தையாண்ட' என்பதனுல் கல்வி முழுதும் (இயல் - இசை - நாடகம் என்ற முத்தமிழையும்) ஆண்டது கூறுதல் உணர்ந்து கொள்க. (தமிழ் வரலாறு, R. R. ௫௦ - க)

பழையன் மாறன் என்ற கூடலில் அரசாண்ட முடிமன்னனையும், பழையன் என்ற குறுநில மன்னனையும் ஒன்றுபடுத்திக் கூறுவாரும் உண்டு. பழையன் என்ற குறுநில மன்னன் பாண்டியனுக்கு வேண்டியவன். கொங்கு நாட்டகத்துக் குறுநில மன்னனுகவும் வள்ள

னாகவும், பாண்டியனுக்கு வேண்டியவனாதலால் 'மாறன்' என்ற பட்டத்தை உடையவனாகவும் இருந்தான்.

இங்கே பதிகத்தில் 'இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ' என்று கூறப்பட்டிருப்பதால், ஈண்டுக் கூறப்பட்ட சோழனும், இளம் பழையன் மாறனும் முடிமன்னர்களே ஆவர்.

பதிற்றுப் பத்து (௯0) இல் சில அரிய சொற்கள் காணப்படுகின்றன. 'காவிரிப் படப்பை நன்னாடன்ன' என்பது ஒன்று. இங்கே படப்பை என்பது காவிரி நதி பிரிந்து பிரிந்து வளப்பம் செய்யும் நிலப்பகுதியாகும். ஆங்கிலத்தில் அதனை (Delta) டெல்டா என்பர்.

"விரவு மொழிக் கட்டூர் வயவர் வேந்தே" என்பது இன்னொன்று. கட்டூர் என்பது பாடிவீடு. ஆங்கிலத்தில் (Tent) டென்ட் என்பர்.

புறம் (உ௯0—௧௧) இல் இச்சேரன் புலவரைப் பாராட்டும் அருமையைச் சிறப்பித்துப் பெருங்குன்றூர்க் கிழார் பாடியுள்ளதைப் படித்து இன்புறத்தக்கது.

---

## ௧௨. யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை

[கி. பி. 148—கி. பி. 198]

இவ்வரசன் செங்குட்டுவன் காலத்தும் அவன் மகன் குட்டுவன் என்ற மாரிவெண்கோ காலத்தும், கரூரின் கண் வீற்றிருந்து, சேர நாட்டின் கீழ்ப் பகுதியை அரசாண்டவன்.

பதிற்றுப்பத்துப் பத்தாம் பத்தில் கூறப்பட்ட அரசன் இவனாயிருக்கலாம் என்று 'சேரன் வஞ்சி என்ற நூலின் ஆசிரியர் கருதுகிறார். நாமும் அப்படியே கொள்வதில் தடையொன்றுமில்லை.

இவன் 'சேய்' என்று அழைக்கப்படுவதால் இளஞ் சேரல் இரும்பொறையின் சேயாக இருக்கலாம் என்று 'சேரன் செங்குட்டுவன்' ஆசிரியர் கூறுகிறார்.

குறுங்கோழியூர்க் கிழார் என்னும் புலவர் இவனைப் புறம் கஎ, உ௦, உஉ இல் பாடியுள்ளார். உஉ ஆம் புறப் பாட்டில் இவனை —"வேழ நோக்கின் விறல் வெஞ்சேய் வாழிய" என்று புலவர் கூறுகிறபடியால், இவன் யானைக்கு இருப்பதுபோன்ற சிறு கண்களை உடையவன் என்றும், அதனால் 'யானைக்கண் சேய்' என்று அழைக்கப்பட்டான் என்றும் அறிகின்றோம்.

இவன் சேரநாட்டைச் செவ்விய முறையில் குடிகளு டைய விருப்பத்திற்கு இணங்க ஆண்டவன் என்பதனை :—

"ஓம்பாது ஈயும் ஆற்றல் எம் கோ
மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஓம்பிய நாடே
"புத்தேள் உலகத்து அற்று" எனக் கேட்டு வந்து
இனிது கண்டிசின் பெரும!" (புறம் : உஉ)

என்று குறுங் கோழியூர்க் கிழார் கூறுவதைக் கொண்டு அறியலாம். "சேரநாடு புத்தேள் உலகத்தை ஒத்தது எனப் பிறர் கூறக்கேட்டு, இங்கு வந்து பார்த்தபோது அப்படியே இருக்கக் கண்டோம்" என்று புலவர் கூறுவா ராதல், சேரநாடு இவ்வரசன் காலத்தில் எவ்வளவு சிறப்பாகவும், குடிகள் எவ்வளவு மகிழ்ச்சி உள்ளவர் களாகவும் இருந்தார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்வரசனுடைய செங்கோலாட்சியின் செம்மையைப் புலவர் குறுங் கோழியூர்க் கிழார் :

"சோறு படுக்கும் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிது தெறல் அறியார் ; நின்னிழல் வாழ்வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்;
நாஞ்சில் அல்லது படையும் அறியார் ;

திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர் மண் ணுண் ணும் செம்மல் நின்னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது
பகைவர் உண்ணா அருமண் ணினையே" (புறம்: ௨௦)

என்று கூறி விளங்கவைத்துள்ளார்.

(இ - ள்) நின்னாட்டில் சோற்றை ஆக்கும் தீயின் வெப்பமும், செஞ்ஞாயிற்றின் வெப்பமுந் தவிர, வேறு ப்பகையாகிய வெப்பம் கிடையாது; நின்னாட்டில் வாழ்வோர் வானத்தில் தோன்றும் இந்திர வில்லைப் பார்க்கிறார்களே யொழிய பகைவரது கொலை செய்யும் வில்லைப் பார்த்தது கிடையாது; நின்னாட்டில் உள்ளவர்க்குக் கலப்பையாகிய படை ஒன்று தெரியுமே யொழிய, வேறு படைக்கலங்களை அவர்கள் பார்த்து அறியார்கள்; போர்த் திறம் மிக்க வீரருடன் சென்று, பகைவருடைய மண்ணைச் (நாட்டை) நீ உண்பதை (வெல்வதை) உன்னாட்டார் பார்த்திருக்கிறார்களே யொழிய, உன்னுடைய நாட்டு மண்ணைச் சூல்கொண்ட மகளிர் புளியைச் சேர்த்து உட்கொள்ளுவது அல்லது, வேறு பகைவரால் உண்ணப்படாத (வெல்லப் படாத) மண்ணை யுடையாய் (நாட்டை யுடையாய்) என்பதே"

இதனால் இவ்வரசனுடைய கொற்றம், ஆண்மை, செங்கோன்மை, புகழ் இற்றென விளங்குகின்றன. புலவர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்.

இவன் காலத்தில் பாண்டி நாட்டில் அரசு செலுத்தியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற **பாண்டியன் நெடுஞ்செழியன் III (கி. பி. 174—204)** என்பவனாகும். இப்பாண்டியனுக்கும் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரனுக்கும் ஒருகால் பகைமை ஏற்பட்டுப், போர் மூண்டது. அப்போரில் சேரன் தோல்வியுற்றுப் பாண்டியனால் சிறைப் படுத்தப்பட்டான். சேரன் அச் சிறையினின்றும் தன் வலியினால் சிறைக் காவலரை வென்று, தப்பிச் சென்று, தன்னாடு புக்கு அரசு வீற்றிருந்தான். இதைப்பற்றிக் குறுங்கோழியூர்க் கிழார் :—

"நீடு குழியகப்பட்ட
பீடுடைய வெறுழ் முன்பிற்
கோடு முற்றிய கொல் களிறு
நிலை கலங்கக் குழி கொன்று
கிளை புகலத் தலைக் கூடியாங்கு,
நீ பட்ட அரு முன்பிற்
பெருந்தளர்ச்சி பலர் உவப்பப்
பிறிது சென்று மலர் தாயத்துப்
பலர் நாப்பண் மீக்கூறலின்
உண்டாகிய உயர் மண்ணும்
சென்று பட்ட விழுக்கலனும்
பெறல் கூடும் இவன் நெஞ்சுறப் பெறின்" (புறம்: கஎ)

எனவும் மிக அழகாகப் பாடியுள்ளார்.

(இ - ள்) "ஆழத்தால் நீண்ட குழியிடையே அகப்பட்ட, பெருமையும் வலிமையும் பொருந்திய கொம்பு முதிர்ந்த கொல்லுங் களிறு, அதன் நிலை சரியக் குழியைத் தூர்த்துத் தன் இனம் விரும்ப, தன் இனத்திலே சென்று சேர்ந்ததுபோல, நீ பாண்டியனால் சிறைப்படுத்தப்பட்ட போது உன் வலியால் பகையை மதியாது, நீ உற்ற அயர்வு நீங்க, பிறிதொரு சூழ்ச்சியால் நீ தப்பித்துப் போய்ப், பலரும் மகிழ, தாயத்தார் நடுவே சேர, ஆங்கு நீ உயர்த்துப் பேசப்படுதலால், நீ செழியனால் பிணிப்புண்பதற்கு முன்பு நின்னால் அழிக்கப்பட்டுப் பின்பு தம் அரசு வவ்வாது நின் வரவு பார்த்திருந்த அரசர்களுடைய நாடுகளும், அணிகலன்களும் இவன் நெஞ்சு நமக்கு உரித்தாகப் பெறின் நமக்குக் கிடைக்கும்" என்று புலவர் பாணர், கூத்தர் முதலியோர் எண்ணுகின்றனர் என்பதே.

இவன் பாண்டியனோடு மாறுபட்டு அவனால் சிறைப்பட்டது இவனுடைய ஆட்சியின் கடைக்காலமாக இருக்கலாம். அதாவது, கி. பி. 195 என்று கொள்ளலாம்.

இவனுடைய முன்னோர்கள் இமயம் முதல், குமரிவரை ஒரு மொழியாகிய தமிழ்மொழி வைத்து உலகத்தை ஆண்ட செய்தியைக் குறுங்கோழியூர்க்கிழார்,

"தென்குமரி" வட பெருங்கல்
குணகுட கடலா எல்லை
குன்று மலை காடு நாடு
ஒன்றுபட்டு வழி மொழியக்
கொடிது கடிந்து கோல் திருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல" (புறம்: கஎ)

என்று பாடுகின்றார்.

(இ - ள்.) "தென்றிசைக்கண் குமரியும், வடதிசைக் கண் இமயமும், கீழ், மேல் இருதிசைக்கண்ணும் கடலும் எல்லையாக, நடுவுபட்ட குன்றமும், மலையும், காடும், நாடும் என இவற்றையுடையோர் ஒருதன்மைப்பட்டு வழிபாடு கூற, தீதுநீக்கி, கோலைச் செவ்விதாக்கி, ஆறில் ஒன்றாகிய வரியை வாங்கி உண்டு, நடுவுநிலைமையில் அரசுபுரிந்து, தடையில்லாமல் இனிமையாக உருண்ட ஒளியை (புகழை) உடைய ஆணையாழியால் நிலமுழுதையும் (Whole of India) ஆண்டோரது வழியில் (பரம்பரையில்) வந்த அரசனே" என்பதே.

முடிவேந்தர் மூவரிலும் சேர பரம்பரையினரே ஆதியில் இமயம் முதல், குமரிவரை அரசாண்டனர் என்றும், அதனால் அவர்களுக்கு 'இமயவரம்பன்' என்ற பட்டம் சிறப்பாக உண்டென்றும் அறிந்தாம்.

குணகுட கடல் என்றாற்போல, குமரிக்கண் கடல் கூறப்படாமையால் குமரிப்பௌவம் ஏற்படாததற்கு முன்னேயே சேர அரசர்கள் இமயம் முதல் குமரிவரை அரசாண்டுள்ளார்கள் என்பது விளங்குகிறது.

இவன் கூடலூர்கிழார் என்னும் புலவரைக் கொண்டு ஐங்குறுநூறு தொகுத்ததாகச் 'சேரன் செங்குட்டுவன்' ஆசிரியர் கருதுகிறார். (சேரன் செங்குட்டுவன், பக்கம், கஅ).

கூடலூர் கிழார் என்னும் புலவர் புறம் உ௨௯-ல் இவனைப்பற்றி ஆனந்தப்பையுள் என்னும் துறையில் இவன் கி. பி. 198-ல் இறந்தபோது பாடியது சோதிடக் குறிப்புக்கள் நிறைந்துள்ளதா யிருக்கிறது.

“ஆடுஇயல் அழற் குட்டத்து
ஆரிருள் அரை இரவில்
முடப்பனை யத்து வேர்முதலாக்
கடைக் குளத்துக் கயங்காயப்
பங்குனி யுயர் அழுவத்துத்
தலைநாண்மீன் நிலைதிரிய
நிலைநாண்மீன் அதனெதிர் ஏர்தரத்
தொன்னாண்மீன் துறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்னாது
அளக்கர்த் திணை விளக்காக
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண்டு யாமும் பிறரும் பல்வேறு இரவலர்
பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயின் நன்றுமன் மற்றில்லென
அழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
அஞ்சினம்; எழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யானை கைவைத் துறங்கவும்
திண்பிணி முரசம் கண்கிழிந் துருளவும்
காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவும்
மேலோர் உலகம் எய்தினன் ஆகலின்
ஒண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்
தன்றுணை யாயம் மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கும் ஆற்றல் நசைவர்க்கு
அளந்து கொடையறியா ஈகை
மணிவரை அன்ன மாஅ யோனே” (புறம்: உ௨௯)

குறிப்பு:—ஆடு - மேடவிராசி; அழல் - கார்த்திகை. முடப்பனை - அநுடம்; பங்குனியில் மீன் வீழின் அரசர்க்குப் பீடை.

“ஆடு—கயல்—தேள்—அறுச்சிங்கத்து எழுமீன் விழுமேல் அரசழிவாம்” (சோதிடநூல்)

## கஙு. மாந்தரம் பொறையன் கடுங்கோ

[கி. பி. 2ம் நூற்றுண்டு]

இவன் கடைச்சங்கப் புலவரான இரண்டாம் பரணரால் அகம் 142-ல் பாடப்பெற்றவன். இரண்டாம் பரணருடைய காலங் கி. பி. 50—கி. பி. 140.

சேரநாட்டு வஞ்சியில் ஆண்ட சேர முடிமன்னருக்கு உட்பட்டு, சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்டவன். இவனைப்பற்றி இரண்டாம் பரணர்,

"இலமலர் அன்ன அஞ்செந் நாவில்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறைப் ருந்தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல நன்றும்
உவவினி வாழிய" (அகம் : கசஉ)

என்று பாடியுள்ளார்.

(இ - ள்.) "இலவமலர் போன்ற அழகிய சிவந்த நாவினுல் புலமையால் உயர்த்திக் கூறப்பெறும் மேலோர் புகழ, பலரினும் மேம்பட்ட கொடுத்தலாற் கவிந்த கையினையுடைய வள்ளலாய, நிறுத்துதற்கரிய சேனையினையுடைய போர் வெல்லும் மாந்தரம் பொறையன் கடுங்கோ என்னும் சேர மன்னனைப் பாடிச்சென்ற வறியோரது பிச்சை ஏற்கும் கலம்போல இனிப் பெரிதும் நிறைவுற்று மகிழ்வாயாக" என்பது.

இதனுல், இவன் புலவராலும், அறிஞர், அறவோராலும் உயர்த்திக் கூறப்படும் பெருமை வாய்ந்தவன் என்றும், புலவர், பாணர், கூத்தர் முதலியோருக்குக் கொடுக்கும் கொடையில் சிறந்தவன் என்றும், வெல்லுதற்கரிய நாற்பெருந் தானையைப் படைத்தவன் என்றும்,

பாடிச்சென்ற வறியோர் அனைவரும் வறுமை அறவே நீங்கி மகிழ்ச்சி அடைவார் என்றும் அறிகின்றோம்.

மேலும், இவ்வகப்பாட்டில்,

"கறையடி யானை நன்னன் பாழி
கூட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்கு
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்றுவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பிற்
பலர் அறிவுறுதல் அஞ்சி"

என்று 'இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது' என்னும் துறையில் கூறப்பட்டுள்ளதாதலின், இவன் கரூரில் இருந்து சேரநாட்டின் ஒரு பகுதியை ஆண்ட தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தவன் என்பதும் பெற்றாம்.

இவன் வஞ்சியில் ஆண்ட செங்குட்டுவன் காலத்திலும், அவன் மகன் குட்டுவன் காலத்திலும், நன்னன் ஆண்ட பூழிநாட்டை, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலால் அவன் கொலையுண்ட பின் ஆண்டவன் என்றும், சேர முடிமன்னருக்கு உறுதுணையாக நின்று பல போர்களில் வகை சூடிவந்தவன் என்றும், பாரிவள்ளல்போலக் கொடையிற் சிறந்த வள்ளல் என்ற பட்டத்தையும் பெற்றவன் என்றும் அறிகிறோம்.

பூழி நாடானது அடிக்கடி சேரருக்கும் கடம்பருக்கும் மாறி மாறி வந்துள்ளது என்பது தெரிகிறது. கடம்பர் ஆட்சி துளுநாட்டில் கி. மு. 300 முதல் கி. பி. 1336 வரை 1636 ஆண்டுகள் நடைபெற்றுவந்தது நோக்கத்தக்கது.

## கச. மாந்தரஞ் சேர அரசன்

[கி. பி. 320—கி. பி. 350]

கேரள சரித்திரம் பக்கம் 58-ல் இவ்வரசனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது வருமாறு:—

வடநாட்டுக் குப்த பரம்பரையைச் சேர்ந்த சமுத்திர குப்தன் (கி. பி. 325—கி. பி. 375) தென்னாட்டின்மீது படையெடுத்து வந்தபோது, வழியில் பல நாடுகளைச் செயித்துக்கொண்டு சேரநாடு வந்து, அப்போது வஞ்சியில் ஆண்டு கொண்டிருந்த மாந்தரன் என்பவனோடு போர் தொடுத்து, அவனை முறியடித்தான். பிறகு, சேரனுக்கும் சமுத்திரகுப்தனுக்கும் சமாதானம் ஏற்பட்டு, சமுத்திர குப்தன் வடநாடு திரும்பினான்" என்பதே.

சமுத்திரகுப்தன் கோசலநாட்டு மகேந்திரனையும், மகா காந்தாரநாட்டு வியாக்கிர அரசனையும், பிஷ்டாபுரம் (பிட்டாபுரம்—பித்தாபுரம்) மகேந்திரனையும், எரண்ட பள்ளித் தாமனையும், காஞ்சியில் அப்போது அரசுசெய்த பல்லவகுல முதலாம் விஷ்ணுகோபனையும் (கி. பி. 325—கி. பி. 350), ஆவமுக்த நாட்டு நீலராயனையும், வேங்கி நாட்டு (Nellore) அத்திவர்மனையும், பாலக்கநாட்டு உக்கிர சேனனையும், தேவராஷ்டிர நாட்டுக் கவேரனையும், குஸ்தல புரத்துத் தனஞ்சயனையும் முறியடித்ததாக அல்லகாபாத்தி லுள்ள (Allahabad) குப்தர் காலத்துக் கல்வெட்டு[1]

---

1. The famous Gupta Inscription on the Allahabad Lot of Asoka, says:—" Whose great good fortune was mixed with, so as to be increased by his glory produced by the favour shown in capturing and then liberating Mahendra of Kosala, Viyagra Raja of Maha-Kandara, *Mantha Raja* of Kerala, Mahendara of Pishtapura, Swamidatta of Kottara on the hill, Damana of Erandapalli, *Vishnugopa of Kanchi*, Neela Roya of Avamukta, Hasti-Varman of Vengi, Ugrasena of Palakka, Kavera of Devarasttra, Dananjaya of Kusthalapura and all other Kings of the Region of the South.

ஒன்று பேசுகிறது. அந்தக் கல்வெட்டினால் என்ன தெரி கிறதென்றால் குப்த அரசன் சமுத்திரகுப்தன் உச்சநி னியில் இருந்து புறப்பட்டு, வடநாடு தென்னாடு முழுவ தையும் வென்று, அந்தந்த நாட்டு அரசர்களுடன் ஒற்றுமை உடன்படிக்கை செய்துகொண்டு, புகழ்பெற வாழ்ந்து வந்ததாக அறிகின்றோம்.

இந்தக் கல்வெட்டில் சோழர்—பாண்டியரைப் பற்றிக் குறிப்பிடாதது நோக்கத்தக்கது. என்னெனின், சமுத்திர குப்தன் படையெடுப்பின்போது, சோழநாடும் பாண்டிய நாடும் களப்பிரர் (வடுகக்கருநடர்) படையெடுப்பால் அரசு நிலை குலைந்து, நாடு குழப்பத்தை அடைந்திருந்தது. அர சர்கள் எல்லாம் காடு—மலை முதலிய இடங்களில் மறைந்து இருந்து எதிரிகளைத் தாக்கிவந்ததால், நாட்டில் நிலையான அரசு இல்லாமல் கொலை—கொள்ளை முதலியன நடந்து வந்த காலம். அதனால்தான் சோழனைப் பற்றியோ— பாண்டியனைப் பற்றியோ, அல்லது களப்பிர அரசனைப் பற்றியோ குப்தர் கல்வெட்டில் கூறப்படவில்லை. பாண்டி நாட்டில் களப்பிரர் ஆட்சி கி. பி. 340 முதல் கி. பி. 520 வரை நடந்துவந்தது. இதனால், சமுத்திரகுப்தனுடைய தென்னாட்டுப் படையெடுப்பு கி. பி. 340-க்குமேல் கி. பி. 350-க்குள் இருக்கும் என்று எண்ண இடம் உண்டு.

மாந்தராஜா என்ற மாந்தரன் காலத்தில் நாடு எல்லா விதங்களிலும் சிறப்புற்றிருந்தது என்பது வெளியாகிறது.

## கரு. சேரமான் வஞ்சன்

[கி. பி. 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதி]

இவனைப்பற்றிப் புறநானூறு 398 கூறுவதாவது:—

“மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர
வகைமா ணல்லிற்...............
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்ப
பொய்கை பூமுகை மலரப் பாணர்
கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
இரவுப்புறம் பெற்ற ஏம வைகறைப்
பரிசிலர் விரையா விரை செய் பந்தர்
வரிசையினிறுத்த வாய்மொழி வஞ்சன்
நகைவர் குறுகினல்லது, பகைவர்க்குப்
புலியின மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத் தன்னவென் னரிக்குரல் தடாரி
இரவுரை நெடுவா ரிப்ப வட்டித்து
உள்ளி வருநர் கொள்கல நிறைப்போய்
தள்ளா நிலையை யாகியர் எமக்கென
என்வர வறீஇச்
சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்தனாகி யென்னரைத்
துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகை விரிந்தன்ன பொங்குதுகில் உடீஇ
அழல் கான்றன்ன அரும்பெறன் மண்டை
நிழல்காண் தேறல் நிறைய வாக்கி
யானுண வருளல், அன்றியும், தானுண்
மண்டைய கண்ட மான்வறைக் கருனை
கொக்குகிர் நிமிரல் ஒக்க லார
வரை’ப்புறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு மரவுற ழாரமொடு
புரையோன் மேனிப் பூத்துகிற் கலிங்கம்

உரைசெல வருளி யோனே!
பறை யிசையருவிப் பாயற் கோவே."

இது, சேரமான் வஞ்சனைத் திருத்தாமனார் என்னும் புலவர் பாடியது.

இப் புறப்பாட்டால் இவனைப்பற்றித் தெரிவது என்ன வெனில், இவன் சேரர் குலத்தைச் சேர்ந்த ஒரு அரசன் என்றும், கட்டுக்களால் மாட்சிமைப்பட்ட கடி அரண் ஒன்றில் வாழ்ந்துவந்தான் என்றும், பொழுதை அறிவிக்கக் கோழிகளைப் பழக்கி வந்தான் என்றும், கூத்தர், பாணர், புலவர்களுக்கு வரையாது கொடுத்துவந்த வள்ளல் என்றும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவன் என்றும், சத்தியம் தவறாதவன் என்றும், யாராலும் வெல்ல முடியாத வீரத்தையுடையவன் என்றும் அவன் நாட்டில் நண்பர் - இரவலர் - பாவலர் புகமுடியுமே யன்றிப் பகைவர் புகமுடியாதென்றும் அறிகிறோம்.

இவன் தெய்வத்தினிடத்தில் மிக அன்புடையவன். இவன் காலத்தில் கொங்குநாட்டைச் சேர்ந்த கரூர் (வஞ்சி) சேரருக்குச் சேர்ந்திருந்தது. கரூருக்கு 7 கல் தொலைவி லுள்ள, தேவாரப் பாடல்பெற்ற, தற்காலம் வெஞ்சமாக் கூடல் என்ற சிவதலத்தைக் கருங்கற்களால் கட்டி, அவ் விடத்தில் தன் பெயரால் ஊர் உண்டாக்கி வழிபட்டு வந்தான் என்று அறிகிறோம்.

"வஞ்சன்மன் கூடல்" என்பது பேச்சு வழக்கில் 'வஞ்சமாங்கூடல்'—'வெஞ்சமாங்கூடல்' என மருவி வழங் கப்படுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தைப் பற்றித் தேவாரம் பாடியுள்ளார், அவர் பாடலைப் பார்த்தால் சேரமான் வஞ்சன் காலத்தில் அவ்வூர் சிறப்புற்று விளங்கி யது என்பது தெரிகின்றது.

அவ்வூர் சிற்றாற்றுக்குக் கீழ்க்கரையில் உள்ளது.

V. de : **திணைத்து எற்று சிற்றறதன் கீழ்க்கரைமேல்...**
...வெஞ்சமாங் கூடல்" (சுந்தரர் தேவாரம் பதி ௪௨: ௧.)

அவ்வூருக்கு அருகில் சிற்றாறும் அமராவதியும் கூடுகிறதால், அவ்வூர் 'கூடல்' எனப்பட்டது.

---

## ௧௬. சேரலன்

### [கி. பி. 510—570]

இவன் கூற்றுவ நாயனார் காலத்தில் சேரநாட்டில் அரசாண்டவன்.

தொண்டை நாட்டில் களத்தூர்க் கோட்டத்தில் பல்லவர்க்குக் கீழ் கூற்றுவ நாயனார் அரசாண்டபோது, நாயனார் தமது தோள்வலியால் துன்னார் முனைகளை வென்று, தன் ஆட்சி பெற்று, சூலப்படையார் திருநாமம் நாடோறும் நவிலும் நலமிக்கவராக இருந்தார். அதனால், அவர் ஈசன அடியார் பதம் பரவி, பணிந்து ஏத்தி, திருத்தொண்டு தவறாமல் செய்து வந்தார். அதனால் அவருக்கு ஈசன் அருள் கிட்டியது. அவ்வருளின் வலியால் பல நாடுகளைத் தன் அடிப்படுத்தி, நால்வகைப் படைகளையும் பெருக்கி, வீரத்தில் தனக்கு மிஞ்சியவர் இல்லை யெனும்படி வாழ்ந்து வந்தார்.

[1]"வென்றி வினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கி
சென்று தும்பைத் துறைமுடித்தும் செருவில் வாகைத் திறங் [கெழுமி
மன்றல் மாலை மிலைந்த வர்தம் வளநா டெல்லாம் கவர்ந்துமுடி
**ஒன்று மொழிய அரசர்திரு எல்லா முடைய ராயினர்.**"

[2]" மல்லன் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்கு
தில்லை வாழந் தணர்தம்மை வேண்ட அவரும் செம்பி யர்தம்
தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச் சூட்டோம் முடி [யென்று
நல்கா ராகிச் **சேர லன்றன் மலைநா டணைய நண்ணுவார்.**"

---

1, 2. பெரிய, கூற்றுவ: ௯, ௨.

என்ற பெரியபுராணச் செய்யுள்களின்படி, கூற்றுவ நாயனார் அரசர் திருவெல்லாம் பெற்றும், முடி ஒன்று இல்லாததால், தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று, முடி சூடும்படி கேட்க, அவர்கள் தாங்கள் சோழகுல அரசர்களுக்கு மாத்திரம் முடிசூட்டும் உரிமையுடையோமே தவிர, ஏனையோருக்கு முடிசூட்ட மாட்டோம் என்று மறுத்துவிட்டார்கள்.

மறுத்துவிட்டபின், தில்லை வாழ் அந்தணர்கள் கூற்றுவ நாயனார் ஏதாவது தம் குடும்பங்களுக்குத் தீங்கு இழைக்கக்கூடும் எனக் கருதி, ஒரு குடும்பத்தைத் தில்லையில் இருத்தி, முடியைப் பாதுகாக்கவும், கூத்தப் பெருமானுடைய நாள் வழிபாடு நடைபெறவும் ஏற்பாடுகள் செய்துவிட்டு, மீதி எல்லோரும் மலைநாடு சென்று அப்போது அங்கே அரசுபுரிந்த சேர அரசனிடம் அடைக்கலம் புகுந்து, சின்னாள் தங்கி இருந்தார்கள்.

சேர அரசன் அவர்களுக்கு வேண்டுவன செய்து, அவர்கள் கொண்ட கருத்து தவறானது என்றும், களந்தை அரசர் கூற்றுவர் சிவபத்தியிற் சிறந்த அடியார் என்றும், பிறருக்குத் தீங்கிழைக்க மனத்திலும் எண்ணாதவர் என்றும், தில்லைவாழந்தணர்க்கு எடுத்துரைத்து, அவர்களுடைய மனக்கலக்கத்தைத் தெளிவித்தார். அந்தணர்களும் மனம் தெளிந்து மறுபடியும் தில்லை சென்று எப்போதும்போல் வாழ்ந்து வந்தார்கள்.

இச் சேரனும் சிவபத்தி, அடியார் பத்திகளிற் சிறந்து போர் வலிமிக்கு, சேரநாட்டை வளம்படுத்தி மக்கள் துயருறாவண்ணம் புகழ்பெற அரசாண்டு வந்து, இறுதியில் சிவனடியில் கலந்து பேரின்பம் எய்தினான்.

கூற்றுவ நாயனாரும் தில்லைவாழந்தணர்கள் மறுத்துவிட்டபின், தில்லைக் கூத்தப்பெருமானை வேண்டி, அவருடைய மலர்ப்பதங்களையே முடியாகப் பெற்று, அருளால் அவை தாங்கி, உலகமெல்லாம் தனிப்புரந்து, திருப்பணி

களர் பல செய்து, இறுதியில் உமையாள் கணவன் அடி சேர்ந்து பேரின்பம் எய்தினார்.

---

## கஎ. மன்னன் சேரலன் பூழியான்

[கி. பி. 600—கி. பி. 640]

இவ்வரசனைப்பற்றி அப்பர் சுவாமிகள் தாம் திரு இன்னம்பர் ஈசனைப்பற்றிப் பாடிய திருக்குறுந்தொகையில்,

"தென்ன வன்னெனை யாளும் சிவனவன்
மன்ன வன்மதி யம்மறை ஓதியான்
முன்னம் மன்னவன் சேரலன் பூழியான்
இன்னம் இன்புற்ற இன்னம்பர் ஈசனே"

என்று பாடியுள்ளார்.

அப்பர் சுவாமிகளுடைய காலம் கி. பி. 567 முதல் கி. பி. 648 வரை ஆகும். 81 ஆண்டுகள் இப்புவியில் வாழ்ந்தவர். கி. பி. 250 முதல் கி. பி. 850 வரை சுமார் அறுநூறு ஆண்டுகள் சோழநாடு சரியான அரசன் ஏற்படாமல் நிலைகுலைந்து இருந்தது. பல்லவர்களாலும் களப்பிரர்களாலும் நாடு கொள்ளையடிக்கப்பட்டு, சமணர்களுடைய ஆதிக்கம் மேலிட்டு, சோழ குடும்பத்தார் எல்லாம் திக்குக்கு ஒருவராக திருவாரூர்—பழையாறை—தஞ்சை—கரூர்—சேய்ஞலூர் முதலிய இடங்களிலும், கொல்லிமலை—பச்சைமலை முதலிய மலைகளிலும் மறைந்து வாழ்ந்துவந்தார்கள்.

மகேந்திர வர்மப்பல்லவன் அப்பர்சுவாமிகளால் சமண மதத்தினின்றும் சைவமதத்துக்கு மாற்றப்பட்ட காலம் முதல்தான் சோழநாட்டுக்கு நல்லகாலம் பிறந்தது என்னலாம்.

அது முதற்கொண்டு சோழ குடும்பத்தார் சிலர் பல்லவருக்குக் கீழும், களப்பிர அரசருக்குக் கீழும் சிற்சில

இடங்களில், அதாவது, ஆரூர் - பழையாறை முதல் பல இடங்களில் அரசாண்டு கொண்டு இருந்த இடம் தெரியாமல் வாழ்ந்து வந்தார்கள்.

பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி மிகு பலமாக நடந்து வந்தது. வடநாட்டிலிருந்து சமணக் குடிகளும் சமணத் துறவிகளும் ஏராளமாகப் பாண்டிய நாட்டில் குடியேறினார்கள். ஆனைமலை முதலிய எட்டு மலைகளில் எண்ணாயிரம் சமணர்கள் வாழ்ந்து வந்தார்கள். வஜ்ரநந்தி என்ற சமணத் துறவி கி. பி. 470-ல் திருப்பரங்குன்றத்துக்கு அணித்தாக இருந்த தென் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தி, தான் தலைவனாக இருந்து நடத்தி வந்தான். கி. பி. 520-ல் மூர்த்தி நாயனார் என்பவர் தோன்றி, களப்பிரரை நாட்டைவிட்டுத் துரத்தும்வரையும் பாண்டிய நாடு களப்பிரர்வசம் இருந்து வந்தது. பாண்டியர் ஆட்சி அப்போது இல்லை.

இப்படி இருக்கும் காலத்தில்தான் மன்னன் சேரலன் பூழியான் என்பவன் சேர நாட்டின் பன்னிரண்டு பகுதிகளில் ஒன்றாகிய பூழிநாட்டில் பூழியை அரசிருக்கையாகக் கொண்டு ஆண்டு வந்ததால் பூழியான் என்னப்பட்டான்.

இவன் நாற்பது ஆண்டுகள் சேரநாட்டைப் புகழ்பட ஆண்டு, பின் அரசியலில் வெறுப்புற்று, நாட்டைத் தன் மகன் கையில் ஒப்புவித்துவிட்டு, தலயாத்திரை செய்யப் புறப்பட்டு, பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு, கடைசியில் இன்னம்பர் ஈசனை வழிபட்டு முத்தி யெய்தினான் என்பது அப்பர் வாக்கால் அறியக்கிடக்கின்றது.

திருப்பனந்தாள் மடத்தார் வெளியிட்ட தேவாரப் பதிப்பில் “முன்னம் மன்னவன் சேர்வன பூழியான் இன்னம் இன்புற்ற இன்னம்பர் ஈசனே” என்று காணப்படுகிறது. ஏனைய பதிப்புக்களில் அப்படி இல்லை. ஆதலின், “சேரலன் பூழியான்” என்பதே சரியான பாடம் என்று தோன்றுகிறது.

இந்த அரசன் பெரிய புராணத்தில் கூறப்பட்ட 'சேர அரசன் செங்கோற் பொறையன்' என்பவனுடைய தந்தையாக இருக்கலாம் என்று ஊகிக்க இடம் இருக்கிறது.

உதியன் குடும்பம் கி. பி. 462 வரை முடி அரசாக ஆண்டு வந்தார்கள். அதற்கப்புறம் கி. பி. 462 முதல் கி. பி. 667 வரை முடியரசு பொறையன் குடும்பத்துக்கு வந்து விட்டது. மறுபடியும் கி. பி. 667-ல் முடியரசு உதியன் குடும்பத்துக்கு மாறிவிட்டது.

கி. பி. 462 முதல் கி. பி. 600 வரை ஆண்ட பொறையன் குடும்பத்தாருடைய பெயர்கள் இதுவரை தெரியவில்லை.

---

## கஅ. செங்கோற் பொறையன்

[கி. பி. 640—கி. பி. 667]

இவ்வரசனைப் பற்றி முதலாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1013—1042) காலத்தில் அமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமான் (கி. பி. 992—1042) தம்முடைய பெரிய புராணத்தில் சேரமான் பெருமாள் I (கி. பி. 667-712) வரலாற்றில்:—

"நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையின் கொடி மதில்சூழ்
சீரின் மலிந்த திருநகரம் அதனிற் **செங்கோற் பொறையனெனும்**
காரின் மலிந்த கொடைநிழன் மேற் கவிக்கும் கொற்றக் குடை [நிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத்தரசன் தரணி நீத்துத் தவஞ்சார்ந்தான்"

என்று கூறியுள்ளார்.

கி. பி. 640-ல் சேரலன் பூழியான் என்பவன் தன் மகனாகிய செங்கோற் பொறையனிடம் அரசை ஒப்புவித்து விட்டு, தவத்தை மேற்கொண்டு, தலங்கள்தோறும் சிவபெருமானை வணங்கச் சென்றதன்மேல், செங்கோற்

பொறையனும் தந்தை சொற்படி, அரசை ஏற்றுக் கொண்டு, குடிகள் மகிழ்ச்சியுறும்படி நீதி வழங்கி, புலவர் பாணர் - கூத்தர் முதலியோருக்குக் கார்மேகமும் நாணும் படி கொடுத்து, நாற்றிசைகளிலும் புகழ் பரவ அரசு செலுத்தி வந்தான். அப்படி அரசுபுரியுங் காலத்தில், பிள்ளைப்பேறு இல்லாமையால் தன் நாட்டில் உள்ள ஆலயங்களுக்கு வேண்டும் கட்டளைகளை ஏற்படுத்தி, சிறப் புறப் பூசனைகளையும் விழாக்களையும் நடத்திக்கொண்டு தானும் தன் மனைவியும் நோன்பு முதலியவைகளை ஏற்றுத் தானதருமங்களைச் செய்து வந்தான். என்ன செய்தும் ஊழ்வினையால் மக்கட்பேறு உண்டாகவில்லை. அதனால் உலக வாழ்க்கையிலும் அரசியலிலும் வெறுப்புத்தட்டி, அரசை அமைச்சர் முதலியவர்களைக் கூப்பிட்டு, அவர் களிடம் ஒப்படைத்துவிட்டு, அணித்தாக இருந்த வனம் சென்று தவஞ் செய்து வந்தான்.

"வந்த மரபின் அரசளிப்பான் வனம்சார் தவத்தின் மருவியபின்" என்று சேக்கிழார் கூறுப்படி, செங்கோற் பொறையன் வனம் சென்றபின் சிலநாட்கள் அமைச்சர்கள் பாதுகாத்துக்கொண்டு வந்தார்கள். பிறகு எல்லோரும் கூடி ஆலோசித்து, உதியன் குடும்பத்தைச் சேர்ந்த **பெருமாக் கோதையார்** என்பவரைத் தேடிச் சென்று, அவரை அரசனாக்கினார்கள்.

செங்கோற்பொறையனுக்குப் பிள்ளை இல்லாமையால், பொறையன் குடும்பம் அவனோடு முடிவடைந்தது.

# பின் இணைப்பு

## தமிழ்நாட்டை ஆண்ட அரச மரபினர்

[கால வரிசைப்படி]

| பெயர் | தலைநகர் | காலம் |
|---|---|---|
| சேரர் இனை I முதல் II | வஞ்சி | கி.மு. 30000 — கி.பி. 834 |
| சோழர் இனை I முதல் V | உறந்தை | ,, — கி.பி. 1394 |
| பாண்டியர் இனை I முதல் VII | தென் மதுரை | ,, — கி.பி. 1748 |
| சிசுநாகர் | மகதம் | கி.மு. 600 — கி.மு. 360 |
| நந்தர் | ,, | கி.மு. 360 — கி.மு. 321 |
| மவுரியர் | பாடலிபுரம் | கி.மு. 321 — கி.மு. 184 |
| கடம்பர், அல்லது கதம்பர் | வனவாசி | கி.மு. 300 — கி.பி. 1336 |
| சாதவாகனர் | சிரீகாகுளம் | கி.மு. 220 — கி.பி. 236 |
| சுங்கர் | பாடலிபுரம் | கி.மு. 184 — கி.மு. 72 |
| சேதி | கலிங்கம் | கி.மு. 183 — கி.மு. 165 |
| கண்ணுவர் | பாடலிபுரம் | கி.மு. 72 — கி.மு. 27 |

| பெயர் | தலைநகர் | காலம் |
|---|---|---|
| கொங்கு—(ம)ராட்டிரர் | காந்தபுரம் | கி.மு. 27 — கி.பி. 189 |
| ,, —கங்கர் | தலக்காடு | கி.பி. 189 — கி.பி. 880 |
| பல்லவர்—கிளை I, II | காஞ்சி | கி.பி. 225 — கி.பி. 910 |
| குப்தர்—கிளை I, II | மகதம் | கி.பி. 250 — கி.பி. 727 |
| வாகடகர் | ,, | கி.பி. 300 — கி.பி. 550 |
| சளுக்கியர்—கிளை I | வாதாபி | கி.பி. 500 — கி.பி. 973 |
| கால சூரியர் | மாளவம் | கி.பி. 550 — கி.பி. 620 |
| இராட்டிரகூடர் | மேல்காடு | கி.பி. 570 — கி.பி. 973 |
| சளுக்கியர்-கிளை II | வேங்கி | கி.பி. 651 — கி.பி. 1070 |
| உயுத்த வம்சம் | காஞேஜ் | கி.பி. 728 — கி.பி. 810 |
| பரிகரர் | பிம்மல் | கி.பி. 810 — கி.பி. 1090 |
| கொங்கு—சோழர் | கோயமுத்தூர் | கி.பி. 880 — கி.பி. 1303 |
| சளுக்கியர்-கிளை III | கல்யாணி | கி.பி. 973 — கி.பி. 1190 |

| பெயர் | தலைநகர் | காலம் |
|---|---|---|
| ஹொய்சளர் | பேளூர் | கி.பி. 1000 — கி.பி. 1339 |
| காகதீயர் (ஆந்திரர்) | தெலுங்கானம் | கி.பி. 1000 — கி.பி. 1424 |
| காலசூரியர்—ஹேஹயர் | கல்யாணி | கி.பி. 1155 — கி.பி. 1183 |
| யாதவர்—தேவகிரி | தேவகிரி | கி.பி. 1150 — கி.பி. 1318 |
| ஆனகுந்தி அரசர்கள் | ஆனகுந்தி | கி.பி. 1014 — கி.பி. 1334 |
| விஜயநகர அரசர்—சங்கம—அரிகரவம்சர் | விஜயநகர் | கி.பி. 1336 — கி.பி. 1472 |
| மைசூர் உடையார் | மைசூர் | கி.பி. 1339 — கி.பி. 1948 |
| நரசிம்மவம்சம் | | கி.பி. 1472 — கி.பி. 1565 |
| மதுரை நாயக்கர் | மதுரை | கி.பி. 1559 — கி.பி. 1736 |
| இலங்கை வம்சம் | | கி.பி. 515 — கி.பி. 1947 |

1. குறிப்பு :—சேர அரசர்களோடு பகைத்துப் பொருதவர்களும், நட்டு உதவினவர்களும் பிறநாட்டு அரசர்களில் உண்டு. ஒருவருடைய காலத்தை இன்னொருவருடைய காலத்தைக் கொண்டு கணிக்க முடியும். ஒரே பெயரையுடைய பல அரசர்களில் இவர் இன்ன காலத்தவர் எனக் கண்டுகொள்ள முடியும். வரலாறு எழுதுபவர்க்கு உடனுக்குடன் காலத்தை ஒத்துப் பார்த்துக்கொள்ள இவ் அட்டவணை பெரிதும் பயன்படும்.

2. **குறிப்பு:**—தொல்காப்பியர் இலக்கணப்படி தமிழில் க, ச, த, ந, ப, ம இந்த ஆறு எழுத்துக்களும் ஔ என்னும் உயிரெழுத்துடன் மொழிக்கு முதலில் வராது. (உ-ம்.) .—

கவ்வு - கௌவு என்றும், சவ்வரிசி - சௌவரிசி என்றும், தவ்வை - தௌவை என்றும், நவ்வி - நௌவி என்றும், பவ்வீ - பௌவீ என்றும், மவ்வல் - மௌவல், மவுரியர் - மௌரியர் என்றும் வராதது காண்க. சில புலவர்களும் பத்திரிகையாளர்களும் மேற்படி விதிக்கு மாறாக எழுதுவதெல்லாம் இலக்கணப் பிழையாகும்.

# அரசு குடிவழிகள்

## 1. சேரர் குடிவழி

### கிளை க. உதியன் குடும்பம்

| பெயர் | காலம் |
|---|---|
| இமயவரம்பன் வான வரம்பன் | கி.மு. 30000-க்கு முற்பட்டவர் |
| கேலன்—கேரளன்—சேரலன் | கி.மு. 9000 — கி.மு. 6000 |
| சேரலன்—வானவன் | கி.மு. 6040 — கி.மு. 6000 |
| பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்கிற வானவரம்பன், பாரத காலத்தவன் | கி.மு. 3145 — கி.மு. 3105 |
| கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் மாக்கோதை | கி.மு. 4-ம் நூற். பின்பகுதி — கி.மு. 3-ம் நூற். முன்பகுதி |
| பல்லான் குன்றில் குழுமூர் உதியன் | ” — ” |
| கேரளபுத்திரன் | கி.மு. 3-ம் நூற். பின்பகுதி |
| செல்லூர் ஆதன் எழினி | ” |
| முடங்கிக் கிடந்த சேரலாதன் | கி.மு. 2-ம் நூற்றாண்டு |
| சேரமான் பெருஞ் சேரலாதன் | ” |
| சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதன் | கி.மு. 100 — கி.மு. 80 |
| சேரமான் இளங்குட்டுவன் | கி.மு. 80 — கி.மு. 30 |
| சேரலாதன் | கி.மு. 30 — கி.பி. 12 |
| உதியன் சேரலாதன் (மனைவி நல்லினி) | கி.பி. 12 — கி.பி. 42 |
| இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | கி.பி. 42 — கி.பி. 100 |
| பல்யானைச் செல்கெழுகுட்டுவன் | கி.பி. 47 — கி.பி. 72 |
| சேரமான் குட்டுவன் கோதை | கி.பி. 72 — கி.பி. 130 |
| களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் | கி.பி. 72 — கி.பி. 97 |
| செங்குட்டுவன் | கி.பி. 100 — கி.பி. 155 |
| இளங்கோ அடிகள் | கி.பி. 85 — கி.பி. 160 |
| ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | கி.பி. 80 — கி.பி. 118 |
| குட்டுவன்சேரல் | கி.பி. 155 — கி.பி. 213 |
| சேரமான் கேரளன் | கி.பி. 216 — கி.பி. 225 |
| வாட்டாற்று எழினியாதன் | கி.பி. 182 — கி.பி. 230 |

| பெயர் | காலம் |
|---|---|
| முதலாம் குலசேகரப் பெருமாள் | கி.பி. 257 — கி.பி. 269 |
| சேங்கால் என்றவீரராகவப்பெருமாள் | கி.பி. 269 — கி.பி. 281 |
| இரண்டாம் குலசேகரப் பெருமாள் | கி.பி. 293 — கி.பி. 305 |
| முதலாம் பாஸ்கர இரவிவர்மன் | கி.பி. 350 — கி.பி. 385 |
| மூன்றும் குலசேகரப் பெருமாள் | கி.பி. 450 — கி.பி. 462 |
| முதலாம் சேரமான் பெருமாள் | கி.பி. 667 — கி.பி. 712 |
| தம்பிரான் தோழர் பெருமாள் | கி.பி. 712 — கி.பி. 754 |
| இரண்டாம் சேரமான் பெருமாள் | கி.பி. 754 — கி.பி. 798 |
| மார்த்தாண்டவர்மன் | கி.பி. 798 — கி.பி. 850 |
| மூன்றும் சேரமான் பெருமாள் | கி.பி. 793 — கி.பி. 834 |

## கிளை உ. பொறையன் குடும்பம்

| | |
|---|---|
| அந்துவன் சேரல் இரும்பொறை I | |
| பாலை பாடிய பெருங்கடுங்கோ | கி.மு. 3-ம் நூற். முற்பகுதி |
| மருதம் பாடிய இளங்கடுங்கோ | ,, பிற்பகுதி |
| கணைக்கால் இரும்பொறை | கி.மு. 60 — கி.மு. 35 |
| சேரமான் கோக்கோதை மார்பன் | கி.மு. முதல் நூ. பிற்பகுதி |
| ஆட்டன் அத்தி | கி.பி. 30 — கி.பி. 32 |
| அந்துவன்சேரல் இரும்பொறை II | கி.பி. 32 — கி.பி. 90 |
| சிக்கரப்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழி ஆதன் | கி.பி. 90 — கி.பி. 115 |
| தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | கி.பி. 115 — கி.பி. 132 |
| சேரமான் மாந்தரஞ்சேரல் ,, | கி.பி. 90 — கி.பி. 132 |
| இளம்சேரல் இரும்பொறை | கி.பி. 132 — கி.பி. 148 |
| யானைக்கண் சேய் மாந்தரம் சேரல் இரும்பொறை | கி.பி. 148 — கி.பி. 198 |
| மாந்தரம் பொறையன் கடுங்கோ | கி.பி 2-ம் நூற்றுண்டு |
| மாந்தரன் சேர அரசன் | கி.பி. 320 — கி.பி. 350 |
| சேரமான் வஞ்சன் | கி.பி. 385 — கி.பி. 400 |
| சேரலன் | கி.பி. 510 — கி.பி. 570 |
| சேரலன் பூழியான் | கி.பி. 570 — கி.பி. 620 |
| செங்கோற் பொறையன் | கி.பி. 620 — கி.பி. 667 |

# 2. சோழர் குடிவழி

## கிளை க.

| பெயர் | | காலம் |
|---|---|---|
| சூரியச் சோழன் | (கரூர்) | கி.மு. 30000 |
| சனி (முடவன்) | | |
| இயமன் சண்டன் I | (சண்பை) | |
| தருமன் மனு I | (வெங்குரு) | |
| சிலம்பன் மனு II | (சிரபுரம்) | |
| பிரமன் மனு III | (பிரமபுரம்) | |
| நந்தன் அழகுநந்தன் மனு IV | (கொச்சைவயம்) | |
| மனுச்சோழன் V | (கரூர்) | |
| இயமன் II | (கரூர்) | |
| குமரி இழை | | |
| முசுகுந்தன் | (கரூர்-ஆரூர்) | கி.மு. 14100—கி.மு. 14050 |
| அக்கினி வருணன் | (ஆரூர்) | கி.மு. 14050—கி.மு. 14000 |
| அசிதன் | (அயோத்தி) | |
| சகரன் | (அயோத்தி) | |
| அசமஞ்சன் | ,, | |
| அம்சுமான் | ,, | |
| திலீபன் | ,, | |
| பகீரதன் (பஃறேர்ச் செம்பியன்) | ,, | |
| ககுத்தன் | ,, | |
| இக்குவாகு | ,, | |
| மகாபிடன் | ,, | |
| சிபி என்கிற செம்பியன் | (புகார்) | கி.மு. 7700 |

| பெயர் | | காலம் |
|---|---|---|
| சிங்கவன்மன் | (சிதம்பரம்) | கி.மு. 7500 |
| வேதவன்மா | (கவுடதேயம்) | கி.மு. 7500 |
| சுமதிவன்மா | | ,, |
| தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் | ,, | கி.மு. 6200 |
| காந்தமன் காந்தன் | ,, | கி.மு. 6020 |
| ககந்தன் | ,, | கி.மு. 6000 |
| திரையன் மாறன் (சங்கப் புலவர்) | | |
| மனுநீதிகண்ட சோழன் VI தொடைமனு | | கி.மு. 2700—கி.மு. 2650 |
| வீதிவிடங்கன் | | கி.மு. 2650—கி.மு. 2600 |
| குளக்கோட்டன் | | கி.மு. 2600—கி.மு. 2560 |

## கிளை உ.

| | | |
|---|---|---|
| செருப்பாழி எறிந்த இளம்சேட் சென்னி I | | கி.மு. 290 — கி.மு. 270 |
| அசோகன் காலத்துச் சோழன் | | கி மு. 270 — கி.மு. 220 |
| பத்துபாலிதன் | ,, | கி.மு. 220 — கி.மு. 180 |
| மனுச்சோழன் | (இலங்கை) | கி.மு. 180 — கி மு. 160 |
| \| | | |
| சோழன் | ,, | கி.மு. 160 — கி.மு. 120 |
| கரிகாலன் I | (அழுந்தூர்-குடவாயில் | கி.மு. 120 — கி.மு. 90 |
| வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளி I பெருநற்கிள்ளி | (புகார்) | கி.மு. 90 — கி.மு. 80 |
| \| | | |
| சேட்சென்னி I | (உறையூர்) | கி.மு. 80 — கி.மு. 75 |
| உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி II | (அழுந்தூர்) | கி.மு. 80 — கி.மு. 50 |
| செங்கோற்சோழன் சுபதேவன் = கமலவதி | | கி.மு. 75 — கி.மு. 50 |
| இரண்டாம் கரிகாலன் என்கிற திருமாவளத்தான் | (புகார்) | கி.மு. 50 — கி.பி. 37 |
| கோச்செங்கணன் I | (கரூர்) | கி.மு. 50 — கி.பி. 25 |

| பெயர் | | காலம் |
|---|---|---|
| நல்விடிக்கோன் I | | |
| நல்லாதிக்கோன் | (கரூர்) | கி.பி. 25 — கி.பி. 30 |
| முதலாம் கிள்ளிவளவன் | (உறையூர்) | கி.மு. முதல் நூ. பிற்பகுதி |
| முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி | ,, | கி.பி. 25 — கி.பி. 100 |
| ஆதிமந்தியார் (பெண்) ஆட்டன் அத்தி | | கி.பி. |
| \| | | |
| குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவளவன் மணக்கிள்ளி | | |
| ஞாயிற்றுச்சோழன் மாவண்கிள்ளி | (உறையூர்) | கி.பி. 37 — கி.பி. 95 |
| வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி II | (புகார்) | கி.பி. 37 — கி.பி. 100 |
| காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி | (உறையூர்) | கி.பி. 95 — கி.பி. 145 |
| \| | | |
| இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி | ,, | கி.பி. 145 — கி.பி. 198 |
| நற்சோணை (பெண்)=சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | | |
| (வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளி II) | | |
| \| | | |
| குளமுற்றத்துத் துஞ்சிய=சீர்த்தி (1) கிள்ளிவளன் II பீலிவளை-2 | (புகார்) | கி.பி. 100 — கி.பி. 145 |
| இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி | ,, | கி.பி. 110 — கி.பி. 150 |
| உதயகுமாரன் | ,, | கி.பி. 145 |
| திரையன் என்ற ஆதொண்டன் | (காஞ்சிபுரம்) | கி.பி. 145 — கி.பி. 185 |
| \| | | |
| தொண்டைமான் இளந்திரையன் | ,, | கி.பி. 185 — கி.பி. 215 |
| தித்தன் மாவெண்தித்தன் | (உறையூர்) | கி.பி. 100 — கி.பி. 110 |
| \| | | |
| போர் அவைக்கோ பெருநற்கிள்ளி | ,, | கி.பி. 110 — கி.பி. 120 |
| தித்தன் வெளியன் வீரைவெளியன் | | கி.பி. 120 — கி.பி. 130 |
| ஐயை (பெண்) | | |

| பெயர் | | காலம் |
|---|---|---|
| கோப்பெருஞ் சோழன் தேர்வண்கிள்ளி | (உறையூர்) | கி.பி. 100 — கி.பி. 150 |
| \| | | |
| கோக்கிள்ளி I | ,, | கி.பி. 150 — கி.பி. 175 |
| இளங்கிள்ளி | | |
| நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி III | (புகார்) | கி.பி. 215 — கி.பி. 225 |
| சோழன் நல் உருத்திரன் | | கி.பி. 225 — கி.பி. 280 |

### கிளை ௩.

| | | |
|---|---|---|
| நல்லாதிக்கோன் II, வளவன், சிரீகாந்தன் | | கி.பி. 3, 4-ம் நூற்றாண்டு |
| ஜகதேவமல்லன் | | ,, |
| வியாழபயங்கரன் | | ,, |
| கோச்செங்கணன் II | | கி.பி. 450 — கி.பி. 500 |
| கோக்கிள்ளி II | | கி.பி. 5-ம் நூற்றாண்டு |
| தருமவர்மன் | (உறையூர்) | ,, |
| புகழ்ச்சோழர் | (கரூர்) | கி.பி. 6-ம் நூற்றாண்டு |
| திருவாரூர் சோழன் (தண்டி அடிகள் காலத்தவர்) | (ஆரூர்) | ,, |
| பழையாறைச்சோழன் | (பழையாறை) | கி.பி. 7-ம் நூற்றாண்டு |
| செங்கதிர்ச் சென்னி (மங்கையர்க்கரசியாரின் தகப்பன்) | | ,, |
| சுந்தரச்சோழர் (சுந்தரமூர்த்திகள் காலம்) | | கி.பி. 8-ம் நூற்றாண்டு |
| விக்கிரமசோழன் என்ற வீரசோழன் | | கி.பி. 750 — கி.பி. 800 |

### கிளை ௪.

| | | |
|---|---|---|
| விஜயாலயன் விஜயாதித்தராயன் | (தஞ்சை) | கி.பி. 850 — கி.பி. 880 |
| \| | | |
| ஆதித்தன் I | ,, | கி.பி. 880 — கி.பி. 907 |
| \| | | |
| பராந்தகன் I வீரசோழ நாராயணன் = சேரன் மகன் | | கி.பி. 907 — கி.பி. 947 |
| கன்னரதேவன் = பூதிமாதேவ அடிகள் | | |

| பெயர் | காலம் |
|---|---|
| இராஜ ஆதித்தன் | கி.பி. 947 — கி.பி. 948 |
| கண்டராதித்தன் I | கி.பி. 948 — கி.பி. 953 |
| அரிஞ்சயன் | கி.பி. 954 |
| உத்தமசீலி | |
| அரிகுலகேசரி | |
| கோதண்டராமர் | |
| ஆதித்தன் | |
| கற்றளி (பெண்) | |
| உத்தமன் மதுராந்தக சோழன் என்ற விக்கிரமன் | கி.பி. 970 — கி.பி. 984 |
| கண்டராதித்தன் II என்ற மதுராந்தகம் கண்டராதித்தன் | கி.பி. 992 |
| அரிஞ்சிகைப் பிராட்டி (பெண்) | |
| பராந்தகன் II அரிமாலி என்ற சுந்தரச் சோழன் | கி.பி. 954 — கி.பி. 965 |
| \| | |
| ஆதித்தன் II என்ற கரிகாலன் III | கி.பி. 966 — கி.பி. 970 |
| குந்தவ்வை I | |
| இராசராசன் I | கி.பி. 984 — கி.பி. 1013 |
| \| | |
| இராசேந்திரன் I | கி.பி. 1013 — கி.பி. 1042 |
| குந்தவ்வை II வேங்கிவிமலாதித்தன் | |
| \| | |
| இராசாதிராசன் I | கி.பி. 1042 — கி.பி. 1053 |
| இராசேந்திரன் II | கி.பி. 1053 — கி.பி. 1056 |
| விக்கிரமன் | |
| பராக்கிரமன் | |
| வீரராசேந்திரன் | கி.பி. 1062 — கி.பி. 1070 |
| கரிகாலன் IV | |
| மும்முடிச் சோழன் | |
| அம்மங்கை = இராசராசன் I | |

(வே. சுரு)

| பெயர் | | காலம் |
|---|---|---|
| இராசமகேந்திரன் II | | கி.பி. 1056 — கி.பி. 1062 |
| மதுராந்தகி (பெண்) | | |
| அதிராசேந்திரன் | | கி.பி. 1070 |
| பெண் = விக்கிரமாதித்தன் VI | (கல்—சளு) | |
| குலோத்துங்கன் I | | |
| கரிகாலன் ◁ | | |
| (உபயகுலம்—சளுக்கிய தகப்பன்—சோழத்தாய்) | | |

## கிளை ௫.

இது சளுக்கியர் குடும்பமும் சோழர் குடும்பமும் சேர்ந்து உண்டாகிய உபய குலம். இவர்களை வேங்கிச்சோழர் என்றும் கூறுப.

| | | |
|---|---|---|
| குலோத்துங்கன் I கரிகாலன் V | (தஞ்சை) | கி.பி. 1070 — கி.பி. 1120 |
| இராசராச கோடகங்கன் | (வேங்கி) | கி.பி. 1084 — கி.பி. 1089 |
| இராசராச மும்முடிச்சோழன் | ,, | கி.பி. 1076 — கி.பி. 1077 |
| வீரசோழன் I | ,, | கி.பி. 1077 — கி.பி. 1084 |
| விக்கிரமசோழன் | (தஞ்சை) | கி.பி. 1120 — கி.பி. 1136 |
| அம்மங்கை (பெண்) | | |
| குலோத்துங்கன் II | ,, | கி.பி. 1136 — கி.பி. 1146 |
| இராசராசன் II | ,, | கி.பி. 1146 — கி.பி. 1162 |
| பெண் | | |
| பெண் | | |
| குலோத்துங்கன் III என்ற குமார மகிதரசோழன் | | கி.பி. 1178 — கி.பி. 1216 |
| இராசாதிராசன் II என்ற எதிரிலிப் பெருமாள் | | கி.பி. 1166 — கி.பி. 1178 |
| இராசராசன் III | | கி.பி. 1216 — கி.பி. 1246 |

| பெயர் | காலம் |
|---|---|
| இராசேந்திரன் III | கி.பி. 1246 — கி.பி. 1279 |
| சேமாப்பிள்ளை (A. R. E. 1923 II—45 கண்ணபுரம் கல்வெட்டு) | |
| வீரசோழன் II | |
| விஜயகண்ட கோபாலதேவன் | |
| வீரசாம்பான் | |
| திரிபுவன வீரதேவன் | கி.பி. 1331 — கி.பி. 1332 |
| கோனேரி ராசசோழன் (இவனோடு சோழவம்சம் முடிவு) | கி.பி. 1384 — கி.பி. 1394 |

## 3. பாண்டியர் குடிவழி

### கிளை க.

### [கி. மு. 30000 முதல் கி. மு. 16000 வரை]

**மதியன் என்ற சந்திர பாண்டியன்.** கி. மு. 30000-க்கு முந்தியவன். இவனே குல முதல்வன். இவன் அரசாண்ட இடம் ஏழ்மதுரை நாட்டில் இருந்த **மதுரை** என்னும் ஊர். இவனும் கடல் கடந்து சென்று, மலயா, கடாரம், யவத் தீவுகளை வென்று, யவத் தீவுகளில் ஒரு தீவுக்கு **'மதியன்'** என்ற தன் பெயரைச் சூட்டி, வெற்றித்தூண் நாட்டி, நாடு திரும்பினான்.

| | |
|---|---|
| நெடியோன் மாகீர்த்தி ஆழிவடிம்பு அலம்ப நின்ற பாண்டியன் முதலாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் | கி.மு. 30000 — கி.மு. 29920 |

**குறிப்பு:** இவன் பரம்பரையில் வந்த இதர பாண்டியர்களின் பெயர்கள் தெரியவில்லை. இவன் பெருவள நாட்டில் பஃறுளியாறு என்னும் ஆற்றை மேருமலைத் தொடரினின்றும் வெட்டி, நாட்டை வளம்படுத்தி, அதன் கரையில் தென்மதுரை என்ற நகரை ஏற்படுத்தி, தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவி, புலவர், பாணர், கூத்தர்களையும் ஆதரித்தவன்.

| பெயர் | காலம் |
|---|---|

**குறிப்பு:** தமிழ்நாடானது கி.மு. 3,0000 முதல் கி.மு. 16,500 வரை பாண்டியர்களுடைய ஆட்சியில் இருந்தது. பிறகு, கி.மு. 16,500 முதல் கி.மு. 16000 வரை தமிழ் நாடானது நிருதர்கள் (Aprican Negroes) உடைய ஆட்சியில் இருந்தது.

பிறகு, கி.மு. 16,000 முதல் கி.மு. 14490 வரை தமிழ் நாடானது ஒளியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

அதன்பின், கி.மு. 14490 முதல் கி.மு. 14058 வரை தமிழ் நாடானது மங்கோலியர் (Mangolians) ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மங்கோலியர்களில் கடைசியாக ஆண்டவர்கள் சூரபதுமன்—தாருகன்—சிங்கமுகன் முதலியோர்.

மறுபடியும் தமிழ்நாடானது கி.மு. 14058 முதல் கி.மு. 14004 வரை ஒளியர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது.

## கிளை உ.

### [கி. மு. 14004 முதல் கி. மு. 9564 வரை]

| | |
|---|---|
| காய்சின வழுதி என்ற இரண்டாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் | கி.மு. 14004 |
| பாண்டியர்கள் பெயர்கள் தெரியவில்லை | |
| முதலாம் கடுங்கோன் | கி.மு. 9564 |

**குறிப்பு:** இந்தக் கிளையைச் சேர்ந்த பாண்டியர்கள் தலைச்சங்க காலத்தில் தலைச்சங்கத்தை நிறுவி அதனைப் பரிபாலித்து வந்தவர்கள். முதலில் இருந்த பாண்டிய அரசன் பெயரும், இறுதியில் இருந்த பாண்டிய அரசன் பெயரும் மாத்திரம் தெரிகின்றன. ஏனையவை இன்னும் ஆராய்ச்சியில் புலப்படவில்லை.

பெயர் காலம்

தலைச்சங்கம் 4440 ஆண்டுகள் நடைபெற்றது. சங்கத்தை நடத்தியவர் 89 பாண்டியர் என்றால், சராசரி ஒரு பாண்டியனுக்கு 50 ஆண்டுகள் வீதம் ஆகிறது. அக்காலத்தில் நீண்ட வாழ்க்கையை உடையவர்களானபடியால் ஒருவருக்கு 50 ஆண்டுகள் ஏற்படுவது சரித்திரத்துக்கு முரண் ஆகாது.

**குறிப்பு:** கி.மு. 9560-ல் அமெரிக்கா சிவப்பு இந்தியர்கள் இந்தியாவின்மேல் படையெடுத்துவந்து, இந்தியாவின் பல பகுதிகளைப் பிடித்து அரசாண்டார்கள்.

கி. மு. 9000-ல் காக்கேசியா மலைப்பக்கம் இருந்து ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். ஆரியருக்கும் சிவப்பு இந்தியருக்கும் பல நாட்கள் போர் நடந்தன.

## கிளை உ.

## [கி. மு. 7500 முதல் கி. மு. 6900 வரை]

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பரமேசுர பாண்டியன் — கி.மு. 7500

**குறிப்பு:** இவன் முதலாம் கிளையைச் சேர்ந்த முதலாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்கிற ஆழிவடிம்பு அலம்ப நின்ற பாண்டியனின் வழித்தோன்றல் என்று வேள்விக்குடிச் செப்பேட்டால் வெளியாகிறது. மேலும், இவனைப்பற்றிப் பாடிய காரிகிழார் பாட்டாலும் தெரிகிறது.

இவன் தன் அரச இருக்கையாகிய கொற்கை நகரில் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவி, புலவர்களைப் போற்றி முத்தமிழையும் வளர்த்து வந்தான். கொற்கைத் தமிழ்ச்சங்கம் 600 ஆண்டுகள் நடைபெற்றது. ஏறக்குறைய 20 பாண்டியர்களாவது அக்காலத்தில் அரசு புரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பெயர்கள் தெரியவில்லை. இனி வரும் ஆராய்ச்சியில் புலப்படின் சேர்த்துக்கொள்ளப்படும்.

| பெயர் | | காலம் |
|---|---|---|

கிளை ௪.

[கி. மு. 6805 முதல் கி. மு. 3105 வரை]

| | | |
|---|---|---|
| வெண்டேர்ச் செழியன் தேர்மாறன் (கபாடபுரம்) | கி.மு. 6805 — | கி.மு. 6730 |
| பெயர்கள் தெரியவில்லை | | |
| மூன்றும் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற அனந்தகுண பாண்டியன் (கபாடபுரம்) | கி.மு. 6000 — | கி.மு. 5925 |
| அநாகுல பாண்டியன் ,, | | |
| \| | | |
| சாரகுமாரன் | | |
| பாண்டியன் செம்பூட்சேய் ,, | | |
| பெயர்கள் தெரியவில்லை | | |
| சித்திராங்கத பாண்டியன் (மணலூர்) முடத்திருமாறன் I (கபாட்புரம்—மணலூர்) | கி.மு. 3160 — | கி.மு. 3105 |

**குறிப்பு**: இவர்கள் எல்லாம் இடைச்சங்க காலத்தில் சங்கம் நிறுவி, முத்தமிழையும் ஆதரித்தவர்கள்.

இடைச்சங்கம் கி.மு. 3105-ல் கண்ணபிரானால் அழிக்கப்பட்டபின் பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்தவன்.

| | |
|---|---|
| பப்புருவாகன் என்ற சாகரத்துவஜ பாண்டியன் | கி.மு. 3105 |

**குறிப்பு**: தமிழ் வரலாறு—பக்கம் 244 by R. R. அய்யங்கார் :—

"பாரத காலத்தில் பாண்டவர்களுக்குப் பெண் கொடுத்தல், போரில் உதவுதல், பெருஞ்சோறு அளித்தல் முதலிய பல செய்கைகளால் பாண்டியர்க்கும் ஆரிய அரசர்களுக்கும் தொடர்பு உண்டென்று வியாச பாரதத்தால் அறியலாம்.

சித்திராங்கதை (அல்லி) என்பவள் பாண்டியநாட்டு மணலூர் புரத்தில் இருந்த சித்திரவாகனன் என்ற மலையத்துவச பாண்டியன்

| பெயர் | காலம் |
|---|---|

பூகள் என்றும், அவளை அர்ச்சுனன் மணந்தான் என்றும் பாரதம் கூறும் (ஆதி-234-அத்; சபா-835-841 அத்.)

சித்திரவாகனன் என்பவன் பாண்டவர்க்குத் துணையாய் அசுவத்தாமாவுடன் போரிட்ட செய்தி பாரதம் கண்ணை-56 அத். கண்டது. சித்திராங்கதையின் மகன் பப்புருவாகனன் தமிழ் அரசன் அசுவமேத காலத்தில் அந்தணர்க்குச் சோறிட்டான் (அசுவ-82-ம் அத்)"

## கிளை ரு.

### [கி. மு. 1915 முதல் கி. மு. 1715 வரை]

| | கி.மு. | | கி.மு. |
|---|---|---|---|
| முடத்திருமாறன் II | 1915 | — | 1855 |
| பொற்கைப் பாண்டியன் | | | |
| வாடாச்சீர்த் தென்னவன் என்கிற நான்காம் நிலந்தருதிருவிற் பாண்டியன் (கலி-104) | | | |
| குறுவழுதி | | | |
| மாறன் வழுதி | கி.மு. | | கி.மு. |
| முடத்திருமாறன் III | 1730 | — | 1715 |

குறிப்பு: இரண்டாம் முடத்திருமாறன் கி.மு. 1915-ல் திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென்மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவினான். அந்தச் சங்கம் 200 ஆண்டுகள் நடைபெற்றது. ஏறக்குறைய 10 அரசர்களாவது இருந்திருக்கவேண்டும். ஆனால், ஆறு அரசர்கள் பெயர்களே தெரிகின்றன. ஏனையவை புலப்படவில்லை.

கி.மு. 1715-ல் ஒரு கடல் கோள் உண்டாயிற்று. அதே சமயத்தில் தற்காலம் கூடல் என்று அழைக்கப்படுகிற மதுரையானது ஒரு சித்தமூர்த்தியின் உதவியால் கட்டப்பட்டது. உடனே மூன்றாம் முடத்திருமாறன் என்ற பாண்டியன் தென்பரங் குன்றத்துப் பக்கம் தென்மதுரையில் இருந்த சங்கத்தைக் கூட

| பெயர் | காலம் | |
|---|---|---|
| னுக்கு மாற்றிவிட்டான். அதுமுதல் அச் சங்கம் கடைச்சங்கம் என்று அழைக்கப் பட்டது. | | |

## கிளை ௩.

### [கி. மு. 1715 முதல் கி. பி. 340 வரை]

| | | |
|---|---|---|
| | கி.மு. | கி.மு. |
| முடத்திருமாறன் III | 1715 — | 1695 |
| நல்வழுதி பூரிக்கோ | | |
| பன்னாடு தந்த மாறன் வழுதி | | |
| ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் | | |
| கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி | | |
| பசும்பூண் பாண்டியன் (அகம் : 253) | | |
| மதிவாணன் | | |
| பேர்கள் தெரியவில்லை | கி.மு. | கி.மு. |
| நம்பி நெடுஞ்செழியன் I | 130 — | 100 |
| பழையன்மாறன் I | 100 — | 45 |
| கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி என்ற | கி.மு. | கி.பி. |
| கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி I | 50 — | 30 |
| பழையன்மாறன் II | 45 — | 12 |
| பாண்டியன் கீரன் சாத்தன் என்கிற | கி.பி. | கி.பி. |
| குதிரைச் சாக்கையன் | 55 — | 75 |
| வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி | 75 — | 100 |
| இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் | 100 — | 105 |
| கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி | 105 — | 110 |
| பாண்டியன் அறிவுடை நம்பி | 110 — | 119 |
| ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் II | 119 — | 144 |
| பாண்டியன் இளம்பழையன் மாறன் | கி.பி. 2-ம் நூற். | |
| சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்கிற | கி.பி. | கி.பி. |
| வெற்றிவேற் செழியன் | 144 — | 174 |
| தலையாலங்கானத்துச் செருவென்ற | | |
| பாண்டியன் நெடுஞ்செழியன் III | 174 — | 204 |
| உக்கிரப் பெருவழுதி II | 204 — | 235 |

| பெயர் | காலம் |
|---|---|
| **குறிப்பு:** இவர்கள் 49 பேரும் கடைச் சங்கம் இரீஇய பாண்டியர்கள். இரண்டாம் உக்கிரப் பெருவழுதியுடன் கடைச்சங்கம் முடிவடைந்துவிட்டது. கடைச் சங்கம் 1950 ஆண்டுகள் நடைபெற்றது. களப்பிரர் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வந்ததால் கடைச்சங்கம் நடைபெறாமல் முடிவடைந்தது. கடைச்சங்கம் முடிவடைந்தும் பின்னர் பாண்டியர்கள் சிலர் அரசாண்டார்கள். அவர்களுடைய பெயர்கள் வருமாறு:— | |
| | கி.பி. — கி.பி. |
| வரகுண பாண்டியன் I | 235 — 265 |
| அரிமர்த்தன பாண்டியன் | 265 — 310 |
| வரகுண பாண்டியன் II | 310 — 340 |

**குறிப்பு:** இரண்டாம் உக்கிரப்பெருவழுதி காலத்திலேயே களப்பிரர் தொல்லை இருந்த போதிலும் சுமார் 105 ஆண்டுகள் எதிர்த்துப் போராடிவந்தனர் பாண்டியர். ஆனால் கி.பி. 340-ல் களப்பிரர் கூட்டம் அதிகப்படவே பாண்டியர்கள் அவர்களைத் தடுக்கமுடியவில்லை. பாண்டிய அரசு நிலைகுலைந்தது.

கி.பி. 340 முதல் கி.பி. 520 வரை பாண்டி நாடு களப்பிரர வசம் இருந்தது. களப்பிர அரசர்களில் பேர் போனவன் **அச்சுதவிக்கந்தன்** என்பவன்.

கி. பி. 520-ல் மூர்த்திநாயனார் என்பவர் களப்பிரருக்கு விரோதமாகக் கிளம்பி, அவர்களை முறியடித்து, பாண்டியநாட்டைவிட்டு களப்பிரரைத் துரத்தி, நாட்டை மீட்டு, கி.பி. 575 வரை தாமே முடிசூடி அரசாண்டுகொண்டிருந்து, பனிழய பாண்டியர் பரம்பரையினரைத் தேடிப்பிடித்து, அவர்களிடம் நாட்டை ஒப்புவித்தார்.

| பெயர் | காலம் | |
|---|---|---|

## கிளை எ.

### [கி. பி. 575 முதல் கி. பி. 1748 வரை]

| | கி.பி. | கி.பி. |
|---|---|---|
| கடுங்கோன் II என்ற பாண்டிய அதிராசன் | 575 — | 600 |
| மாறவர்மன் அவனி சூளாமணி என்ற அதிராச மாறவர்மன் | 600 — | 625 |
| செழியன் சேந்தன் என்ற சடையவர்மன் என்ற செங்கோற் சேந்தன் | 625 — | 640 |
| கூன் பாண்டியன் எ மாறவர்மன் அரிகேசரி எ நின்றசீர் நெடுமாறன் எ சுந்தர பாண்டியன் (அப்பர்-சம்பந்தர் காலத்தவன்) | 640 — | 670 |
| கோச்சடையன் இரணதீரன் (சுந்தரர் காலம்) | 670 — | 710 |
| அரிகேசரி பராங்குசமாறன் என்ற இராசசிம்மன் I | 710 — | 765 |
| நெடுஞ்சடையன் பராந்தகன் எ சடையவர்மன் | 765 — | 790 |
| இராசசிம்மன் II எ மாறவர்மன் | 790 — | 792 |
| வரகுணன் III எ சடையவர்மன் | 792 — | 835 |
| சீமாறன் பரசக்கர கோலாகலன் எ சீவல்லபன் எ மாறவர்மன் | 835 — | 862 |
| வரகுணன் IV எ மாறன் சடையன் | 862 — | 882 |
| பராந்தகன் III | 882 — | 900 |
| இராசசிம்மன் III | 900 — | 919 |
| பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சி | 919 — | 946 |
| வீரபாண்டியன் I | 946 — | 966 |
| அமரபுயங்கன் | 966 — | 995 |
| பாண்டியர் ஐவர் சோழர் ஆட்சியில் பாண்டிநாட்டு மாறு பரணன், வீரகேரள பாண்டியன், சுந்தர பாண்டியன், விக்கிரமன், வீரபாண்டியன் II | 995 — | 1048 |

| பெயர் | காலம் |
|---|---|
| இவர்கள் சோழர்களுடன் சண்டையிட்டு மாண்டார்கள். | |
| சீவல்லப பாண்டியன் (சோழனுக்கீழ் அரசாண்டவன்) | 1048 — 1060 |
| \| | |
| பாண்டியன் வீரகேசரி | 1060 — 1065 |
| மறுபடியும் சோழர் ஆட்சி. பாண்டியர் ஐவர் —அவர்களில் ஒருவன் சடையவர்மன் சீவல்லபன் | 1065 — 1087 |
| மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன் | 1087 — 1115 |
| சடையவர்மன் பராந்தக பாண்டியன் IV | 1115 — 1132 |
| மாறவர்மன் சீவல்லபன் | 1132 — 1162 |
| \| | |
| சடையவர்மன் குலசேகரபாண்டியன் (தென்பகுதி) | 1162 — 1165 |
| | 1168 — 1175 |
| பராக்கிரம பாண்டியன் (வடபகுதி) | 1162 — 1165 |
| வீரபாண்டியன் II | 1165 — 1180 |
| விக்கிரமபாண்டியன் | 1180 — 1190 |
| \| | |
| சடையவர்மன் குலசேகரபாண்டியன் | 1190 — 1218 |
| மாறவர்மன் சுந்தரபாண்டியன் | 1218 — 1238 |
| சடையவர்மன் குலசேகர பாண்டியன் | 1238 — 1239 |
| மாறவர்மன் சுந்தரபாண்டியன் | 1239 — 1251 |
| சடையவர்மன் சுந்தரபாண்டியன் | 1251 — 1271 |
| சடையவர்மன் வீரபாண்டியன் III | 1253 — 1281 |
| சடையவர்மன் விக்கிரமபாண்டியன் | 1248 — 1258 |
| மாறவர்மன் குலசேகரபாண்டியன் | 1271 — 1310 |
| சடையவர்மன் சுந்தரபாண்டியன்<br>மாறவர்மன் விக்கிரமபாண்டியன்<br>மாறவர்மன் வீரபாண்டியன் } அரசப் பிரதிநிதிகள் | |
| சடையவர்மன் சுந்தரபாண்டியன் III | 1310 — 1319 |

| பெயர் | காலம் |
|---|---|
| சடையவர்மன் வீரபாண்டியன் | 1296 — 1342 |
| மகமதியர் ஆட்சி கி.பி. 1310-ல் பாண்டிய நாட்டில் ஆரம்பம் | |
| மகமதியர் ஆட்சிக் காலத்தில் பாண்டிநாட்டில் சில பகுதிகளில் அரசாண்ட பாண்டியர்கள்:— | |
| மாறவர்மன் குலசேகர பாண்டியன் | 1314 — 1346 |
| சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் | 1315 — 1347 |
| மாறவர்மன் வீரபாண்டியன் | 1334 — 1380 |
| மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் | 1335 — 1352 |
| பாண்டியர் மூவர் பராக்கிரமன் என்ற பெயர் உடையவர் | கி.பி. 14-ம் நூ. பிற்பகுதி |
| சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் | 1422 — 1463 |
| சடையவர்மன் குலசேகர பாண்டியன் | 1429 — 1473 |
| அழகன்பெருமாள் பராக்கிரம பாண்டியன் | 1473 — 1506 |
| அபிராமபராக்கிரம பாண்டியன் }<br>ஆகவராமன் பாண்டியன் } | 1506 — 1534 |
| சடையவர்மன் சீவல்லப பாண்டியன் | 1534 — 1543 |
| சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன் | 1543 — 1552 |
| நெல்வேலி மாறன் | 1552 — 1564 |
| சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் | 1564 — 1604 |
| வரதுங்கராம பாண்டியன் | 1588 — 1613 |
| வரகுணராம குலசேகர பாண்டியன், குலசேகர சோமாசியார் | 1613 — 1700 |
| வரகுணராம குலசேகர தேவதீட்சிதர் | 1700 — 1748 |

**குறிப்பு:** சடையவர்மன் சீவல்லப பாண்டியன் காலத்தில் திருவாங்கூர் அரசன் உதய மார்த்தாண்டன் தென்பாண்டி நாட்டைக் கைப்பற்றினான். சீவல்லப பாண்டியன் விஜயநகர வேந்தனாகிய அச்சுத தேவராயனிடம் முறையிட, அவன் திருவாங்கூர் அரசனைப் போரில் வென்று, நாட்டை மீட்டுக்கொடுத்தான். அதுமுதல் பாண்டிநாட்டின் வட பகுதி விஜயநகர வேந்தர்களிடமும் தென் பகுதி பாண்டியர்களிடமும் இருந்து வந்தன.

# 4. சிசுநாகர் குடிவழி

## [கி. மு. 600 முதல் கி. மு. 360 வரை]

| பெயர் | | காலம் கி.மு. | | கி.மு. |
|---|---|---|---|---|
| சிசுநாகன் | (மகதம்) | 600 | — | 596 |
| A (பெயர் தெரியவில்லை) | ,, | | | |
| B ,, | ,, | | | |
| C ,, | ,, | | | |
| பிம்பிசாரன் | ,, | 519 | — | 491 |
| அஜாதசத்துரு | | 491 | — | 460 |
| அர்வஷா | | 460 | — | 450 |
| உதயன் | (பாடலிபுத்திரம்) | 450 | — | 435 |
| முண்ட—அனுருந்தன் | | 435 | — | 400 |
| நந்திவர்த்தனன் | | 400 | — | 375 |
| மகாநந்தன் | | 375 | — | 360 |
| சந்திரகுப்தன் | | | | |

குறிப்பு: மகாநந்தனின் மனைவி மூரா என்பவள் நந்தன் என்னும் அம்பட்டனைக் காதலிக்க, அவன் மகாநந்தனைக் கொன்று விட்டு, மூராவைக் கலியாணம் செய்து கொண்டு, அரசையும் கைப்பற்றி ஆண்டான். சிசுநாக வம்சம் கி.மு. 360-ல் முடிவடைந்தாலும் மகாநந்தனுக்கும் மூராவுக்கும் பிறந்த குழந்தை சந்திரகுப்தன் அம்பட்ட நந்தனுக்கு தப்பி வளர்ந்து வந்தான்.

## 5. நந்தன் குடிவழி

### [கி. மு. 360 முதல் கி. மு. 321 வரை]

| பெயர் | காலம் |
| --- | --- |
| | கி.மு. — கி.மு. |
| நந்தன் | 360 — 335 |
| மகாபத்மநந்தன் or தனநந்தன் | 335 — 321 |

**குறிப்பு:** இந்த வம்சத்தில் இரண்டே அரசர்கள் என்று வின்செண்ட் ஸ்மித், மார்ஷல் முதலிய சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

நவநந்தர்கள் என்றால் புதிதாகப் பட்டத்துக்கு வந்த நந்தனும் அவன் மகனும் என்றே பொருள். ஒன்பது நந்தர்கள் அல்ல.

சிசுநாக வம்சத்து மகாநந்தனுக்கும் மூராவுக்கும் பிறந்த சந்திரகுப்தன் வயது வந்ததும், தன் தகப்பனுடைய கதியை அறிந்து, படை திரட்டி, கிரீஸ் தேசத்து அரசன் உதவியையும், மகதநாட்டுப் பிரபுக்கள்—குடிகள், நேபாள அரசன் பார்வடகன் முதலியோர்களுடைய உதவியைப்பெற்று, மகாபத்மநந்தனோடு போர்தொடுத்து, சண்டையில் அவனைக் கொன்றான். நந்தன் குடிவழி முடிவடைந்தது. நந்த அரசர்களின் மந்திரி இராக்ஷசன் என்பவன் மிகவும் நல்லவன் - கெட்டிக்காரன்.

## 6. மவுரியர் குடிவழி

### [கி. மு. 321 முதல் கி. மு. 184 வரை]

| | |
| --- | --- |
| | கி.மு. — கி.மு. |
| சந்திரகுப்தன் | 321 — 272 |
| பிந்துசாரன் | 297 — 279 |
| சுசீமா | |
| அசோகன் | 272 — 232 |
| விகடகோசன் | |

| பெயர் | காலம் | |
|---|---|---|
| மகேந்திரன் | கி.மு. | கி.மு. |
| குணலன் | 232 — | 224 |
| பந்துபாலிதன் | 224 — | 216 |
| இந்திரபாலிதன் | 216 — | 209 |
| தசோனன் எ தசரதன்* | 209 — | 207 |
| சம்பிராதி | 207 — | 204 |
| சாலிசுகன் | 204 — | 202 |
| தேவவர்மன் | 202 — | 198 |
| சாத்தன்வான் | 198 — | 191 |
| பிரகத்ரதன் | 191 — | 184 |

*குறிப்பு:* சந்திரகுப்தன் தன் தாயார் மூராவின் பெயரால் வம்சத்துக்கு 'மவுரிய' என்று பெயரிட்டான். இந்த வம்சத்தின் கடைசி அரசன் பிரகத்ரதன். இவனுடைய மந்திரி புஷ்யமித்திரன் என்னும் பிராமணன். இந்த மந்திரி தன் அரசனைக் கொன்றுவிட்டுத் தானே அரசனானான். மவுரிய வம்சம் பிரகத்ரதனோடு முடிவு.

## 7. கடம்பர் குடிவழி

**[கி. மு. 300 முதல் கி. பி. 1336 வரை]**

| | | |
|---|---|---|
| | கி.மு. | கி.மு. |
| முதலாம் நன்னன் | 300 — | 260 |
| கூந்தலம் வனவாசிக் கடம்பன் | 260 — | 232 |
| முக்கட் கடம்பன் எ திரிலோசனக் கடம்பன் | 190 — | 165 |
| | கி.பி. | கி.பி. |
| இரண்டாம் நன்னன் (கடம்பின் பெருவாயில்) | 46 — | 80 |
| நார்முடிச் சேரல் காலத்துக் கடம்பன் | 80 — | 110 |

| பெயர் | காலம் | |
|---|---|---|
| செங்குட்டுவன் காலத்துக் கடம்பன் | 110 — | 135 |
| இளம்சேரல் இரும்பொறை காலத்துக் கடம்பன் | 135 — | 15[illegible] |
| மயூரசன்மன் எ மயூரவர்மன் | 350 — | 375 |
| \| | | |
| கங்கவர்மன் எ சந்திரகாந்தன் | 375 — | 400 |
| \| | | |
| பாகீரதவர்மன் | 400 — | 425 |
| \| | | |
| ரகு | | |
| காகுத்தவர்மன் | 425 — | 450 |
| \| | | |
| சாந்திவர்மன் | 450 — | 475 |
| கிருஷ்ணன் I | | |
| மாந்தாத்ரிவர்மன் | | |
| மிருகேசவர்மன் | 475 — | 500 |
| தேவவர்மன் | | |
| விஷ்ணு I | | |
| சிவரதன் | | |
| பானு | | |
| இரவிவர்மன் | 500 — | 535 |
| குமாரன் | | |
| சிம்மன் | | |
| அரிவர்மன் | 535 — | 570 |
| மாந்தாதன் | | |
| கிருஷ்ணன் II | | |
| \| | | |
| அசவர்மன் | 570 — | 585 |
| கோவா கடம்பன் ஜயகேசின் II | 1090 — | 1120 |
| மகாமண்டலேசுர கடம்பன் | 1181 — | 1253 |
| கடைசிக் கடம்பன் (பேர் தெரியவில்லை) | 1300 — | 1336 |

## 8. சாத்வாகனர் குடிவழி

## [கி. மு. 220 முதல் கி. பி. 236 வரை]

| பெயர் | | காலம் | |
|---|---|---|---|
| சாதவாகனன் I | | கி.மு. | கி.மு. |
| சிமுகன் | (சிகாகுளம்) | 220 — | 190 |
| கிருஷ்ணன் | (நாசிக்) | 190 — | 180 |
| சிரீசதகர்ணி I | | 180 — | 170 |
| பேர்தெரியவில்லை | | 170 — | 120 |
| சாதவாகனன் II | | | |
| கவுதமி புத்ர சதகர்ணி | | 167 — | 165 |
| புலுமாயி | | 165 — | 163 |
| சதகர்ணி II | | கி.மு. முதல் | நூற். |
| சாதவாகனன் III | | ,, | |
| | | | கி.பி. |
| காந்தசத்தி—கடைசி அரசன் | | | 236 |

## 9. சுங்கர் குடிவழி

## [கி. மு. 184 முதல் கி. மு. 72 வரை]

| | | | |
|---|---|---|---|
| | | கி.மு. | கி.மு. |
| புஷ்யமித்திரன் | (பாடலிபுரம்) | 184 — | 148 |
| அக்கினி மித்திரன் | ,, | 148 — | 140 |
| வாசு | | 140 — | 133 |
| வசுமித்திரன் | | 133 — | 123 |
| ஓட்ரகா பத்ரகா | | 123 — | 121 |
| பெயர் விளங்கவில்லை | | 121 — | 114 |
| ,, | | | |
| ,, | | | |
| ,, | | | |

| பெயர் | காலம் | |
|---|---|---|
| பகவத | 114 — | 82 |
| \| | | |
| தேவபூதி | 82 — | 72 |

**குறிப்பு:** தேவபூதி பிராமண சுங்க வம்சத்துக்கு கடைசி அரசன். இவனுடைய மந்திரி வாசுதேவன் என்னும் பிராமணன் கி.மு. 72-ல் அரசனைக் கொன்றுவிட்டுத் தான் பட்டம் எய்தினான்.

பாணினி வியாகாரணத்துக்கு வியாக்கியானம் எழுதிய பதஞ்சலி முனிவர் புஷ்யமித்திரன் காலத்தவர் என்று கூறுப.

## 10. சேதிக் குடிவழி

### [கி. மு. 183 முதல் கி. மு. 165 வரை]

| | | | |
|---|---|---|---|
| காரவேலு | (கலிங்கம்) | 183 — | 165 |

**குறிப்பு:** இந்தக் குடிக்கு இவன் ஒருவனே. இவன் கி.மு. 207-ல் பிறந்து கி.மு. 183-ல் பட்டம் எய்தினான். கி.மு 181-ல் சேரநாட்டில் உள்ள மூஷிக நாட்டை வென்றான். நந்த அரசர்களால் வெட்டப்பட்ட கால்வாயை வெட்டி மகதத்திலிருந்து கலிங்கத்துக்குக் கொணர்ந்தான்.

கி.மு. 173-ல் வடஇந்தியாவை அடிப்படுத்தினான். கி.மு. 170-ல் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து வந்து பாண்டியனை வென்றான்.

இவன் சமணன்.

## 11. கண்ணுவர் குடிவழி

### [கி. மு. 72 முதல் கி. மு. 27 வரை]

| பெயர் | | காலம் கி.மு. | கி.மு. |
|---|---|---|---|
| வாசுதேவன் | (பாடலிபுரம்) | 72 — | 64 |
| பூமிமித்திரன் | ,, | 64 — | 50 |
| நாராயணன் | ,, | 50 — | 38 |
| சுசுராமன் எ சுசர்மன் | ,, | 38 — | 27 |

**குறிப்பு:** கண்ணுவர் குடியில் கடைசி அரசன் சுசுராமன் என்பவன். இவனுக்கும் ஆந்திர அரசர்களாகிய சாதவாகனருக்கும் போர் நிகழ்ந்தது. அந்தப் போரில் சாதவாகன ஆந்திர அரசன் சுசுராமனை கி மு. 27-ல் கொன்றுவிட்டு, மகதத்தில் முதன் முதலாக ஆந்திர ஆட்சியை ஏற்பாடு செய்தான்.

சுசுராமன் காலத்தில் கவுசாம்பியைத் தலைநகராகக்கொண்ட வச்சிரநாடும், உச்சயினியைத் தலைநகராகக்கொண்ட அவந்திநாடும் சுய ஆட்சிபெற்றன.

கி. மு. 20-ல் இரண்டாம் கரிகாற் சோழன் வடக்கே இமயம்வரை படைகொண்டுசென்று எல்லா அரசர்களையும் வென்று அடக்கி, இமயத்தில் புலிக்கொடியை நாட்டித் திரும்பும்போது, மகதநாட்டு அரசன் பட்டிமண்டபமும், வச்சிரநாட்டு அரசன் கொற்றப்பந்தரும், அவந்திநாட்டு அரசன் தோரணவாயிலும் காணிக்கை கொடுத்து மரியாதை செய்தார்கள் என்பது வரலாறு.

## 12. கொங்கு-மராட்டியர் குடிவழி

[கி. மு. 27 முதல் கி. பி. 189 வரை]

| பெயர் | காலம் | |
|---|---|---|
| | கி.மு. | கி.பி. |
| *வீரராயச் சக்கரவர்த்தி* | 27 — | 23 |
| | கி.பி. | கி.பி. |
| *கோவிந்தராயர் I* | 23 — | 45 |
| *கிருஷ்ணராயர்* | 45 — | 67 |
| *கால வல்லபராயர்* | 67 — | 82 |
| *கோவிந்தராயர் II* | 82 — | 104 |
| *சதுர்புஜ கன்னரதேவர் சக்கரவர்த்தி* | 104 — | 158 |
| *திரிவிக்ரம தேவச் சக்கரவர்த்தி* | 158 — | 189 |

## 13. கொங்கு-கங்கர் குடிவழி

[கி. பி. 189 முதல் கி. பி. 880 வரை]

| | | |
|---|---|---|
| | கி.பி. | கி.பி. |
| *கொங்கணி வர்மா I* | 189 — | 240 |
| *மாதவன் I* | 240 — | 288 |
| *அரிவர்மா* | 288 — | 321 |
| *விஷ்ணுகோபன்* | 321 — | 391 |
| *மாதவன் II* | 391 — | 424 |
| *கிருஷ்ணவர்மா* | 391 — | 424 |
| *திண்டிக்காரராயர் எ அரிச்சந்திர தேவராயர்* | 424 — | 425 |
| *கொங்கணிவர்மா II* | 425 — | 478 |
| *அவனீதன் எ துவர்நீதன்* | 478 — | 513 |
| *முஷ்கரன்* | 513 — | 518 |
| *திரிவிக்ரமன்* | 518 — | 539 |
| *பூவிக்ரமன் எ கஜபதி வல்லபாக்கிராயன்* | 539 — | 589 |
| *கொங்கணிவர்மா III* | 539 — | 636 |
| *கோவிந்தன் எ நந்திவர்மன்* | 636 — | 669 |
| *சிவராமன்* | 669 — | 726 |
| *சிவராமராயன் எ பிரிதிவி கொங்கணி* | 726 — | 779 |
| *மல்லதேவன் I* | 779 — | 814 |
| *கவுடதேவன்* | 814 — | 849 |
| *சத்திய வாக்கியன்* | 849 — | 869 |
| *குணோத்தமன்* | 869 — | 878 |
| *மல்லதேவன் II* | 878 — | 879 |
| *பிருதிவிபதி I* | 879 — | 880 |

# 14. பல்லவர் குடிவழி

## கிளை க.

[கி. பி. 225 முதல் கி. பி. 550 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| பப்பசாமி | 225 — | 250 |
| சிவ. கந்தவர்மன் I | 250 — | 275 |
| புத்தவர்மன் I | 275 — | 300 |
| புத்தியங்காரன் | 300 — | 325 |
| விஷ்ணுகோபன் I | 325 — | 350 |
| கந்தவர்மன் II | 350 — | 375 |
| காலபாரதி குமாரவிஷ்ணு I | 375 — | 400 |
| புத்தவர்மன் II | 400 — | 425 |
| குமாரவிஷ்ணு II | 425 — | 450 |
| கந்தவர்மன் III எ சேதுபல்லவன் | | |
| வீரவர்மன் எ வீரகூர்ச்சன் | | |
| விஜயகந்தவர்மன் IV எ கந்தசிஷ்யன் | 450 — | 475 |
| சிம்மவர்மன் I | 475 — | 500 |
| கந்தவர்மன் V | 500 — | 525 |
| நந்திவர்மன் I | 525 — | 550 |
| யுவமகாராய விஷ்ணுகோபன் II எ குமாரவிஷ்ணு III | | |
| சிம்மவர்மன் II | | |
| விஷ்ணுகோபன் III | | |
| சிம்மவர்மன் III | | |

## கிளை உ.

### [கி. பி. 550 முதல் கி. பி. 910 வரை]

| பெயர் | | காலம் |
|---|---|---|
| சிம்மவர்மன் III | | 550 — 575 |
| சிம்மவிஷ்ணு எ அவனி சிம்மபோத்தரையன் | | 575 — 600 |
| | பீமவர்மன் | |
| மகேந்திரவர்மன் I | | 600 — 625 |
| | பூதவர்மன் | |
| நரசிம்மவர்மன் I | | 625 — 650 |
| | ஆதித்தவர்மன் | |
| மகேந்திரவர்மன் II எ ஐயடிகள் காடவர்கோன் | | 650 — 655 |
| | கோவிந்தவர்மன் | |
| பரமேச்சுரவர்மன் I | | 655 — 685 |
| | இரணியவர்மன் | |
| காடவர்கோன் எ கழற்சிங்கன் | | |
| இராசசிம்மன் எ நரசிம்மவர்மன் II | | 685 — 710 |
| பரமேச்சுரன் II | | 710 — 717 |
| மகேந்திரவர்மன் III | | |
| சித்திரமாயன் | | |
| நந்திவர்மன் II எ பல்லவமல்லன் | | 717 — 775 |
| தந்திவர்மன் எ வைரமேகன் | | 775 — 825 |
| தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் III | | 825 — 854 |
| நிருபதுங்கவர்மன் | | 854 — 875 |
| விஜயகம்பன் | | |
| அபராஜிதன் | | 875 — 893 |
| கம்பவர்மன் | | 893 — 910 |
| வைரமேகன் | | |

## 15. குப்தர் குடிவழி

### கிளை க.

### [கி. பி. 250 முதல் கி. பி. 545 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| சிரீகுப்தா | 250 — | 270 |
| கடோத்கசன் I | 270 — | 300 |
| சந்திரகுப்தன் I | 300 — | 325 |
| சமுத்திரகுப்தன் | 325 — | 375 |
| இராமகுப்தா | 375 — | 380 |
| சந்திரகுப்தன் II விக்கிரமாங்கன் விக்கிரமாதித்தியன் எ | 380 — | 414 |
| பிரபாவதி (பெண்) | | |
| குமாரகுப்தன் I | 414 — | 455 |
| கோவிந்த குப்தா | | |
| கடோத்கச குப்தா | | |
| கந்தகுப்தா | 455 — | 468 |
| பூரகுப்தா எ பூரகாஸ் ஆதித்தன் | 468 — | 469 |
| நரசிம்மகுப்தா எ பாலாதித்தன் | 469 — | 472 |
| குமாரகுப்தா II | 472 — | 476 |
| பூதகுப்தா | 476 — | 495 |
| பானுகுப்தா | 495 — | 545 |
| சந்திரகுப்தன் III | | |
| விஷ்ணுகுப்தா எ சந்திர ஆதித்தன் | | |
| ஜய குப்தா | | |

குறிப்பு: கி.பி. 320-ல் வாலாபி குப்தசகம் ஏற்பட்டது.

## கிளை உ.

### [கி. பி. 450 முதல் கி. பி. 565 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| கிளை க-ல் கோவிந்தகுப்தாவின் குடிவழி— இவர்கள் கிளை க-ல் குமாரகுப்தா I என்பவன் கீழ் குப்தா நாட்டின் மேல் பகுதியை ஆண்டவர்கள். | | |
| கோவிந்த குப்தா கிருஷ்ண குப்தா | 450 — | 480 |
| அர்ஷ குப்தா | 480 — | 505 |
| ஜீவித குப்தா I | 505 — | 535 |
| குமார குப்தா III | 535 — | 565 |
| தாமோத்ர குப்தா | | |
| மகாசேன குப்தா | | |
| தனேஷ்வரம் (பெண்) | | |
| ஆதித்திய வர்த்தனன் | | |
| சாசங்கன் | | |
| அர்ஷவர்த்தனன் | 606 — | 647 |
| மாதவ குப்தா=சிரீமதிதேவி | | |
| ஆதித்திய சேனன்=கோனதேவி | | |
| தேவகுப்தா=கமலாதேவி | | |
| விஷ்ணுகுப்தா=ஜிஜாதேவி | | |
| ஜீவிதகுப்தா II | | |

குறிப்பு: அர்ஷசகம் கி.பி. 606-ல் ஆரம்பம்.
அர்ஷன்காலத்துப் புலவர்கள்: பாசா, பாண பட்டன், பர்த்துருஹரி, மயூரன்.
அர்ஷன் செய்த நூல்கள்: நாகானந்தம், பிரிய தரிசிகா, இரத்தினவளி.
காதம்பரி, அர்ஷ சரித்திரம் இரண்டும் பாண பட்டன் பாடியது.

## 16. வாகடகர் குடிவழி

### [கி. பி. 300 முதல் கி. பி. 550 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| விந்தியசக்தி (மூலமுதல்வன்) | 300 — | 320 |
| பிரவரசேனன் I | 320 — | 340 |
| உருத்திர சேனன் I | 340 — | 355 |
| பிருதிவி சேனன் I | 355 — | 380 |
| உருத்திர சேனன் II=பிரபாவதி | 380 — | 400 |
| திவாகர சேனன். | 400 — | 413 |
| பிரவரசேனன் II | 413 — | 440 |
| நரேந்திரசேனன் | 440 — | 460 |
| பிருதிவி சேனன் II | 460 — | 470 |
| பெயர் தெரியவில்லை | 470 — | 480 |
| தேவசேனன் | 480 — | 506 |
| அரிசேனன் | 506 — | 550 |

குறிப்பு: அரிசேனன் கடைசி அரசன். இவன் கி. பி. 550-ல் காலசூரிய அரசன் சங்கராகனால் முறியடிக்கப்பட்டான். இவன் நாடு காலசூரியரால் கைப்பற்றப்பட்டது. வாகடக வம்சம் முடிவுபெற்றது.

# 17. சளுக்கியர் குடிவழி

## கிளை க. மேலைச்சளுக்கியர்

| பெயர் | காலம் கி.பி. — கி.பி. |
|---|---|
| ஜயசிம்மன் I | 500 |
| இரணராமன் | |
| சத்தியாசிரிய சீவல்லப புலிகேசி I | 550 — 567 |
| கீர்த்திவர்மன் I | 567 — 581 |
| மங்களீசன் | 581 — 610 |
| புலிகேசி II | 610 — 642 |
| குப்ர விஷ்ணுவர்த்தனன் | |
| கூர்ச்சர ஜயசிம்மன் II | |
| சந்திராதித்தன் | |
| விக்கிரமாதித்தன் I | 642 — 680 |
| ஆதித்தவர்மன் | |
| ஜயசிம்மன் III | |
| வினயாதித்தன் | 680 — 686 |
| விஜயாதித்தன் | 686 — 734 |
| விக்கிரமாதித்தன் II | 734 — 747 |
| கீர்த்திவர்மன் II | 747 — 760 |
| பீமன் I | |
| கீர்த்திவர்மன் III | |
| தயிலன் I | |
| விக்கிரமாதித்தன் III | |
| பீமன் II | |
| அய்யண்ணன் | |
| விக்கிரமாதித்தன் IV | |
| தயிலன் II | |

## கிளை உ. கல்யாணிச் சளுக்கியர்

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| (கிளை க. 24-ல் இருந்து இந்தக் குடிவழி ஆரம்பம்) | | |
| தயிலன் II | 973 — | 997 |
| சத்தியாசிரியன் II | 997 — | 1008 |
| விக்கிரமாதித்தன் V என திரிபுவன மல்லன் | 1008 — | 1018 |
| ஜயசிம்மன் IV அக்கதேவி | 1018 — | 1041 |
| சோமேசுரன் I என ஆகவமல்லன் | 1041 — | 1072 |
| சோமேசுரன் II | 1072 — | 1076 |
| விக்கிரமாதித்தன், VI ஜயசிம்மன் V | 1076 — | 1126 |
| சோமேசுரன் III | 1126 — | 1138 |
| ஜயதேகமல்லன் தயிலன் III | 1138 — | 1155 |
| சோமேசுரன் IV | 1183 — | 1190 |

குறிப்பு: கி.பி. 1155-லிருந்து கி.பி. 1183 வரை நாடு காலசூரி அரசர்களிடம் இருந்தது.

## கிளை ௩. வேங்கிச் சளுக்கியர்

| பெயர் | கி.பி. | கி.பி. |
|---|---|---|
| விஷ்ணுவர்த்தனன் I (குப்ஜ) | 615 — | 651 |
| ஜயசிம்மன் VI | | |
| விஷ்ணுவர்த்தனன் II | | |
| விஜயசித்தி | | |
| (5 அரசர்கள் பெயர்கள் தெரியவில்லை.) | | |
| விஜயாதித்தன் III | 800 — | 848 |

| பெயர் | காலம் |
|---|---|
| சளுக்கிய பீமன் I | 843 — 900 |
| மகன் (பெயர் தெரியவில்லை) | 900 — 972 |
| சளுக்கிய பீமன் II | 972 — 987 |
| தானன் | 987 — 999 |
| சத்திவர்மன் எ | 999 — 1011 |
| சளுக்கிய சந்திரன் | |
| விமலாதித்தன் = குந்தவ்வை | 1011 — 1024 |
| இராசராச விஷ்ணுவர்த்தனன் | |
| இராசராச நரேந்திரன் எ | |
| இராசராசேந்திரன் எ | 1024 — 1065 |
| விஜயாதித்தன் VII | 1065 — 1080 |
| குலோத்துங்கன் I என்கிற | |
| இராசேந்திரன் II என்கிற | |
| கரிகாலன் V | 1070 — 1120 |

குறிப்பு: இவனோடு சளுக்கிய குலம் முடிவு. இவன் சோழநாட்டுக்கும் அரசனாகி வேங்கியிலிருந்து சோழநாடு சென்றுவிட்டான்.

## 18. காலசூரியர் குடிவழி

## [கி. பி. 550 முதல் கி. பி. 620 வரை]

| பெயர் | | கி.பி. — கி.பி. |
|---|---|---|
| சங்கராகனன் | (உச்சயினி) | 550 — 590 |
| புத்தராசன் | | 590 — 620 |

குறிப்பு: கி. பி. 601-ல் சளுக்கிய அரசன் மங்களேசன் புத்தராசனைப் போரில் வென்றான். புத்தராசன் அவனுக்குக் கப்பங்கட்டி ஆண்டு வந்தான். ஆனால் கி. பி. 620-ல் சளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியால் சண்டையில் புத்தராசன் கொல்லப்பட்டான். தேசம் சளுக்கிய தேசத்தோடு இணைக்கப் பட்டது. இவனோடு காலசூரியர் குடி முடிவடைந்தது.

## 19. இராட்டிரகூடர் குடிவழி

### [கி. பி. 570 முதல் கி. பி. 973 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| தந்திவர்மன் I (மேல்காடு) | | |
| இந்திரவர்மன் I | | |
| கோவிந்தன் I | | |
| கக்கா I | | |
| இந்திரன் II | | |
| கிருஷ்ணன் I | | |
| தந்திதுர்கா எ | | |
| தந்திவர்மன் II | 725 — | 755 |
| கோவிந்தன் II | | |
| துருவதாரா வருஷன் I | | |
| கோவிந்தன் III | 808 — | 815 |
| இந்திரன் III | | |
| அமோகவர்ஷன் I | 815 — | 877 |
| கக்கா II | | |
| கோவிந்தன் IV (பிரபூதவர்ஷன்) | | |
| கிருஷ்ணா II எ | | |
| அகாலவர்ஷன் | | |
| தந்திவர்மன் III | | |
| துருவதாராவர்ஷன் II | | |
| ஜகதுங்கன் | | |
| அகாலவர்ஷன் II | | |
| அகாலவர்ஷன் III எ | | |
| சுபதுங்கன் | | |
| இந்திரன் IV எ | | |
| நித்தியவர்ஷன் | | |
| வத்திகன் எ | | |
| அமோகவர்ஷன் II | | |
| துருவன் III | | |
| அமோகவர்ஷன் III | | |

| பெயர் | காலம் |
|---|---|
| கோவிந்தன் IV (வத்திகன் என்ற அமோகவர்ஷன் II-ல் இருந்து ஆரம்பம்.) | |
| கிருஷ்ணன் III எ | |
| அகாலவர்ஷன் IV | |
| கோட்டிகா | |
| நிருபமா | |
| (பேர் தெரியவில்லை) | |
| கக்கராசன் III என்ற அமோகவர்ஷன் IV | |
| இந்திரன் V | |
| ஜக்கலதேவி = தயிலப்பன் II (கல்-சளுக்) | |

## 20. உயுத்தர் குடிவழி

### [கி. பி. 728 முதல் கி. பி. 810 வரை]

| | கி.பி. | கி.பி. |
|---|---|---|
| யசோவர்மன் | 720 | |
| \| | | |
| சக்கரயுத்தன் | | 810 |

## 21. பரிகரர் குடிவழி

### [கி. பி. 810 முதல் கி. பி. 1090 வரை]

| | | கி.பி. | கி.பி. |
|---|---|---|---|
| நாக பட் | (பிம்மால்) | 810 — | 840 |
| \| | | | |
| மகன் (பேர் தெரியவில்லை) | | | |
| \| | | | |
| மிஹிரபோசன் | | 840 — | 890 |
| \| | | | |
| மகேந்திரபாலன் | | 890 — | 908 |
| \| | | | |
| மகிபாலன் | | 910 — | 940 |
| \| | | | |
| தேவபாலன் | | 940 — | 955 |
| விஜயபாலன் | | 955 — | 990 |
| இராஜ்யபாலன் | | 990 — | 1019 |
| அனங்கபாலன் | | 1019 — | 1090 |

# 22. கொங்கு—சோழர் குடிவழி

## [கி. பி. 880 முதல் கி. பி. 1303 வரை]

| பெயர் | காலம் | |
|---|---|---|
| கி. பி. 880-ல் நடந்த திருப்புறம்பயம் சண்டைக்கு அப்புறம், சோழன் ஆதித்தன் I முதல் கி. பி. 1004 வரை சோழர்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிக் கொங்குநாட்டை ஆண்டார்கள். கி. பி. 1004 முதல் ஒரு தனிப் பரம்பரை கொங்கில் ஏற்பட்டது. அது வருமாறு : | | |
| | கி.பி. | கி.பி. |
| விக்கிரமசோழன் I | 1004 — | 1055 |
| அபிமான சோழ ராஜாதிராஜன் | 1055 — | 1110 |
| ராசாதிராச உத்தமன் | 1110 — | 1117 |
| ராசாதிராச வீரசோழன் | 1117 — | 1135 |
| உத்தமசோழ வீரநாராயணன் (ராஜகேசரி) | 1135 — | 1149 |
| குலோத்துங்கன் (ராஜகேசரி) | 1144 — | 1183 |
| வீரசோழன் (பரகேசரி) | 1183 — | 1206 |
| வீரராஜேந்திரன் (ராஜகேசரி) | 1206 — | 1255 |
| விக்கிரமன் II (பரகேசரி) | 1255 — | 1263 |
| ராஜகேசரி (பெயர் இல்லை) | 1263 — | 1278 |
| விக்கிரமசோழன் III (பரகேசரி) | 1278 — | 1303 |

குறிப்பு: இதுவரை கொங்குநாட்டில் கண்ட கல்வெட்டுக்களில் கண்டவை மேலே காட்டியவை. கொங்கு மலர் Vol. IV p. 67.

## 23. ஒய்சளர் குடிவழி

### [கி. பி. 1000 முதல் கி. பி. 1339 வரை]

| பெயர் | | காலம் கி.பி. | | கி.பி. |
|---|---|---|---|---|
| ஒய்சளன் | (பேளூர்) | 1000 | — | 1047 |
| வினய ஆதித்தன் | | 1047 | — | 1077 |
| எரயங்கன் | | 1077 | — | 1080 |
| வீரவல்லாளன் I | | 1080 | — | 1100 |
| பிட்டிகன் எ பிட்டிதேவன் எ விஷ்ணுவர்த்தனன் | | 1100 | — | 1141 |
| நரசிம்மன் I | | 1141 | — | 1172 |
| வீரவல்லாளன் II | | 1172 | — | 1211 |
| நரசிம்மன் II | | 1211 | — | 1231 |
| சோமேஸ்வரன் எ சோவிதேவன் | | 1231 | — | 1254 |
| நரசிம்மன் III | | 1254 | — | 1286 |
| வீரவல்லாளன் III | | 1286 | — | 1339 |

## 24. காகதீயர் குடிவழி

### [கி. பி. 1000 முதல் கி. பி. 1424 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| உத்தங்கபுஜன் (இவன் குலமுதல்வன் 'காகத்தி' என்ற சத்தியை வணங்கினவன்) | | |
| கந்தன் (கந்தகிரிக் கோட்டையைக் கட்டினவன்) | | |
| பெயர் தெரியவில்லை | | |
| " | | |
| திரிபுவனமல்லன் | 1100 — | 1140 |
| புரோலராசன் | 1140 — | 1161 |
| உருத்திரதேவன் எ பிரதாப உருத்திரன் I | 1161 — | 1211 |
| மகாதேவன் | 1211 — | 1228 |
| கணபதிதேவன் = உருத்திரம்மாள் | 1228 — | 1273 |
| உமாகா (பெண்) (பெண்ணுக்காக உருத்திரம்மாள் ஆட்சி) | 1273 — | 1300 |
| பிரதாப உருத்திரன் II | 1300 — | 1325 |
| கிருஷ்ணன் எ கன்னையநாய்க் | 1325 — | 1424 |

## 25. கொங்குவல்லாளர் குடிவழி

### [கி. பி. 1069 முதல் கி. பி. 1313 வரை]

கி.பி. கி.பி.

இவர்கள் மைசூர் ஒய்சளருக்குக்கீழ் கொங்கு நாட்டை ஆண்டவர்கள். அவர்களுடைய பெயர்கள் எல்லாம் கொங்குநாட்டுச் சரித்திரத்தில் விவரிக்கப்படும்.

## 26. காலசூரியர்—ஹேஹயர் குடிவழி

[கி. பி. 1128 முதல் கி. பி. 1183 வரை]

| பெயர் | | காலம் | |
|---|---|---|---|
| | | கி.பி. | கி.பி. |
| கிருஷ்ணன் | (கல்யாணி) | | |
| நான்கு அரசர்கள் பெயர் தெரியவில்லை | | | |
| பிஜ்ஜலன் | | 1155 — | 1172 |
| இராஜமுராரி | | | |
| சாவலதேவி = ஒய்சள சோவிதேவன் | | 1172 — | 1183 |

குறிப்பு: கி. பி· 1183-ல் சளுக்கிய சோமேஸ்வரன் IV கல்யாணியைப் பிடித்துக் காலசூரிய வம்சத்தைத் தொலைத்தார்கள்.

## 27. யாதவர்—தேவகிரி குடிவழி

[கி. பி. 1150 முதல் கி. பி. 1318 வரை]

| | கி.பி. | கி.பி. |
|---|---|---|
| சேவனன் | 1150 — | 1160 |
| மல்லுகி | 1160 — | 1170 |
| அமரகங்கன் | 1170 — | 1180 |
| கர்னன் | 1180 — | 1187 |
| பில்லாமன் | 1187 — | 1191 |
| ஜயதுகி என்ற ஜயத்திரபாலன் | 1191 — | 1207 |
| சிம்மனன் | 1207 — | 1246 |
| ஜயதுகி II | | |
| கிருஷ்ணன் | 1246 — | 1259 |
| மகாதேவன் | 1259 — | 1272 |
| அமணன் | 1272 | |
| இராமச்சந்திரன் | 1272 — | 1309 |
| சங்கரன் | 1309 — | 1318 |

## 28. கொங்கு அரிகரவம்சம்
### [கி. பி. 1313 முதல் கி. பி. 1463 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|

இவர்களைப்பற்றித் தென்னாட்டுச் சரித்திரத்தில் விரிவாக எழுதப்படும். இப்போது இவ் வம்சத்திற்கு மூல புருஷர்களை மாத்திரம் இங்கே காட்டப்பட்டுள்ளது.

கம்ப—கம்பண்ண—காம்பிலிராயன்
|
சங்கமன்
|
அக்க
புக்க

இவர்கள் இரு சகோதரர்களும் டில்லி மகமதிய அரசாங்கத்தில் சேனைத் தலைவர்கள். மகமதியர் அனுமதிபெற்று, மைசூரில் நடைபெற்றுவந்த வல்லாள அரசியலை ஒழித்து, புதிதாக அரிகரவம்சத்தை நிலைநாட்டி, விஜய நகரம் என்ற நகரை உண்டுபண்ணி, தென்னாட்டை மகமதியர் படையெடுப்பினின்றும் காப்பாற்றியவர்கள். கி. பி. 1327-க்கும் கி. பி. 1336-க்கும் இடையில் விஜயநகரம் கட்டப்பட்டது.

## 29. விஜயநகர அரசர் குடிவழி
### [கி. பி. 1336 முதல் கி. பி. 1472 வரை]

| | கி.பி. | கி.பி. |
|---|---|---|

இவர்களைப்பற்றித் தென்னாட்டுச் சரித்திரத்தில் விரிவாக எழுதப்படும். இந்த அரசர்கள் அரிகர வம்சத்திலிருந்து பிரிந்தவர்கள். தெலுங்கு பேசுகிறவர்கள். இக்குலமுதல்வன் வீரநரசிம்மன் என்பவன். ஏறக்குறைய 13 அரசர்கள் ஆண்டார்கள். வீரநரசிம்மன் உம்மத்தூர் கங்க அரசனுடன் சண்டையிட்டு இறக்கவே, வீரநரசிம்மனுடைய தம்பி கிருஷ்ணதேவ அரசன் பட்டம் எய்தினான். இந்த வம்சத்தில் பேர்போன அரசன் இவன்தான். இவன் பட்டம் எய்தியது கி. பி. 1504 ஆகும். இந்த வம்சம் கி. பி. 1565 வரை நடந்துவந்து பிறகு சிதறிப்போயிற்று.

# 30. மைசூர் உடையார் குடிவழி

## [கி. பி. 1316 முதல் கி. பி. 1948 வரை]

| பெயர் | காலம் கி.பி. | கி.பி. |
|---|---|---|
| (A) | | |
| புக்கண்ண உடையார் | 1316 — | 1339 |
| கெம்பண்ண உடையார் | 1339 — | 1370 |
| அய்யண்ண உடையார் | 1370 — | 1399 |
| வீரவிருப்பண்ண உடையார் | 1394 — | 1452 |
| (B) | | |
| யது | 1399 — | 1423 |
| சாமராஜ் I | 1423 — | 1458 |
| திம்மராய உடையார் | 1458 — | 1478 |
| சாமராஜ் II | 1478 — | 1513 |
| சாமராஜ் III | 1513 — | 1552 |
| திம்மராஜ் II | 1552 — | 1571 |
| கிருஷ்ணராஜ் | | |
| சாமராஜ் IV | 1571 — | 1576 |
| பீதாத் உடையார் I | 1576 — | 1578 |
| இராசாதிராசன் | 1578 — | 1617 |
| சாமராஜ் V | | |
| தேவராஜ் | | |
| நரசராஜ் | | |
| பீதாத் உடையார் | | |
| நஞ்சராஜ் | | |
| சாமராஜ் | | |
| இமமுடிராஜ் | | |
| சாமராஜ் VI | 1617 — | 1637 |

| | | |
|---|---|---|
| இராஜ உடையார் | | |
| கண்டீரவ நரசராஜ் I | 1638 — | 1659 |
| தொட்டதேவராஜ் | 1659 — | 1672 |
| சிக்கதேவராஜ் | 1672 — | 1704 |
| கம்பதேவய்ய | | |
| மாரிதேவ | | |
| முக்கதேவராஜ் | | |
| தண்டீரவநரச II | | |
| கண்டீரவநரசராஜ் III | 1704 — | 1713 |
| \| | | |
| தொட்டகிருஷ்ணராஜ் | 1713 — | 1731 |
| சாமராஜ் VII | 1731 — | 1734 |
| சிக்ககிருஷ்ணராஜ் | 1734 — | 1766 |
| \| | | |
| நஞ்சராஜ் | 1767 — | 1770 |
| சாமராஜ் VIII | 1770 — | 1775 |
| சாமராஜ் IX | 1775 — | 1796 |
| \| | | |
| கிருஷ்ணராஜ் III | 1800 — | 1868 |
| சாமராசேந்திர | 1868 — | 1894 |
| \| | | |
| கிருஷ்ணராஜ உடையார் | 1894 | |
| கண்டீரவநரசராச உடையார் | | |
| (பெயர் தெரியவில்லை) | | |
| ” | | 1948 |

# 31. மதுரை நாயக்கர் குடிவழி

## [கி. பி. 1559 முதல் கி. பி. 1736 வரை]

| பெயர் | காலம் | |
|---|---|---|
| | கி.பி. | கி.பி. |
| விஸ்வநாதன் I | 1559 — | 1563 |
| குமாரகிருஷ்ணப்ப | 1563 — | 1572 |
| கிருஷ்ணப்ப, பெரியவீரப்ப, விஸ்வநாத II | 1572 — | 1595 |
| இலிங்கய்ய, குமாரகிருஷ்ணப்ப, விசுவப்ப, விஸ்வநாத III | 1595 — | 1602 |
| முத்துகிருஷ்ணப்ப | 1602 — | 1609 |
| முத்துவீரப்ப | 1609 — | 1623 |
| திருமலை | 1623 — | 1659 |
| முத்து அளகாத்திரி, முத்துவீரப்ப II | 1659 — | 1562 |
| சொக்கநாத எ சொக்கலிங்க | 1662 — | 1682 |
| இரங்க கிருஷ்ண முத்துவீரப்ப | 1682 — | 1689 |
| மங்கம்மாள் | 1689 — | 1704 |
| விஜய இரங்க சொக்கநாத | 1704 — | 1731 |
| மீனாட்சி | 1731 — | 1736 |

# ௩. இன்றியமையாக் குறிப்புக்கள்

**1. அகப்பா:** சேரர் நாட்டில் பெயர்பெற்ற ஒரு கோட்டை. இமயவரம்பன் தம்பி பல்யானை செல்கெழுகுட்டுவன் இக்கோட்டையை முற்றுகையிட்டுப் பிடித்தான் என்பது "அகப்பா எறிந்து பகற்றீ வேட்டு" என்ற 3-ம் பத்துப் பதிகத்தால் உணரலாம்.

**2. அஃதை:** அஃதை எனவும் கூறுவர். ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவான ஒரு பெயர். அஃதை என்பான் ஒரு குறுநில மன்னனும், போர்வீரனும், மருதநிலத்து வள்ளலாகவும் அகம் 76-ல் பரணர் பாடியுள்ளார். இவ்வள்ளலைப்பற்றி வெள்ளெருக்கிலையார் என்னும் புலவரும் புறம் 233-ல் பாடியுள்ளார்.

மருதம் பாடிய இளங்கடுங்கோ என்பவர் சோழன் மகள் அஃதை என்னும் பெயர்பெற்ற ஒரு பெண்பாலைப்பற்றி அகம் 96-ல் "அஃதை தந்தை அண்ணல்யானை அடுபோர்ச் சோழர்" என்று பாடியுள்ளார். சோழர் குடியில் "ஐயை தந்தை" என்று பெயர் பெற்ற தித்தன் சோழன் இருந்ததுபோல, 'அஃதை தந்தை" என்று அழைக்கப்பட்ட சோழனும் ஒருவன் இருந்தான் என்று ஏற்படுகிறது.

**3. அயிரை:** அயிரை என்பது சேரநாட்டில் உள்ள ஒரு மலை. அயிரை என்பது ஒருவகை மீனுக்குப் பெயர். அம்மலையிலுள்ள அருவிகளில் அயிரை மீன்கள் நிறைந்துள்ளதால் அம்மலை அப்பெயர் பெற்றது. அம்மலையில் கோயில் கொண்டிருக்கும் தெய்வத்துக்கும் 'அயிரை' என்று பெயர். "இருகடல் நீரும் ஒரு பகலாடி, அயிரை பரைஇ" (3-ம் பத்து பதிகம்) என்பதை நோக்குக.

ஆனைமலைத் தொடரில் பொதினி (பழனி) மலைக்கு மேல் புறமாக ஐவர்மலை ஒன்று இருக்கிறது. பஞ்சபாண்டவர் வனவாசத்தின்போது அங்குச் சிலநாள் தங்கி இருந்ததினால் அதற்கு ஐவர்மலை என்று பெயர் வந்ததாகவும் ஐவர்மலை என்பது மருவி அயிரைமலை என்று ஆகிவிட்டதென்றும் ஒரு சாரார் கூறுவர். ஆனால், அது வேறு இது வேறு.

கி. பி. 3, 4-ம் நூற்றாண்டுகளில் பாண்டியநாடு களப்பிரர் வசம் இருந்தபோது சமணர்கள் இந்த ஐவர்மலையிலுள்ள குகையில் தங்கினார்கள் என்றும், அந்தக் குகையில் ஐந்துபேர் படுக்கும் படியாக கல்லில் படுக்கைகள் வெட்டப்பட்டிருப்பதால் அக்

காலந்தொட்டு ஐவர்மலை என்று அயிரைமலைக்குப் பேர் வந்ததாக இன்னொரு சாரார் கூறுவர். சமணர்கள் வெறுந்தரையில்தான் படுப்பவர்கள் என்பது "வெற்றரை யுழல்வார் துவராடைய வேடத்தார்" என்று சம்பந்த சுவாமிகள் கூறுவதை நோக்க வெளியாம்.

4. அறுகை: இவன் ஒரு சிற்றரசன். மோகூர்க் குறுநில மன்னனுக்குப் பகைவனாய், சேரன் செங்குட்டுவனுக்கு நண்பனாய் இருந்த ஒரு குறுநில மன்னன். இவன் முன்னோர்கள் சேர அரசர்களுக்குத் தானைத்தலைவராகவும், உற்ற நண்பர்களாகவும் இருந்தார்கள்.

அறுகை - சிங்கம். ஒரு காலத்தில் இவன் குடியில் ஒருவன் சிங்கத்துடன் சண்டையிட்டு வென்றான் ஆனதால், அவன் பரம்பரைக்கு அறுகையர் அல்லது சிங்கர் என்ற பெயர் ஏற்பட்டது.

5. அழுந்தூர்: இது சோழநாட்டில் உள்ள ஓர் ஊர். ஒருகாலத்தில் சோழர்களுக்கு அரச இருக்கையாக இருந்தது. இங்கே இருந்து ஆண்ட சோழ அரசர்களுக்குச் 'சென்னி' என்று பெயர். இங்கே சோழர்களுக்கு மகட்கொடைக்கு உரிய வேளிர்களும் வாழ்ந்தார்கள்.

6. அழும்பில் வேள்: செங்குட்டுவனுடைய நல் அமைச்சன். அழும்பில் என்ற ஊரையுடைய ஒரு வேளாளன். அரசர்களுக்கு மகட்கொடைக்கு உரியவன். இவ்வூர் புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கிறது. தற்காலம் 'அன்புகோவில்' என்று அழைக்கப்படுகிறது.

7. ஆமூர்: மழகொங்கில் காவிரியின் வடகரையில் உள்ள ஓர் ஊர். பாய்ச்சலாச்சிரமம்—குணசேலம் முதலிய ஊர்களுக்கு மேல்புறம் உள்ளது. இவ்வூர் 'முக்காவல் நாட்டு ஆமூர்' என்றும் பேசப்படுகிறது. சேர - பாண்டிய - சோழ மன்னர்கள் மூவருக்கும் பொதுவாக, அவரவர்கள் எல்லைக்குப் பாதுகாவலாக அம்மூவரும் ஒரு தானைத்தலைவனை ஆமூரில் வைத்திருந்தார்கள். அவனுக்கு 'ஆமூர் மல்லன்' என்று பெயர். அவன் மற்போரில் சிறந்தவன். ஆனதால் அப்பெயர் பெற்றான். ஒருகால், சோழன் தித்தன் மகன் போர் அவைக்கோ பெருநற்கிள்ளி என்பான் தந்தையுடன் சண்டைபோட்டுக்கொண்டு உறையூரினின்றும் நீங்கி ஆமூர் சென்று வதிந்து வந்தான். அப்போது, அவ்வூரில் வாழ்ந்துவந்த பெருங்கோழி நாய்கன் மகன் நக்கண்ணையார் (பெண்புலவர் பக்கம் 306) அவன்மேல் காதல் கொண்டார். (புறம் 83-84-85) சில காரணங்களால் ஆமூர் மல்லனுக்கும் பெருநற்கிள்ளிக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு, இருவரும் மற்போர்

புரிய, ஆமூர் மல்லனைக் கிள்ளி வென்றான் (புறம் 85) என்று புறநானூறு பேசுகிறது.

8. ஆலஞ்சேரி: இது சோழநாட்டில் உள்ள ஓர் ஊர். இவ்வூரில் இருந்த வேளிர்கள் சோழர்களுக்கு மகட்கொடைக்கு உரியவர்கள். **ஆலஞ்சேரி அயிந்தன்** என்ற ஒருவேள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இவ்வூரில் வாழ்ந்து வந்தான். கி. பி. 144-ல் கோவலன் வெட்டுண்டு, மதுரை எரியுண்டபின், கடைச் சங்கப் புலவர்களில் பெரும்பான்மையோர் மதுரையில் மழை யின்றி வற்கடம எய்தினமையால், ஆலஞ்சேரி சென்றார்கள். அவர்களை **அயிந்தன்** வரவேற்று வற்கடம் தீரும்வரை புலவர்களை ஆதரித்தான். ஆதலின் புலவர்களால் பாடப்பெறும் பெருமை பெற்றது இவ்வூர்.

9. இடும்பில்: இவ்வூர் இப்போது **இடும்பாவனம்** என்று கூறப்படுகிறது. சோழநாட்டில் உள்ள பாடல்பெற்ற தலங்களில் ஒன்று.

10. இடையாறு: இரண்டாம் கரிகாலன் காலத்தில் சிறப்பாக இருந்த சோழநாட்டு ஊர்களில் ஒன்று. இதில் சோழர்களுக்கு மகட்கொடைக்குரிய வேளிர்கள் வசித்து வந்தார்கள். இரண்டு ஆறுகளுக்கு இடையில் உள்ளதால் 'இடையாறு' என்னப்பட்டது.

இதேமாதிரி, கொங்குநாட்டிலும் **மணிமுத்தாநதி காவிரியில்** கலக்குமிடத்தில் அவ்விரண்டு ஆறுகளுக்கும் இடையில் '**இடையாறு**' என்ற ஊர் ஒன்று உள்ளது.

11. இலவந்திகை: இது சேரன் வஞ்சியில் (திருவஞ்சைக் களத்தில்) இருந்த ஒரு தடாகம். அந்தத் தடாகக் கரையில் இருந்தது ஒரு வெள்ளிமாடம். அதில் சேர அரசரும் அவரைச் சேர்ந்தவர்களும் தங்குவது வழக்கம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் **செங்குட்டுவனும்** அவன் மனைவி **வேண்மாளும் இளங்கோ அடிகளும்** அதில் தங்கி இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. **இலவந்திகை** என்பது **இயந்திரவாவியைத்** தன்னிடத்துக் கொண்டது என்பது பொருள்.

காவிரிப்பூம்பட்டினத்திலும் **இலவந்திகை** என்ற பெயருடைய, சோலைகளால் சூழப்பட்ட ஒரு தடாகம் உண்டு. அது மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என்னும் இடங்களுக்கு இடையில் இருந்தது. அந்த இலவந்திகைத் தடாகத்தின் கரையில் இருந்த பள்ளியில் (மடத்தில்) சமணர்கள் சிலகாலம் வசித்து வந்ததால் அதற்கு '**இலவந்திகைப்பள்ளி**' என்று பெயர் ஏற்பட்டது.

12. உம்பற் காடு: (உம்பல் - யானை) யானைகள் நிறைந்த காடு என்பது பொருள். ஆனைமலைக் காடுகளைத் தன்னிடத்துக் கொண்ட நாடு என்று கொள்ளலாம்.

13. ஊராக்குதிரை: இது தகடூர் (தர்மபுரி - சேலம் கோட்டம்) குறுநில மன்னன் அதிகமான் அஞ்சியின் நாட்டில் உள்ள குதிரைமலையைக் குறிக்கும். தற்காலம் அது இராணி மூக்குமலை என்று வழங்கப்படுகிறது.

ஊரும் குதிரை = பரி, குதிரை.

ஊராக் குதிரை = குதிரை என்னும் பெயரை உடைய மலை.

14. ஐயை: கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த பரணரும் நக்கீரரும் பாடியுள்ள சோழன் தித்தன் என்பவனுடைய குமாரி. இவள் கல்வியிலும் கற்பிலும் சிறந்தவள். "ஐயை என்றால் அறியாக்குழவியும் அறியும்" என்ற பழமொழியும் உண்டு. இதனால் இவள் அரச குமாரியாய் இருந்தபோதிலும் மக்களிடத்தில அன்புடையவளாக நடந்துகொண்டாள் என்பது தேற்றம். தகப்பனாகிய சோழ அரசன் தித்தனுக்கு "ஐயை தந்தை" என்று இவளால் பெயர் உண்டாயிற்று என்றால், இவளுடைய பெருமை அளவு கடந்து இருந்தது என்பது விளங்கும்.

15. ஒருஉத் தந்தை: இரண்டாம் அந்துவன் சேரலின் மனைவியும், செல்வக்கடுங்கோவின் தாயும் ஆன 'பொறையன் பெருந்தேவியின்' தகப்பன். ஒப்பற்ற தந்தை என்பது பொருள் போலும்.

16. ஒகாந்தூர்: செல்வக்கடுங்கோ வாழி ஆதன் என்னும் சேர அரசன் திருமால் கோவிலுக்குத் தானமாகக் கொடுத்த சேரநாட்டில் உள்ள ஓர் ஊர்.

17. ஒகமண்டலம்: கூர்ச்சர நாட்டில் உள்ள மேல் கடற்கரைக்கு ஒரு பெயர். கண்ணன் கட்டிய அரச இருக்கையான துவாரகை என்னும் நகர் இந்த ஒகமண்டலத்தில்தான் உள்ளது.

சோழர் அரச இருக்கையான கோநகை நகர் இருக்கும் கீழ்க் கடற்கரைக்கு மாறோக மண்டலம் என்று பெயர். ஓக மண்டலத்துக்கு மாறுபட்டது என்பது பொருள்.

18. கடலுண்டி: இது இப்போது பேபூர் (Beypore) என்று வழங்கும் ஊரின் பக்கம உள்ளது. கிரீஸ் - உரோம் தேசங்களின் சரித்திர ஆசிரியர்கள் பிளினி - தாலமி - பெரிபிளஸ் முதலியோர் 'டிண்டிஸ்' (Tyndis) என்று தங்களுடைய

நூல்களில் கூறியுள்ளார்கள். இதனால், அக்காலத்தில் தமிழ் நாட்டரசர்களுக்கும், கிரீஸ் - உரோம் தேசத்து அரசர்களுக்கும் நடுவில் கடல் வாணிகம் நடைபெற்று வந்தது என வெளியாகிறது. தற்போது துவிலாண்டி என்று அழைக்கப்படுவது இவ்வூரே.

19. கடவுண் மங்கலம்: புதிதாகக் கோவிலைக் கட்டி, கடவுளை மந்திர பூர்வமாகத் தாபனம் செய்து, குடமுழுக்குச் செய்யும் நாள், அல்லது, பழைய கோவிலைச் சீர்திருத்திக் குடமுழுக்குக்கு ஏற்பாடு செய்யும் நாளாகவும் கொள்ளலாம்.

20. கடற் கடம்பு: கார்வார் முனை (Kar - war Point) யிலிருந்து, நேத்திரவதி ஆற்று முகத்துவாரம் (மங்களூர் - மங்கல புரம் - Mangalore) வரையிலும் உள்ள கடற்கரைக்கு இட்ட பெயர். இந்தக் கடற்கரைக்குப் பக்கம் உள்ள தீவுகளில் கடம்பர்கள் ஆட்சி செலுத்திக்கொண்டு, மேற்கு நாடுகளிலிருந்து வரும் கப்பல்களைக் கொள்ளை அடித்துவந்தார்கள். அதனால், தமிழ் இலக்கியங்களில் அந்தக் கடற்கரைக்குக் கடற் கடம்பு என்றும், அக்கொள்ளைக் கூட்டத்தாருக்குக் கடற் கடம்பர் என்றும் பெயர்கள் வழங்கலாயின.

21. கரூர்: கி. மு. 14058-ல் குன்றமெறிந்த குமரவேள் காலத்தில் இருந்த முசுகுந்தச் சோழன் காலத்திலும், அதற்கு முந்தியும் பிந்தியும் சோழர்களுடைய அரச இருக்கையாக இருந்தது. வானநூலை ஆராய 'வானநூல் ஆராய்ச்சி நிலையத்தை'த் தன்னிடத்தே கொண்டு விளங்கியது. கரூர் மத்தியமாக (Meridian) வைத்து அக்காலத்தில் (பஞ்சாங்கம்) ஐந்திறங் கணித்துவந்தார்கள். கரூர் மத்திய கணிதம் இன்றும் யாழ்ப்பாணத்தில் வழக்கத்தில் உள்ளது. யாழ்ப்பாணம் கார்த்திகேய அய்யரால் வெளிப்படும் ஐந்திறம் (பஞ்சாங்கம்) கரூர் மத்திய கணிதத்தைப் பொருத்ததே.

அவ்வூரில் உள்ள கிராமதேவதை 'வஞ்சி அம்மன்' என்னப்படும். அந்த அம்மனாலேயே கரூருக்கு வஞ்சி என ஒரு பெயரும் உண்டு. வஞ்சியம்மனூர் வஞ்சி எனக் குறுகி வந்துள்ளது.

கரூர் கொங்கு நாட்டைச்சேர்ந்தது. ஆனால் தற்காலம் சோழநாட்டைச் சேர்ந்த திருச்சிராப்பள்ளிக் கோட்டத்துடன் இணைத்துள்ளார்கள்.

கரூரில் உள்ள சிவன் கோவிலுக்குத் திரு ஆனிலை என்று பெயர். ஆம்பிர நதிக்கரையின் (ஆன்பொருனை) பாங்கர் உள்ளது. சமயாசாரிகளால் பாடல் பெற்றது. கருவூரார் என்ற சித்தர் ஐக்கியமான இடம்.

கரூர் பல தடவைகளில் சேர அரசர்கள் கைக்கு மாறியுள்ளது. கடைசியாக முதலாம் கோச்செங்கட்சோழன் மகன் நல்லிடிக்கோன் என்பவனுக்கும் சேரன் ஆட்டன் அத்தி அத்திக்கும் போர் மூண்டது. அப்போரில் ஆட்டன் நல்லிடிக்கோனைக் கொன்று, கரூரைக் கைப்பற்றினான். அதனால் ஆட்டன் அத்திக்கு "கருவூர் எறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை" என்ற பட்டம் கிடைத்தது. அதுமுதல், கருவூரானது சேர நாட்டுடன் இணைக்கப்பட்டது. பின்னால், சேரர் வலிகுன்றிய போது சோழநாட்டுடனும், சோழர் வலிகுன்றியபோது கொங்கு நாட்டுடனும் கரூர் மாறி மாறிச் சேர்க்கப்பட்டு வந்ததென்று மூவேந்தர்களுடைய சரித்திரம் பகருகின்றது.

22. கல் கால் கவணை : "ஆர் எயில் அலைத்த கல் கால் கவணை" (பதிற்றுப்பத்து 88) பண்டைக் கிரேக்கரும் - உரோமரும் கொண்டு பொருத கல் கால் கவணை என்ற இயந்திரம், பண்டைச்சேரர் இடத்தும் இருந்தமை இதனால் விளங்கும்.

பெருங் கற்களை வைத்து நெடுந்தொலைவில் மிக விரைவாக எறிந்து, பகைவர் அரண்களைச் சீர் அழித்து, வலி அழிக்கும் இயல்பு பற்றியும், மக்களால் எறியப்படும் கவண் போலாது, பொறி தானே பெருங் கற்களை வீசி எறிவது பற்றியும் கல் கால் கவணை என்றார்.

23. கட்டூர் : பாடி வீடுகள். (பதிற்றுப்பத்து 90) தற்காலம் கூடாரம் என்றும் கூறுப.

24. கழாஅர் : சோழநாட்டில் காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகில் காவிரியின் வடகரையில் இருந்த ஓர் ஊர். அவ்வூர்த்துறைக்குக் கழாஅர் முன்றுறை என்று பெயர். இரண்டாம் கரிகாலனால் சீர்திருத்தப்பட்ட ஊர். இக்கழாஅர் முன்றுறையில் கரிகாலன் II என்பவன் தன் மகள் ஆதிமந்தி, மருமகன் ஆட்டன் அத்தியுடன் புதுப்புனல் விழா காவிரியில் கொண்டாடும்போது, ஆட்டன் அத்தியைக் காவிரி வெள்ளம் அடித்துக் கொண்டுபோய்க் கடலிற் சேர்க்க, அவன் மீன் வலைஞர்களால் மீட்கப்பட்டு நெய்தனிலத் தலைவனிடம் சேர்க்கப்பட்டான். அங்கு நெய்தனிலத் தலைவன் மகள் மருதியிடம் சின்னாள் தங்கி இருந்து, பின் ஆதிமந்தியிடம் வந்து சேர்ந்தான். இவ்விழாவைக் குறித்து :—

"கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்"

என்றும்,

"ஒலி கதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் வளவன்"

என்றும், பரணர் பாடியுள்ளமை நோக்குக.

25. கழுமலம்: (1) கழுமலம் என்பது சோழ நாட்டில் உள்ள சீகாழிப் பதிக்கு ஒரு பெயர். இதனால் "**கழுமல முதுபதிக் கவுணியன்**" என்று சம்பந்த சுவாமிகளுக்கு ஒரு பெயர் உண்டு.

2) உறையூர்க் கோட்டைத் தெற்கு வாயிலுக்கு அடுத்தாற் போல் இருந்த ஒரு சிற்றூர். உறையூர்ச் சோழ அரசர்களுடைய யானைகள் கட்டுவதற்கு ஏற்பட்ட ஓர் ஊர். "**கழுமலம் யாத்த களிறு**" என்று இலக்கியங்களில் வருவது காண்க. இவ்வூரில் கட்டப்பட்டிருந்த பட்டத்து யானையை அவிழ்த்துவிட்டுத்தான், அவ்வியானை இரண்டாம் கரிகாலனைத் தன் பிடரியின் மிசை எடுத்துவர, மக்கள் அவனுக்கு முடிசூட்டியது.

(3) கொங்கு நாட்டிலுள்ள நேன்மலி என்ற ஊர்தான் முற்காலத்தில் கழுமலம் என்னப்பட்டது என்று கூறுவர் சிலர்.

ஆதலின், கழுமலம் என்ற பெயரையுடைய ஊர்கள் பல வெவ்வேறு நாடுகளில் இருந்தன என்பது வெளியாகிறது.

26. காந்தளூர்: சேரர் நாட்டில் மேலைக் கடற்கரையில் உள்ள ஒரு துறைமுகப்பட்டினம். சேரர்களுடைய கப்பற் படைகள் தங்குவதற்கு வசதியான பட்டினம். முசிறி, தொண்டி, நறவு முதலிய கடற்றுறைப் பட்டினங்களுக்கு வியாபார நிமித்தம் வரும் வேற்று நாட்டு வியாபாரக் கப்பல்களும் இங்கே தங்கும். இதனால் இது ஒரு பெரிய துறைமுகப் பட்டினம் என்றும், சேர அரசர் கப்பற் படையிலும் பேர்போனவர்கள் என்றும், அறிகிறோம். ஒரு காலத்தில் சோழனுக்கும் சேரனுக்கும் போர் மூண்டு, சோழன் கப்பற் படைகொண்டு காந்தளூரில் இருந்த சேரன் கப்பற் படைகளை வென்றான் என்பதற்கு அறிகுறியாக "**காந்தளூர்ச் சாலைகலமறுத்தருளி**" என்று சோழன் மெய்க்கீர்த்தியாக கல்வெட்டுக்களில் காணப்படுவது காண்க.

27. கிடங்கில்: ஓர் ஊர்.

28. குழுமூர்: கொங்குநாட்டில்கோயமுத்தூர்க் கோட்டத்தில், ஆம்பிர நதி (ஆன்பொருநை)க் கரையில் உள்ள ஓர் ஊர். அது இப்போது கோழுமம் என்று வழங்கப்படுகிறது. குமணன் என்ற சிறந்த வள்ளல் வாழ்ந்த ஊர்.

29. குழுவில்: இவன் ஒரு ஆயர் குலத் தலைவன். தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையால் முறியடிக்கப் பட்டவன்.

30. கொடுகூர்: இவ்வூர் மைசூர் நாட்டின் தென்பகுதியில் உள்ளது. (Vide Indian Antiquery Vol. XVIII of 1889 page 367)

31. கொடுங்கோளூர்: தற்காலம் கொடுங்களூர் (Cranganuore) என்று வழங்கப்படுகிறது. "சேரர் குலக்கோ வீற்றிருந்து முறைபுரியும் குலக் கோ மூதூர் கொடுங் கோளூர்" என்று சேக்கிழாரால் புகழப்பட்ட பழம்பதியாகும். செங்குட்டுவன் இந்த ஊரிலேதான் கண்ணகி கோவிலைத் தாபனம் செய்தான். சேரர் அரச இருக்கையாகிய வஞ்சி நகருக்கு அணித்தாக உள்ளது.

32. கொல்லிநகர்: சேர நாட்டு அரசர்களுக்கு இருக்கையாக அமைந்தது வஞ்சிமாநகர். வஞ்சியிலுள்ள சிவன் கோவிலுக்கு "அஞ்சிக் களம்" என்று பெயர். ஊர்ப் பெயரும் கோவிற் பெயரும் தனித் தனியாக உள்ளதை இன்னும் பல இடங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக:

| | ஊர்ப் பெயர் | கோவிற் பெயர் |
|---|---|---|
| (1) | புக்கொளியூர் | அவிநாசி |
| (2) | கறையூர் | கொடுமுடி |
| (3) | திருவெண்ணெய் நல்லூர் | அருட்டுறை |
| (4) | திருவாரூர் | பூங்கோயில் |
| (5) | பேரூர் | பட்டீச்சுரம் |

முதலியன காண்க.

அஞ்சி = ஐந்து முகங்களையுடைய சிவன்.

களம் = கோவில் (நெடுங்களம் திருவேட்களம்)

ஆதலின், வஞ்சியில் உள்ள அஞ்சிக்களம் என்பது, திரு என்ற அடை கொடுக்கப்பட்டு திருவஞ்சி அஞ்சிக்களம் என்றாகி, பேச்சு வழக்கில் திரு வஞ்சிக்களம்-திருவஞ்சைக்களம் என்றாயிற்று. சுந்தரரும் "அஞ்சைக்களத்து அப்பனே" என்றுதான் பாடியுள்ளார்.

திருவஞ்சிக்களத்துக்குக் கொல்லிநகர் என்பது ஒரு மறு பெயர். வைணவ ஆசிரியர்களில் குரு பரம்பரை எழுதிய திருநீய பிரமதந்திர சுவாமிகளும் ஆறாயிரப்படி உரை எழுதிய பின்பழகிய ஜீயர் சுவாமிகளும் திருவஞ்சைக்களம் தான் கொல்லி நகர் என்று கூறியுள்ளார்கள். சேரமான் பெருமாள் II என்கிற குலசேகர ஆழ்வார் இவ்வூரில் பிறந்தவர். அதனால் அவருக்குக் கொல்லிநகர்க் காவலன் என்பது ஒரு பட்டப் பெயர். கொல்லி மலை வேறு - கொல்லிநகர் வேறு என்பதை ஒவ்வொருவரும் நினைவு கொள்ள வேண்டும்.

**33. கொல்லிமலை:** இது கொங்கு நாட்டில் வடகொங்கில், நாமக்கல் பக்கம் உள்ள ஒரு மலை. இதற்குச் சதுரகிரி என்று பெயர். இந்த மலை 20 கல் (மைல்) சம சதுரமாக இருப்பதால் அப்பெயர் பெற்றது. மலையின் பேரில் 14 நாடுகள் உள்ளன. அந் நாடுகளில் வசிப்பவர்கள் மலையாளிகள் எனப்படும் வேளாளர்கள். மலையின் பேரில் சிவன் கோவில் ஒன்று உள்ளது. சுவாமி அறப்பள்ளி ஈச்சுரர் - அம்மை தாயம்மை. ஒரு புலவர் இந்த சுவாமியின்பேரில் "அறப்பள்ளி ஈச்சுரர சதகம்" என்று ஒரு பிரபந்தம் பாடியுள்ளார்.

கோயிலுக்குப் பக்கத்தில் ஐயாறு என்னும் நதி உற்பத்தியாகி, கோயிலுககு அரை பர்லாங்கு தூரத்தில் ஓர் நீர்வீழ்ச்சியாகக் காட்சி தந்து, நாமக்கல் ஆத்தூர் தாலூக்காக்களின் வழியாக ஓடி, காவிரியில் கலக்கிறது.

இம்மலையில் கொல்லிப்பாவை என்ற அம்மன் கோவிலும் உண்டு. அம்மன் சிலை மிகவும் அழகு வாய்ந்தது. சங்க இலக்கியங்களில் எல்லாம் இக் கொல்லிப் பாவையைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இம்மலையில் உற்பத்தியாகும் கருநெல் அரிசிப் பொங்கலும் கருவாழைக் கனியும் தான் இந்த அம்மனுக்குப் படைப்பாம்.

ஒரு காலத்தில் இம்மலை வல்வில் ஓரி என்னும் வள்ளலுக்குச் சொந்தமாயிருந்தது. தகடூரில் (தருமபுரியில்) அதிகமான் அஞ்சியும் - நாமக்கல்லில் வல்வில ஓரியும் - திருககோவலூரில் காரியும் அரசாண்டார்கள். அவர்கள் மூவரும் சமகாலத்தவர்கள். அஞ்சியும் ஓரியும் அதிகை மன்னர்கள் காரிமலைமன்னன். யாது காரணத்தாலோ அவர்களுக்குள் போர் மூண்டு, அஞ்சியும் ஓரியும் சேர்ந்து காரியை வென்று திருக்கோயிலூரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். காரி சேர அரசன் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் சென்று முறையிட, அவன் காரிக்குப் பரிந்து, ஓரியுடன் போர் தொடுத்து, போரில் ஓரியைக் கொன்று, பின் அஞ்சியுடன் போர் தொடுத்து, தகடூரை முற்றுகையிட்டு, அஞ்சியைக் கொன்று, காரியைத் திருக்கோவிலூருக்கு மன்னனாக்கி, தகடூரையும் கொல்லிமலை நாட்டையும் சேரநாட்டுடன் இணைத்துக் கொண்டார். அதுமுதல் கொல்லிமலை சேர அரசர்களுக்குச் சொந்தமாயிற்று. அதனால், இரும்பொறைக்குத் "தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை" என்ற பட்டம் கிடைத்தது.

**34. ஞமிலி:** இவன் கடம்பர் குடியைச் சேர்ந்த இரண்டாம் நன்னன் என்பவனுடைய படைத்தலைவன். இவன் ஒரு சமயம் சேர அரசன் படைத்தலைவனை ஆய்எயினன் என்பவனுடன் சண்டையிட்டு அவனைப் போரில் கொன்றான்.

**35. தகடூர்:** சேலம் கோட்டத்தில் உள்ள **தர்மபுரியின்** பழைய பெயர். திரு அதிகையில் இருந்து வந்த அதிகை மன்னர் அரசாண்ட ஊர். அம் மன்னர்கள் கட்டிய அதிகைமன் கோட்டை (அதமங் கோட்டை) தர்மபுரிக்கு அணித்தாக உள்ளது. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அதிகைமான் அஞ்சியைக் கொன்று நாட்டைக் கைப்பற்றியபோது, **அரிசில்கிழார்** என்னும் புலவர் "**தகடூர் யாத்திரை**" என்ற **நூலைப் பாடினார்.**

உடையார் என்ற வகுப்பாரில் (1) அதிகை மன்னர் (2) மலை மன்னர் (3) நத்தமன்னர் (4) சுருதி மன்னர் என்ற நான்கு பிரிவுகள் உண்டு. அஞ்சியும் ஓரியும் அதிகை மன்னர் பிரிவைச் சேர்ந்தவர். காரி மலைமன்னர் பிரிவைச் சேர்ந்தவன். கடலூர்க் கோட்டத்தில் நத்த மன்னர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். தஞ்சாவூர்க் கோட்டத்தில் சுருதி மன்னர் பிரிவைச் சேர்ந்தவர்கள் உண்டு. சுருதி மன்னர் என்பவர்கள் ஆரிய ஸ்மிருதி ஆசாரத்தைக் கைக்கொண்டு, பூணூல் போட்டுக் கொண்டு அவ்வழி ஒழுகுகின்றனர். இந்தமாதிரி ஆரிய மதத்தைத் தழுவிப் பூணூல் போட்டுக் கொண்டார்கள் குயவர்களிலும்! நாடார்களிலும், தச்சர் - தட்டார் - கருமார் - கன்னார் - சிற்பியர்- வணிகர் - சருணீகர் முதலியோர்களிலும் உண்டு. தமிழர்கள் முன் ஆரிய மதத்தைத் தழுவிய மாதிரியே இப்போதும் கிறித்தவ மதம் - இஸ்லாமிய மதம் முதலியவைகளைத் தழுவியுள்ளார்கள் என்பது கண்கூடு.

**36. துவ்வாநறவு:** இது சேர நாட்டில் மேல் கடற்கரையில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். **நறவு** என்றால் **தேன்** என்று பொருள். துவ்வா = அருந்தாத என்பது பொருள். ஆதலின், துவ்வா நறவு = அருந்தாத தேன்; அதாவது, நறவு என்ற ஊர். கி. பி. 42 முதல் கி. பி. 100 வரை இமயவரம்பன் சேரலாதன் **நறவு** என்னும் ஊரை அரச இருக்கையாகக் கொண்டு சேர நாட்டை ஆட்சி புரிந்து வந்தான்.

**நறவு** என்பதனை டாலமி (Ptolomey) என்னும் புலவர் **நித்திரியஸ்** Nitrias) என்று எழுதியுள்ளார்; (Seran-Vanchi Page 50). **நேத்திரவதி** என்னும் ஆற்றின் முகத்துவாரத்தில் உள்ளது என்பது பொருள். அந்த இடத்திற்குத் தற்காலம் **மங்கலபுரம்** (மங்களூர்) என்று பெயர். மங்கலபுரத்துக்கு பக்கத்தில் அரபிக் கடலில் **நறவு** என்ற தீவும் உண்டு; அதனை **நவுர** என்று மேனாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள்.

**37. தேர்வண் மலையன்:** சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளிக்கும், சேரன் மாந்தரம் சேரல் இரும்பொறைக்

கும்போர் ஏற்பட்டபோது, சோழனுக்கு இவன் துணையாக இருந்து சேரனை வென்றவன். இவன் ஒரு குறுநில மன்னன்.

38. தொண்டி: மேல் கடற்கரையில் சேரன் தொண்டி என்றும், கீழ்க் கடற்கரையில் பாண்டியன் தொண்டி என்றும் இரண்டு துறைமுகப்பட்டினங்கள் உள. பாண்டியன் தொண்டி இப்போது காயல்பட்டினம் என்று கூறப்படும்.

சேரன் தொண்டி என்பது குட்டுவன் தொண்டி என்றும், கடலுண்டி அல்லது குயிலாண்டி என்றும் (Quilandy) கூறப்படும். (சேரன் வஞ்சி பக். 5) ஏனைய விவரங்களுக்கு No. 18 கடலுண்டி பார்க்க. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் இந்தத் தொண்டியை அரச இருக்கையாக்கொண்டு சேரநாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி செலுத்திவந்தான்.

39. நவுரா: இதனை நறவு என்றும், நீத்ரா என்றும் அழைப்பது உண்டு. நேத்திரவதி ஆற்றின் முகத்துவாரத்தில் உள்ள மங்கலபுரத்தைத் தான் (மங்களூர்) நேத்திர - நித்திரா. நவுரா - நறவு என்று மேனாட்டு வணிகர்கள் பெயரிட்டார்கள். ஏனைய விவரங்களுக்கு (No. 36) தொவ்வா நறவு பார்க்க.

40. நன்று: இது சேலம் கோட்டத்தில் மஞ்சவாடிக் கணவாய்ப் பக்கம் உள்ள ஒரு மலை. செல்வக்கடுங்கோ வாழியாதன் இம்மலை மீது ஏறி அங்கிருந்து பார்க்கத் தெரிந்த ஊர்களை எல்லாம் கபிலர் என்னும் ஆரியப்புலவருக்குத் தானமாக வழங்கினன். இப்போது அதற்குத் 'தேனன்று' மலை என்று பெயர். ("சேரன் செங்குட்டுவன்"—ப. 16 மு. இராகவய்யங்கார்)

41. நன்னன் பாழி: துளுநாடு கடம்பர் நாடு என்னப்படும். கடம்பர் என்பவர் துளு நாட்டை ஆண்டு கொண்டு இருக்கும்போது, வியாபாரக் கப்பல்களும் அவைகளுக்குப் பாதுகாவலாகக் கப்பற் படைகளும் வைத்திருந்தனர். கிரீஸ் - உரோம் - எகிப்து - அராபியா முதலிய இடங்களிலிருந்து வியாபாரிகள் சேரநாட்டுடன் வியாபாரம் செய்ய ஆரம்பிக்கவே, இக்கடம்பர்கள் அவர்களைக் கடலிலேயே கொள்ளையிட்டு அவர்கள் செய்யும் வியாபாரத்தை ஒழிக்கப் பார்த்தனர்.

அக்காலத்தில் சேரர் நாடு என்பது மங்களூருக்குத் தெற்கே உள்ள கண்ணனூரில் (Cannanore) இருந்து நீகிண்டா (Neakinda) வரை, அதாவது, கோட்டயத்து இருப்பக்கம் உள்ள பாகரே (Bakare) வரை பரவி இருந்தது. கண்ணனூருக்கு வடக்கே துளுநாடு கடம்பருக்கு உள்பட்டது (Seran Vanchi Page 6).

பாகரே (Bakare) என்பது வைக்கரை என்று வழங்குகிறது. (Seran Vanchi Page 8).

கி. மு. முதல் நூற்றாண்டில் துளு நாட்டை அரசாண்ட இரண்டாம் நன்னன் என்பவன் கடலில் கொள்ளை அடித்த பணத்தை எல்லாம் தன் நகரில் ஒரு பாறையில் குழி (பாழி), வெட்டி, அப்பாழியில் புதைத்து வைத்திருந்தான். அதனால் அந்த இடத்திற்கு "நன்னன் பாழி" என்று பெயர் ஏற்பட்டது.

42. நாங்கூர், 43. நாவூர்: இந்த இரண்டு ஊர்களும் சோழநாட்டில் உள்ளன. இரண்டாம் கரிகாலனால் சீர்திருத்தப் பட்டவை. சோழர்களுக்கு மகட்கொடைக்குரிய வேளிர்கள் குடியிருந்த ஊர்கள்.

44. நாண்மங்கலம்: பிறந்த நாட் கொண்டாட்டம்.

45. நாட்கோள்: பரஸ்தானம் செய்வது. அரசர் தங்கள் குடையையும், வாளையும் நல்ல ஓரையில் பிரயாணப்படுத்துவது. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் எடுக்க இமயம் சென்றபோது நாட்கோட் படுத்தியது சிலப்பதிகாரத்தில் காண்க.

46. நூலாக் கலிங்கம்: மனிதர்களால் நூற்கப்படாத ஆடை. அதாவது, பட்டாடை. (பதிற்றுப்பத்து-12.) பட்டு நூல் பூச்சியினின்றும் எடுக்கப்பட்டு, ஆடையாக நெய்யப்படுவ தால் நூலாக் கலிங்கம் என்றார்.

47. நேரிவாயில்: சோழ அரசர்கள் காலத்தில் உறையூர்க் கோட்டை இருந்தபோது, அதன் தெற்கு வாயிலுக்கு நேரிவாயில் என்று பெயர். அது நேரிமலையைப் பார்த்து இருப்பதால் அப் பெயர் பெற்றது.

48. நேரிமலை: நீர் ஊற்றுக்களை மிகுதியும் உடைய மலை என்பது. (Seran Vanchi Page 54.) The hill which is Spouting Water.)

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் சோழர்களுடைய நேரி மலையை வென்றதால் நேரியன் என்னும் பட்டம் பெற்றான் (பதிற்று - 40 - வரி 20).

நேரியன் என்பது சோழரது பட்டம். அப்பட்டத்தை வென்ற சேரன் பெற்றான். "நீர்மிகு சிலம்பின் நேரியோனே" என்று நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் விளிக் கின்றது காண்மின்.

49. பழையன்: இவன் மோகூர் நாட்டுச் சிற்றரசன். பாண்டியருக்கு நண்பன். இவனுடைய காவல் மரம் வேம்பு. மோகூர் என்பது தற்காலம் மோகனூர் என்று வழங்கப்படு கிறது. நாமக்கல் தாலூகாவில் காவிரிக்கரையில் உள்ளது. காவிரிக்கு அக்கரையிலும் இவனுக்கு ஒரு கோட்டை உண்டு.

அது பழையன்கோட்டை (பழைய கோட்டை) என்னப்படும். அது கொங்கு நாட்டில் காங்கயத்துக்கு அணித்தாக நொய்யலாற்றங்கரையில் உள்ளது.

50 பறம்பு: இப்பெயர்கொண்ட நாடு பாரி வள்ளலுடையது. பறம்புநாடு இப்போது இராமநாதபுரம் கோட்டத்தில் உள்ளது. அதனைப் 'பாரி பறம்பு' என்பர். பறம்பு நாட்டில் உள்ள மலை பறம்புமலை என்னப்படும். அது இப்போது கொடுங்குன்றம் என்று பேசப்படுகிறது. கொடும்குன்றம் = வளைந்த குன்றம் என்பது பொருள். கொடுங்குன்றம் பாடல் பெற்ற பாண்டிநாட்டுப் பதினான்கு தலங்களில் ஒன்று.

சேரநாட்டில் திருவஞ்சைக் களத்தில் "சேரமான் பறம்பு" என்ற இடம் கொச்சி அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது அது முதலாம் சேரமான் பெருமாளுடைய (667 - 712 A. D.) அரண்மனை இருந்த இடமாகக் கருதப்படுகிறது.

51. பளிக்கறை: காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு நந்தவனத்தில் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட ஒரு மண்டபம். இதனுட்சென்று கதவை அடைத்துக்கொண்டால் வெளியில் இருப்பவர்கள் திறந்துகொண்டு உட்செல்ல முடியாது. உள்ளிருக்கும் உருவம் வெளியே தெரியும். காற்றோட்டமும் உண்டு. சோழ இராச குமாரன் உதயகுமரன் என்பவன் மணிமேகலையைத் துரத்தியபோது, அவள் இவ்வறையின் உட்புகுந்து தப்பித்துக்கொண்டதை மணிமேகலை கூறும்.

52. பிடவூர்: சோழநாட்டில் உள்ள பழைமையான ஊர், இரண்டாம் கரிகாலனால் சீர்ப்படுத்தப்பட்டது. சோழருக்கு மகட்கொடைக்குரிய வேளிர்கள் வசித்துவந்தது. முதலாம் சேரமான் பெருமாள் கி. பி. 712-ல் கயிலை சென்றபோது, பரமேச்சுரன் முன்னிலையில் திருக்கயிலாய உலா அரங்கேற்றினார். அப்போது இவ்வூரில் இருந்த சாத்தனார் என்பவர் அங்கே கயிலையில் அந்த அவையில் அரங்கேற்றும்போது இருந்தார். கயிலையினின்றும் அவர் சோழநாடு வந்தபோது அந்நூலை தமிழ் நாட்டுக்குத் தந்து உதவினார்: இவ்வூரில் சாத்தனருக்கு ஒரு கோவில் உள்ளது.

"சேரர் காவலர் விண்ணப்பம் செய்த அத்திருவுலாப்புறம் அன்று
சாரல் வெள்ளியங் கயிலையில் கேட்ட மாசாத்தனார் தரித்திந்த
பாரில் வேதியர் திருப்பிடவூர்தனில் வெளிப்படப்பகர்ந்தெங்கும்
நாரவேலை சூழ் உலகினில் விளங்கிடநாட்டினார் நலத்தாலே"

(பெரிய புராணம்)

53. புனிற்று மகள் பூணு ஐயவி: ஐயவித்துலாம் என்று பெயர்பெற்ற பொறி (இயந்திரம்) (பதிற்று - 16).

54. பூவா வஞ்சி: வஞ்சி என்பது ஒரு கொடிக்குப் பெயர். அக்கொடி பூக்கும் வஞ்சியாகும். ஆனால், பூவாத வஞ்சி என்பது சேரனது அரச இருக்கையான வஞ்சி என்னும் மூதூர் ஆகும். இந்த வஞ்சி என்னும் ஊரில் உள்ள சிவன் கோவிலுக்குத்தான் 'அஞ்சிக்களம்' என்று பெயர். அது இப்போது திருவஞ்சைக்களம் என்று வழங்கப்படுகிறது.

கொங்கு நாட்டில் உள்ள சோழர்களுடைய பழைய அரச இருக்கையான கருவூருக்கும் வஞ்சி என்று ஒரு பெயர் உண்டு. அவ்வூரில் உள்ள கிராம தேவதை வஞ்சி அம்மன் என்று அழைக்கப்படுவாள். கருவூர் எறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்கிற ஆட்டன் அத்தி (30 - 32 A. D.) முதலாம் கோச்செங்கணான் மகன் நல்லிடிக்கோனுடன் போர் தொடுத்துக் கருவூரைச் சேரநாட்டோடு இணைத்துக்கொண்டான். அதுமுதல் கரூர் சேரர் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

55. பூழி: பூழிநாடு என்பது கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டில் ஒன்று. இது மேல் கடற்கரையைச் சேர்ந்தது. மேல் கடற் கரையில் பூழி என்ற பெயரையுடைய துறைமுகப் பட்டினம் ஒன்று இருந்தது. அதனை அரச இருக்கையாக் கொண்டு பல் யானைச் செல்கெழு குட்டுவன் சேரநாட்டின் ஒரு பகுதியை அரசாண்டான். பூழியை அரச இருக்கையாகக் கொண்டு பாண்டி நாட்டை ஆண்ட பாண்டியர்களுக்குப் 'பூழியர் கோன்' என்ற பட்டம் உண்டு. அப் பட்டம் பிற்காலத்தில் எல்லாப் பாண்டியர்களுக்கும் பொதுப்பெயராக அமைந்துவிட்டது. "பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன்" என்பதை நோக்குக.

56. பெருஞ்சிக்கல்: சோழ நாட்டில் இரண்டாம் கரிகாலனால் சீர்திருத்தப்பட்ட ஊர். சோழர்களுக்கு மகட் கொடைக்குரிய வேளிர்கள் வசித்துவந்த ஊர்.

57. மகோதைப் பட்டினம்: பட்டினம் என்ற பின் ஒட்டுச் சொல்லே இது கடற்கரையில் உள்ள ஓர் ஊர் என்பதைத் தெரிவிக்கும். மிளகு ஏற்றுமதியில் சிறந்த துறைமுகமாகிய முசிறிக்கு அணித்தாக இருந்தது. முடி சூடி அரசாளும் அரச குடும்பத்தினர் வஞ்சியிலும், அவர்களின் உறவினர்களும் அவர்களைச் சேர்ந்த ஏவலாளர்களும் வாழ்ந்துவந்த இடம். இது "அலைக்கும் கடல் அங்கரை மேல் மகோதை" என்று சுந்தரமூர்த்திகளால் பாடப்பெற்ற பெருமை வாய்ந்த இடம். இது கி. பி. 822-ல் ஏற்பட்ட கடல்கோளால் அழிவுற்றது.

58. மண்ணு முத்தம்: என்பது கழுவப்படாத முத்தம் என்று பொருளபடும். ஈண்டு 'புன்னை அரும்பு' என்பது பொருள். சிப்பியிலிருந்து எடுக்கப்படும் முத்து உண்மை முத்தா யிருந்தால் கழுவப்பட வேண்டும்; அப்படி அல்லாதது புன்னை அரும்பு ஆகும்.

59. மழ வராயன்: இது ஒரு பள்ளிப் பீடத்தின் (ஆசனத்தின்) பெயர். அவ்வாசனத்தில் உட்காருகிறவர்கள் மந்திரிகளாகவும், தானைத் தலைவர்களாகவும், சிற்றரசர்களாகவும், பெருநில உரிமையுடையவர்களாகவும் இருக்கலாம்.

இதுபோலவே பல்லவராயன் - காளிங்கராயன் (கலிங்கராயன்), முனையதரையர், உத்தமச் சோழப் பல்லவராயன் முதலிய பட்டங்களையும் கொள்க.

இம்மாதிரிப் பட்டங்கள் சேர - சோழ - பாண்டிய மந்திரிகள், தானைத் தலைவர்கள், குறுநில மன்னர்கள் முதலியோருக்குக் கொடுப்பது வழக்கம். (Vide S. I .I. Vo 5. No. 305 - 428 - 431-440 - 446 - 448 - 372 - 402 - 404).

சேக்கிழாருக்கு அநபாயன் என்னும் சோழ அரசன் "உத்தமச் சோழப் பல்லவராயன்" என்ற பட்டமும் பீடமும் அளித்ததை அவர் சரித்திரம் கூறுகிறது. இது போலவே, சேக்கிழார் தம்பி பாலறுவாயருக்குத் "தொண்டைமான்" என்ற பட்டமும், "தொண்டைமண்டலம் நின்று காத்த பெருமாள்" என்ற பட்டமும் பெற்றதாக உமாபதிசிவம் சேக்கிழார் புராணத்தில் கூறுகிறார். ஆதலின், 'பல்லவராயர்' என்ற பட்டம் பெற்றவர் பல்லவர்கள் ஆகமாட்டார்கள். 'மழவராயன்' என்ற பட்டம் பெற்றவன் மழவனாகமாட்டான். 'வாணதிராயன்' என்ற பட்டம் பெற்றவன் வாணர் குலத்தவனாகமாட்டான் எனக் கொள்க.

60 மாந்தை: இது மரந்தை எனவும் வழங்கும். சேரர் நாட்டில் மேல் கடற்கரையில் உள்ள ஒரு துறைமுகப்பட்டினம். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர அரசன் இதனை அரச இருக்கையாகச் செய்து சேர நாட்டில் ஒரு பகுதியை ஆட்சி செலுத்தி வந்தான்.

61 மாறோகமண்டலம்: பாண்டியர் நாட்டில் கொற்கை நகரைச் சேர்ந்த கீழ்க் கடற்கரைக்கு மாறோகமண்டலம் என்று பெயர். ஓகமண்டலத்துக்கு மாறானது என்று பொருள். ஓக மண்டலம் என்பது துவாரகை நகரைச் சேர்ந்த மேல் கடற்கரைக்கு ஒரு பெயர். இரு மண்டலத்தாருக்கும் எப்போதும் விரோதமே

62. மாந்ரூகம்: மாரோக மண்டலத்தில் உள்ள ஒரு ஊர். மாரோகத்துக்கு நப்பசலையார் - மாரோகத்துக் காமக் கணி நப்பாலத்தனார் முதலியோர் இவ்வூரைச் சேர்ந்த கடைச் சங்கப் புலவர்கள்.

63. மிதியாச் செருப்பு: செருப்பு என்றால் மிதியடி என்று பொருள். இங்கு மிதியாச் செருப்பு என்றது சேரர் நாட்டில் உள்ள ஒரு மலை. மிதிக்கும் செருப்பு=மிதியடி; மிதியாச் செருப்பு=மலை.

இம் மலை நன்னனுடைய துளு நாட்டில் மேல்கடற்கரைப் பக்கம் உள்ளது. இதனை அடுத்துள்ள வளைகுடாவுக்குச் செருப் பாழி என்று பெயர். அதாவது, செருப்பு என்னும் மலையின் பக்கத்திலுள்ள ஆழி என்பது பொருள்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் கோசர் என்பவர் துளு நாட்டின் பேரில் படையெடுத்துச் சென்று, அப்போது அங்கு ஆண்டு கொண்டிருந்த முதலாம் நன்னனை வென்று, அவனைக் காட்டுக்குத் துரத்திவிட்டு, தாங்களே சின்னாள் அரசாண்டார்கள். அச்சமயம் கோசர் பெரும் படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு சோழ நாடு சென்று சோழனுடைய அரச இருக்கையை முற்றுகையிட, அப்போது சோழ நாட்டில் அரசு செலுத்திய இளஞ்சேட்சென்னி என்பவன் கோசருடன் பொருது அவர்களை வென்று, அவர்களைத் துளு நாடுவரை துரத்தி வந்து, செருப்பாழி என்னும் இடத்தில் நடந்த சண்டையில் வெற்றிபெற்றான். அத்துடன் கோசர் நாட்டைவிட்டு அகன்றார்கள். அது சமயம் காட்டில் வசித்து வந்த முதலாம் நன்னன் நாட்டுக்கு வந்து, சோழனுடைய உதவி பெற்று அரசாட்சியைக் கைப்பற்றினான். சோழன் தன் நாட்டுக்கு வெற்றியுடன் திரும்பினான். அதனால் அவனுக்குச் "செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி" என்ற பட்டம் கிடைத்தது.

64. முசிறி: சேரர் வஞ்சிமா நகரின் கடற்றுறைப்பட்டினம். கிரேக்கர் - உரோமர் - எருபகுதியர் - அராபியர் - பினீசியர் முதலிய மேல் நாட்டவர்கள் வந்து வியாபாரம் செய்ய இத்துறை முகத்தில் வசதிகள் இருந்தன. கி. பி. 822-ல் ஏற்பட்ட கடல் கோளால் முசிறியும்-பழைய கொலமும் இன்னும் சில ஊர்களும் அழிக்கப்பட்டன. அதன் பின், கி. பி. 825-ல் புதுக் கொல்லம் கட்டப்பட்டது அந்த ஆண்டிலிருந்து கொல்லம் ஆண்டு என்னும் சகம் துவக்கப்பெற்றது. மிளகு ஏற்றுமதியில் சிறந்து விளங்கியது இத் துறைமுகம். மிளகு என்னும் சொல் அந்நிய மொழியில் மிரிச்சி என்று வழங்கப்பட்டது.

சோழ நாட்டுக் கீழ்க்கடற்கரையிலும் முசிறி என்ற பட்டினம் இருந்தது. உள் நாட்டிலும் முசிறி என்ற ஊர் திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் உள்ளது. அது ஒரு தாலூகாவின் தலைநகர்.

65. வஞ்சி: சேர அரசர்களுடைய பழைமையான தலைநகர். முடிசூட்டிக்கொண்ட அரசன் இருந்து அரசியல் காரியங்களைப்பார்க்கும் இடம். வஞ்சிக்குக் கோல்லி நகர் என்ற பெயரும் உண்டு. வஞ்சி என்பது ஒருவிதக் கொடிக்கும், ஓடத்துக்கும் பெயர். வஞ்சிக் கொடிகளும், வஞ்சி என்ற ஓடங்களும் நிறைந்த ஊர் ஆனதால் சேரர் தலைநகர் வஞ்சி என்னப்பட்டது.

அரசரைச் சேர்ந்த உறைவின் முறையார்கள் மகோதைப் பட்டினத்தில் வசித்து வந்தார்கள். (மகோதை No. 57).

கொங்கு நாட்டில் உள்ள கருருக்கும் வஞ்சி என்ற பெயர் உண்டு. அங்கே வஞ்சியம்மன் என்ற காளி கோவில் ஒன்று உண்டு. அதனால் அவ்வூருக்கு அப்பெயர் எய்தியது.

66 வஞ்சன்: சேர முடி மன்னருக்கு அடங்கிய ஒரு குறுநில மன்னன். பாவலர் பாடும் பெருமை பெற்றவன். பரிசிலர்க்கு வேண்டிய வழங்குபவன். புலவர் திருத்தாமனார் (புலவர் எண் 221) இவனைப்பற்றிப் புறம் 398-ல்:

> "வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்சன்
> நகைவர் குறுகினல்லது பகைவர்க்குப்
> புலியின் மடிந்த கல்லளை போலத்
> துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்."

என்று அவனுடைய வீரம் - கொடை - குணம் முதலியனபற்றி விளக்கியுள்ளார். இவனுக்குச் சேர அரசர் "சேரமான்" என்ற பட்டமும் கொடுத்துள்ளார். இவன் சேரர் குடியைச் சேர்ந்தவன்.

67. வண்டன்: இவனும் சேர அரசர்களுக்கு நண்பனான ஒரு சிற்றரசன். "வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து வண்டன்" (பதிற் - 31) என்று இவனைப்பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் பாடியுள்ளார். இவனுக்குரிய வண்டமலை என்னும் குன்று கருருக்குத் தெற்கே உள்ளது. இவன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் காலத்தவன்.

68 வாகைப் பெருந்துறை: நன்னன் நாடாகிய துளு நாட்டில் உள்ள ஒரு கடற்றுறைப் பட்டினம். இங்கே நடந்த சண்டையில் கி. பி. 80-ல் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

இரண்டாம் நன்னனைக் கொன்று தனது நாட்டைச் சேர நாட்டோடு இணைத்து, கடம்பரைக் கப்பல் கட்டும்படி செய்தான்.

"பூழிநாட்டைப் படை யெடுத்துத் தழீஇ
உருள் பூங்கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவின் ஆற்றலை அறுத்தவன்."

என்னும் நான்காம் பத்துப் பதிகம் காண்க.

69. வில்லவன் கோதை: இவன் செங்குட்டுவனுடைய சேனாதிபதி. சேர குலத்தவர்க்குக் கோதையார் என்ற பெயர் உண்டு. முதலாம் சேரமான் பெருமாளுடைய இயற் பெயர் "மாக் கோதையார்" என்பது. சேரர் பரம்பரையில் "கோக் கோதைமார்பன் (புறம்: 49), 'குட்டுவன் கோதை' (புறம் 54) என்ற பெயர் உடையவர்களும் உண்டு. சேரர்க்கு இவன் தானைத் தலைவனும் நண்பனுமிருந்ததால் செங்குட்டுவன் இவனுக்குக் 'கோதை' என்ற பட்டமளித்தான் என ஏற்படுகிறது.

70. வல்லம்: இது சோழ நாட்டில் இரண்டாம் கரிகாலனால் சீர்திருத்தப்பட்ட ஊர். சோழருக்கு மகட்கொடைக்குரிய வேளிர்கள் வசிக்கும் ஊர். இது நாயக்க மன்னர்கள் காலத்தில் சில காலம் அரச இருக்கையாகவும் இருந்தது. வல்லம் கண்ணாடிகள் (Vallam Pebbles) இங்கே கிடைக்கும் கற்களிலிருந்து அறுத்து எடுக்கிறார்கள். மூக்குக் கண்ணாடிகள் செய்வதற்கு இவைகள் சிறந்தவை.

71. விழிஞம்: இது சேர நாட்டில் மேல் கடற்கரையில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். சேரர்களுடைய கப்பற்படைகள் தங்கியிருந்த பெரிய துறைமுகம். வியாபாரக் கப்பல்களும், யவனர் நாட்டுக் கப்பல்களும் தங்குவதற்கு வசதியானது. விழிஞத்தில் பல தடவை போர் நடந்துள்ளன. கி. பி. 834-லும் மூன்றாம் சேரமான் பெருமாளுக்கும் பாண்டியனுக்கும் போர் நடந்தது. மூன்றாம் சேரமான் பெருமாள் தோல்வியுற்றார்.

72. விளங்கில்: சேர நாட்டில் உள்ள ஓர் ஊர்.

# ச. "பெருமாள்" அட்டவணை

[சேர - சோழ - பாண்டிய - கொங்கு - துளு - வாண அரசர்களிலும் அவர்களைச் சேர்ந்தவர்களிலும் பெருமாள் ஆனவர்கள்]

| கேரள உற்பத்தி | | | கொச்சி சமஸ்தான ரிபோர்ட் | | | காலம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கி. பி. | கி. பி. |
| சேரமான் கேரளன் | | | கோயப் பெருமாள் | | | 216 | 225 |
| சோழ பெருமாள் | | | சோழ | ,, | | 225 | 236 |
| பாண்டி | ,, | | பாண்டி | ,, | | 236 | 245 |
| பூதராய | ,, | | வன்னம் | ,, | | 245 | 257 |
| கேரள | ,, | | | | | 257 | 269 |
| சேங்கால் | ,, | | | | | 269 | 281 |
| சோழிய | ,, | | | | | 281 | 293 |
| குலசேகர | ,, | II | | | | 293 | 305 |
| பாண | ,, | | | | | 305 | 317 |
| துலாபன் | ,, | | துளு | ,, | | 317 | 329 |
| இந்திரயன் | ,, | | இந்திரயன் | ,, | | 329 | 341 |
| ஆரிய | ,, | | ஆரிய | ,, | | 341 | 353 |
| கந்தன் | ,, | | கந்த | ,, | | 353 | 365 |
| குட்டி | ,, | | குட்டி | ,, | | 365 | 366 |
| மாடன் | ,, | | முண்ட | ,, | | 366 | 378 |
| எலி | ,, | | எலி | ,, | | 378 | 390 |
| கொம்பன் | ,, | | கொம்பன் | ,, | | 390 | 402 |
| விஜய | ,, | | விஜய | ,, | | 402 | 414 |
| வல்லப | ,, | | வல்லுவ | ,, | | 414 | 426 |
| அரிச்சந்திர | ,, | | அரிச்சந்திர | ,, | | 426 | 438 |
| மல்லன் | ,, | | மல்லன் | ,, | | 438 | 450 |
| குலசேகர | ,, | III | குலசேகர | ,, | III | 450 | 462 |
| அதிராஜன் | ,, | | | | | 765 | 777 |
| பாண்டி | ,, | | | | | 777 | 789 |
| சேரமான் | ,, | IV | சேரமான் | ,, | IV | 789 | 798 |

குறிப்பு: கி. பி. 462-ல் இருந்து கி. பி. 765 வரை 303 ஆண்டுகள் பெருமாள்கள் இல்லாமல் இருப்பதை அட்டவணையைப் பார்த்தால் தெரியும். கழறிற்றறிவார் என்ற முதலாம் சேர

மான் பெருமாள் பெயர் இந்த அட்டவணையில் இல்லை. அவர் கி. பி. 667-ல் பட்டத்துக்கு வந்ததும் "பெருமாள்" என்னும் பட்டம் வகித்துக் கொண்டார். ஆனால், அவர் நம்பூத்திரி குடும்பங்களுக்குத் தலைமை வகிக்க இணங்கவில்லை. சேரநாட்டு அரசு உரிமையையே திருத்தொண்டுக்கு இடையூறு என்று கருதினவர். நம்பூத்திரிகளுடைய கிராம ஆட்சியை ஏற்றுக் கொண்டு இருக்கமாட்டார். அதனால், அவர் பெயரை பெருமாள் அட்டவணையில் நம்பூத்திரிகள் சேர்க்கவில்லை. இந்த அட்டவணையில் கடைசியாகக் காட்டப்பட்டுள்ள சேரமான் பெருமான் என்பவர் நான்காம் குலசேகரர் என்கிற இரண்டாம் சேரமான் பெருமாள் ஆவர். இவர் வைணவ மதத்தை மேற்கொண்டர். குலசேகர ஆழ்வார் என்னும் பட்டம் தரித்தவர். பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர்.

# ரு. மேல்வாய் இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| ஒன்று | ஒரு இலக்கம் | | 1 |
| பத்து | 2 | ,, | 10 |
| நூறு | 3 | ,, | 100 |
| ஆயிரம் | 4 | ,, | 1,000 |
| பத்தாயிரம் | 5 | ,, | 10,000 |
| நூறாயிரம்(இலக்கம்) | 6 | ,, | 100,000 |
| பத்து நூறாயிரம்<br>அல்லது<br>பத்து இலக்கம் | 7 | ,, | 1,000,000 |
| கோடி | 8 | ,, | 10,000,000 |
| பத்து கோடி | 9 | ,, | 100,000,000 |
| நூறு கோடி | 10 | ,, | 1,000,000,000 |
| ஆயிரங்கோடி | 11 | ,, | 10,000,000,000 |
| பதினாயிரங்கோடி | 12 | ,, | 100,000,000,000 |
| நூறாயிரங்கோடி<br>அல்லது<br>இலக்கங்கோடி | 13 | ,, | 1,000,000,000,000 |
| பத்து நூறாயிரங்<br>கோடி அல்லது<br>பத்துஇலக்கங்கோடி | 14 | ,, | 10,000,000,000,000 |
| கோடிகோடி<br>அல்லது சங்கம் | 15 | ,, | 100,000,000,000,000 |
| கோடி எண்மடங்கு<br>விந்தம் அல்லது<br>சங்கம் எண்மடங்கு | 22 | ,, | 1,000,000,000,000,000,000,<br>000 |
| குமுதம் அல்லது<br>ஆம்பல்<br>விந்தம் எண்மடங்கு | 29 | ,, | 10,000,000,000,000,000,000,<br>000,000,000 |
| கமலம் அல்லது<br>பதுமம்<br>குமுதம் எண்மடங்கு | 36 | ,, | 100,000,000,000,000,000,<br>000,000,000,000,000,000 |
| நாடு அல்லது<br>குவளை<br>கமலம் எண்மடங்கு | 43 | ,, | 1,000,000,000,000,000,000,<br>000,000,000,000,000,000,<br>000,000 |
| நெய்தல் அல்லது<br>சமுத்திரம்<br>குவளை எண்மடங்கு | 50 | ,, | 10,000,000,000,000,000,000,<br>000,000,000,000,000.000,<br>000,000,000,000 |

| | | | |
|---|---|---|---|
| வெள்ளம் நெய்தல் எண்மடங்கு | 57 | ” | 100,000,000,000,000,000,<br>000,000,000,000,000,<br>000,000,000,000,000,<br>000,000,000 |

இதனை,

"நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும்,
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய"

என்னும் பரிபாடலில் காண்க.

# கா. சகங்கள்

| பெயர் | தொடக்கம் | 1950 |
|---|---|---|
| | கி. மு. | |
| படைப்பு சகம் | 195,58,85,052 | 195,58,85,052 |
| மானவ சகம் | 1,86,16,841 | 1,86,18,791 |
| ஹீப்ரு சகம் | 3131 | 5081—82 |
| கலியுகம் | 3102 | 5052—53 |
| பாண்டவ சகம் | 3102 | 5052—53 |
| உதிஷ்டிரர் சகம் | 3100 | 5050—51 |
| ஈசான சகம் | 641 | 2591—92 |
| புத்தநிர்வாணம் | 493 | 2443—44 |
| நேபாள சம்பத்து சகம் | 57 | 2007— 8 |
| விக்கிரம சகம் | 56 | 2006— 7 |
| | கி. பி. | |
| கிறித்துவ சகம் | 1 | 1950 |
| திருவள்ளுவர் சகம் | 36 | 1914— 5 |
| சாலிவாகன சகம் | 78 | 1871— 3 |
| சேதி சகம் | 248 | 1702— 3 |
| வாலாபி குப்த சகம் | 320 | 1630— 1 |
| திரிகூட சகம் | 550 | 1400— 1 |
| மகமது சகம் | 580 | 1370— 1 |
| பசலி | 591 | 1359—60 |
| சிரீஅர்ஷ சகம் | 606 | 1344— 5 |
| இஜ்ரி | 622 | 1328— 9 |
| கொல்லம் ஆண்டு | 825 | 1125— 6 |
| சளுக்கிய விக்கிரமாதித்ய சகம் | 1076 | 874— 5 |
| மெய்கண்டான் ஆண்டு | 1222 | 728— 9 |
| வைப்பின் சகம் (கொச்சி) | 1341 | 609—10 |
| சிவஞான முனிவர் சகம் | 1782 | 168— 9 |
| காந்தியன் சகம் | 1947 | 3— 4 |

# ஏ. காலமுறைப்படி அரச மரபுகள்

| பெயர் | தலைநகர் | காலம் | |
|---|---|---|---|
| சேரர் கிளை ௧. முதல் ௨. | வஞ்சி | கி.மு. 30000 — | கி.பி. 834 |
| சோழர் கிளை ௧. முதல் ௪. | உறந்தை | ,, — | கி.பி. 1394 |
| பாண்டியர் கிளை ௧. முதல் ௭. | மதுரை | ,, — | கி.பி. 1748 |
| சிசுநாகர் | மகதம் | கி.மு. 600 — | கி.மு. 360 |
| நந்தர் | ,, | 360 — | 321 |
| மவுரியர் | பாடலிபுரம் | 321 — | 184 |
| கடம்பர் (கதம்பர்) | வனவாசி | கி.மு. 300 — | கி.பி. 1336 |
| சாதவாகனர் | திருகாகுளம் | கி.மு. 220 — | கி.பி. 236 |
| சுங்கர் | பாடலிபுரம் | கி.மு. 184 — | கி.மு. 72 |
| சேதி | கலிங்கம் | 183 — | 165 |
| கண்ணுவர் | பாடலிபுரம் | 72 — | 27 |
| கொங்கு மராட்டியர் | கார்தபுரம் | கி.மு. 27 — | கி.பி. 189 |
| கொங்கு—கங்கர் | தலக்காடு | கி.பி. 189 — | கி.பி. 800 |
| பல்லவர் கிளை ௧. முதல் ௨. | காஞ்சி | 225 — | 910 |
| குப்தர் கிளை ௧. முதல் ௨. | மகதம் | 250 — | 727 |
| வாகடகர் | ,, | 300 — | 550 |
| சளுக்கியர் | வாதாபி | 500 — | 973 |
| சளுக்கியர் | கல்யாணி | 973 — | 1190 |
| சளுக்கியர் | வேங்கி | 651 — | 1070 |
| காலசூரியர் | மாளவம் | 550 — | 620 |
| காலசூரியர் (ஹேஹயர்) | கல்யாணி | 1128 — | 1183 |

| | | | |
|---|---|---|---|
| இராட்டிரகூடர் | மேல்காடு | 570 | — 973 |
| உயுத்தவம்சம் | | 728 | — 810 |
| பரிகரர் | பிம்மல் | 810 | — 1070 |
| கொங்கு—சோழர் | கோயமுத்தூர் | 880 | — 1069 |
| ஒய்சளர் | பேளூர் | 1000 | — 1339 |
| காகதீயர் | | 1000 | — 1424 |
| கொங்கு—வல்லாளர் | | 1069 | — 1313 |
| யாதவர்—தேவகிரி | தேவகிரி | 1187 | — 1318 |
| கொங்கு—அரிகரவம்சம் | | 1313 | — 1463 |
| விஜயநகர அரசர்கள் | விஜயநகர் | 1336 | — 1565 |
| மைசூர் உடையார் | மதுரை | 1399 | — 1948 |
| கொங்கு—நரசிம்மவம்சம் | | 1463 | — 1565 |
| மதுரை நாய்க்கர் வம்சம் | மைசூர் | 1559 | — 1736 |

குறிப்பு: மேலே கூறப்பட்ட பரம்பரைகளின் விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளன. ஆண்டுக் கண்டுகொள்க.

# அ. காலவரிசைப் பொருள் அட்டவணை

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| கி.மு. | கி.மு. | | |
| 30000-க்கு முன் | | சேரன் இமயவரம்பன் என்ற வானவரம்பன் | |
| ,, | ,, | சூரியச் சோழன் | |
| ,, | ,, | மதியன் என்ற சந்திரபாண்டியன் | |
| 30000 — | 29920 | நெடியோன் என்ற மாகீர்த்தி என்ற ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற முதலாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் | |
| 30000 — | 16500 | பஃறுளியாற்றுத் தென்மதுரைத் தமிழ்ச்சங்கம் | |
| 16500 — | 16000 | தமிழ்நாட்டில் நிருதர் ஆட்சி | நிருதர் |
| 16000 | | முப்புரநிருதர் காலத்துப் பொதியமலை அகத்தியர் என்ற குறுமுனி | |
| 16000 | | தமிழ் நாட்டில் முதல் தடவை ஒளியர் ஆட்சி | ஒளியர் |
| 16000 | | பொதியமலைத் தமிழ்ச் சங்கம் | |
| 16000 — | 14550 | மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கம் | |
| 14550 — | 14490 | மணிமலைத் தமிழ்ச் சங்கம் | |
| 14550 | | பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர் அகத்தியர் | |
| 14490 — | 14058 | தமிழ்நாட்டில் மங்கோலியர் ஆட்சி | மங்கோ |
| 14100 — | 14050 | முசுகுந்தச் சோழன் | |
| 14050 — | 14000 | செந்தீநிறத்தன் | |
| 14058 | | தமிழ்நாட்டில் முதல் கடல்கோள்; (முதலூழி) | |
| 14058 | | வாதாபி அகத்தியர் | |
| 14058 — | 14004 | தமிழ்நாட்டில் இரண்டாம் தடவை ஒளியர் ஆட்சி | ஒளியர் |
| 14058 — | 14004 | குன்றமெறிந்த குமரவேள் தமிழ்ச் சங்கம் | |
| 14050 — | 14000 | அக்கினி வருணன்—முசுகுந்தன் | |
| 14004 — | 9564 | தலைச்சங்கம் | |
| 14004 | | காய்சின வழுதி என்ற இரண்டாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் | பாண் |

| காலம் | பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 9564 | தமிழ்நாட்டில் இரண்டாம் கடல்கோள்; (இரண்டாம் ஊழி) | |
| 9564 | பாண்டியன் முதலாம் கடுங்கோன் | |
| 9560 | தமிழ்நாட்டின் பேரில் அமெரிக்க சிவப்பு இந்தியர் படை எடுப்பு | சி. இ. |
| 9560 — 3105 | தமிழ்நாட்டில் பல பகுதிகளில் சிவப்பு இந்தியர் ஆட்சி | |
| 9000 | தமிழ்நாட்டிற்குள் காகேசியாவில் இருந்து ஆரியர் நுழைவு | ஆரியர் |
| 9000 | ஆரிய இருக்குவேத காலத்துச் சேரன் | |
| 8000 | உலோபாமுத்திரை அகத்தியர் I | |
| ,, | மைத்திராவருண அகத்தியர் | |
| ,, | மாணிய அகத்தியர் | |
| ,, | பிரமன்—ஊர்வசி கும்ப அகத்தியர் | |
| ,, | புலத்தியர்—ஆவிர்ப்பூ அகத்தியர் | |
| ,, | கந்தருவர்—ஊர்வசி அகத்தியர் | |
| 7700 | சி. பி. எ. செம்பியன் | |
| 7500 | பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பரமேச்சுரபாண்டியன் | பாண் |
| 7500 — 6900 | பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி காலத்துத் தமிழ்ச்சங்கம் | |
| 7500 | ஆரியாவர்த்தத்து எழு இருடிகளில் ஒருவராகிய அகத்தியர் | |
| 7500 | சிங்கவன்மன் | |
| ,, | முதுகுடுமி காலத்துப் புரோகித அகத்தியர் I | |
| 6805 — 3105 | இடைச்சங்கம் | |
| 6805 — 6730 | வெண்டேர்ச் செழியன் என்ற தேர் மாறன் பாண்டியன் | பாண் |
| 6200 | தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் | |
| ,, | தொடித்தோள் செம்பியன் காலத்து அகத்தியர் | |
| 6040 — 6000 | இராமாயண காலத்துச் சேரன் (சேரலன்—வானவன்) | |
| 6020 | சோழன் காந்தமன் என்ற காந்தன் | |
| ,, | குடகுமலை அகத்தியர் என்ற குடமுனி | |

| காலம் | பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 6010 | விதர்ப்பநாட்டு உலோபாமுத்திரை அகத்தியர் II | |
| 6000 — 5925 | அனந்தகுண பாண்டியன் என்ற மூன்றாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் | பாண் |
| 6000 | இராம இராவணர் போர் | |
| ,, | ககந்தன் | |
| ,, | இராமாயண காலத்துக் கோசல நாட்டு அகத்தியர் | |
| ,, | ,, பஞ்சவடி அகத்தியர் | |
| ,, | ,, மலையமலை அகத்தியர் | |
| ,, | ,, குஞ்சரகிரி அகத்தியர் | |
| ,, | ,, புரோகித அகத்தியர் II | |
| ,, | ,, ககந்தன் (illegitimate) S/o காந்தமன் சோழன்) | |
| ,, | ,, சேரன் | |
| 6000 — 100 | சுந்தரநாதர் என்ற திருமூலர் | |
| 3544 | கடல்கோள் (as per Bede) | |
| 3475 | கடல்கோள் (as per clement Alexandarinus) | |
| 3160 — 3105 | முதலாம் முடத்திருமாற பாண்டியன் | |
| 3153 | கடல்கோள் (as per Hales) | |
| 3145 — 3105 | பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் (வானவரம்பன்) | |
| 3131 | எபிரேய சகம் ஆரம்பம் | |
| 3110 | பாரதகாலத்துக் குஞ்சரகிரி அகத்தியர் II | |
| 3105 | பாரதப்போர் | |
| ,, | இடைச் சங்கமும் கபாடபுரமும் துவாரகைக் கண்ணனால் அழிக்கப் பட்டன. | |
| ,, | பப்புருவாகனன் என்ற சாகரத் துவச பாண்டியன் | |
| 3102 | கலியுகப் பிறப்பு | |
| ,, | பாண்டவ சகம் | |
| 3100 | உதிட்டிர சகம் | |
| ,, | துவராபதி அகத்தியர் | |
| 2700 — 2650 | மநுநீதிகண்ட சோழன் VI | |
| 2650 — 2600 | பிரியவிருத்தன், வராமதேவன், வீதிவிடங்கன் | |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 2600 — | 2560 | குளக்கோட்டன் | |
| 2450 | | கடல்கோள் (as per Euribias) | |
| 2387 | | ,, (as per Ceylon History) | |
| 2349 | | ,, (as per Ursher) | |
| 2344 | | ,, (as per Old Testamant) | |
| 2300 | | ,, (ஆரியர் சதபதப் பிராமணத்தின்படி) | |
| 2105 | | ,, (as per Hebrew History) | |
| 2000 | | ,, (as per Babylonian History) | |
| ,, | | யசோமதி அகத்தியர் | |
| 1915 — | 1715 | திருப்பரங் குன்றத்துத் தென் மதுரை தமிழ்ச்சங்கம் | |
| 1915 — | 1855 | இரண்டாம் முடத்திருமாறன் | |
| 1900 | | திருப்பரங்குன்றத்துத் தமிழ்ச் சங்கத்து புரோகித அகத்தியர் III | |
| 1730 — | 1695 | மூன்றும் முடத்திருமாறன் | |
| 1715 | | கடல்கோள் (களவியல் உரை) | |
| கி.மு. | கி.பி. | | |
| 1715 — | 235 | கடைச் சங்கம் | |
| கி.மு. | கி.மு. | | |
| 1300 | | சோழன் வரராமதேவன் (as per "Hindu" Dated. 4—11—51) | |
| 641 | | ஈசான சகம் ஆரம்பம் | |
| 600 — | 596 | சிசுநாகன் | சிசு |
| 599 — | 527 | வர்த்தமான மகாவீரர் | |
| 573 — | 493 | *கௌதம புத்தர் | |

---

* கௌதம புத்தர் காலத்தைக் குறித்து ஆராய்ச்சியாளர் பலவிதமாகக் கூறுகிறார்கள். அவை வருமாறு :

(Vide page 40—தமிழ் வரலாறு by R. R. Iyyangar.)

| | கி.மு. | கி.மு. | |
|---|---|---|---|
| (1) | 623 — | 543 | as per R. R. |
| (2) | 563 — | 483 | |
| (3) | 567 — | 487 | Vinsent Smith |
| (4) | 562 — | 482 | Dr. Fleet |
| (5) | 560 — | 480 | Prof. Mc Dowell |
| (6) | 590 — | 477 | Dr. Keerale and Mrs. Duff |
| (7) | 492 — | 412 | Dr. Rhys David |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 519 — | 491 | பிம்பிசாரன் | சிசு |
| 493 | | புத்தநிர்வாணம் | ,, |
| 491 — | 460 | அஜாதசத்துரு | சிசு |
| 487 — | | முதலாவது பௌத்தசங்கம் | பாட்ளு |
| 460 — | 450 | அர்ஷா | சிசு |
| 450 — | 435 | உதயன் | ,, |
| 435 — | 400 | முண்ட அனுருத்த | ,, |
| 400 — | 375 | நந்திவர்த்தனன் | ,, |
| 387 — | | இரண்டாவது பௌத்த சங்கம் | வைசாலி |
| 375 — | 360 | மகாநந்தன் | சிசு |
| 360 — | 335 | நந்தன் | நந்த |
| 357 — | 323 | மகா அலெக்சாந்தர் | கிரீக் |
| 335 — | 321 | மகா பத்மநந்தன் | நந்த |
| 321 — | 297 | சந்திரகுப்தன் | மவு |
| 310 | | சமணர் வடநாட்டிலிருந்து மைசூர் வந்தது. | |
| 300 — | 260 | முதலாம் நன்னன் | கடம் |
| 297 — | 272 | பிந்துசாரன் | மவு |
| 290 — | 270 | செருப்பாழி எறிந்த இளம்சேட் சென்னி I | |
| 274 | | போதலகிரி அகத்தியர் | |
| 272 — | 232 | அசோகன் | மவு |
| 270 — | 220 | அசோகன் காலத்துச் சோழன் | |
| 260 — | 232 | கூந்தலம் வனவாசிக் கடம்பன் | |
| 244 — | | மூன்றும் பௌத்தசங்கம் (ஈனயானம்) அசோகனுல் கூட்டப்பட்டது. | |
| 232 — | 224 | குணலன் | மவு |
| 224 — | 216 | பந்துபாலிதன் | மவு |
| 220 — | 180 | பந்துபாலிதன் காலத்துச் சோழன் | |
| 220 — | 190 | சிமுகன் (சாத) | ஆந்திர |
| 216 — | 209 | இந்திரபாலிதன் | மவு |
| 209 — | 207 | தசரதன் என்ற தசோதனன் | ,, |
| 207 — | 204 | சம்பிரதி | ,, |
| 204 — | 202 | சாலிசுகன் | ,, |
| 202 — | 198 | தேவவர்மன் | ,, |
| 198 — | 191 | சாததன்வன் | ,, |
| 191 — | 184 | பிரகத்ரதன் | ,, |
| 190 — | 180 | கிருஷ்ணன் என்ற கண்ணன் | சாத |
| 190 — | 165 | முக்கட்கடம்பன் என்ற திரிலோசனன் | கடம் |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 184 — | 148 | புஷ்யமித்திரன் | சுங் |
| 183 — | 165 | காரவேலு | சேதி |
| 180 — | 170 | ஸ்ரீசதகர்ணி I | சாத |
| 180 — | 160 | சோழன் ஏலேலஸிங்கன் (இலங்கை) காலத்தவர் | |
| 170 — | 167 | முதலாம் சதகர்ணியின் மகன் | சாத |
| 170 — | 120 | காரவேலுகாலத்து சாதவாகனன் | ” |
| 167 — | 165 | சாதவாகன் II | ” |
| 165 — | 163 | கௌதமிபுத்திர சதகர்ணி II | ” |
| 163 | | புலுமாயி | ” |
| 160 — | 120 | இலங்கை துட்டகமுனு காலத்துச் சோழன் | |
| 148 — | 140 | அக்கினிமித்திரன் | சுங் |
| 140 — | 133 | வாசு | ” |
| 133 — | 123 | வசுமித்திரன் | ” |
| 130 — | 100 | பாண்டியன் நம்பி நெடுஞ்செழியன் I | |
| 123 — | 121 | ஓட்ரகா என்ற பத்ரகா | ” |
| 120 — | 90 | முதலாம் கரிகாலன் | சோழ |
| 114 — | 82 | பகவத | சுங் |
| 100 — | 80 | சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் | சேர |
| 100 | | திலோத்தமை அகத்தியர் | |
| 100 | | முதலாம் வெண்ணிப் போர் (முதலாம் கரிகாற் சோழனுக்கும் சேரமான் பெருஞ்சேரலாதன் என்ற பெருந்தோள் ஆதனுக்கும் நடந்தது) | |
| 100 — | 45 | பழையன் மாறன் பாண்டியன் I | |
| 90 — | 80 | முதலாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி என்ற பெருநற்கிள்ளி | சோழ |
| 82 — | 72 | தேவபூதி | சுங் |
| 80 — | 75 | சேட்சென்னி | |
| 80 — | 50 | உருவப்பஃறேர் இளம்சேட்சென்னி | |
| 80 — | 30 | சேரமான் இளங்குட்டுவன் | சேர |
| 80 | | பெருந்துறைப் போர். [இது இரண்டாம் நன்னனுக்கும் (கடம்) களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரனுக்கும் (சேர) நடந்தது] | |
| 80 | | முதலாம் போர்ப்புறம் சண்டை (இது சேரமான் குடக்கோ நெடுஞ் | |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| | | சேரலாதனுக்கும் சோழன் முதலாம் வேற்பஃறடக்கை பெருவிறற் கிள்ளிக்கும் நடந்தது.) | |
| 80 — | 75 | முதலாம் சேட்சென்னி | சோழ |
| 80 — | 50 | உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி II | சோழ |
| 75 — | 50 | செங்கோற் சோழன் என்ற சுபதேவன் | சோழ |
| 72 — | 64 | வாசுதேவன் | கண் |
| 70 — | 34 | சேரலாதன் | |
| 64 — | 50 | பூமிமித்திரன் | கண் |
| 60 — | 35 | கணைக்கால் இரும்பொறை | சேர |
| 57 | | நேபாள சம்பத்து சகம் | |
| 56 | | விக்கிரம சகம் | |
| கி.மு. | கி.பி. | | |
| 50 — | 37 | இரண்டாம் கரிகாலன் | சோழ |
| கி.மு. | கி.மு. | | |
| 50 — | 38 | நாராயணன் | கண் |
| கி.மு. | கி.பி. | | |
| 50 — | 30 | கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி என்ற கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி | பாண் |
| 50 — | 25 | முதலாம் செங்கணான் என்ற கோச் செங்கட் சோழன் | சோழ |
| 48 | | குணவாயிற் கோட்டப்போர். (இது கணைக்கால் இரும்பொறைக்கும் முதலாம் செங்கணானுக்கும் நடந்தது) | |
| 45 | | இரண்டாம் வெண்ணிப் போர். (இது சோழன் முதலாம் செங்கணானுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் நடந்தது) | |
| கி.மு. | கி.மு. | | |
| 45 — | 34 | பாண்டியன் பழையன்மாறன் II | |
| 40 | | கழுமலம் சண்டை. (இது சோழன் முதலாம் செங்கணானுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் நடந்தது. | |
| 38 — | 27 | சுசுராமன் என்ற சுசர்மன் | கண் |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 34 | | மூன்றாம் வெண்ணிப் போர். (இது சோழன் இரண்டாம் கரிகாலனுக்கும் சேரலாதன் பழையன்மாறன் II (பாண்) க்கும் நடந்தது.) | |
| 35 | | இரண்டாம் போர்ப்புறம் சண்டை. (இது சோழன் செங்கணான் I-க்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் நடந்தது.) | |
| 31 | | திருவள்ளுவர் சகம் | |
| கி.மு. | கி.பி. | | |
| 27 — | 23 | வீரராய சக்கிரவர்த்தி | கொ-ரா |
| 27 | | சாதவாகனன் III | |
| கி.பி. | கி.பி. | | |
| 1 | | இயேசு கிறிஸ்து இறந்தது | |
| 12 — | 42 | உதியன் சேரல் ஆதன் | சேர |
| 23 — | 79 | உரோமன் பிளினி | |
| 23 — | 45 | கோவிந்தராயர் I | கொ-ரா |
| 25 — | 30 | நல்லிடிக்கோன் I | சோழ |
| 25 — | 100 | முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி | சோழ |
| 30 — | 32 | கருவூர் ஏறிய ஒள்வாள் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற ஆட்டன் அத்தி | சேர |
| 32 — | 90 | அந்துவன் சேரல் இரும்பொறை II | சேர |
| 37 — | 95 | குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன் | சோழ |
| 37 — | 100 | வேற்பஃறடக்கை பெருவிறற் கிள்ளி II | சோழ |
| 42 — | 100 | இமயவரம்பன் பெருஞ்சேரலாதன் | சேர |
| 45 — | 67 | கிருஷ்ணராயர் | கொ-ரா |
| 46 — | 80 | கடம்ப நன்னன் II | கட |
| 47 | | Greak Sailor Hippoles discovered the S. W. Monsoon | |
| 47 — | 72 | பல்யானை செல்கெழு குட்டுவன் | சேர |
| 55 — | 75 | கீரஞ்சாத்தன் என்ற குதிரைச் சாக்கையன் | பாண் |
| 67 — | 82 | காலவல்லபராயர் | கொ-ரா |
| 72 — | 97 | களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் | சேர |
| 72 — | 130 | சேரமான் குட்டுவன் கோதை | சேர |
| 75 — | 100 | வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி | பாண் |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 78 | | சாலிவாகன சகம் | |
| 80 — | 110 | நார்முடிச்சேரல் காலத்துக் கடம்பன் | கட |
| 80 — | 118 | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | சேர |
| 80 | | வாகைப் பெருந்துறைச் சண்டை (Between Nannan and Narmudi Cheral) | |
| 82 — | 104 | கோவிந்தராயர் II | கொ-ரா |
| 85 — | 160 | இளங்கோ அடிகள் | சேர |
| 90 — | 132 | சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை | சேர |
| 90 — | 115 | செல்வக் கடுங்கோ வாழி ஆதன் | சேர |
| 95 — | 145 | காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி | சோழ |
| 100 | | திருப்போர்ப்புறம் சண்டை II (Between Himaya Varmban and Vel-Pahradakai Peruviratkille II Both Perished) | |
| 100 — | 105 | இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் | பாண் |
| 100 — | 145 | குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் | சோழ |
| 100 — | 110 | தித்தன் என்ற மாவெண் தித்தன் | சோழ |
| 100 — | 155 | சேரன் செங்குட்டுவன் | சேர |
| 100 — | 150 | கோப்பெருஞ்சோழன் எ தேர்வண் கிள்ளி | சோழ |
| 104 — | 158 | சதுர்புஜ கன்னரதேவ சக்கரவர்த்தி | கொ-ரா |
| 105 — | 110 | கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி | பாண் |
| 110 — | 119 | பாண்டியன் அறிவுடை நம்பி | பாண் |
| 110 — | 120 | போர் அவைக்கோ பெருநற்கிள்ளி | சோழ |
| 110 — | 135 | செங்குட்டுவன் காலத்துக் கடம்பன் | கட |
| 110 — | 150 | இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி | சோழ |
| 115 — | 132 | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | சேர |
| 115 | | சிக்கரப்பள்ளிச் சண்டை | |
| 119 — | 144 | ஆரியப் படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் II | பாண் |
| 120 — | 130 | தித்தன் வெளியன் எ வீரை வெளியன் | சோழ |
| 132 — | 148 | இளம்சேரல் இரும்பொறை | சேர |
| 135 — | 155 | இளம்சேரல் காலத்துக் கடம்பன் | கட |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 140 | | நான்காவது பௌத்த சங்கம் (மஹாயானம்) சிரீ நகரில் கனிஷ்க அரசனால் கூட்டப்பட்டது. | |
| 144 | | கோவலர் கொலையுண்டது; கண்ணகி தன் கணவன் கள்வன் அல்ல என்று சிலம்பை ஒடித்து நிரூபித்தது; நெடுஞ்செழியன் II அரசுக் கட்டிலில் துஞ்சியது; பாண்டியன் மனைவி உயிர் நீங்கியது; மதுரை எரியுண்டது. | |
| 144 — | 174 | சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் எ வெற்றிவேற் செழியன் | பாண் |
| 145 | | காரியாற்றுச் சண்டை (Between Nedunkilli and Nalankilli) | |
| 145 | | நேரிவாயில் சண்டை (Between Senguttuvan and 9 Colas); உதயகுமரன் சோழன் புகாரில் ஒரு விஞ்சையனால் கொல்லப்பட்டான். | |
| 145 — | 185 | ஆதொண்டன் | சோழ |
| 145 — | 198 | இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி | சோழ |
| 148 — | 198 | யானைக்கட்சேய் மாந்தரம்சேரல் இரும்பொறை | சேர |
| 148 — | 170 | இலங்கைக் கயவாகு | |
| 149 | | கண்ணகி கோவில் நிர்மாணம் (By Senguttuvan) கயவாகு வஞ்சி வந்தது | |
| 150 | | மணிமேகலை காஞ்சி சென்றது; கிள்ளி வளவனும் நலங்கிள்ளியும் மணிமேகலையைச் சந்தித்தது. | |
| 150 — | 175 | கோக்கிள்ளி I | சோழ |
| 155 — | 218 | குட்டுவன் சேரல் எ சேரமான் மாவெண்கோ | சேர |
| 158 — | 189 | திரிவிக்கிரமதேவ சக்கரவர்த்தி | கொ-ரா |
| 174 — | 204 | தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் III | பாண் |
| 182 — | 230 | வாட்டாற்று எழினி ஆதன் | சேர |
| 185 — | 210 | தொண்டைமான் இளந்திரையன் | சோழ |
| 189 — | 240 | கொங்களிவர்மா I | கொ-ரா |
| 204 — | 235 | உக்கிரப் பெருவழுதி II | பாண் |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 215 — | 225 | பாமுளூர் எறிந்த இளம்சேட் சென்னி III | சோழ |
| 216 — | 225 | சேரமான் கேரளன் எ கோயப் பெருமாள் | சேர |
| 225 — | 236 | சோழப் பெருமாள் | சோழ |
| 225 — | 250 | சோழன் நல் உருத்திரன் | சோழ |
| 225 — | 250 | பப்பசாமி | பல் |
| 235 — | 265 | வரகுணபாண்டியன் I | பாண் |
| 236 — | 245 | பாண்டிப் பெருமாள் | பாண் |
| 240 — | 288 | மாதவா I | கொ-க |
| 245 — | 257 | பூதராய பெருமாள் | பெரு |
| 248 | | சேதி சகம் | |
| 250 — | 275 | சிவ-கந்தவர்மன் I | பல் |
| 250 — | 270 | சிரீ-குப்தா | குப் |
| 257 — | 269 | குலசேகரப் பெருமாள் I | சேர |
| 265 — | 310 | அரிமர்த்தன பாண்டியன் | பாண் |
| 269 — | 281 | சேங்கால் எ வீரராகவப் பெருமாள் | சேர |
| 270 — | 300 | கடோற்கசன் I | குப் |
| 275 — | 300 | புத்தவர்மன் I | பல் |
| 281 — | 293 | சோழியப் பெருமாள் | பெரு |
| 288 — | 321 | அரிவர்மா | கொ-க |
| 293 — | 305 | குலசேகரப் பெருமாள் II | சேர |
| 300 — | 320 | விந்தியசத்தி | வாக |
| 300 — | 325 | புத்தியங்காரன் | பல் |
| 300 — | 325 | சந்திரகுப்தன் I | குப் |
| 305 — | 350 | மாந்தரன் சேர அரசன் | சேர |
| 305 — | 317 | பாணப்பெருமாள் | பெரு |
| 310 — | 340 | வரகுண பாண்டியன் II | பாண் |
| 317 — | 329 | துலாபன் பெருமாள் | பெரு |
| 320 | | குப்தசகம் | |
| 320 — | 340 | பிரவரசேனன் I | வாக |
| 320 — | 350 | மாந்தரம் சேர அரசன் | சேர |
| 321 — | 391 | விஷ்ணுகோபன் | கொ-க |
| 325 — | 350 | விஷ்ணுகோபன் I | பல் |
| 325 — | 375 | சமுத்திரகுப்தன் | குப் |
| 329 — | 341 | இந்திரயன் பெருமாள் | பெரு |
| 340 — | 520 | பாண்டி நாட்டில் களப்பிரர் ஆட்சி | |
| 340 — | 350 | அச்சுத விக்கிந்தன் எ விக்கிரந்தன் | களப் |
| 340 — | 355 | உருத்திரசேனன் I | வாக |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 341 — | 353 | ஆரியன் பெருமாள் | பெரு |
| 350 — | 385 | பாஸ்கர இரவிவர்மன் I | சேர |
| 350 — | 375 | கந்தவர்மன் II | பல் |
| 350 — | 375 | மயூரவர்மன் | கட |
| 353 — | 365 | நந்தன் பெருமாள் | பெரு |
| 355 — | 380 | பிருதிவிசேனன் I | வாக |
| 365 — | 366 | குட்டிப் பெருமாள் | பெரு |
| 366 — | 378 | மாதன்பெருமாள் | பெரு |
| 375 — | 380 | இராமகுப்தா | குப் |
| 375 — | 440 | காளிதாசன் (வடமொழிக் கவி) | |
| 375 — | 400 | கங்கவர்மன் எ சந்திரகாந்தன் | கட |
| 375 — | 400 | காலபாரதி எ குமாரவிஷ்ணு I | பல் |
| 378 — | 390 | எலிபெருமாள் | பெரு |
| 380 — | 401 | உருத்திரசேனன் II | வாக |
| 380 — | 414 | சந்திரகுப்தன் II | குப் |
| 390 — | 402 | கொம்பன் பெருமாள் | பெரு |
| 391 — | 424 | மாதவர்மா II | கொ-க |
| 400 — | 413 | திவாகரசேனன் | வாக |
| 400 — | 425 | பாகீரதவர்மன் | கட |
| 400 — | 425 | புத்தவர்மன் II | பல் |
| 402 — | 414 | விசயன் பெருமாள் | பெரு |
| 413 — | 440 | பிரவரசேனன் II | வாக |
| 414 — | 426 | வல்லபன் பெருமாள் | பெரு |
| 414 — | 455 | குமார குப்தா I | குப் |
| 424 — | 425 | திண்டிக்காரராயர் | கொ-க |
| 425 — | 450 | காகுத்தவர்மன் | கட |
| 425 — | 450 | குமார விஷ்ணு II | பல் |
| 425 — | 478 | கொங்கணி வர்மா | கொ-க |
| 426 — | 438 | அரிச்சந்திரன் பெருமாள் | பெரு |
| 438 — | 450 | மல்லன் பெருமாள் | பெரு |
| 440 — | 460 | நரேந்திர சேனன் | வாக |
| 450 — | 462 | குலசேகரப் பெருமாள் III | சேர |
| 450 — | 480 | கோவிந்த குப்தா எ கிருஷ்ண குப்தா | குப் |
| 450 — | 475 | சந்திரவர்மன் | கட |
| 450 — | 475 | விஜயகந்தவர்மன் IV எ கந்தசிஷ்யன் | பல் |
| 450 — | 500 | கோச்செங்கணன் II | சோழ |
| 455 — | 468 | கந்த குப்தா | குப் |
| 460 — | 479 | பிருதிவிசேனன் II | வாக |
| 468 — | 469 | பூரகுப்தா | குப் |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 469 — | 472 | நரசிம்ம குப்தா | குப் |
| 472 — | 476 | குமார குப்தா II | குப் |
| 475 — | 500 | மிருகேசவர்மன் | கட |
| 475 — | 500 | சிம்மவர்மன் I | பல் |
| 476 — | 495 | பூதகுப்தா | குப் |
| 478 — | 513 | அவனித எ துவநீதன் | கொ-க |
| 480 — | 505 | அர்ஷ குப்தா | குப் |
| 480 — | 506 | தேவசேனன் | வாக |
| 495 — | 545 | பானுகுப்தா | குப் |
| 500 | | ஜயசிம்மன் I | வா- சளு |
| 500 — | 520 | கந்தவர்மன் V | பல் |
| 500 — | 535 | இரவிவர்மன் | கட |
| 505 — | 535 | சீவித குப்தா I | குப் |
| 506 — | 550 | அரிசேனன் | வாக |
| 510 — | 570 | கூற்றுவனுயனூர் காலத்துச் சேரலன் | சேர |
| 513 — | 518 | புட்கரன் எ முஷ்கரன் | கொ-க |
| 518 — | 539 | திரிவிக்கிரமன் | கொ-க |
| 520 — | 575 | பாண்டிநாட்டில் மூர்த்திநாயனூர் ஆட்சி | |
| 520 — | 550 | நந்திவர்மன் I | பல் |
| 535 — | 570 | அரிவர்மன் | கட |
| 535 — | 565 | குமார குப்தா III | குப் |
| 539 — | 589 | பூவிக்கிரமன் (கஜபதி) | கொ-க |
| 550 — | 567 | புலிகேசி I | வா-சளு |
| — | 550 | திரிகூடசகம் துவக்கம் | |
| 550 — | 575 | சிம்மவர்மன் III | பல் |
| 550 — | 590 | சங்கராக்னன் | கா-கு |
| 567 — | 581 | கீர்த்திவர்மன் I | வா. சளு |
| 567 — | 648 | அப்பர் சுவாமிகள் | |
| 570 — | 620 | சேரலன் பூழியான் | சேர |
| 570 — | 585 | அசவர்மன் | கட |
| 570 — | 580 | தந்திவர்மன் II | இராட் |
| 575 — | 600 | கடுங்கோன் II | பாண் |
| 575 — | 600 | சிம்மவிஷ்ணு எ அவனிசிம்ம போத்தரையன் | பல் |
| | 580 | மகமதுசகம் | |
| 580 — | 620 | கிருஷ்ணன் I | இராட் |
| 581 — | 610 | மங்களீசன் | வா-சளு |
| 589 — | 636 | கொங்கணிவர்மன் III | கொ-க |
| 590 — | 620 | புத்தராசன் | கா-கு |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| | 591 | பசலி துவக்கம் | |
| 600 — | 625 | மாறவர்மன் அவனி சூளாமணி என அதிராச மாறவர்மன் | பாண் |
| 600 — | 625 | மகேந்திரவர்மன் I | பல் |
| 600 — | 650 | பழையாறைச் சோழன் | சோழ |
| 600 — | 660 | மணிமுடிச் சோழன் என செங்கதிர்ச்சென்னி | சோழ |
| | 606 | இராச்சியவர்த்தனன் | குப் |
| 606 — | 647 | அர்ஷவர்த்தனன் | குப் |
| | 606 | அர்ஷசகம் துவக்கம் | |
| 610 — | 642 | புலிகேசி II | வா-சளு |
| 610 — | 651 | விஷ்ணுவர்த்தனன் | வா-சளு |
| 615 — | 651 | விஷ்ணுவர்த்தனன் I | வே-சளு |
| 620 — | 667 | செங்கோற்பொறையன் | சேர |
| | 622 | ஹிஜிரி (Flight of Mohamud to Medina) | |
| 625 — | 650 | நரசிம்மவர்மன் I | பல் |
| 625 — | 640 | செழியன் சேந்தன் என செங்கோற் சேந்தன் என சடையவர்மன் | பாண் |
| 634 — | 650 | சம்பந்த சுவாமிகள் | |
| 686 — | 669 | கோவிந்தன் என நந்திவர்மன் | கொ-க |
| 640 — | 670 | கூன்பாண்டியன் என மாறவர்மன் அரிகேசி என நின்றசீர் நெடுமாறன் என சுந்தரபாண்டியன் | பாண் |
| 642 | | வாதாபிச் சண்டை (Between Pulikesi II and Narasimha Varma I | |
| | 642 | முதலாம் சேரமான் பெருமான் என பெருமாக் கோதையார் பிறப்பு | |
| 642 — | 680 | விக்கிரமாதித்தன் I | வா-சளு |
| 648 — | 667 | செங்கோற் பொறையன் ஆட்சிக் காலம் | சேர |
| 650 — | 655 | மகேந்திரவர்மன் II என ஐயடிகள் காடவர்கோன் | பல் |
| 655 — | 685 | பரமேச்சுரவர்மன் I | பல் |
| | 667 | முதலாம் சேரமான் பெருமான் பட்டம் சூடியது | சேர |
| 667 — | 712 | முதலாம் சேரமான் பெருமான் ஆட்சிக்காலம் | சேர |
| 669 — | 726 | சிவராமன் | கொ-க |
| 670 — | 710 | கோச்சடையன் இரணதீரன் | பாண் |
| 680 — | 686 | வினயாதித்தன் | வா-சளு |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 685 — | 710 | காடவர்கோன் கழற்சிங்கன் எ நரசிம்மவர்மன் II எ இராசசிம்மன் | பல் |
| 686 — | 734 | விஜயாதித்தன் | வா-சளு |
| 694 — | 712 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | |
| 700 — | 750 | சுந்தரசசோழர் | சோழ |
| 710 — | 717 | பரமேச்சுரவர்மன் II | பல் |
| 710 — | 765 | அரிகேசரி பராங்குசமாறன் எ இராசசிம்மன் I எ தேர்மாறன் எ மாறவர்மன் | பாண் |
| | 712 | சுந்தரரும் சேரமான் பெருமாள் I-ம் கயிலை சென்றது | |
| 712 — | 754 | தம்பிரான் தோழர் பெருமான் | சேர |
| 717 — | 775 | நந்திவர்மன் எ பல்லவமல்லன் II | பல் |
| 725 — | 755 | தந்திதுர்க்க எ தந்திவர்மன் II | இராட் |
| 726 — | 779 | பிருதிவிகொங்கணி எ சிவமகாராயன் | கொ-க |
| | 727 | சீவித குப்தா II | குப் |
| | 728 | யசோவர்மன் | உயுத்த |
| | 730 | சேரமான் பெருமாள் II பிறந்தது | சேர |
| 734 — | 747 | விக்கிரமாதித்தன் II | வா-சளு |
| 747 — | 760 | கீர்த்திவர்மன் II | வா-சளு |
| 754 — | 798 | சேரமான் பெருமாள் II ஆட்சிக் காலம் | சேர |
| 765 — | 777 | அதிராயன் பெருமாள் | பெரு |
| 765 — | 790 | நெடுஞ்சடையன் பராந்தகன் I | பாண் |
| 775 — | 825 | தந்திவர்மன் எ வைரமேகன் I | பல் |
| 777 — | 789 | பாண்டிப் பெருமாள் | பெரு |
| 779 — | 814 | மல்லதேவன் I எ இராஜமல்லதேவன் எ சிவமகாராயன் | கொ-க |
| 790 — | 792 | இராசசிம்மன் II | பாண் |
| 792 — | 835 | வரகுண பாண்டியன் III எ சடையவர்மன் | பாண் |
| 798 — | 850 | வேணாட்டடிகள் என்ற மார்த்தாண்ட வர்மன் I | சேர |
| 798 — | 834 | சேரமான் பெருமாள் III எ பாஸ்கர இரவிவர்மன் II | சேர |
| 800 — | 843 | விஜயாதித்தன் I | வே-சளு |
| | 803 | சேரமான் பெருமாள் II வைகுந்த பதவி அடைந்தது | |
| 803 — | 815 | கோவிந்தன் III | இராட் |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 810 — | | சக்கராயுத்தன் | உயுத்த |
| 810 — | 840 | நாகபட் | பரிகர |
| 814 — | 849 | கவுட தேவன் | கொ-க |
| 815 — | 877 | அமோகவர்ஷன் I | இராட் |
| | 825 | கொல்லம் ஆண்டு துவக்கம் | |
| 825 — | 854 | தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் III | பல |
| | 834 | மான விக்ரமன் (கோழிக்கோடு முதல் அரசன்) | |
| 834 — | 874 | வீரராகவ சக்கிரவர்த்தி வேணாட்டரசன் | சேர |
| | 834 | விழிஞம் சண்டை Between சேரன் & பாண்டியன் | |
| | 834 | சேரமான் பெருமாள் III மகமதியப் பெண்ணுடன் மெக்கா சென்றது. | |
| 836 — | 862 | ஸ்ரீமாறன் பரசக்கர கோலாகலன்—ஸ்ரீவல்லபன்—மாறவர்மன் | பாண் |
| 840 — | 890 | மிஹிர போசன் | பரிகர |
| 849 — | 869 | சத்திய வாக்கியர் | கொ-க |
| 850 — | 880 | விஜயாலயன் | சோழ |
| 854 — | 875 | நிருபதுங்கவர்மன் | பல் |
| 860 — | 919 | தென்னவன் இளங்கோ வேள்—பூதி விக்ரம கேசரி—கொடும்பாளூர் | |
| 862 — | 882 | வரகுண பாண்டியன் IV எ சடையவர்மன் | பாண் |
| 869 — | 878 | குணேத்தமர் | கொ-க |
| 874 — | 900 | தாணுரவி வேணாட்டரசன் | சேர |
| 875 — | 893 | அபராஜிதன் | பல் |
| 878 — | 879 | மல்லதேவன் II | கொ-க |
| 879 — | 880 | பிருதிவிபதி I | கொ-க |
| 880 — | 907 | ஆதித்தன் I | சோழ |
| | 880 | திருப்புறம்பயம் சண்டை | |
| 882 — | 900 | பராந்தகன் II எ சடையவர்மன் எ வீரநாராயணன் | பாண் |
| 890 — | 908 | மகேந்திரபாலன் | பரிகர |
| 898 — | 910 | கம்பவர்மன் | பல் |
| 900 — | 919 | இராசசிம்மன் III எ சடையமாறன் எ இராசசிகாமணி—சீகாந்தன் எ மந்தர கவுர மேரு | பாண் |
| 907 — | 947 | பராந்தகன் I எ வீரநாராயணன் | சோழ |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 908 — | 940 | மஹிபாலன் | பரிகர |
| 910 — | | வைரமேகன் II | பல் |
| 915 — | 917 | இந்திரன் IV எ நித்தியவர்ஷன் | இராட் |
| 939 — | 968 | கிருஷ்ணன் III எ அகாலவர்ஷன் எ கன்னரதேவன் | இராட் |
| 940 — | 955 | தேவபாலன் | பரிகர |
| 946 — | 966 | வீரபாண்டியன் I | பாண் |
| 947 — | 948 | இராஜாதித்தன் | சோழ |
| 948 — | 953 | கண்டராதித்தன் I | சோழ |
| | 954 | அரிஞ்சயன் | சோழ |
| 954 — | 965 | பராந்தகன் II எ சுந்தரச்சோழன் | சோழ |
| 955 — | 990 | விஜயபாலன் | பரிகர |
| | 965 | உறையூரில் மண்மாரி | |
| 966 — | 995 | அமரபுயங்கன் | பாண் |
| 966 — | 970 | ஆதித்தன் II எ கரிகாலன் III | சோழ |
| 969 — | | ஆதித்தன் II-தில்லையில் திருமுறைகளைக் கண்டெடுத்தது. | |
| 970 — | 984 | உத்தமன் எ விக்கிரமன் எ மதுராந்தக உத்தமசோழன் | சோழ |
| 972 — | 987 | பீமன் II | வே-சளு |
| 973 — | 997 | தயிலன் II | கல்-சளு |
| | 982 | இந்திரன் V | இராட் |
| 984 — | 1013 | இராசராசன் I | சோழ |
| 987 — | 999 | தானன் | வே சளு |
| 990 — | 1019 | இராஜியபாலன் | பரிகர |
| | 992 | கண்டராதித்தன் II | சோழ |
| 997 — | 1008 | சத்தியாசிரியன் II | கல்-சளு |
| 999 — | 1011 | சந்திரன் எ சத்தியவர்மன் | வே-சளு |
| 1000 — | 1047 | ஒய்சளன் | ஒய்ச |
| 1004 — | 1055 | விக்கிரமசோழன் I | கோ-சோ |
| 1008 — | 1018 | விக்கிரமாதித்தன் V எ திரிபுவனமல்லன் | கல்-சளு |
| 1011 — | 1024 | விமலாதித்தன் | வே-சளு |
| 1013 — | 1042 | இராசேந்திரன் I | சோழ |
| 1014 — | 1076 | நந்தமகாராசன் | ஆ-அ |
| 1018 — | 1041 | ஜயசிம்மன் IV | கல்-சளு |
| 1019 — | 1090 | அநங்கபாலன் | பரிகர |
| 1024 — | 1065 | இராசராச விஷ்ணுவர்த்தனன் C<br>இராசராச நரேந்திரன் C<br>இராசராச சந்திரன் | வே-சளு |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1017 — | 1137 | இராமாநுஜர் | |
| 1041 — | 1072 | சோமேஸ்வரன் I எ ஆகவமல்லன் | கல்-சளு |
| 1042 — | 1053 | இராசாதிராசன் I | சோழ |
| 1047 — | 1077 | வினய ஆதித்தன் | ஒய்ச |
| 1048 — | 1060 | சீவல்லப பாண்டியன் | பாண் |
| 1053 — | 1056 | விஜயராசேந்திரன் எ இராசமகேந்திரன் I இராசேந்திரன் II | சோழ |
| 1055 — | 1110 | அபிமான சோழன் | கொ-சோழ |
| 1056 — | 1062 | இராசமகேந்திரன் II | சோழ |
| 1060 — | 1065 | பாண்டியன் வீரகேசரி | பாண் |
| 1062 — | 1070 | வீரராஜேந்திரன் எ கரிகாலன் IV | சோழ |
| 1065 — | 1080 | விசயாதித்தன் VII | வே-சளு |
| 1065 — | 1087 | சடையவர்மன் சீவல்லபன் | பாண் |
| 1070 — | 1120 | குலோத்துங்கன் I எ கரிகாலன் V | சோழ |
| | 1070 | அதிராசேந்திரன் | சோழ |
| 1072 — | 1076 | சோமேசுரன் II | கல்-சளு |
| 1076 — | 1117 | சளுக்கியன் | ஆ-அ |
| 1076 — | 1077 | இராசராச மும்முடி சோழன் | வே சோழ |
| 1076 — | 1126 | விக்கிரமாதித்தன் VI | கல்-சளு |
| | 1076 | சளுக்கிய விக்கிரமாதித்திய சகம் துவக்கம் | |
| 1077 — 1089 — | 1084 1093 | வீரசோழன் வேங்கியில் ஆட்சி | வே-சோழ |
| 1077 — | 1080 | எரியங்கன் | ஒய்ச |
| 1077 — | 1078 | மும்முடி சோழன் எ இராசராசன் II | வே-சோழ |
| 1080 — | 1100 | வீரவல்லாளன் I | ஒய்ச |
| 1084 — | 1089 | இராசராச சோடகங்க | வே-சோழ |
| 1087 — | 1115 | மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1087 — | 1156 | புகழேந்திப் புலவர் | |
| 1090 — | 1120 | ஜயகேசின் II (கோவா) | கட |
| 1090 — | 1162 | ஒட்டக்கூத்தர் புலவர் | |
| 1093 — | 1115 | விக்கிரம சோழன் வேங்கியில் ஆட்சி | வே-சோழ |
| 1100 — | 1141 | பிட்டி தேவன் எ விஷ்ணுவர்த்தனன் | ஒய்ச |
| 1100 — | 1140 | திரிபுவன மல்லன் | காகதி |
| 1110 — | 1117 | ராஜாதிராஜ உத்தமன் | கொ-சோழ |

| காலம் | பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1115 — 1132 | சடையவர்மன் பராந்தக பாண்டியன் | பாண் |
| 1117 — 1135 | இராஜாதிராஜ வீர சோழன் | கொ-சோ |
| 1117 — 1156 | விஜயத்துவஜன் | ஆ-அ |
| 1120 — 1186 | விக்கிரம சோழன் (சோழ நாட்டில் ஆட்சி) | சோ |
| 1120 — 1200 | கம்பர் புலவர் | |
| 1126 — 1188 | சோமேசுரன் III | கல்-சளு |
| 1132 — 1162 | மாறவர்மன் சீவல்லபன் | பாண் |
| 1135 — 1149 | உத்தம சோழ வீரநாராயணன் | கொ-சோ |
| 1136 — 1146 | குலோத்துங்கன் II | சோழ |
| 1138 — 1154 | ஜயதேகமல்லன் | கல்-சளு |
| 1140 — 1161 | புரோல ராஜன் | காகதீ |
| 1141 — 1172 | நரசிம்மன் I | ஒய்ச |
| 1146 — 1162 | இராசராசன் III | சோழ |
| 1149 — 1183 | குலோத்துங்கன் | கொ-சோ |
| 1150 — 1160 | சேவனன் | தே-யா |
| 1150 | ஆனகுந்தி அரசன் விஜயத்துவசன் "விஜயநகர்" என்ற நகரத்தை துங்கபத்திரையின் தென்கரையில் கட்டினான். | |
| 1154 — 1155 | தயிலன் III | கல்-சளு |
| 1155 — 1172 | பிஜ்ஜலன் | கல். கா-கு |
| 1156 — 1179 | அனுவேமா | ஆ-அ |
| 1160 — 1170 | மல்லூரி | தே-மா |
| 1161 — 1211 | உருத்திர தேவன் எ பிரதாபருத்திரன் I | காகதீ |
| 1162 — 1165<br>1168 — 1175 | சடையவர்மன் குலசேகர பாண்டியன் | பாண் |
| 1162 — 1164 | பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1165 — 1166<br>1167 — 1168<br>1175 — 1180<br>1182 — 1190 | வீரபாண்டியன் II | பாண் |
| 1166 — 1178 | இராசாதிராசன் II எ எதிரிலி பெருமாள் | சோழ |
| 1170 — 1180 | அமரகங்கன் | தே-யா |
| 1172 — 1211 | வீரவல்லாளன் II | ஒய்ச |
| 1172 — 1183 | சாவல தேவி = சோவி தேவன் (ஒய்ச) | கல்-கா. கு. |

| காலம் | பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1178 — 1218 | குலோத்துங்கன் III | சோழ |
| 1179 — 1246 | நரசிம்ம தேவராயன் | ஆ-அ |
| 1180 — 1190 | விக்கிரம பாண்டியன் | பாண் |
| 1180 — 1187 | கர்ணன் | தே-யா |
| 1181 — 1203 | மகா மண்டலேசுர கடம்பன் | கட |
| 1183 — 1190 | சோமேசுரன் IV | கல்-சளு |
| 1183 — 1206 | வீர சோழன் | கொ-சோ |
| 1187 — 1191 | பில்லாமன் | தே-மா |
| 1190 — 1218 | சடையவர்மன் குலசேகர பாண்டியன் I | பாண் |
| 1191 — 1207 | ஜயதுகி எ ஜயதிர பாலன் | தே-யா |
| 1206 — 1255 | வீர ராஜேந்திரன் | கொ-சோ |
| 1207 — 1246 | சிம்மணன் | தே-யா |
| 1211 — 1223 | மகாதேவன் | காகதீ |
| 1211 — 1231 | நரசிம்மன் II | ஒய்ச |
| 1218 — 1238 | மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | பாண் |
| 1218 — 1246 | இராசராசன் III | சோழ |
| 1222 | மெய்கண்டான் சகம் | |
| 1223 — 1273 | கணபதி தேவன் | காகதீ |
| 1231 — 1254 | சோமேசுரன் எ சோவிதேவன் | ஒய்ச |
| 1238 — 1239 | சடையவர்மன் குலசேகரன் II | பாண் |
| 1239 — 1251 | மாறவர்மன் சுந்தரபாண்டியன் II | பாண் |
| 1246 — 1271 | இராம தேவன் | ஆ-அ |
| 1246 — 1259 | கிருஷ்ணன் | தே-யா |
| 1246 — 1279 | இராசேந்திரன் III | சோழ |
| 1248 — 1258 | சடையவர்மன் விக்கிரம பாண்டியன் | பாண் |
| 1251 — 1271 | சடையவர்மன் சுந்தரபாண்டியன் I | பாண் |
| 1253 — 1281 | சடையவர்மன் வீரபாண்டியன் III | பாண் |
| 1254 — 1286 | நரசிம்மன் III | ஒய்ச |
| 1255 — 1263 | விக்கிரமன் II | கொ-சோ |
| 1259 — 1272 | மகாதேவன் | தே-யா |
| 1263 — 1273 | இராஜகேசரி | கொ-சோ |
| 1268 — 1369 | வேதாந்த தேசிகர் | |
| 1268 — 1281 | மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (பிரதிநிதி) | பாண் |
| 1271 — 1310 | மாறவர்மன் குலசேகரபாண்டியன் I | பாண் |
| 1271 — 1296 | பிரதாப ராயன் | ஆ-அ |
| 1272 — 1309 | இராமச்சந்திரன் | தே-யா |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1272 | | அமணன் | தே-யா |
| 1273 — | 1303 | விக்கிரமன் III | கொ-சோ |
| 1273 — | 1300 | உமா (பெண்) | காகதி |
| 1276 — | 1293 | சடையவர்மன் சுந்தரபாண்டியன் II (பிரதிநிதி) | பாண் |
| 1286 — | 1339 | வீரவல்லாளன் III | ஒய்ச |
| 1296 — | 1334 | ஜம்புகேசுர ராயன் | ஆ-அ |
| 1296 — | 1342 | சடையவர்மன் வீரபாண்டியன் IV | பாண் |
| 1300 — | 1325 | பிரதாப ருத்திரன் II | காகதி |
| 1300 — | 1336 | கடம்ப அரசன் | கட |
| 1309 — | 1318 | சங்கரன் | தே-யா |
| 1310 | | தென்னாட்டில் மாலிக் காபூர் படையெடுப்பு | |
| 1310 — | 1319 | சடையவர்மன் சுந்தரபாண்டியன் III | பாண் |
| 1313 — | 1316 | இரவிவர்மன் எ குலசேகரன் | வேணாடு |
| 1314 — | 1346 | மாறவர்மன் குலசேகர பாண்டியன் | பாண் |
| 1315 — | 1347 | சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1316 — | 1339 | புக்கண்ண உடையார் | மைசூ |
| 1325 — | 1424 | கிருஷ்ணன் எ கண்ணைய நாய்க் | காகதி |
| 1331 — | 1332 | திரிபுவன வீரதேவன் | சோழ |
| 1334 | | விஜயத்துவஜனால் கட்டப்பட்ட விஜயநகர் அழிவு | |
| 1334 — | 1330 | மாறவர்மன் வீரபாண்டியன் | பாண் |
| 1335 — | 1352 | மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1336 | | வித்யாரண்யரால் விஜயநகரம் கட்டப்பட்டது | |
| 1336 — | 1354 | அரிகர I | வி-அ |
| 1339 — | 1370 | கம்பண்ண உடையார் | மைசூ |
| 1341 | | வைப்பின் சகம் | |
| 1354 — | 1377 | புக்கா I | வி-அ |
| 1370 — | 1399 | அரியண்ண உடையார் | மைசூ |
| 1380 — | 1390 | பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1384 — | 1394 | கோனேரிராச சோழன் | சோழ |
| 1384 — | 1415 | பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1394 — | 1452 | வீர விருப்பண்ண உடையார் | மைசூ |
| 1395 | | சடையவர்மன் குலசேகர பாண்டியன் | பாண் |
| 1399 — | 1423 | யது | மைசூ |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1401 — | 1434 | பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1401 — | 1422 | சடையவர்மன் விக்கிரம பாண்டியன் | பாண் |
| 1404 — | 1422 | புக்கா II | வி-அ |
| 1422 — | 1423 | விஜய | வி-அ |
| 1422 — | 1463 | சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1423 — | 1449 | தேவராய II | வி-அ |
| 1423 — | 1458 | சாமராஜா I | மைசூ |
| 1429 — | 1473 | சடையவர்மன் குலசேகர பாண்டியன் | பாண் |
| 1449 — | 1463 | இராமச்சந்திரன் | வி-அ |
| 1458 — | 1472 | திம்மராய I | மைசூ |
| 1463 — | 1472 | விருபாக்ஷா II | வி-அ |
| 1472 — | 1489 | நரசிம்மன் | வி-அ |
| 1473 — | 1506 | அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1478 — | 1513 | சாமராயர் II | மைசூ |
| 1489 — | 1508 | வீர நரசிம்மன் | வி-அ |
| 1506 — | 1534 | குலசேகரதேவ பராக்கிரம பாண்டியன் | பாண் |
| 1508 — | 1529 | கிருஷ்ணதேவராயர் | வி-அ |
| 1513 — | 1552 | சாமராயர் III | மைசூ |
| 1529 — | 1530 | அச்சுதராயர் | வி-அ |
| 1530 — | 1565 | சதாசிவராயர் | வி-அ |
| 1543 — | 1552 | சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன் | பாண் |
| 1552 — | 1571 | திம்மராய II | மைசூ |
| 1552 — | 1564 | நெல்வேலி மாறன் | பாண் |
| 1559 — | 1563 | விஸ்வநாத நாய்க்கன் I | ம-அ |
| 1563 — | 1572 | குமார கிருஷ்ணப்பா | ம-அ |
| 1564 — | 1604 | சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் | பாண் |
| 1565 — | | தலைக்கோட்டைச் சண்டை | |
| 1571 — | 1576 | சாமராஜ IV | மைசூ |
| 1572 — | 1595 | கிருஷ்ணப்ப எ வீரப்ப | ம-அ |
| 1576 — | 1578 | பேதாத் உடையார் | மைசூ |
| 1578 — | 1617 | இராசா திராச | மைசூ |
| 1588 — | 1613 | வரதுங்கராம பாண்டியன் | பாண் |
| 1595 — | 1602 | இலிங்கைய | ம-அ |
| 1602 — | 1609 | முத்துகிருஷ்ணப்ப | ம-அ |
| 1609 — | 1623 | முத்து வீரப்ப I | ம-அ |

| காலம் | | பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1613 — | 1700 | வரகுணராம குலசேகர பாண்டியன் | பாண் |
| 1617 — | 1637 | சாமராஜ VI | மைசூ |
| 16:3 — | 1662 | முத்து அளகாத்திரி | ம-அ |
| 1637 — | 1638 | இம்முடி ராஜா | மைசூ |
| 1638 — | 1659 | கண்டீரவ நரசராஜா I | மைசூ |
| 1659 — | 1672 | கொட்டராஜா | மைசூ |
| 1662 — | 1682 | சொக்கநாதா | ம-அ |
| 1672 — | 1704 | சிக்க தேவராஜா I | மைசூ |
| 1682 — | 1689 | இரங்க கிருஷ்ண முத்து வீரப்பா | ம-அ |
| 1689 — | 1704 | மங்கம்மாள் | ம-அ |
| 1700 — | 1748 | வரகுணராம குலசேகர தேவதீட்சிதர் | பாண் |
| 1704 — | 1731 | விஜயரங்க சொக்கநாத | ம-அ |
| 1704 — | 1713 | கண்டீரவ நரசராஜா II | மைசூ |
| 1713 — | 1731 | தொட்டகிருஷ்ணராஜ் | ,, |
| 1730 — | 1732 | ஹைதர் அலி | ,, |
| 1731 — | 1736 | மீனாட்சி | ம-அ |
| 1731 — | 1734 | சாமராஜ VII | மைசூ |
| 1734 — | 1766 | சிக்க கிருஷ்ணராஜ் | ,, |
| 17 6 — | 1770 | நஞ்சராஜ | ,, |
| 1770 — | 1775 | சாமராஜ VIII | ,, |
| 1775 — | 1796 | சாமராஜ IX | ,, |
| 1782 | | சிவஞானமுனிவர் சகம் | |
| 1782 — | 1799 | திப்பு சுல்தான் | ,, |
| 1800 — | 1860 | கிருஷ்ணராஜ III | ,, |
| 1868 — | 1894 | சாமராஜ X | ,, |
| 1894 — | 1940 | கிருஷ்ணராஜ IV | ,, |
| 1940 — | 1947 | ஜய சாமராஜ் உடையார் | ,, |
| 1947 | Aug. 15 | காந்திசகம் or Indian Independence | |

## ௯. எடுத்தாண்ட நூல்கள்

### ஆங்கிலம்


| | |
|---|---|
| Account of the kingdom of Nepal | Dr. Buchanan Hamilton |
| Agastya in the Tamil Land | K. N. Sivaraj Pillai, B. A. |
| Cheran Vanchi | Dr. S. Krishnaswami Ayyangar |
| Coimbatore District Gezetteer | Government |
| Deepavamsom of Ceylon | |
| History of India | Marsden |
| „ | Vincent Smith |
| „ | A. K. Banerji |
| History of Kerala | K. P. Padmanaba Menon, B. A., B. L., M. R. A. S. |
| History of Pandyas | Nilakanta Sastri |
| History of Cholas | „ |
| Kalyana-Kalpa-Taru | Vol. XI No. 10 p. 335. |
| Kirk-patrick's Nepal | Kirkpatrick |
| Land of Perumals | Dr. Day |
| Malabar and its folk | T. K. Gopala Panicker, B. A. |
| Malabar District Gezetteer | Government |
| New Collections of Voyages & Travelling | |
| Progress of Cochin | Sahityakusalan T. K. Krishna Menon |
| Proceedings of the Indian History Congress—10th Session | All India History Congress |
| Roman Pliny (23-79 A.D.) | |
| S. I. I. Vol. II and III | Government |
| Trivandrum Archeological Series Vol. I—P. 57, 58. | Travancore Government |
| The Tamilian Antiquary No. 9 | |

| | |
|---|---|
| The Indian Antiquary Vol. XX. | |
| The East African and Malabar Coasts | |
| The Stone Age in India | P. T. Srinivasa Iyyangar |
| Thurston's Castes & Tribes of South India | Thurston |
| The Civilisation of India | R. C. Dutt |
| Vedic India | Ragazin |
| Ludwigs Translation of Rig Veda | Ludwig |
| The New Indian Antiquary I P. 275-279 (article on the Kozhickor of "Mohanje-Daro" | - Father Heras |

## வடமொழி

| | |
|---|---|
| Rig Veda | Arya Maharishies |
| Ramayana | Valmiki |
| Mahabarata | Veda Viyasa |

## மலையாளம்

| | |
|---|---|
| Kerala Utpathi | |
| Kerala Vishesla Manmiam | |
| Malayalam Dictionary | Dr. Gundart |

## தமிழ்

| | |
|---|---|
| *அகத்தியர் ஆராய்ச்சி* | *கா. நமச்சிவாய முதலியார்* |
| *அகத்தியர் வரலாறு* | *துடிசைகிழார்* |
| *அகத்திய முனிவர்* | *ஜெகவீரபாண்டியன்* |
| *அகத்தியர்* | N. S. *கந்தையாபிள்ளை* |
| *அகநானூறு* | *சங்கப்புலவர்கள்* |
| *அசோக சாசனங்கள்* | *அரசியலார்* |

| | |
|---|---|
| அப்பர் சுவாமிகள் தேவாரம் | அப்பர் |
| உதயேந்திரம் சாசனங்கள் | அரசியலார் |
| கரிகாலன் | பண்டிதர் S. உலகநாதபிள்ளை |
| குறுந்தொகை | சங்கப்புலவர் |
| கொங்குமலர் Vol. I & IV | கோவைத் தமிழ்ச்சங்கம் |
| கொங்குவேள் மாக்கதை | |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| சின்னமனூர்ச் சாசனம் | அரசியலார் |
| சீவரமங்கலம் செப்பேடுகள் | ,, |
| சுந்தரமூர்த்திகள் தேவாரம் | சுந்தரர் |
| செந்தமிழ்ச் செல்வி Vol. 3 & 10 | கழகத்தார் |
| சென்னை மியூசியம் சாசனங்கள் | அரசியலார் |
| சேரர் வஞ்சி | இரா. இராகவையங்கார் |
| சோழர் சரித்திரம் | ந. மு. வேங்கடசாமி நாட்டார் |
| ,, | M. இராசமர்ணிக்கம் |
| தமிழ் இலக்கிய வரலாறு | கா. சுப்பிரமணியபிள்ளை |
| தமிழ்ச் சங்கங்களின் வரலாறு | துடிசைகிழார் |
| தமிழ்ப் பொழில் Vol. 12 | கரந்தைத் தமிழ்ச்சங்கம் |
| தமிழ் வரலாறு | R. இராகவையங்கார் |
| ,, | K. சீனிவாசப் பிள்ளை, B.A., B.L. |
| திருக்கயிலாய ஞான உலா | முதலாம் சேரமான் பெருமாள் |
| திருக்குறள் | பரிமேலழகர் உரை |
| திருவாய்மொழி | பன்னிரண்டாழ்வார் |
| தொல்காப்பியம் | இளம்பூரணர் உரை |
| ,, | சேனாவரையர் உரை |
| நற்றிணை | சங்கநூல் |
| நாலாயிரப் பிரபந்தம் | குலசேகராழ்வார் |
| பதிற்றுப்பத்து | சங்கநூல் |
| பதினோராம் திருமுறை | |
| பல்லவர் வரலாறு | P. T. சீனிவாசய்யங்கார் |
| ,, | M. இராசமாணிக்கம் |
| பாண்டியர் வரலாறு | T. V. சதாசிவபண்டாரத்தார் |
| புராதன இந்தியா I & II | P. V. ஜெகதீச அய்யர் |
| புறநானூறு | சங்கநூல் |

| | |
|---|---|
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| பொன்வண்ணத்து அந்தாதி | முதலாம் சேரமான் பெருமான் |
| மணிமேகலை | மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் |
| மாணிக்கவாசகர் காலம் | மறைமலை அடிகள் |
| மும்மணிக்கோவை | முதலாம் சேரமான் பெருமாள் |
| வேதாந்த தேசிகர் பிரபந்தங்கள் | வேதாந்த தேசிகர் |
| வேள்விக்குடிச் சாசனம் | அரசியலார் |